முத்துலட்சுமி ராகவன்

ஏழு ஸ்வரங்கள்...

ஐந்தாம் ஸ்வரம்...

பதம் கொண்ட அறம்

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

ஏழு ஸ்வரங்கள்... பாகம் – 5

உரிமை : **ஆசிரியருக்கு**

பொருள் : நாவல்
மொழி : தமிழ்
முதல் பதிப்பு : ஆகஸ்ட் 2015
வெளியீடு : **லட்சுமி பாலாஜி பதிப்பகம்**
68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,
சி.ஐ.டி. நகர், தி.நகர்,
சென்னை - 600 035
செல் : 95669 42486
நூலின் அளவு : 1x8 கிரவுன்
தாள் : 11.6 kg புக் பிரிண்ட்
அச்சு எழுத்து : 11 புள்ளி
மொத்தப்பக்கங்கள் : 400

விலை : ₹ 200/-

லேசர் டைப் செட் : விஜி கிராஃபிக்ஸ், மதுரை.

அச்சிட்டோர் : **கிளாசிக் அச்சகம்,** சென்னை–5.

முத்துலட்சுமி ராகவன்
எழுதிய



ஏழு ஸ்வரத்தில்...

ஐந்தாம் ஸ்வரம்

‘பதம் கொண்ட அறம்...’

உடன் பயணிப்பது...

ஏழாவது ஸ்வரத்தின்

‘நிழல் ஆட்ட யுத்தம்...’

ஆசிரியர் கடிதம்...

ஸ்வரம் ஐந்து...

என் பிரியத்துக்குரிய வாசக... வாசகிகளே...!

ஐந்தாம் ஸ்வரத்திற்கு வந்திருக்கிறோம்.. இதுவரை இசைத்த ஸ்வரங்களில் இந்த ஸ்வரம் ஐந்தாவது கால கட்டத்தை எட்டியிருப்பதில் உரைநடை சற்று மேம்படுகிறது.. தீவிர செந்தமிழ் வழக்கு உரைநடையில் குறைந்து.. எனது வழக்கமான எழுத்துப் பிரயோகத்தை ஆரம்பித்திருக்கிறேன். நடப்பு கால கட்டத்திற்கான ஏழாவது ஸ்வரத்திற்கும் இப்போது இசைக்க ஆரம்பித்திருக்கும் ஐந்தாவது ஸ்வரத்திற்கும் இடையே உள்ளது ஒரேயொரு ஸ்வரம் தான்..

அது ஆறாவது ஸ்வரம்..! என் மனதுக்குப் பிடித்த ஆறாம் எண்ணில் உருவாகும் ஸ்வரம்..! என் உயிரில் கலந்த சுதந்திரப் போராட்டத்தை இசைத்து வரும் ஸ்வரம்..!

அதைப்பற்றி ஆறாம் ஸ்வரத்தின் ஆசிரியர் கடிதத்தில் பேசலாம்.. இப்போது இசைக்க ஆரம்பித்திருக்கும் ஐந்தாவது ஸ்வரத்திற்குத் திரும்பி வரலாம்..

ஏழுஸ்வரங்களின் 'ச,ரி,க,ம,ப,த,நி...' ஸ்வர வரிசையில் தலைப்புக்களைக் கொடுத்த போது.. நான் இறங்கப் போகும் சரித்திரச் சுழல்களைப் பற்றி அப்போது நான் அறிந்திருக்கவில்லை..

காஞ்சியை கதைத் தளமாக்கினேன்.. அங்கு உருவாகும் ஏழு காலகட்ட கதைகளுக்கான சரித்திர நிகழ்வுகளை ஆராய்ந்தேன்.. காஞ்சி எனக்கு அருள் புரிந்தது.. அங்கே நிலவிய ஆறு காலகட்டத்திற்கான சரித்திர குறிப்புக்களை என் முன் பரத்தியது..

அவற்றை அடிப்படையாகக் கொண்டே நான் நான்கு ஸ்வரங்களையும் இசைத்து முடித்தேன்.. இந்த ஐந்தாவது

ஸ்வரத்திற்கு அடிப்படையாக 'மதுரா விஜயம்..' என்ற காவியம் கூறுவதை எழுத்தில் கொடுத்திருக்கிறேன்..

நான்காவது ஸ்வரமான 'மனம் கண்ட வைரம்' ஸ்வரத்தில் மதுரையை ஆண்ட குலசேகர பாண்டிய பேரரசர் தனது பட்டத்து ராணியின் மகனான சுந்தரபாண்டியனை அரியணையில் அமர வைக்காமல்.. தனது இளையராணியின் மகனான வீரபாண்டியனை அரியணையில் அமர வைத்ததில் இருந்து மதுரை மாநகருக்கான துயரம் ஆரம்பமாகிறது.. அது இந்த ஐந்தாவது ஸ்வரத்திலும் தொடர்கிறது..

உரிமையை நிலை நாட்ட வேண்டிய கட்டாயத்தி லிருந்த சுந்தரபாண்டியன் அதற்கான உதவியை தில்லியின் முகலாயப் பேரரசர் அலாவுதீன் கில்ஜியிடமும், மாலிக்காபூரிடமும் கோரிவிட்டான்..

கி.பி. 1311-ல் மாலிக்காபூர் மற்றும் அலாவுதீன் கில்ஜி இணைந்த பொது படையெடுப்பு மதுரை மாநகரை நோக்கிக் கிளம்பியது..

இவ்விதம்தான் தாயாதி சண்டைக்காக சுந்தர பாண்டியனின் அழைப்பின் பேரில் தமிழகத்தில் அவர்கள் நுழைந்தார்கள்.. அலாவூதின் கில்ஜியின் சார்பாக படையெடுத்து வந்து மாலிக்காபூர் மதுரையின் அரியணையில் சுந்தர பாண்டியனை அமர வைத்து விட்டு, மதுரையைச் சூறையாடி அந்தச் செல்வத்தைத் தில்லி பேரரசரான அலாவுதீன் கில்ஜியிடம் சேர்க்கிறான்..

கி.பி. 1313-ல் மாலிக்காபூரின் படையெடுப்பில் தமிழகம் சிதிலமடையாமல் காக்க சேர மன்னன் ராஜா ரவிவர்மன் சோழ நாட்டின் மீது படையெடுத்து காஞ்சியை கைப்பற்றுகிறான்.. வேதவதி நதிக் கரையில் தங்குகிறான்..

கி.பி. 1316-ல் வீரபாண்டியன் ஆந்திர அரசரின் உதவியோடு சுந்தரபாண்டியனைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றுகிறான்.. தப்பியோடிய சுந்தரபாண்டியன் தில்லிப்

பேரரசரின் உதவியை மறுபடியும் நாடுகிறான்.. மதுரையின் மீது தில்லிப் பேரரசரின் பார்வை படிந்து விடுகிறது..

கி.பி. 1333–ல் தில்லிப் பேரரசரான முகம்மது பின் துக்ளக் மதுரையை நோக்கிப் படையனுப்புகிறார்.. போரில் வீரபாண்டியன் தப்பி ஓடி விடுகிறான்.. 'சலாவுதீன் ஷா..' ஆளுநராக நியமிக்கப் படுகிறான்.. மதுரை மாநகரம் தில்லிப் பேரரசின் ஆதிக்கத்தின் கீழ் பாண்டிய மன்னர்களின் தாயாதிச் சண்டையினால் வந்து விடுகிறது..

கி.பி. 1336–ல் தில்லிப் பேரரசின் ஆளுநராக நியமனம் ஆன 'சலாவுதீன் ஷா..' தில்லிப் பேரரசிலிருந்து தனது கட்டுப்பாட்டை அறுத்துக் கொண்டு மதுரை மாநகரின் சுதந்திர அரசனாக தன்னைப் பிரகடனப் படுத்திக் கொள்கிறான்.. அவனே மதுரையின் முதல் 'சுல்தான்..'

இவ்விதமாகத்தான் பாண்டிய மன்னர்களின் தாயாதிச் சண்டையில் பஞ்சாயத்துப் பண்ணுவதற்காக பாண்டியர்கள் சுல்தான்களை வெற்றிலை பாக்கு வைத்து அழைத்து அவர்களின் கைகளில் மதுரை மாநகரை ஒப்படைத்தார்கள்.

சலாவுதீன் ஷா உட்பட.. எட்டு சுல்தான்கள் மதுரை மாநகரை ஆட்சி செய்தார்கள்.. சுல்தான்களின் ஆட்சிக் காலத்தில் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் துன்புறுத்தப் பட்டார்கள் என்றும் அவர்களின் கோவில்கள் இழுத்து மூடப்பட்டன என்றும் வரலாறு கூறுகிறது..

இந்துக்களின் கோவில்கள் இழுத்து மூடப்பட்டன.. சிறிய கோவில்கள் இடிக்கப்பட்டன.. இந்து சமயத்தைச் சார்ந்த மக்கள் தெய்வச் சிலைகளைக் காக்க அவைகளை மண்ணில் புதைத்து வைத்தார்கள்.. ஸ்ரீரங்கத்தின் ரங்கநாதரின் சிலை திருப்பதி திருமலையில் உள்ள காட்டில் மறைத்து வைக்கப்பட்டது.. மதுரையை ஆண்ட இறைவனும், இறைவியும் கோவில் கொண்டிருந்த மீனாட்சியம்மனின் ஆலயத்தை வழிபாடு செய்ய விடாமல் 40 ஆண்டுகாலமாக சுல்தான்கள் மூடி வைத்திருந்தனர்..

சுல்தான்கள் இந்து சமயத்தவரின் கோவில் சொத்துக் களை கொள்ளையடித்ததாக சரித்திரம் கூறுகிறது. திருவிழாக்கள் தடை செய்யப்பட்டன.. இந்து மதத்தைச் சார்ந்த மக்கள்.. மதுரையை விட்டு வெளியேறி அண்டை நாடுகளில் அகதிகளாகக் குடியேறியதாக வரலாறு சொல்கிறது.

இவ்விதமாக விஜயநகரப் பேரரசில் குடியேறிய மக்கள் உரைத்ததைக் கேட்ட அதன் அரசர் 'புக்கராயர்' பொங்கி எழுந்ததையே இந்த ஐந்தவாது ஸ்வரம் இசைக்கப் போகிறது..

இந்த ஸ்வரத்தின் நாயகன் விஜயநகரப் பேரரசன் 'புக்கர்' அல்ல.. அவன் யார் என்பதை இந்த ஐந்தாவது ஸ்வரம் சொல்லும்..

சுல்தானின் ஆட்சி உருவான கி.பி. 1'336-ல் தான் விஜயநகரப் பேரரசும் உருவாகியிருக்கிறது.. முதலாம் ஹரிஹரர் மற்றும் அவரது சகோதரர் முதலாம் புக்கராயர் தோற்றுவித்த இந்தப் பேரரசின் தலைநகரம் 'விஜயநகரம்..' அதனால் இப்பேரரசு விஜயநகரப் பேரரசு எனப் பெயர் பெற்றது.

விஜயநகர சாம்ராஜ்யத்தில் கோவில் சொத்துக்களைக் கொள்ளையடிப்பவர்களுக்கு மரண தண்டனை வழங்கப் பட்டது..

இவ்விதமாக தெய்வங்களின் ஆலயங்களுக்கு முதன்மை அளித்த விஜயநகரப் பேரரசரினால் மதுரையின் மீனாட்சி அம்மனின் கோவில் 40 ஆண்டு காலமாக இழுத்து மூடப்பட்டு விட்டதையும்.. திருவரங்கத்தில் கோவில் கொள்ள முடியாமல் அரங்கனின் சிலை திருப்பதி திருமலையின் காடுகளில் மறைந்து இருப்பதையும் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. மதுரையிலிருந்து அகதிகளாக வெளியேறி அவரது நாட்டில் அடைக்கலமாகியிருந்த மக்கள்.. அவர்கள் பட்ட இன்னல்களைக் கூறி அழுதபோது.. மதுரையை மீட்க வேண்டும் என்ற ஆவேசம் அவருக்குள் கிளர்ந்து எழுகிறது.

அவரின் ஆணையை ஏற்று மதுரையை மீட்க கிளம்பி வந்தான் ஒரு மன்னன்.. அவனே இந்த ஐந்தாவது ஸ்வரத்தை ஆட்சி செய்யப் போகிறவன்..

புக்கரின் வாய்மொழியும்.. மதுரை மக்களின் வாய் மொழியும் உரைத்த வார்த்தைகளால் மட்டும் அவன் வீறு கொண்டு எழுந்து விடவில்லை.. திருப்பதியின் திருமலையில்.. அடர்ந்த வனத்தின் ஊடே அவன் பயணிக்க நேர்ந்த போது கண்டசில காட்சிகளும்.. நிகழ்ந்த சில சம்பவங்களும்.. அவனை சுல்தானுக்கு எதிராக வாளேந்த வைத்தன.. மதுரையை மீட்பேன் என்ற சபதத்தை எடுக்க வைத்தன.. அரங்கனின் திருவுருவச் சிலையை திருவரங்கத்தில் பிரதிஷ்டை செய்வேன் என்று சூளுரைக்க வைத்தன.. மதுரையின் மீனாட்சியம்மனின் மூடியிருந்த ஆலயத்தை திறக்கும் உறுதியை எடுக்க வைத்தன.. இவற்றையே இந்த ஸ்வரம் இசைக்கிறது..

எம்மதமும் சம்மதம்.. நமக்கும் மேலே ஓர் சக்தி உள்ளது.. அதுவே கடவுள்..! அந்த உருவமில்லா பரம்பொருளுக்கு நமது விருப்பப்படி பெயரிட்டு.. ஆடை அணிகலன்களை அணிவித்து கோவில் கட்டி வழி படுகிறோம்.. வழிபடும் முறைகள் மாறினாலும் வழிபடும் மனதின் பிரார்த்தனை ஒன்று போலதானே உள்ளது..?

இதில் மதத்துவேசம் எதற்கு..? மாற்று மதத்தை தூஷிப்பதும்.. அவர்களின் கோவில்களை இடிப்பதும்.. தர்மம் ஆகாது.. இதை எவர் செய்தாலும்.. குற்றம்.. குற்றமே..!

'பதம் கொண்ட அறம்..' இதைத்தான் உரைக்கிறது.. அறம் என்பது தர்மம்.. அந்த தர்மத்தின் வழியில் நாம் அனைவரும் நடப்போம்..

– நட்புடன் –

முத்துலட்சுமி ராகவன்

அனுப்ப : muthulakshmiraghavan24@gmail.com
படிக்க : www.muthulakshmiraghavan.com
www.muthumaalai.com

முத்துலட்சுமி ராகவன் எழுதிய

ஏழு ஸ்வரங்கள்...

ஐந்தாம் ஸ்வரம்

'பதம் கொண்ட அறம்...'



1

கோவில் கொண்ட தெய்வங்களை துதிப்பதற்கே தடை விதிப்பதோ..?

அமைதியில் உறைந்திருந்தது காஞ்சி.. புயலை உள்ளடக்கிய பேரமைதி..! இது போன்ற நிகழ்வுகளையும் சரித்திரத்தின் ஏடுகள் சந்திக்க வேண்டியிருக்கிறதே என்ற துயர் கொண்ட அமைதி..! ஆன்மிகத்தின் உறைவிடமாய் கோவில் கொண்டிருந்த தெயவங்களைத் துதிப்பதற்கும் தடை விதிக்கப்பட்ட கொடுமையினைக் காண வேண்டியிருக்கிறதே என்று பரிதவித்த அமைதி..! கோவில் நகரங்களை விட்டுச் சாரிசாரியாக மக்கள் அடைக்கலம் தேடி அண்டை நாடுகளுக்கு சென்று கொண்டிருப்பதைத் தடுக்க எவர் வருவார் என்று காத்திருக்கும் அமைதி..

காஞ்சியின் காத்திருத்தல்கள் அர்த்தம் நிறைந்தவை..

அக்கோவில் மாநகரின் ஆட்சியாளனாக வரும் மன்னர்கள் அனைவருமே காஞ்சிமண்ணை வணங்கித் துதித்துப் போற்றிப் பாதுகாவல் செய்த பக்தியாளர்களே..!

தென்னகத்தின் மதுரை மாநகரம் அன்னியர்பிடியில் சிக்கித் தவித்த போதும் காஞ்சிமாநகரம் பாதுகாவலுடன் இருந்தது.. அவ்வரிசையில் அடுத்துப் பாதுகாவல் செய்ய வருகை தரப் போகிறவருக்காக காத்திருந்தது காஞ்சி..!

தொன்மை வாய்ந்த சம்புவரையர்களின் ஆட்சி நடந்த போதும்.. அவர்கள் மதுரையை ஆளும் சுல்தான் களுக்கு கப்பம் கட்டி நடைபெறும் அக்கிரமங்களை வாய் மூடிச் சகித்துக் கொண்டிருப்பவர்கள் என்பதால் அவர்களின் ஆட்சியைச் சகித்துக் கொள்ள இயலாமல் மீட்சியளிக்க வரும் மாவீரனுக்காக காத்திருந்தது காஞ்சி..!

இவ்விதமாக வரப்போகும் மாவீரனுக்காக வழிமீது விழிவைத்துக் காத்திருந்த காஞ்சியின் மாடவீதிகளில் இருளை விலக்கும் தீபங்கள் ஏற்றி வைக்கப்பட்டிருந்தன.. இருள் பிரியாத அந்த விடியல்வேளையில் அம்மாட வீதிகளில் ஓர் வீதியில் இருந்த இல்லத்தின் கதவைத் திறந்து வாசலுக்கு வந்தாள் மைதிலி..!

நிசப்தம் குடி கொண்டிருந்த வீதியில் அவள் பார்வை படிந்தது..

'இப்போதெல்லாம் இல்லங்களின் கதவுகள் தாமதமாகத்தான் திறக்கின்றன..'

நெடுமூச்சுடன் திண்ணையின் மீது ஏறி.. சுவரில் வடிவமைக்கப் பட்டிருந்த மாடத்தில் ஒளிர் விட்டுக் கொண்டிருந்த அகல் விளக்கின் திரியைத் தூண்டிவிட்டு ஒளியை அதிகப்படுத்தினாள்..

அதிகரித்த ஒளி வெள்ளத்தில் வாசல் தெளிவுறத் தெரிந்ததில் திண்ணையை விட்டு இறங்கியவள்

வாசலைத் தூய்மைப் படுத்தி நீர் தெளித்துக் கோல மிடலானாள்..

"உனக்கு மகா தைரியம் மைதிலி.."

அடுத்த இல்லத்தில் வசிக்கும் அன்னபூரணி வியப்புக் கொள்வாள்..

"என்ன தைரியத்தைக் கண்டு விட்டீர்கள்..? எவரையேனும் எதிர்த்துப் போரிட வாளுடன் வருகை தந்து விட்டேனா..?"

மைதிலியும் விட்டுக் கொடுக்காத எரிச்சலுடன் வினவுவாள்..

"என்னதான் இந்த தொண்டை மண்டல வளநாடு சம்புவரையர்களின் ஆட்சியில் இருந்தாலும்.. மதுரையை ஆளும் சுல்தான்களுக்கு கப்பம் கட்டும் சிற்றரசு என்பதை மறந்து போனாயோ..?"

"அதை நினைவில் வைத்து ஆகப் போவதென்ன..?"

"என்னடி பெண்ணே.. இவ்விதமாக கூறி விட்டாய்..? நம்மை நாமே தற்காத்துப் பேணிக் கொள்ள இது போன்ற விவரங்களை நினைவில் இருத்திக் கொள்வது அவசியமல்லவா..?"

அன்னபூரணியின் விளக்கத்தில் மைதிலிக்கு பற்றிக் கொண்டு வரும்.. இல்லத்தின் வாயில் கதவுகளைத் திறந்து திண்ணையில் வந்து அமர்வதற்குக் கூட ஆலோசிக்க வேண்டுமா என்ன..?

"ஆலோசித்துத்தான் தீர வேண்டும் மைதிலி.. தாமோ அழகு ததும்பும் பதினாறு வயது பருவ மங்கை..!"

“அதற்கு என்ன..?”

“தொண்டை மண்டலத்தில் உரிமையுடன் வலம் வரும் சுல்தான்களின் படைவீரர்களின் பார்வையில் நீ பட்டுவிட்டால் என்ன ஆவது என்பதைச் கொஞ்சமேனும் எண்ணிப் பார்த்தாயா..?”

‘ஏன் எண்ணாமல்..?’ என்று எண்ணிக் கொண்டாள் மைதிலி..

அவர்களின் அடாவடியைப் பற்றித்தான் அகிலம் முழுவதும் கூறப்படுகிறதே..

“கண்களில் தென்படும் கன்னியரை அவர்கள் கவர்ந்து சென்று விடுவார்களாம்..”

அன்னபூரணியின் அச்சுறுத்தலில் மைதிலியின் தேகம் நடுங்கியது..

“எமைக் காக்க காஞ்சியின் ஏகாம்பரேஸ்வரரும், பெருமாளும் இருக்கிறார்கள்..” மைதிலி வேண்டுதல் போலக் கூறினாள்..

“முதலில் அவர்களின் கோவில்களையும் திருவுருவச் சிலைகளையும் பாதுகாக்க சம்புவரையர்களால் இயல வேண்டும் என்று பிரார்த்தனை செய்து கொள்... சுல்தான் களின் ஆட்சியில் மதுரை மாநகரின் மீனாட்சியம்மனின் ஆலயமே இழுத்து மூடப் பட்டு விட்டது.. சிற்றரசுகளின் ஆலயங்களையும் அவர்கள் இழுத்து மூட கிளம்பிவிட்டால் என்ன செய்வது..?”

“வாளெடுத்து அவர்களை எதிர்த்து நிற்பது..”

ஆத்திரத்துடன் கூறினாள் மைதிலி.. அன்று கொண்ட ஆத்திரம் அந்தக் கருக்கல் பொழுதிலும் நினைவுக்கு வந்து அவளது புருவங்களில் சுளிப்பை ஏற்படுத்தியது..

"சுல்தானாம்.. சுல்தான்.."

அவள் ஆத்திரத்துடன் வாய்விட்டுக் கூறினாள்..

"மதுரைக்கு அரசனாக இருந்தால் மீனாட்சி அம்மனின் ஆலயத்தை இழுத்து மூட வேண்டுமா..? மாற்று மதத்தினரின் கோவில்களிலும் தெய்வம் நிலை பெற்றிருக்கும் உண்மையை அவர்கள் அறிய மாட்டார்களா..? எமது கோவில்களை இழுத்து மூடும் அதிகாரத்தை எவர் இவர்களுக்கு அளித்தது..? ஆட்சி செய்வது மக்களைத்தானே.. தெய்வங்களின் பக்கம் இவர்கள் எதற்காக பார்வையைத் திருப்புகிறார்கள்..?"

தனக்குத்தானே புலம்பியபடி கோலமிட்டு விட்டு நிமிர்ந்தவளின் கைகளில் இருந்த கோலப்பொடி நிறைந்த கிண்ணம் நழுவவா என்று வினவியது..

அங்கே அவளையே பார்த்தபடி புரவியில் ஆரோகணித்திருந்தான் அந்த ஆடவன்... தீட்சண்யம் நிரம்பிய அவனது விழிகளில் தெரிந்த ஜ்வாலையில் அவள் அசையாமல் அதிர்ந்து நின்றாள்..

'இத்துணை நேரமும் எனக்கு நானே பேசிக் கொண்டிருந்ததை இவன் கேட்டு விட்டானா..?' அவளது தளிர் விரல்கள் நடுங்கின..

'யார் இவன்..?' அவள் அச்சத்துடன் அவனைப் பார்த்தாள்..

'சுல்தானின் படைவீரனோ..?' அவளது காலடியில் பூமி குழைந்து அவளை உள்ளிழுக்க முயன்றது..

"அஞ்ச வேண்டாம் பெண்ணே..!"

புரவியில் இருந்தவனின் கம்பீரமான குரல் அவளை வசீகரித்தது.. பட்டாடையுடன் இருந்தவனின் நெற்றியில் திருநீரும், குங்குமமும் சேர்ந்து துலங்கியதில் அவள் மனநிம்மதி கொண்டாள்..

'இல்லை.. இவன் சுல்தானின் படைவீரனில்லை..'

"ஆண்டாண்டு காலமாக இம்மண்ணில் மதச் சண்டைகள் நடந்து கொண்டுதானே இருக்கின்றன..? தற்போதுதானே மாற்று மதம் வருகை தந்து.. இந்து மதத்தை வேரறுக்க முனைகிறது..? அதற்கு முன்பாக இந்து மதத்திலேயே.. சைவமும், வைணவமும்.. நீ பெரிது நான் பெரிது என்று அடித்துக் கொள்ளவில்லையா..?"

'எவன் இவன்..? எனக்கு கருக்கல் பொழுதில் கல்வி கற்றுத்தர முனைபவன்..' மைதிலி அச்சம் அகன்றவளாக இளநகை கொண்டாள்..

"ஒரு விதத்தில் சுல்தானை நாம் பாராட்டியே ஆக வேண்டும்.."

தொடர்ந்த அவனது பேச்சில் அவள் ஆத்திரம் கொண்டாள்..

"எதற்காக..? நமது ஆலயங்களை இழுத்து மூடியதற்காகவா..? நமது தெய்வச் சிலைகளை அவர்களின்

பார்வையில் படாமல் மறைத்து வைக்க.. நிலத்தில் புதைத்துக் கொண்டிருக்கிறோமே.. அதற்காகவா..?"

மைதிலியின் படபடப்பில் அவன் விழிகளில் சினத்தின் சுடர் தெரிந்தது.. அதில் மைதிலியின் மனம் திருப்தியைக் கொண்டது..

"அல்ல பெண்ணே..! எனது உரையை நீ தவறாக புரிந்து கொண்டிருக்கிறாய்.. சைவமும்.. வைணவமும் ஒன்றுபட்டு இன்று ஒர் மதமாக எழுந்து நிற்கின்றதே.. இந்த அரிய செயலை செய்தது யார்..? சுல்தான்தானே..? அப்பொருளில்தான் நான் அவனைப் பாராட்ட வேண்டும் என்று சொன்னேன்.."

"அதைக் கூறுங்கள்.. மதுரையில் மீனாட்சியம்மனின் ஆலயத்தை இழுத்து மூடி விட்டு.. திருச்சியில் ஸ்ரீரங்கத்தின் கோவில் கொண்டிருந்த ரங்கநாதரின் உருவச்சிலையை மறையச் செய்து விட்ட அரிய செயலை புரிந்தவன் அவன்தான்.. அதற்காக அவனைப் பாராட்டித்தான் தீர வேண்டும்... இவ்விதமாக சைவத்துக்கும், வைணவத்துக்கும் இடையே பாகுபாடு பார்க்காமல் இரண்டுக்கும் இடையூறு விளைவித்த பெருமை மதுரையை ஆள வந்த சுல்தானையே சாரும்.."

இகழ்ச்சியுடன் உதட்டைச் சுழித்து வளைத்த மைதிலியின் கோபப் பேச்சை ஆச்சரியத்துடன் பார்த்த அந்த வீரன் அவளது பேச்சை ரசித்துச் சிரித்தான்..

"ஹா.. ஹா.."

அவனது சிரிப்பொலியில் கலவரம் கொண்ட மைதிலி சுற்றுமுற்றும் பார்வையை ஓட்டினாள்.. அந்த அகால வேளையில்.. வீதியில் நின்றபடி ஓர் புரவி வீரனிடம் வெகு இலகுவாக அவள் உரையாடிக் கொண்டிருப்பதை எவரேனும் பார்த்து விட்டால் என்ன நினைப்பார்கள்..?

"மலர்கொடி..! உனது நாத்தனாரின் செய்கை உசிதமானதல்ல.." என்று மைதிலியின் அண்ணியிடம் பற்ற வைத்து விட மாட்டார்களா..?

அத்துடன் விட்டாலும் தேவலையே.. மற்றவர்களின் நலம் விரும்பும் அந்த மங்கையர் குலதிலகங்கள் அதற்கு மேலும் சொல்லக் கூடுமே..

"தாய், தந்தையற்றவளை.. அண்ணன் மனைவி பாதுகாவல் செய்து வளர்க்கவில்லையென்ற பெயர் வந்துவிடக் கூடும்.. உனது மகள் முல்லைக்கொடி இவ்விதம் செய்தால் நீ பொறுத்துக் கொள்வாயா..? உன் மகளைக் கண்டித்து வளர்க்க மாட்டாயா..? அவளைப் போல உனது நாத்தனாரையும் எண்ண வேண்டாமா..?" என்றெல்லாம் கூறி மலர்கொடியை முள்கொடியாக மாற்றி விடுவார்கள்..

முல்லைக்கொடியைப் போல எண்ண வேண்டாமா என்று இணை கூட்டப்படும் அந்த முல்லைக் கொடியின் வயது மூன்று..! மழலைமாறாத அந்தக் குழந்தையிடம் மலர்கொடி என்ன கடுமையை காட்டி விட இயலும்..?

இருந்தும் இதுபோன்ற ஆராய்ச்சிகளில் ஈடுபடாமல்.. ஊராரின் சொல்பேச்சுக்கு அஞ்சி... மைதிலியிடம்

கடுமையைப் பிரயோகித்து விடுவாள் மலர்கொடி.. இல்லையெனில்..

“ஆயிரம்தான் இருந்தாலும் பெற்றெடுத்த அன்னையைப் போல வருமா..? அண்ணி என்பதினால் தானே நாத்தனார் எக்கேடோ கெடட்டும் என்று எண்ணி மௌனமாக இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு இருக்கிறாள்..? அன்னையாக இருந்தால் இவ்வாறு இருப்பாளா..?” என்ற பேச்சைக் கேட்க வேண்டி வந்து விடுமே..

ஆதலினால்.. தான் மைதிலிக்கு அன்னையைப் போன்ற அண்ணி என்று நிருபிக்க வேண்டிய கட்டாயத்திற்கு அடிக்கடி ஆளாகி விடுவாள் மலர்கொடி..

அவளைக் குற்றம் சொல்லவும் இயலாது.. மைதிலியின் தமையனான பார்த்திபன் அவளைப் பெண் கேட்டு வந்தபோது மைதிலியின் பெற்றோரிடம்..

“நானும், எனது தங்கையும் தாய், தந்தையை இழந்து விட்டவர்கள்.. என்னைவிட பதினைந்து வயது இளையவளான எனது தங்கை பிறந்தவுடன் தாயையும்.. இரண்டு வருடங்களில் தந்தையையும் பறி கொடுத்தவள்.. அவளுக்குத் தாய், தந்தையாக நானே உள்ளேன்.. ஐந்து வயது நிரம்பிய சின்னஞ்சிறு குழந்தை அவள்.. அவளுக்குத் தாயாக தங்களின் மகள் மாறச் சம்மதம் தெரிவித்தால் எனது பணி குறையும்...” என்று வினயத்துடன் வேண்டிக் கொண்டான்..

பெற்றோர் வாயிலாக விவரம் அறிந்த மலர்கொடியின் மனதில் ஐந்தே வயது நிரம்பிய மைதிலியின் மீது

தாய்ப்பாசம் உண்டானது.. பெண்மைக்கே உரிய அந்தத் தாய்மையின் கசிவுடன்..

"அவரது தங்கைக்கு அவர் தந்தையாக மாறியிருக்கும் போது.. தாயாக நான்மாற மாட்டேனா..?" என்ற வினாவை பெற்றோரின் மூலமாக பார்த்திபனுக்கு அனுப்பி வைத்தாள்.

அந்த ஓர் வினாவில் மனம் நிறைந்து அவளுக்கு மாலையிட்டு மாங்கல்யத்தை அணிவித்து தனது மனையாட்டியாக ஆக்கிக் கொண்டான் பார்த்திபன்..

அவ்விதமான உறுதிமொழியை தனது கணவனுக்கு அவள் அளித்திருப்பதை அறிந்து வைத்திருந்த அக்கம், பக்கத்தினர்.. அந்த உறுதி மொழியை நினைவுறுத்தியே அவளை ஒரு வழியாக்கிக் கொண்டிருந்தனர்..

ஐந்து வயதுச் சிறுமியை அதட்ட இயலுமா..? அதிலும் மைதிலி தாயின் முகத்தைக் கண்டறியாதவள்.. தாய்மைப் பெருக்குடன் இருகரம் விரித்து அழைத்த மலர்க்கொடியிடம் அனைத்தும் நீயே என்று சரண் புகுந்து விட்டவள்.. அந்தக் குழந்தையிடம் கடுமை காட்டுவதா..?

நாத்தனாரைத் தனது மூத்த குழந்தையாக அரவணைத்துக் கொண்ட மலர்க்கொடியை நெறிப்படுத்த முயன்றனர் அக்கம், பக்கத்து இல்லத்தினர்..

"பெண் குழந்தைகளுக்கு சலுகை காட்டக் கூடாது மலர்கொடி.. அதுவும் தாயில்லாப் பெண்.."

இம்மொழிகளைக் கேட்டால் மைதிலியின் மனது வேதனைப்படுமே என்று மலர்க்கொடி பதைப்பாள்..

"அவ்வாறு கூற வேண்டாம் அக்கா.. நானிருக்கும் போது மைதிலி தாயில்லாப் பெண்ணாக ஆகிவிட மாட்டாள்.. நானே அவளின் தாய்..!"

இதைக் கூறும் போது மலர்க்கொடியின் முகம் விகசிக்கும்.. அதில் மைதிலியின் முகம் மலரும்... அவ்விதமான ஒற்றுமையைக் காணும் பக்கத்து இல்லத்தின் அக்காவுக்கு அரளி விதையை அரைத்துக் குடித்தாற் போல இருக்கும்..

அது எப்படி.. தாயில்லாத பெண்ணை சிற்றன்னையாக வருபவர்களும்.. அண்ணனின் மனைவியாக வருபவர்களும் ரட்சிக்க இயலும்..? இது உலக வழக்கமல்லவே.. அந்த வழக்கத்திலிருந்து மலர்கொடி மட்டும் மாறுபட்டு நிற்பதா..? அதை விரல் சுவைத்துப் பார்த்தபடி பக்கத்து இல்லத்தின் அக்கா வாளாவிருப்பதா..?

"அவ்விதம் நீ எண்ணுவதைப் போல எனக்குத் தெரியவில்லையே.."

"ஏன்..? மைதிலியை நான் சீராட்டுவதில் என்ன குறை கண்டீர்கள் அக்கா..?"

"ஒரேயடியாக சீராட்டுபவள் பெற்ற தாயாக ஆகி விட முடியாது மலர்கொடி.. அடிக்கிற நேரத்தில் அடித்து.. கடிந்து கொள்ள வேண்டிய நேரத்தில் கடிந்து கொண்டால்தான் அவள் அன்னை..! அவ்விதத்தில் நீ மைதிலியை கடிந்து பேசி நான் கண்டதில்லையே.."

'கடிந்து பேசுவதைப் போல அவள் நடந்து கொள்வதில்லையே..'

இதைப் பக்கத்து இல்லத்தின் அக்காவிடம் கூறிவிட முடியாது.. என்பதினால் மலர்க்கொடி.. அவள் முன்னிலையில் மைதிலியைக் கடிந்து கொள்வதைப் போல பாவனை செய்வாள்.. காலப்போக்கில் பக்கத்து இல்லத்து அக்காவைப் போலவே.. மற்ற இல்லத்தின் அக்காக்களும் அறிவுரை கூற முனைந்ததில் மலர்கொடியின் பாவனைகள் தொடர ஆரம்பித்தன.. மைதிலி பருவம் எய்தியதும் அறிவுரைகளின் ஆக்ரமிப்பு அதிகமானது.. மலர்க்கொடியின் பாவனையும் மிகுதியானது..

அவ்வாறு நாத்தனாரின் மீது அடக்குமுறையைப் பிரயோகித்தால்தான்.. அன்னையாக மாற முடியும் என்ற கட்டாயத்தின் பிடியில் சிக்கியிருக்கும் மலர்க்கொடியின் காதுகளுக்கு... கருமை மறையாத அந்த விடியல் பொழுதில்.. ஆளரவமற்ற ஏகாந்தம் கொண்ட வீதியில்.. அழகு நிரம்பிய கம்பீரமான வாலிபன் ஒருவனுடன்.. மைதிலி தனித்து நின்று பேசிக் கொண்டிருந்தாள் என்ற விவரம் எட்டி விட்டால் என்ன ஆகும்..?

"நன்றாக இருக்கிறது.. பெற்ற மகளைப் போல நாத்தனாரை வளர்க்கவில்லையென்று இந்த ஊர் என்னைத் தூற்றட்டும் என்று எண்ணி விட்டாயா..? மலர்கொடியின் மகளாக இருந்திருந்தால் இந்தக் கருக்கல் வேளையில் அன்னிய ஆடவனுடன் தனித்து நின்று பேச விடுவாளா என்று அக்கம் பக்கத்து இல்லத்தினர் என்னைப் பழிக்க மாட்டார்களா..? அதுதான் உனது ஆசையா..?"

மலர்க்கொடியின் குரல் மனதில் ஒலித்ததில் பதட்டமாக இல்லத்துக்குள் திரும்ப முனைந்தாள் மைதிலி.

"தாம் இட்ட கோலம் அழகாக உள்ளது.."

அவனது குரல் அவளைத் தடுத்து நிறுத்தியதில் இயலாமையோடு அவனைப் பார்த்தாள்..

நெடுந்தொலைவில் அவன் பயணித்து வந்திருக்க வேண்டும் என்பதைக் களைத்த அவனது முகமும்.. கலைந்த முடியும் சொல்லின.. புரவியில் அமர்ந்திருந்த கம்பீரத் தோற்றம் அவளது கன்னி மனதைக் கட்டி இழுத்தது... தனக்காக இல்லாவிடினும் தமையனின் மனைவிக்காகவாவது மனதைக் கட்டுக்குள் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எச்சரிக்கையுணர்வுடன் விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள் மைதிலி..

"நன்றி.."

"எமக்கொரு உபகாரம் செய்ய இயலுமா..?"

"என்ன..?"

"நெடுத்தொலைவில புரவியிலேயே பயணித்து வந்திருக்கிறேன்.. இளைப்பாற வேண்டுமென எனது உடலும்.. குதிரையும் கெஞ்சுகின்றன.. இளைப்பாற இடம் கிடைக்குமா..?"

மைதிலி சங்கடம் கொண்டாள்.. வந்திருப்பவனோ வாலிபன்.. அவளோ பருவமங்கை.. அவனுக்கும், அவனது புரவிக்கும் எவ்வாறு அவளால் இடமளிக்க இயலும்..?

அவனது முகத்தைப் பார்த்து முடியாது என்று கூறவும் அவளால் முடியவில்லை..

"இதை நான் முடிவு செய்ய இயலாது.."

"வேறு யார் முடிவு செய்ய வேண்டும்..?"

"எனது தமையனும், அண்ணியும் முடிவு செய்ய வேண்டும்.."

"ஏன்..? தமது தாய், தந்தை முடிவு செய்யக் கூடாதா..?"

"கூடாது என்று யார் சொன்னது..? அவர்கள் உயிருடன் இருந்திருந்தால் அவர்களின் முடிவு முதல் முடிவாகவும்.. அண்ணன், அண்ணியின் முடிவு அடுத்த முடிவாகவும் இருந்திருக்கும்.. அவ்வாறு இருக்கக்கூடாது என்று நினைத்துத்தானோ என்னவோ அவர்கள் எனது சிறுவயதிலேயே மேலுலகம் சென்று விட்டார்கள்.."

"ஓ.."

அவன் அனுதாபத்துடன் அவளைப் பார்த்தான்.. மைதிலி கோலப்பொடியின் கிண்ணத்தை திண்ணையிலிருந்த மாடத்தில் வைத்து விட்டு சங்கடத்துடன் கைகளைப் பிசைந்தாள்.. அதை உணராதவன் போல புரவியிலிருந்து அவன் குதித்து இறங்கினான்.. அவன் இறங்கிய வேகத்தை அவளையுமறியாமல் பார்த்தவளின் மனம் சலனப்பட்டது..

ஆறடி உயரமும்.. அகன்ற மார்பும்.. விசாலமான நெற்றியும்.. தீர்க்கமான நாசியும்.. அழுத்தமான இதழ்களும்.. கருத்த மீசையுமாக.. அந்தக் கட்டழகன் அவளருகில் வந்தான்..

மைதிலியின் இதயம் தடதடத்தது... அவள் அச்சத்துடன் அக்கம் பக்கத்தின் இல்லங்களைப் பார்த்தாள்.

"அனைத்துக் கதவுகளும் இறுக மூடியுள்ளன.."

விச்ராந்தியாக அவள் இல்லத்தின் திண்ணையில் கால் மீது கால் போட்டுத் தோரணையாக அமர்ந்தவனின் செய்கையில் அவள் பதட்டம் கொண்டாள்.. அதைக் கண்டும் காணாதவனைப் போல..

"எப்போதும் இப்படித்தான் இந்த வீதி ஆளரவமற்று இருக்குமா..?" என்று கனகாரியமாக அவன் விசாரித்து வைத்தான்..

'தற்போது இதுதான் அதி முக்கியம்..' அவளுக்குத் தலைவேதனையாக இருந்தது..

மற்றவர் சொல்வது இருக்கட்டும்.. அவளுக்கே அது முறையென்று தோன்றவில்லை.. அது போன்ற இருள் நிரம்பிய அதிகாலைப் பொழுதில்.. ஆளரவமற்ற சூழலில் அறிமுகமில்லாத வாலிபனை இல்லத்தின் திண்ணையில் அமர வைத்து வெகு இயல்பாக அவள் உரையாடிக் கொண்டிருப்பது முறையான செயல் அல்லவே..

"இதற்கான விடையை எனது தமையன் தமக்கு அளிப்பார்.."

அவள் சட்டென்று கதவு திறந்து இல்லத்திற்குள் சென்று விட்டாள்.. போகும்போது அவளையுமறியாமல் அவள் தலை திரும்பிப் பார்த்து வைத்ததில் அவன் இதழோரம் சிந்திய குறுநகையில் அவள் கிளர்ச்சி கொண்டாள்..

'இவன் யாராக இருக்கக் கூடும்..?'

ஒன்றுமட்டும் அவளுக்குப் புரிந்தது.. அவன் சாதாரண வழிப்போக்கன் அல்ல..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



1

நிழல்கூட நிஜமாகும் தருணங்கள் கைகூடும்..

ஸ்கூட்டியின் சப்தத்தைக் கேட்டதும் வாசல் கேட்டைத் திறந்து விட்ட அனுராதாவின் செய்கையில் மனம் நெகிழ்ந்தாள் யாமினி..

மகளின் வரவுக்காக அன்றைய நாள் முழுதும் அனுராதா காத்திருந்திருக்க வேண்டும்.. அதனால் தான் தெருமுனையில் கேட்ட ஸ்கூட்டியின் சப்தத்தை அவளால் இனம் கண்டு வாசலுக்கு வந்திருக்க முடிந்திருக்கிறது..

அனுராதாவின் பார்வை முகத்தை மொய்ப்பதை உணர்ந்தும் உணராதவளைப் போல யாமினி ஸ்கூட்டியின் வேகத்தை மிதப் படுத்தி உள்ளே ஓட்டிச் சென்று நிறுத்தினாள்..

வாசல்கேட்டை மூடிவிட்டு வந்த அனுராதாவைப் பின்தொடர்ந்து வீட்டுக்குள் போனாள்... ஆராயும் அனுராதாவின் பார்வையைச் சந்திக்காமல்..

“அப்பாவும், யதுவும் வந்தாச்சாம்மா..?” என்று கேட்டாள்..

“வந்திருந்தா அவங்களோட வண்டிக நின்னிருக் கனுமே.. நீ ஸ்கூட்டியை நிறுத்தினப்போ.. போர்டிகோ

காலியாத்தான இருந்துச்சு..? அப்புறமும் கேக்கிற பாரு கேள்வி..! இப்புடியெல்லாம் கேக்க உன்னாலதான்டி முடியும்.."

"சரிம்மா.. தெரியாம கேட்டுட்டேன்.. போதுமா.."

"பாக்காம கேட்டுட்டன்னு சொல்லு.."

"ஓகே.. ஓகே.. பாக்காம கேட்டுட்டேன்.."

"இதையே பாக்காதவ வேலையை எப்படிடீ கவனமா பாத்திருக்கப் போற..?"

யாமினி பேசவில்லை.. அனுராதா இப்படித்தான் பேசுவாள் என்று கசப்புடன் நினைத்துக் கொண்டாள்.. அவளால் இப்படித்தான் பேச முடியும்.. அவளை இப்படி பேச வைத்தது யாமினியின் செய்கைகள்தான்.. இதில் அனுராதாவை எப்படிக் குற்றம் சொல்ல முடியும்..?

"வேலை எப்படிப் போச்சு..?"

'ஒரே அடிதடியாய் போச்சு..'

சொல்லாமல் மனதில் நினைத்துக் கொண்டாள் யாமினி.. அன்று முழுவதும் அப்படித்தான் இருந்தது.. சித்தார்த்தனின் பெர்சனல் செக்கரட்டரி என்றுதான் பெயர்.. அவனுடைய அறையில் சித்தார்த்தனுடன் கோந்து இல்லாமல் ஒட்டிக் கொண்டிருந்த தாமோதரன்தான் யாமினிக்கு வேலை சொன்னான்.. அதைச் செய், இதைச் செய் என்று.. ஒரு மாத காலமாக பெண்டிங்கில் இருந்த அத்தனை வேலைகளையும் அவள் தலையில் கட்டி விட்டுப் பிழிந்து எடுத்து விட்டான்.. தெரியாத

வேலைகளை கற்றுக் கொடுக்கவும் இல்லை.. யாமினியாக கற்றுக் கொள்ள கால அவகாசமும் கொடுக்கவில்லை.. போதாக்குறைக்கு அவளை மட்டம் வேறு தட்டினான்..

"இதுகூடத் தெரியாம நீங்க எப்படி வேலைக்கு வந்தீங்க..?"

தாமோதரனுடைய தலையாய குறிக்கோள் என்னவாக இருக்கக்கூடும் என்று யாமினிக்கு உள்ளங்கை நெல்லிக் கனியைப் போலத் தெள்ளத்தெளிவாக தெரிந்தது..

அந்த வேலையை அவளால் பார்க்க முடியாது என்று தோல்வியை ஒப்புக் கொண்டு.. அவள் தானாகவே வேலையை ரிசைன் பண்ணி விட்டு ஓடி விடவேண்டும்..

'அதுதான் நடக்காது..'

யாமினி மனதுக்குள் சூளுரைத்தபடி வேலையைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தாள்.. அவளாக அனுமானம் பண்ணி.. இந்த வேலையை இப்படித்தான் முடிக்க வேண்டும் போல என்று தன் போக்கில் செய்து கொடுத்த வேலைகள் கரெக்டாக இருந்து தொலைத்ததில் தாமோதரனுக்கு வெறி வெறியாக வந்ததை அறிந்தும் அறியாதவளைப் போல அன்றையப் பொழுதை ஓட்டியிருந்தாள்..

அப்படியெல்லாம் வன்பாடு பட்டு கிடைத்த வேலையைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமெல்லாம் யாமினிக்கு இல்லை.. இன்னும் சொல்லப் போனால்.. இனம் விளங்காத உணர்வுகளைத் தூண்டிவிடக் கூடிய சித்தார்த்தனின் அருகாமையிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்றே அவள் நினைத்தாள்..

அவனுக்கும் அவளுக்கும் இடையில் உள்ள பந்தத்தின் பெயர் என்ன..? எவ்வாறு அந்த பந்தம் உருவானது என்று தலையைக் குடையும் கேள்விகளுக்கு விடை தேடி அலைவதை விட.. அவனது அருகாமையிலிருந்து தப்பி ஓடி விடுவதே உசிதமானது என்று தான் அவளுக்குத் தோன்றி வைத்தது..

ஆனால் அதை அவளாகச் செய்ய வேண்டும்.. தாமோதரனின் டார்ச்சருக்குப் பயந்து கொண்டு செய்யக் கூடாது..

இதைக் கூறினால் அனுராதாவின் கவலை அதிகரிக்காதா..?

சித்தார்த்தனைச் சந்தித்ததைப் பற்றியோ.. அவனுக்கும்.. அவளுக்கும் இடையில் ஏதோ ஓர் இனம் புரியாத பந்தம் இருப்பதைப் போல.. அவர்கள் இருவருமே உணர்வதைப் பற்றியோ அவள் அனுராதாவிடம் சொல்லவே இல்லை..

அதற்குப் பின்பும் சித்தார்த்தனின் கம்பெனிக்கு இண்டர்வியூக்கு சென்றபோது நடந்த நிகழ்வுகளையும் அவள் அனுராதாவிடம் சொல்லாமல் மறைத்திருந்தாள்..

இத்தனைக்கும் மேலாக இண்டர்வியூவில் ஏற்பட்ட மோதலுக்குப் பின்னரும் அவளுக்கு அப்பாயிண்ட்மென்ட் ஆர்டர் கிடைத்து விட்டது என்பதையும் அவள் சொல்லவே இல்லையே..



2

வான் நிலவு அறியுமா..? மண்ணுக்கு அது வெகுதொலைவு என்பதை..

இல்லத்துக்குள் சென்ற மைதிலிக்கு அடுத்து அவள் என்ன செய்ய வேண்டும் என்று புரியவில்லை..

இருள் பிரியாத வேளையில் கோலமிடப் போனவருடன் வழியோடுபோன வழிப்போக்கன் ஒருவன் உரையாடுகிறான்.. வெகு தொலைவிலிருந்து வந்திருக்கும் களைப்பு நீங்க ஓய்வெடுத்துக் கொள்ள இடம் கேட்கிறான்.. இதை இல்லத்தில் உள்ளவர்களிடம் அவள் எப்படிச் சொல்லுவாள்..?

அகன்று நீண்டிருந்த முன்கட்டுப் படிகளைத் தாண்டி முற்றம் போல அமைந்திருந்த மையப் பகுதியில் வந்து நின்றாள் மைதிலி.. மேன்மாடப் படிகளை ஏக்கத்துடன் பார்த்தாள்..

'அண்ணி துயில் கலைந்து வந்தால் நலமாக இருக்கும்..'

அவள் எண்ணி முடிப்பதற்குள் பாதச் சலங்கையின் ஒலி கேட்டது.. மைதிலி ஆவலுடன் படிகளைப் பார்த்தாள்.. இல்லத்தின் மேன்மாடப் பகுதியிலிருந்து இறங்கி வந்து கொண்டிருந்தாள் மலர்க்கொடி... மைதிலியைக் கண்டதும் அவளது முகம் மென்மையானது.

"இத்துனை விரைவாக எழுந்து கொள்ள வேண்டுமா மைதிலி..? சற்று உறங்கியபின் எழுந்திருக்கலாமே.." என்று பிரியத்துடன் அதட்டினாள்..

"துயில் கலைந்து விட்டது அண்ணி.. அத்துடன்.. எவரும் இல்லாத ஏகாந்தப் பொழுதில் வாசலில் நீர் தெளித்துக் கோலமிடுவதின் சுகமே தனி... அதை உணர்ந்தவர்கள் அதைத் தியாகம் செய்ய மாட்டார்கள்.." மெல்லிய சிரிப்புடன் கூறினாள் மைதிலி..

"உனக்கான விளக்கமும்.. நியாயமும் தனியாகத்தான் இருக்கும்... எவரேனும் இதைக் கேட்டால் என்ன சொல்லுவார்கள்..?"

"என்ன சொல்லுவார்கள்..? மலர்க்கொடி.. உனது மகளாக இருந்தால் இவ்வளவு சுதந்திரமாக பேச விடுவாயா என்று சொல்லுவார்கள்.. தாங்களும் மூன்று வயதான முல்லைக்கொடியைக் கண்டிப்பதைப் போல என்னையும் கண்டிக்க முற்படுவீர்கள்.. சரியாகச் சொல்லி விட்டேனா அண்ணி..?"

இமை கொட்டி ஒன்றும் அறியாத மழலை போல முகத்தை வைத்துக் கொண்டு மைதிலி கேட்டதில் மலர்கொடிக்கு நகைப்பு வந்து விட்டது... அவள் நாத்தனாரின் காதைப் பிடித்துத் திருகி..

"குறும்புக்காரி.." என்று செல்லம் கொஞ்சினாள்..

விடியலின் அறிகுறிகள் வானில் தென்படாத நிலையில் அடுக்களைக்குள் நுழைந்த மலர்க்கொடி..

"கோவர்த்தனன் வந்து விட்டானா என்று பார் மைதிலி.. பால் காய்ச்ச வேண்டும்.. கிள்ளி வளவனுக்கும்.. முல்லைக் கொடிக்கும் பல் துலக்கியதும் பால் அருந்தியாக வேண்டுமே.." என்றாள்..

"இதோ அண்ணி.."

வாசல் பக்கமாக ஓர் எட்டு வைத்த மைதிலி.. அப்படியே நின்று விட்டாள்..

'அங்கே.. திண்ணையில் 'அவன்' இருக்கிறானே..'

அவிழ்ந்து தொங்கிய நீண்ட கூந்தலை அள்ளி.. சுற்றி வளைத்துக் கொண்டையிட்ட வண்ணம் நாத்தனாரைப் பார்த்த மலர்க்கொடி புருவங்களை உயர்த்தினாள்..

"என்ன ஆனதம்மா..? ஏன் இவ்விதம் தேங்கி நிற்கிறாய்..?"

"அண்ணி.."

அச்சத்துடன் ஒலித்த மைதிலியின் குரலில் அவளருகில் வந்து விழிகளுக்குள் உற்றுப் பார்த்தாள் மலர்கொடி.. எந்நாளும் இல்லாத வகையில் மைதிலி தடுமாறி நின்றதில் அவள் மனதில் அச்சம் சூழ்ந்து கொண்டது.

"என்னவென்று சொல்லம்மா.. தாயில்லாப் பெண்ணை வளர்த்த மலர்க்கொடிக்கு தன் பெண்ணைப் போல நாத்தனாரையும் வளர்க்கத் தெரியவில்லை என்ற பெயரை வாங்கிக் கொடுத்து விடாதே.."

வழக்கமான மலர்க்கொடியின் புலம்பலில் 'என்னடா இது..' என்றாகி விட்டது மைதிலிக்கு..

அவள் வாசலில் கோலமிடத்தானே சென்றாள்..? வழியோடு குதிரையில் போன வழிப் போக்கனுக்கு 'வா..வா..' என்று வெற்றிலைபாக்கு வைத்து அழைக்கவா

சென்றாள்..? வழியோடு போனவன் அவள் இல்லத்து திண்ணையில் உட்கார்ந்து கொண்டு இப்படி அவளை இக்கட்டில் மாட்டி விட்டு விட்டானே..

"என்னவென்று சொல்லுவேன் அண்ணி..?"

மைதிலி திணறிய திணறலில் மலர்க்கொடிக்கு வியர்த்துக் கொட்டி மயக்கமே வந்து விட்டது..

"கடவுளே..! என்னவென்று சொல்ல முடியாத அளவுக்கா இக்கட்டில் மாட்டியுள்ளாய்..?"

அவள் மனதை அறிந்ததைப் போல மலர்க்கொடி வினவி வைத்ததில் நன்றி பெருக்கெடுத்தோட...

"ஆம் அண்ணி.." என்றாள் மைதிலி..

"நான் என்ன செய்வேன்.? ஆயிரம்தான் இருந்தாலும் அன்னை வளர்ப்பதைப் போல ஆகாது என்றார்களே.. அது மெய்யாகி விட்டதே.. இதை எவரிடம் சென்று முறையிடுவேன்..?"

மலர்கொடியின் பிலாக்கணத்தில் மைதிலிக்கு 'பகீர்' என்று ஆகிவிட்டது..

"மெதுவாகப் பேசுங்கள் அண்ணி.. சப்தம் எழுப்பாதீர்கள்.. அடுத்த இல்லத்து அன்னபூரணி அக்கா வெறும் வாயை மெல்லுவதிலேயே வல்லவள்.. இதில் அவலை அள்ளி அள்ளிக் கொடுத்தீர்கள் என்றால் அவளுடைய ஆயுள் வரை மென்று விடுவாள்.."

மைதிலியின் எச்சரிக்கையில் குரலைத் தாழ்த்திய மலர்க்கொடி..

"இந்தப் புத்தியெல்லாம் உள்ளவள்.. சொல்பேச்சு வரவிடாமல் நடந்து கொள்ள வேண்டாமா..?" என்று எரிச்சல்பட்டாள்..

"நான் என்ன செய்யட்டும் அண்ணி..? வேண்டுமென்றே நான் வெற்றிலை பாக்கு வைத்து அழைத்ததைப் போல அல்லவா சடைத்துக் கொள்கிறீர்கள்..?"

"இரு.. இரு.. வெற்றிலை பாக்கு வைத்து அழைத்தாயா..? எவரை அழைத்தாய்..? ஏன் அழைத்தாய்..?"

"நான் எங்கேயண்ணி அழைத்தேன்..? அந்த மனிதராகத்தான் வந்தார்.." மைதிலி இமை கொட்டினாள்.

"அடிப்பாவி..! அடுத்து என்ன நடந்தது.."

மலர்கொடி கொண்டையிட நினைத்த கூந்தல் அவிழ்ந்து பாதம் தொட்டுக் கொண்டிருப்பதை மறந்து போனவளாக நாத்தனாரை அதட்டினாள்..

"என்ன நடந்தது..? வந்தார்.. நின்றார்.. பேசினார்.." இளநகையுடன் கூறினாள் மைதிலி..

அவளுக்கு அந்த விளையாட்டைப் பிடித்திருந்தது.. எதுவுமே இல்லை.. ஆனால்.. ஏதோ ஒன்று இருப்பதைப் போல அஞ்சி நடுங்கும் அண்ணியிடம் விளையாடப் பிடித்திருந்தது..

யாருக்குக் கிடைப்பாள் இப்படியோர் அண்ணி..? நாத்தனாரை எதிரியைப் போலப் பார்க்காமல்.. பெற்ற பெண்ணைப் போல பாதுகாத்து அன்பு காட்டும் அண்ணி கிடைக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமல்லவா..?

"பேசினாரா...? எத்துணை இலகுவாகச் சொல்கிறாய்..? இப்படி வாசலில் நின்று அன்னிய ஆடவனுடன் பேசியிருக்கிறாயே.. அடுத்த வீட்டு அன்னபூரணி பார்த்திருந்தால் என்ன ஆவது..?"

அவிழ்ந்து தொங்கிய கூந்தலைப் பற்றிய நினைவின்றி தலைமீது கை வைத்தவள்.. ஏதோ நினைவு வந்தவளாக அவசரமாக வினவினாள்..

"நீ பேசியதை அன்னபூரணி காணவில்லைதானே..?"

எப்படிக் கண்டிருப்பாள்..? சும்மாவே அவள் அதிகாலையில் வாசலில் நீர் தெளித்துக் கோலமிட சோம்பல் கொள்ளுவாள்.. தற்போதோ.. மதுராநகரில் இருக்கும் சுல்தானின் ஆட்சியைக் காரணமாக சுட்டிக் காட்டி இருள் பிரியாத வேளையில் வாசலில் கோலமிட அன்னபூரணியைப் போன்ற பேரிளம் பெண்களுக்கு பாதுகாப்பில்லை என்று திட்டவட்டமாக தெரிவித்து விட்டு சூரியனின் கதிர்கள் வீதியில் படும்வரை துயில் கலைய மாட்டாளே.. அவளாவது.. இருள் சூழ்ந்த கருக்கலில் வாசல் பக்கம் வருகை தருவதாவது..

அதை உணராமல் பதட்டப்பட்ட மலர்க்கொடியிடம் இமைகொட்டிய மைதிலி.. அறியாத மழலை போல..

"எனக்குத் தெரியவில்லையே அண்ணி.." என்று கைவிரித்தாள்..

"தெரியவில்லையா..?" அவள் அரண்டாள்..

"ஆம் அண்ணி..! இருள் பிரியாத இப்பொழுதில் அடுத்த இல்லத்தின் கதவு திறந்து அன்னபூரணி அக்கா திண்ணைக்கு வந்து நின்றால் நான் எப்படி அறிவதாம்..?"

"கடவுளே..!"

"ஒருவேளை அக்கா அக்காட்சியினைக் கண்டாலும் கண்டிருக்கலாம்.. நானறியேன் பராபரமே..!"

"அப்படியே உன் கன்னத்தில் இரண்டு அடிகளை இட்டாலென்ன..?"

மலர்க்கொடி கோபம் கொண்டாள்.. மைதிலி அவள் முன்னால் கன்னத்தைக் காட்டி..

"இடுங்களேன்.. யார் வேண்டாமென்று மறுத்ததாம்..? அண்ணியின் அடி அமிர்தமல்லவா..?" என்று கொஞ்சினாள்..

"உன்னை..!" மலர்க்கொடி பேச்சு வராமல் தவித்தாள்.

அவள் அப்படித்தான்.. அடிப்பேன்.. அடிப்பேன் என்று மிரட்டுவாளே தவிர ஓர்நாளும் அடிக்க மாட்டாள்.. அடியெல்லாம் பேச்சில்தான் இருக்கும்..

"என் செல்ல அண்ணி.." மைதிலி மலர்க்கொடியிடம் கொஞ்சினாள்...

"விடு என்னை.. அண்டை இல்லத்தாரிடம் ஏச்சும், பேச்சும், வாங்கி வைக்கும் செய்கையைச் செய்து விட்டு கொஞ்ச வருகிறாயா..? உனக்கென்ன.. இளம் கன்று பயமறியாது என்று ஏதாவது செய்து விட்டுப் போய் விடுவாய்.. துயர் கொள்வது நான்தானே.. உன்னைச் சரியான முறையில் வளர்க்கவில்லையென்று ஊர் என்னை ஏவி விடாதா..? உனது செய்கைகள் உன்னைப் பாதிப்பதற்கு முன்னால் என்னைத்தான் பாதிக்கும் என்பதனை அறிந்திருந்தும் இச்செயல் புரிய நீ துணிவாயா..?"

மலர்கொடியின் ஆதங்கம் கலந்த கோபத்தில் மைதிலி விளையாட்டை மறந்து அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்..

"நான் தாங்கள் வளர்த்த பெண் அண்ணி.. உங்கள் மனம் வருந்தும் எச்செயலையும் நான் செய்ய மாட்டேன்.. உங்களுக்கு ஏச்சும், பேச்சும் வாங்கிக் கொடுக்கும் வகையில் செயல்பட மாட்டேன்.. என்மீது தாங்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும்.. தங்களின் வளர்ப்பின் மீது நம்பிக்கை கொள்ளுங்கள் அண்ணி.. தாங்கள் வளர்த்த பெண் முறை தவறிய செயல்களைச் செய்வாளா..?"

மைதிலி பேசப்பேச மலர்க்கொடி ஆனந்தம் கொண்டாள்.. தனது வளைக்கரத்தால் தான் வளர்த்த பெண்ணை அணைத்துக் கொண்டாள்..

"என் கண்ணே...! இப்போதுதான் என்மனம் நிம்மதி கொள்கிறது.. இவ்விதம்தான் பொய் சொல்லி என்னை அச்சுறுத்துவதா..?"

லேசான மனநிலையுடன் அவிழ்ந்து கிடந்த கூந்தலை வளைத்துக் கொண்டையிட முயன்றாள் மலர்க்கொடி..

"பொய் அல்ல அண்ணி.. தற்போது உண்மையைத் தான் நான் சொன்னேன்.." என்று தயக்கத்துடன் மைதிலி கைகளைப் பிசைந்ததும் கொண்டையிடுவதை பாதியில் நிறுத்திவிட்டு..

"என்னது..?" என்று பதட்டமானாள்..

மலர்கொடியின் கூந்தல் பாவம்.. கொண்டையில் நிற்க இயலாமல் நீண்டு தொங்கிக் கொண்டிருந்தது..

எப்போதும் சீராக கொண்டையிட்டுக் கொண்டிருக்கும் அவ்வில்லத்தின் சீமாட்டி.. கூந்தலைத் தொங்க விட்டு நின்றிருப்பதைக் கையில் பால் பாத்திரத்துடன் வந்த கோவர்த்தனன் கண்டு விட்டு அதிசயம் கொண்டான்..

'நம் இல்லத்தின் எஜமானியம்மா எதற்காக தலைவரி கோலமாக நிற்கிறார்கள்..?'

மலர்க்கொடிக்கு அப்படியொரு வேண்டுதல் ஏதும் இல்லையென்று அவனுக்கு எப்படித் தெரியும்..? மலர்கொடியிடம் கேட்டிருந்தால் மைதிலியைப் போன்ற நாத்தனார் வாய்க்கப் பெற்ற அண்ணிக்குக் கூந்தலை அவிழ்த்து விடாமல் கொண்டையிட்டுக் கொண்டிருக்கும் பாக்கியம் எப்படிக் கிட்டும் என்று கேட்டிருப்பாள்..

"அம்மா..! பால் கறந்து கொண்டு வந்திருக்கிறேன்.."

அவன் என்னவோ பவ்யமாகத்தான் இவ்வார்த்தை களைக் கூறினான்.. மைதிலியின் அழிச்சாட்டியத்தில் ஆடிப் போயிருந்த மலர்க்கொடி அவன்மீது அத்துனை கோபத்தையும் திருப்பிப் பாய்ந்தாள்.

"இதுதான் பால் கறக்கும் பொழுதா..? சூரியனின் கதிர்கள் உச்சிப் பொழுதை எட்டும் வரைக்கும் காத்துக் கிடந்தாயா..?"

"சூரியனின் கதிர்களா..?"

குழப்பத்துடன் முற்றத்தில் தெரிந்த வானத்தை அண்ணாந்து பார்த்தான் கோவர்த்தனன்.. விடிவெள்ளி மின்னிக் கொண்டிருந்தது.. கதிரவனின் கதிர்களின் சுவடு கூடத் தெரியவில்லை..

'இதில் உச்சிப்பொழுதை நமது அம்மா உரக்கக் கூவி அழைத்து வைக்கிறார்களே..'

அவனுக்குப் புதிராக இருந்தது.. மலர்கொடி இதுபோல இல்லத்தில் பணி புரிபவர்களை வாட்டி எடுக்கும் ரகமல்ல.. அவர்களை இல்லத்தில் ஒருவராகப் பாவித்து.. அவர்களையும் அதைப் போலவே நினைக்க வைத்து விடும் பண்பைக் கொண்டவள்..

"சூரியனின் கதிர்களின் சுவடு கூடத் தெரியாத கருக்கல் பொழுதம்மா இது.. நான் எப்போதும் வருவதைப் போல வருகை தந்து விட்டேன்.. நீங்கள் வேண்டுமானால் திண்ணையில் அமர்ந்திருக்கும் நம் இல்லத்தின் விருந்தினரிடம் வினவிப் பாருங்கள்.."

கோவர்த்தனன் சாட்சிக்கு ஒருவரை இழுக்க.. மலர்கொடிக்கு மூச்சுத் திணறி.. இதய நோவு வந்து விடும் போல ஆகிவிட்டது.

அவளது பார்வை..

'அடிப்பாவி மைதிலி..! நீ மெய்யாகவே ஒரு ஆடவனுக்கு வெற்றிலை பாக்கு வைத்து அழைத்து உரையாடிக் கொண்டிருந்தாயா..?' என்று கேட்டது..

மைதிலி எப்போதும் போல இமைகளைக் கொட்டித் தலையை சரித்து.. மூக்கை வேறு உறிஞ்சி அழிச்சாட்டியம் பண்ணியதில் மலர்க்கொடியின் இதய நோவு அதிகரித்து வைத்தது..

கோவர்த்தனின் முன்னிலையில் கோபத்தை வெளிக் காட்டிவிடக் கூடாது என்று வன்பாடு பட்டுப் பொறுமையை இழுத்துப் பிடித்து நிறுத்திக் கொண்டவள்..

“ஆமாமாம்.. விருந்தினர்தான்.. நம் இல்லத்துக்குத் தான் வருகை தந்திருக்கிறார்.. அதனால்தானே நம் இல்லத் திண்ணையில் உரிமையோடு உட்கார்ந்திருக்கிறார்.. அயலார் இல்லத்துக்கு வருகை தந்தால் நம் இல்லத்தின் திண்ணையில் உரிமையோடு உட்காரமுடியுமா..?” என்று சகட்டு மேனிக்கு நியாயம் கேட்டு.. உளறிக் கொட்டி கிளறி மூடினாள்..

“அதைத்தான் நானும் சொன்னேன் அம்மா.. அவர் நமது இல்லத்திற்குத்தான் விருந்தினராக வருகை தந்திருக்கிறார்.. இதை அவரே கூறினாரே..”

“அவரே கூறினாரா..?”

மைதிலியை முறைத்தபடி ஆத்திரத்துடன் கேட்டாள் மலர்க்கொடி.. அவளது விழிகள் இருக்கிறதடி உனக்கு என்று நாத்தனாரை எச்சரிக்கை செய்தன.. மைதிலி அஞ்சியவள் போல முகத்தை வைத்துப் பாவனை செய்ததில் அவளது ஆத்திரம் அதிகரித்தது..

‘விருந்தினராக வருகை தந்திருக்கிறானா..? அவனே கூறினானா..? அந்த உரிமையை எவர் அவனுக்கு அளித்தது..?’

அதை அளித்தவளை நெருப்புப் பொறி பறக்க பார்வையிட்ட மலர்க்கொடியிடம்..

“ஆம் அம்மா.. அவரேதான் கூறினார்.. எமை அழைத்து அருகில் அமரவைத்து ஊர் நிலவரத்தைக் குறித்துக் கேட்டறிந்தாரே... ஒருவேளை... அவருடன் உரையாடிக் கொண்டிருந்ததில் பொழுது நகர்ந்து

விட்டதோ என்னவோ.. அதனால்தான் நாழிகை கடந்து விட்டதைப் போல தங்களுக்குத் தோன்றுகின்றதோ..?" என்று கேட்டு வைத்தான் கோவர்த்தனன்..

'உரையாட வேறு செய்தானா..? சுத்தம்..'

மலர்க்கொடியின் அடி வயிற்றில் அமிலம் சுரந்தது.. அந்த கோபத்தில்..

"பால் கறந்தால் இல்லத்துக்குள் கொண்டு வந்து கொடுக்க வேண்டுமென்ற எண்ணமின்றி வழியில் கண்டவரிடம் வார்த்தையாடிக் கொண்டிருந்தாயா..?" என்று எரிந்து விழுந்தாள்..

"அவர் வழியில் கண்டவர் இல்லையம்மா.. நமது இல்லத்தின் திண்ணையில் கண்டவர்.." கோவர்த்தனன் பிழைதிருத்தம் செய்தான்..

"எனக்கு இலக்கண.. இலக்கிய பாடம் எடுக்கத்தான் இல்லத்திற்கு வருகை புரிந்தாயோ..?" மைதிலியின் மீதிருந்த கோபம் அனைத்தையும் கோவர்த்தனனின் தலைமீது கொட்டிக் கவிழ்த்தாள் மலர்க்கொடி..

'என்ன தவறு செய்தேன் - அதுதான்..
எனக்கும் புரியவில்லை..'

கோவர்த்தனன் கதிகலங்கிப் போனான்.. இல்லத்திற்கு வருகை தந்திருக்கும் விருந்தினரிடம் இரண்டு வார்த்தைகள் பேசி விட்டு வந்ததற்கா இத்துனை மண்டகப்படி..?

"அம்மா.." அவன் எண்சாண் உடம்பை ஒரு சாணாகக் குறுக்கி நின்று வினயத்துடன் பசுங்கன்றைப் போல மிழற்றி வைத்தான்..

"சும்மா.. அம்மா.. அம்மா.. என்று அழைத்துத் தொலைக்காதே.. அம்மாவிற்கு என்ன வைத்துள்ளாய்..?"

என்றைக்கும் இல்லாத வகையில் மலர்க்கொடி கேட்டு வைத்ததில் தான் என்ன வைத்திருக்கிறோம் என்று தடுமாறிப் போனான் கோவர்த்தனன்.. கையில் இருந்த பால் செம்பின்மீது அவனது பார்வை படிந்ததில் முகமெல்லாம் பிரகாசிக்க..

"பால் செம்பை வைத்திருக்கிறேனே அம்மா.." என்று உற்சாகமானான்..

தலையில் அடித்துக்கொள்ளலாம் போல இருந்தது மலர்க்கொடிக்கு..

"இல்லத்தில் உள்ளதுதான் வில்லங்கம்பிடித்தது என்றால்.. இல்லத்தில் பணிபுரிவது அதைத் தூக்கி உண்டு விடும் போல அல்லவா உள்ளது..?" என்று சலித்துக் கொண்டாள்..

வெகுநேரமாக பால் செம்பைக் கரத்தில் ஏந்தியிருந்ததில் கோவர்த்தனின் கரம் வலித்தது.. அதைப் பால் செம்பு என்று சொல்வதைவிட பால் அண்டா என்று சொல்லலாம்.. அத்துணைப் பெரிய பாத்திரம் அது.. ஆண்களைத்தவிரப் பெண்களால் அதைத் தூக்க இயலாது.. அந்தக் காரணத்தினாலேயே திடகாத்திரமான கோவர்த்தனுக்கு அந்தப் பணி கிட்டியிருந்தது.. தவிரவும் அவன் மாடுகளை மேய்ப்பதில் வல்லவன்.. அவனுக்கும் மாடுகளுக்கும் இடையே நடக்கும் பரிபாஷை உரையாடல்களைப் பற்றி மைதிலி கூற.. மலர்க்கொடி கேட்டிருக்கிறாள்.. உண்மையாக இருக்காது என்று அவள்

மறுத்ததில் கிள்ளி வளவனும், முல்லைக்கொடியும் அத்தையின் தரப்பில் சேர்ந்து கொண்டு ஆமாம் என்று ஆமோதித்திருந்தனர்.. அதைக் கண்காணிக்க வேண்டும் என்று மலர்க்கொடியின் தீர்மானம் அதுவரை நிறைவேறவே இல்லை..

காலைக் கருக்கலில் பால் கறக்கவரும் கோவர்த்தனன் பாலைக் காய்ச்சி.. மற்ற தினப்படி அலுவல்களை மலர்க்கொடி ஆரம்பிக்கும் நேரத்தில் மாடுகளை மேய்ககப் போய் விடுவான்.. பொழுது சாய்ந்ததும் மாடுகளுடன் வருபவன் பாலைக் கறந்து கொடுத்து விட்டு அவனுடைய இல்லத்தைத் தேடி ஓடி விடுவான்..

"இவனுக்குத்தான் எத்துனை அவசரம்..!" மலர்கொடி சடைத்துக் கொண்டால்..

"அவனது பிரச்னை அவனுக்கு.. பாவம்.. புதிதாகத் திருமணம் ஆனவன்.. இல்லத்தைத் தேடி ஏகத்தானே செய்வான்..? திருமணமாகி இத்துணை வருடங்களாகியும் பொழுது சாய்ந்தவுடன் உனைத் தேடி நான் ஓடி வருவதில்லையா..? அது போல்தான் இதுவும்.." என்று நகைத்தபடி பார்த்திபன் அவளை அணைத்துக் கொள்வான்..

அவ்விதமாக மாடுகளின் பரிபாஷையைப் புரிந்து கொண்டு அவற்றுடன் சம்பாஷனை செய்யத் தெரிந்தவனுக்கு மலர்க்கொடியின் பரிபாஷையைத்தான் புரிந்து கொள்ள முடியவில்லை.. பெண்களின் பரிபாஷை அத்தகைய பெருமை வாய்ந்தது.. எவராலும் அதை இனம் கண்டு கொள்ள இயலாது..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



2

சொல்லாமல் மறைத்தவைகளில் உறைந்திருக்கும் உண்மை கோடி..

இப்படி அனைத்தையும் மறைத்து விட்டு.. இப்போது அவற்றைச் சொன்னால் அனுராதா மகளைச் சும்மா விடுவாளா..?

"ஏற்கனெவே நீ மெகாலு பிடிச்சத்தனமா இருந்து வைக்கிற.. இந்த லட்சணத்தில நீ சொல்றதையும் காதில போட்டுக்கிட்டு உன்னைப் போலவே யோசிச்சு வைக்கிற ஒருத்தன் பக்கத்தில நாள் முழுக்க உக்காந்து வேலை செய்யனும்ன்னா வேற வினையே வேணாம்.. முதல்ல இந்த வேலைக்கு தலை முழுகு.." என்று சொல்லி விடுவாள்..

அதற்காகத்தானே அங்கே தாமோதரன் காத்திருக் கிறான்.. வேலைக்குச் சேர்ந்த முதல்நாளிலேயே அவனை வெற்றி பெற விட்டு விடுவதா..?

"கேட்டது காதில விழுகலையா..?" அனுராதா அதட்டினாள்..

'அம்மா என்னத்தைக் கேட்டாங்க..?'

அதற்குள் அதை மறந்து விட்டிருந்த யாமினி திருதிருத்தாள்..

"இன்னைக்கு வேலை எப்படிப் போச்சு..?"

அனுராதாவே அவள் என்ன கேட்டாள் என்பதைச் சொல்லிவிட..

'அப்பாடி.. அம்மாவே சொல்லிட்டாங்க..' என்ற நிம்மதியுடன்..

"ம்ம்ம்.. ஏதோ போச்சும்மா.." என்று அசுவராஸ்யமாய் பதில் சொன்னாள் யாமினி..

"ஏதோ போச்சுன்னா..?" அனுராதாவின் பார்வை மகளைத் துளைத்தது..

"போச்சுன்னா.. போச்சுதான்.." அலுப்புடன் பதில் சொன்னாள் யாமினி..

"உனக்குப் பிடிக்கலையா..?" அனுராதா விடவில்லை.. குடைந்தாள்..

"எதைம்மா..?"

"வேலையை.."

"அப்படின்னு சொல்ல முடியாது.. வேலை பிடிச்சிருக்கு.. பட்.."

"வேலை செய்கிற ஆபிஸைப் பிடிக்கலையா..?"

"அதுவும் பிடிச்சிருக்கும்மா.. பட்.."

"ஆனா..? என்னடி..?"

"அந்த சிச்சுவேசன் பிடிக்கலைம்மா.. நைநைன்னு இருக்கு.."

"அவ்வளவுதானே.."

நிம்மதியானாள் அனுராதா.. அவளுடைய மகள் ஒருநாள் முழுவதும் ஒரே இடத்தில் கால்பதித்து தங்கி.. ஒரே வேலையில் மனதைச் செழுத்தி.. அதைச் செய்து முடித்ததே பெரிய விசயம் என்பது அவளுக்கு தானே தெரியும்..?

நிச்சயமாய் போன சுருக்கில் மகள் வீட்டுக்கு ஓடி வந்து விடுவாள் என்றுதான் திடமாக அவள் நம்பினாள்..

அந்த நம்பிக்கையைத் தூள்தூளாக்கிவிட்டு தங்கம், தங்கமாய் வேலை பார்த்து வெற்றிகரமாய் ஒரு நாளைக் கழித்து விட்டு வந்திருக்கும் மகளுக்கு வீர.. திலகமிட அவள் தயார் நிலையில் இருந்தாள்..

“என் செல்லம்டி நீ.. வேலை செய்கிற ஆபிஸ் உனக்கு இன்னும் பழகலைல்ல.. அதனாலதான் செட் ஆகாம சிச்சுவேசன் சரியில்லைன்னு தோணுது.. இங்கே அப்பாவும், யதுவும் வேலைக்குப் போனதும் தனியாவே இருந்து பழகிட்டேல்ல.. அதனால அப்படித் தோணியிருக்கும்.. வேற ஒன்னுமில்லடி.. இடம் பழகிட்டா இந்த ஃபீலிங் மாறிரும்..”

உற்சாகத்துடன் சொல்லிக் கொண்டே வந்த அனுராதாவுக்கு ஏதோ ஒன்று உறுத்தியதில் அவள் யோசனையாக மகளைப் பார்த்தாள்.. அதில் யாமினியின் அடிவயிறு கலங்கியது.. அனுராதா சும்மாவே ஆயிரம் கேள்விகளைக் கேட்பாள்.. இந்த லட்சணத்தில் யோசனை வேறு செய்து விட்டு கேள்விகளைக் கேட்டுத் தொலைத்தால் யாமினி தாங்குவாளா..? இப்போது என்னத்தைக் கேட்கப் போகிறாளோ..

“யாமினி..”

“அம்மா..”

“அங்கே சிச்சுவேசன் சரியில்லைங்கறியே.. யாராவது தப்பான ஆளுக.. எக்குத்தப்பா பேசி வைக்கிறாங்களா..?”

அனுராதாவின் கேள்வியில் தூக்கிவாரிப் போட..

“சேச்சே..” என்று மறுத்தாள் யாமினி..

தாமோதரன் அடாவடிக்காரன்தான் என்றாலும் கண்ணியமானவன்.. சித்தார்த்தனைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.. இவர்கள் இருக்கும் இடத்தில் தவறு நிகழுமா..?

“நோ சான்ஸ்.. அங்கே வேலை செய்கிறவங்க தங்கத்திலும் தங்கம்மா..”

யாமினி கொடுத்த சர்டிபிகேட்டில் அனுராதாவின் நிம்மதி மீண்டது.. அதைப் போன்ற அமைதியுடன் அம்மாவை என்றுமே கண்டதில்லை என்பதில் யாமினிக்குள் பாசம் சுரந்தது..

‘என் அம்மா..’ அவள் மனம் நெகிழ்ந்தாள்..

“சரி.. சரி.. வளவளன்னு பேசிக்கிட்டு நிக்காம.. போயி குளிச்சு டிரெஸ் சேன்ஜ் பண்ணிக்கிட்டு வா.. உனக்குப் பிடிச்ச டிபனும், காபியும் ரெடியா இருக்கு ஓடு.” .

அனுராதா மகளைத் துரத்தியதில்.. வளவளவென்று பேசியது அவளா இல்லை யாமினியா என்ற குறுஞ்சிரிப்புடன் தன் அறைக்குள் போனாள் யாமினி..



3

கோலமிட வாசல் வந்தேன் - உன் ஊர்கோலம் கண்டு நின்றேன்..

பெண்களின் பரிபாஷை ஈரேழு உலகங்களிலும் பிரசித்தி பெற்றது.. முப்பெரும் தேவர்களாலேயே.. முப்பெருந் தேவிகளின் பரிபாஷையை கண்டறிந்து பதில் சொல்ல இலகுவில் முடிவதில்லை எனும் போது.. சாமானிய கோவர்த்தனால் எவ்வாறு இயலும்..?

“பால் கறந்தவன்.. இல்லத்திற்குள் வருகை தராமல் எவர் வாயையோ பார்த்துக் கொண்டு நின்றானாம்..”

“அவர் எவரோ இல்லையம்மா..?”

“எவரோ இல்லையெனில் உனக்கு என்ன முறையாக வேண்டும் கோவர்த்தனா..? பெண் கொடுக்க வந்த மைத்துனரோ..?”

“எனக்குத்தான் மணமாகி விட்டதே..”

“அதை ஏக்கத்துடன் கூறுவதைப் போல உள்ளதே.. இரு.. இரு.. மதிய வேளையில் உன் மனைவி உணவு சமைக்க தானியம் வாங்க இல்லத்திற்கு வருவாள் அல்லவா..? அப்போது பற்ற வைக்கிறேன்..”

மலர்க்கொடி கருவிய கருவலில்..

“அம்மா..” என்று அலறி விட்டான் கோவர்த்தனன்..

இல்லத்தின் விருந்தினரிடம் ஓரிரு வார்த்தைகள் உரையாடியதற்கா இந்தக் கொடும் தண்டனை..?

அவனுடைய மனைவிக்கு அவன் மீது பிரியம் அதிகம்.. அவளிடம் போய் உனது கணவன் மணமாகி விட்டதே என்று ஏக்கப் பெருமூச்சு விடுகிறான் என்றால்.. அவள் சும்மாவா இருப்பாள்..? தலைவிரி கோலமாக தாய் வீட்டிற்குச் சென்றுவிட மாட்டாளா..?

"தங்களுக்கு புண்ணியம் உண்டாகட்டும் தாயே..!"

"நீ..! என்னை ஆசிர்வதிக்கிறாயா..?"

"இல்லையம்மா.. மண்டியிடுகிறேன்.."

"என்ன அலுவலுக்கு..?"

"மன்னித்தருளுங்கள்.. இனிப் பால் கறந்து வரும் போது.. இடையில் குறுக்கிடும் இல்லத்தின் விருந்தின ரோடு உரையாட யத்தனிக்க மாட்டேன்.."

"அஃது.."

கோபத்தோடு திரும்பிய மலர்க்கொடி.. மேன் மாடப் படியில் நின்று கரங்களைக் கட்டிய வண்ணம் அவளையே பார்த்துக் கொண்டிருந்த பார்த்திபனைக் கண்டதும் அதிர்ந்து நின்று விட்டாள்..

'கடவுளே..! இத்துனை விரைவாக இவர் துயில் கலைந்து எழுந்தாக வேண்டுமா..? இவரோ கோபக்காரர்.. தங்கை செய்து வைத்திருக்கும் வில்லங்கத்தைக் கேள்வியுற்றால் அவளைக் கொன்று புதைத்து விடுவாரே..' அவளது கரங்கள் நடுங்கின..

“இங்கே என்ன பிரச்னை ஓடிக் கொண்டுள்ளது மலர்க்கொடி..?” துளைக்கும் பார்வையோடு கேள்வி கேட்டான் பார்த்திபன்..

“ஒன்.. ஒன்.. ஒன்றுமில்லையே..” தடுமாறினாள் மலர்கொடி..

“ஒன்று இல்லாததிற்கா கோவர்த்தனை இத்துணை கடுமையாக வாட்டிக் கொண்டிருக்கிறாய்..?” கண்டிப்புடன் முகம் சுளித்தான்..

“பால் கறக்கத் தாமதம் ஆகிவிட்டது.. அதன் பொருட்டு கடிந்து கொண்டேன்.. நீ கிளம்பு கோவர்த்தனா.. உன் மனைவி உனக்காக காத்துக் கொண்டிருப்பாள்..”

அவசரமாக கோவர்த்தனனை அங்கிருந்து கிளப்பி விட முனைந்தாள் மலர்கொடி.. இல்லத்தின் பணியாளை எதிரில் வைத்துக் கொண்டு திண்ணையில் அமர்ந்திருப்பவன் எவன் என்ற ஆராய்ச்சியை செய்து வைத்தல் ஆகாது என்பது அவளது எண்ணம்..

மைதிலி இழுத்து வைத்திருக்கும் வில்லங்கம் என்ன என்பதை அப்புறமாக பார்த்துக் கொள்ளலாம்.. முதலில்.. இல்லத்தின் திண்ணையில் எவனோ ஒரு வழிப்போக்கன்.. விருந்தினன் என்ற நாமத்தைத் தாங்கி உட்கார்ந்திருப்பதை அறிந்து வைத்திருக்கும் கோவர்த்தனனை அவ்விடத்தை விட்டுத் துரத்தியாக வேண்டும் என்ற கட்டாயம் அவளுக்கு..

“அவனுக்கு நாழிகையாகி விட்டதை இப்போதுதான் நீ உணர்ந்தாயா..?” பார்த்திபனின் புருவங்கள் நெரிந்தன.

"இல்லையில்லை.. அவனிடம் கடிந்து கொண்டிருந்ததில் காலதாமதம் ஆகி விட்டது..." மலர்க்கொடி பார்த்திபனின் முகம் பார்க்க அஞ்சியவளாய் மைதிலியை முறைத்துப் பார்த்தபடி முணுமுணுத்தாள்..

"காலதாமதம் ஆகிவிட்டது என்பதற்காகத்தானே கடிந்து கொண்டாய்..? நீ கடிந்து கொண்டதில் மேலும் காலதாமதம் ஆகி விட்டதல்லவா..? அதற்கு ஏன் கடிந்து கொள்ள வேண்டும்..?"

"மெய்தான்.. இனி இதை நினைவில் இருத்திக் கொள்கிறேன்.. போதுமல்லவா..? கோவர்த்தனா..! இன்னும் ஏன் தாமதம் செய்கிறாய்..? துரிதமாய் கிளம்பு.."

"நில் கோவர்த்தனா..! ஏன் தாமதம் என்பதற்கான விளக்கத்தை என்னிடமும் சொல்லி விட்டுப் போ.."

பார்த்திபனின் அழுத்தமான ஆணையில் திக்கு முக்காடிப் போனாள் மலர்க்கொடி.. அவளால் அந்தத் துன்பத்தைக் கூடத்தாங்கிக் கொள்ள முடிந்தது.. ஆனால்.. அத்துனைக்கும் காரணமான மைதிலி.. எதுவுமே நிகழாததைப் போல முகத்தை வைத்துக் கொண்டு எனக்கென்ன என்று அமர்ந்திருந்ததைத்தான் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை..

'இப்பேற்பட்ட கோபக்கார தமையனுக்கு தங்கையாய் பிறந்துவிட்டு கடுகளவும் கலக்கம் கொள்ளாமல் நிமிர்ந்து நிற்கிறாளே.. இவளுக்கென்ன.. இவளுக்கான அனைத்தையும் தாங்கிக் கொள்ளத்தான் ஆண்டவன் என்னைப் படைத்துள்ளாரே.. அடுத்த இல்லத்தின்

அன்னபூரணி பரிகசிப்பதைப் போல.. என்னதான் எடுத்து வளர்த்தாலும்.. அண்ணி என்பவள் அன்னைக்கு நிகராகி விட முடியாதுதான் போல..'

மனதுக்குள் அங்கலாய்த்த மலர்க்கொடியின் விழிகளின் வழியே அவளது மனதைப் படிக்க முயன்றவனைப் போல உற்றுப் பார்த்தான் பார்த்திபன்..

"உன்னிடம்தான் கேள்வி எழுப்பினேன் கோவர்த்தனா.. எனக்கான பதிலைக் கூற ஏன் இத்துனை தாமதம்..?"

இல்லத்தரசியை உற்றுப் பார்த்தபடி கோவர்த்தனிடம் கேள்வி கேட்டால் அவன் என்னவென்று அறிவான்..? அதுவரை பார்த்திபன் மலர்க்கொடியிடம்தான் பேசிக் கொண்டிருக்கிறான் என்று நினைத்திருந்தவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது..

'அய்யன்.. என்னிடம்தான் வினா எழுப்பினாரா..?'

என்னடா இது என்று ஆகிவிட்டது அவனுக்கு.. காலையில் எவர் முகத்தில் விழித்தோம் என்று.. புலராத அந்தக் காலைப் பொழுதில் பலத்த ஆலோசனை செய்தான் அவன்..

"கேட்பது உன் செவிகளில் விழவில்லையா..?" பார்த்திபனின் அதட்டலில்..

"நம் இல்லத்துக்கு வருகை தந்திருக்கும் விருந்தினருடன் சில வார்த்தைகள் பேசிக் கொண்டு நின்றதில் கால தாமதமாகி விட்டது அய்யனே.." என்று அலறிப் புடைத்துக் கொண்டு பதில் கூறினான் கோவர்த்தனன்..

“நம் இல்லத்துக்கு விருந்தினரா..?”

பார்த்திபனின் பார்வை இன்னமும் அதிகமாக மலர்க்கொடியைத் துளைத்ததில் இம்சைக்கு ஆளானாள் அவள்.. பேசாமல்..

‘என்னை ஏன் சல்லடை போடும் உன் விழிகளால் துளைத்துப் பார்க்கிறாய்..? உன் தங்கையைப் பார்.. வந்திருக்கும் விருந்தினனுக்கு வெற்றிலை பாக்கு வைத்து நான் அழைப்பு விடுக்கவில்லை.. உனது தங்கைதான் அந்தச் செயலை செய்திருக்கிறாள்..’ என்று சொல்லி விடலாமா என்றுகூட அவளுக்குள் வேகம் உற்பத்தி ஆனது..

ஆனால்.. அவள் மைதிலியைப் பார்க்கும் தருணங்களில் எல்லாம் அவள் இமை கொட்டி அஞ்சுவதைப் போல பாவனை செய்ததில் வளர்த்த தாய் பாசம் முதன்மை வகித்து.. அந்த ஆலோசனையை சென்று வா என்று விடை கொடுத்து வழியனுப்பி வைத்தது..

“என்னிடம் கூறவேயில்லையே மலர்க்கொடி..?” பார்த்திபன் குற்றம் சாட்டினான்..

“எங்கே சொல்வது..? அதற்குள்தான் தாம் ஊர்க்காவலர் விசாரணை செய்வதைப் போலக் கேள்விக் கணைகளால் துளைத்துக் கொண்டிருந்தீர்களே..” மனத்தாங்கலுடன் மறுமொழி கூறினாள் மலர்க்கொடி..

“வந்திருக்கும் விருந்தினர் எங்கே உள்ளார்..?” பார்த்திபனின் கண்கள் இல்லம் முழுவதும் துழாவின..

"அவர் திண்ணையில் உள்ளார் அய்யனே.." கோவர்த்தனன் அவசரமாக அறிவித்து விட்டு மலர் கொடியின் பலத்த முறைப்பிற்கு ஆனானான்..

'என்ன தவறு செய்தேன்..'

மறுபடியும் அவன் மனதில் பாடல் ஒலித்தது.. மலர்க்கொடி கிளம்பச் சொன்னபோதே கிளம்பிச் சென்றிருக்க வேண்டும் என்று தாமதமாக அவனது அறிவு உரைத்து வைத்தது..

"திண்ணையில் உள்ளாரா..?" பார்த்திபனின் நெற்றியில் விழுந்த கோடுகளில்..

'இது வேறா..?' என்று சலித்துப் போனாள் மலர்க்கொடி..

"என்ன இது மலர்க்கொடி..?" அவன் கண்டனம் தெரிவித்ததில்..

"பால் செம்பு அத்தான்.." என்றாள் அவனது மனையாட்டி..

கோவர்த்தனனுக்கு நகைப்பு வந்தது.. பார்த்திபன் அவனைப் பார்த்த சிறுபார்வையில் அந்த நகைப்புத் தொலைந்து போனது..

"நான் செல்லவா அய்யனே..?" அவன் சங்கடத்துடன் அனுமதி கேட்டான்..

"ம்ம்ம்.."

பார்த்திபனின் முணுமுணுப்பில் கோவர்த்தனனுக்கும், மலர்க்கொடிக்கும் ஒரே தருணத்தில் விடுதலையுணர்வு கிடைக்கப் பெற்றது..

'விட்டாங்கடா சாமி..'

கோவர்த்தனன் விரைந்தோடிப் போனான்.. பார்த்திபன் 'பால் செம்பு' எனப்படும் பால் நிரம்பிய அண்டாவைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு நின்ற மனைவியிடம் கடிந்து கொண்டான்..

"கொட்டிக் கவிழ்க்கப் போகிறாய்.. கோவர்த்தனிடம் உள்ளே சென்று வைக்க வேண்டும் என்று சொல்வதற் கென்ன..? இங்கே கொடு.. நான் சென்று வைத்து விட்டு வருகிறேன்.."

கணவன் காட்டிய கரிசனத்தில் புளகாங்கிதம் கொள்ள முடியாத நிலையில் அவளை வைத்து விட்ட நாத்தனாரை எரிதழல் பார்வை பார்த்தபடியே கணவனிடம் அண்டாவைக் கொடுத்தாள் மலர்க்கொடி.. அவன் உள்ளே சென்றதும் தாழ்ந்த குரலில்..

"தற்போதாவது நடந்தது என்னவென்பதைக் கூறு.. வந்திருப்பது எவர்..?" என்று மைதிலியிடம் சீறினாள்..

"எவரென்று அறியேனே அண்ணி.. அதுதான் தங்களிடம் முன்னரே உரைத்து விட்டேனே.. வந்தார்.. நின்றார்.. பேசினார்.. அவ்வளவுதான்.." இலகுவாக கை விரித்தாள் மைதிலி..

'எத்துனை இலகுவாகச் சொல்கிறாள் பார்..' மலர்கொடிக்கு ஆத்திரம்.. ஆத்திரமாக வந்தது.. பார்த்திபன் வருவதைக் கண்டதும் அதை அடக்கிக் கொண்டு இயல்பாக முகத்தை வைத்துக் கொள்ள முயன்றாள்..

பார்த்திபன் அவளை பாதாதிகேசம் பார்த்து வைத்ததில் அவளுக்கு மையலை விட அச்சமே வந்து தொலைத்தது..

"உன் கூந்தலின் அழகு.. தோகை விரித்த மயிலின் அழகுக்கு நிகரானதுதான் மலர்க்கொடி.."

கணவனின் புகழுரையில் இதைக்கூற இடம், பொருள், ஏவல் பார்க்க மாட்டானோ என்று சலிப்படைந்தாள் மலர்க்கொடி..

"அதற்கு தற்போது என்னவாம்..?"

"அதை நானல்லவா கேட்க வேண்டும்..? எதற்காக கூந்தலை விரித்து விட்டிருக்கிறாய் மலர்கொடி..? மயில் தோகையின் அழகை உன் கூந்தலில் கண்டுணர வேண்டுமென்று ஆசை கொண்டாயா..?"

"கூந்தல் விரிந்துள்ளதா..?"

அப்போதுதான் அவிழ்ந்து தொங்கிய கூந்தலைக் கண்ட மலர்க்கொடி அவசரமாக அதை வாரிச் சுருட்டிக் கொண்டையிட்டாள்..

"நான் அப்போதே கொண்டையிட்டேனே.."

தன்னிச்சையாக அவளது வாய் முணுமுணுத்ததில் பார்த்திபனின் நெற்றிக் கோடுகள் அதிகரித்தன..

"என்ன ஆனது மலர்க்கொடி..?" மனைவியிடம் விசாரித்தான்..

ஒன்றும் இல்லை என்று கூற இயலாமல் அவள் இதழ்களைக் கடித்தாள்.. கனிவான கணவனிடம் பொய்

கூற இயலாமல் அவள் விழிகளில் கண்ணீர் தேங்கி விட்டது..

"வந்திருக்கும் விருந்தினர் உனக்கு வேண்டாத விருந்தினரா..?"

பார்த்திபன் வினவியதில் மலர்க்கொடிக்கு நகைப்பதா இல்லை அழுவதா என்று பிடிபடவில்லை..

"எவருக்குத் தெரியும்..?" மன உளைச்சலுடன் சொல்லிவிட்டாள்..

"அப்படியென்றால்..?"

பார்த்திபனின் கண்டிப்பில் சோர்ந்து போன மலர்க்கொடிக்கு அதற்கு மேலும் மறைத்துப் பேச தெம்பு இல்லை.. அதனால் அவள்..

"நானறியேன் அத்தான்.." என்று சொல்லி விட்டாள்.

"நீ அறியாயா...? அதனால்தான் கோவர்த்தனனிடம் கோபம் கொண்டாயா..? எவரேனும் வழிப்போக்கர் நமது திண்ணையில் ஓய்வெடுக்கும் பொருட்டு அமர்ந்திருக்கலாம்.. கோவர்த்தனன் கோபம் கொள்ளுவான் என்று.. விருந்தினர் என்று கூறியிருக்கலாம்.. இதற்கா இத்துணை சங்கடம் கொள்வது..? நாம் பார்த்திராத ஒரு மனிதருக்காக அதிகாலையின் பொழுதை வீணடிப்பதா..?" பார்த்திபன் மனைவிக்கு சமாதானம் சொல்லிக் கொண்டிருந்தபோது..

"நான் அவரைப் பார்த்தேன் அண்ணா..?" என்று கை தூக்கிவிட்டாள் மைதிலி..

'இவள் ஒருத்தி..! பிரச்னையையும் இழுத்து விட்டு.. அதைத் தீரவிட மாட்டேனென்று அடம் பிடிப்பாள்..'

மலர்க்கொடிக்கு நாத்தனாரை நான்கு மொத்துக்கள் மொத்த வேண்டும்போல ஆசையாசையாக இருந்தது..

"நீ பார்த்தாயா..?" பார்த்திபனின் முகம் மாறியது..

"ஆம் அண்ணா.. நான் பார்த்தேன்.. வாசலில் நீர் தெளித்துக் கோலமிடும்போது வந்தார்.. சைவமும், வைணவமும் ஒன்றாக இணைந்து இந்து மதமெனும் ஓர் மதமாக மாறியமைக்கு மதுரா நகரை ஆளும் சுல்தான்தான் காரணம் என்று கூறி சுல்தானைப் பாராட்ட வேண்டும் என்று சொன்னார்.. நான் கோபம் கொண்டேன்.. அவர் நகைத்து விட்டு நெடுந்தொலைவு பயணம் செய்து வந்ததில் அவருக்கும், அவருடைய குதிரைக்கும் ஓய்வு தேவை என்று கூறி இளைப்பாற இடம் கிடைக்குமா என்று கேட்டார்.. அதை எனது தமையனும், அண்ணியும்தான் அளிக்க வேண்டும் என்று கூறிவிட்டு இல்லத்திற்குள் வந்து விட்டேன்.. அவர் செல்லாமல் திண்ணையிலேயே அமர்ந்து விட்டார் போல உள்ளது.."

மைதிலியின் நீண்ட நெடும் விளக்கத்தில் தன் வளர்ப்பு சரியானதுதான் என்று பூரிப்படைந்தாள் மலர்க்கொடி.. நாத்தனார் தன்னிடம் வேண்டுமென்றே விளையாட்டுக் காட்டியிருக்கிறாள் என்பதில்..

'நான் தூக்கி வளர்த்த குழந்தை..! இதற்கு இருக்கிற அடாவடியைப் பாரேன்.. என்னிடமே ஆட்டம் காட்டியிருக் கிறதே..' என்று செல்லமாக மனதில் திட்டியும் தீர்த்தாள்..

"நன்றே செய்தாய் அம்மா.."

தங்கையைப் பாராட்டிய பார்த்திபன்..

"அந்த வழிப்போக்கர் குதிரையில் வந்துள்ளார் என்றா கூறினாய்..?" என்று கேட்டான்..

"ஆம் அண்ணா.. நெடுந்தொலைவு பயணித்த களைப்பு முகத்தில் தெரிந்தது.." மைதிலி யோசித்துப் பதில் சொன்னாள்..

"குதிரையில் வந்திருக்கும் வழிப்போக்கரா..?" சிந்தனையுடன் தனக்குத்தானே கேட்டுக் கொண்ட பார்த்திபன்..

"பார்வைக்கு எவ்வாறு இருந்தார்..?" என்று மைதியிடமும் கேட்டு வைத்தான்..

'மிக அழகாக.. கம்பீரமாக.. ஆஜானுபாகுவாக.. பரந்த மார்பும்.. தேக்கு மரம் போன்ற உடல்வாகும்.. தீர்க்கமான நாசி கொண்ட முக அமைப்பும்.. கொண்டவராக.. காணும் கன்னியரின் மனதைக் கட்டி இழுக்கும் வசீகரத்துடன் அவர் இருந்தார் அண்ணா..'

மைவிழிகளில் தோன்றிய மயக்கத்தை சடுதியில் மறைத்துக் கொண்டாள் மைதிலி..

"தெளிவாகக் கவனிக்கவில்லை அண்ணா.. உயர்தரக் குதிரையும்.. பட்டாடையும்.. சொர்ண ஆபரணங்களுமாக இருந்தார் என்று நினைக்கிறேன்.." மிக யோசித்து நினைவில் கொண்டு வந்து பதில் கூறுவதைப் போல பாவனை செய்தாள்..

அந்தப் பாவனையை மலர்க்கொடி கண்காணித்துக் கொண்டிருக்கிறாள் என்பதில் அவளது மனம் படபடத்தது..

"அப்படியா..?"

பார்த்திபன் யோசனையோடு மலர்க்கொடியைப் பார்த்தான்.. அவனது விழிகள் பேசிய நயன பாஷையில் அவளது விழிகளும் கலந்து கொண்டன..

"எதற்கும் வாசலுக்குச் சென்று திண்ணையில் உட்கார்ந்திருப்பவரைக் கண்டு விட்டு வந்து விடலாமே.. அதன் பின்புதான் தெளிவான எந்த முடிவிற்கும் வர இயலும்.." என்றாள் மலர்க்கொடி..

பொருள் பொதிந்த அவ்வார்த்தைகளில் ஏதோ ஒரு ரகசிய சங்கேதமொழி மறைந்திருப்பதைப் போல மைதிலியின் மனதுக்குப் பட்டது.. அது என்னவாக இருக்கக் கூடும் என்று அறியும் ஆவல் அவளுக்குள் மிகுந்தது..

"நீயும் வருகிறாயா..?" பார்த்திபன் கேட்டான்..

"நானா..? நான் எதற்கு..? ஒரு வேளை.. வந்திருக்கும் வழிப்போக்கர் அன்னியராக இருந்து விட்டால்..?" மலர்கொடி எச்சரிக்கையுடன் பேசினாள்..

"அதுவும் மெய்தான்.. ஆயினும் நீ அவரது முன்னிலையில் வருகை தராமல் கதவோரமாக மறைந்து நின்று கவனிக்கலாமே.." பார்த்திபன் ஆலோசனை சொன்னான்..

"அதுவும் உசிதமானதுதான்.." மலர்க்கொடி ஒப்புக் கொண்டாள்..

எது உசிதமானது..? மைதிலிக்கு ஓர் மணல்துகளும் விளங்கவில்லை.. வந்திருக்கும் வழிப்போக்கர் எவராகவோ இருக்கக் கூடும் என்று அவளது தமையனும், அண்ணியும் எண்ணுவது அவளுக்குப் புரிந்தது..

அவர் எவர்..? அது மட்டும் அவளுக்குப் புரியவில்லை..

"எதற்கும்.. நமது சமையல்காரர்களிடம் பாலைக் காய்ச்சி வைத்து விடச் சொல்லி ஆணையிட்டு விடு.. சுவையான பலகாரங்களையும் தயார் செய்யச் சொல்லு.."

"ஆகட்டும்.."

"அத்துடன் சுடுநீரும் தேவை.."

"சொல்லி விடுகிறேன்.."

"இல்லத்தின் மேன் மாடத்தில் உப்பரிகைகளுடன் கூடிய அறைகள் தூய்மைப்படுத்தப் பட்டு தயார் நிலையில் உள்ளனவா..?"

"அதை எப்போதோ செய்து முடித்து விட்டேனே.. எக்கணமும் விருந்தினர் வந்து விடலாம் என்பதில் அவை தயார் நிலையில்தான் உள்ளன அத்தான்.. இதைத் தாங்கள் நினைவு படுத்த வேண்டுமா..?"

அந்தக் கணவன், மனைவியின் உரையாடலில் அதி முக்கியமான விருந்தினருக்காக அவர்கள் காத்துக் கொண்டிருந்த செய்தி வெளிப்பட்டதில் மைதிலிக்கு கோபமான கோபம் வந்தது..

'இந்த சதிபதிகள் தெளிவான மதி கொண்டவர்கள்.. ரகசியத்தைப் பாதுகாப்பதில் வல்லவர்கள்.. எவரோ ஒரு

விருந்தினருக்காக இவர்கள் காத்துக் கொண்டிருப்பதை என்னிடம் கூடச் சொல்லாமல் மறைத்து வைத்து விட்டார்களே..' மனதுக்குள் புழுங்கினாள் மைதிலி..

"வா மலர்க்கொடி..! திண்ணையில் அமர்ந்திருக்கும் வழிப்போக்கர் எவரென்பதைப் பார்த்து விட்டு வரலாம்.." பார்த்திபன் அழைத்தான்..

"சற்றுப் பொருங்கள்.. துயில் கொண்டிருக்கும் சமையல் பணியாளர்களையும்.. மற்ற ஏவலாள்களையும் எழுப்பி விட்டு அவர்களுக்கான வேலைகளைச் சொல்லி விட்டு வந்து விடுகிறேன்.." மலர்க்கொடி பின் கட்டுக்குப் போனாள்..

பார்த்திபனின் முகத்தில் தெரிந்த பரபரப்பை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள் மைதிலி.. அவன் நிதானமானவன்.. இதுபோன்ற பரபரப்புகளுக்கும் அவனுக்கும் காத தூரம்..

காஞ்சியின் அதி முக்கியமான செல்வந்தர்களில் முதன்மையானவன் என்று பெயரெடுத்திருக்கும் அவளுடைய அண்ணனா எவனோ ஒரு வழிப்போக்கனின் வரவில் பதட்டம் கொள்கிறான்..?

அதைவிட... ஏதோ ஒரு சிற்றரசின் வம்சத்தில் பிறந்திருப்பதாகக் கூறப்படும் மலர்க்கொடியும் பதட்டம் கொள்கிறாளே.. அது ஏன்..?

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



3

சொல்லத்தான் ஓடி வந்தேன்..
சொந்தமென நீயும் இல்லை..

யாமினி குளித்து உடைமாற்றி வந்தபோது.. பிரதாப்பும், யதுநந்தனும் வந்திருந்தார்கள்.. பிரதாப் அனுராதாவைப் போலவே..

"வேலை எப்படி இருந்தது..?" என்று கேட்டார்..

யதுநந்தன் மட்டும் வித்தியாசமாக..

"உன்கிட்ட அந்த வேலை என்ன பாடு பட்டுச்சு..?" என்று கேட்டு வைத்தான்..

"உன்கிட்ட உன் வேலை பாடுபடறதைவிட அதிகமா ஒன்னும் பட்டுடலை.." யாமினி பதிலடி கொடுத்தாள்..

அதில் அனுராதாவின் முகத்தில் புன்னகை வந்தது.. இதுபோல யாமினி புத்திசாலித்தனமாக பேசும் போது.. அவள் எப்போதும் இப்படியே இருந்து விடக் கூடாதா என்று அனுராதாவின் மனம் துடிக்கும்..

அன்றும் அதே அபிலாசையுடன்..

"சரி சரி.. அண்ணனும் தங்கையும் வழக்கடிச்சது போதும்.. சண்டை போடத் தெம்பு வேணாமா..? ஆபிசில வேலைசெஞ்சு களைச்சுப் போய் வந்திருப்பீங்க.. காபி,

டிபனை உள்ளே தள்ளி எனர்ஜியை ஏத்திக்கிட்டு சண்டை போடுங்க..” என்று விளையாட்டாய் அதட்டினாள்..

“அதுசரி.. ஆபிசில் வேலை செய்கிறவங்கதான் களைச்சுப் போய் வருவாங்களா..? கடையைத் திறந்து வைச்சிருக்கிறவன் ஊஞ்சலாடிட்டு வந்திருக்கானா..? எனக்கும் தான் களைப்பாயிருக்கு.. என்னையும் கொஞ்சம் கவனி..” பிரதாப் போட்டிக்கு வந்தார்..

“அடடா..! உங்க பங்கு எங்கேயும் கால் முளைச்சு ஓடிப் போகாது.. இப்படியா காபி டிபனுக்கு பறப்பீங்க..?” அனுராதா அலுத்துக் கொண்டபடி எல்லோருக்கும் காபி டிபனைக் கொடுத்தாள்..

பிரதாப் டிவியை உயிர்ப்பித்தார்.. அவர் நியூஸைப் பார்க்க..

“போர்..” என்ற யதுநந்தன் ரிமோட்டைக் கைப்பற்றி சேனலை மாற்றினான். ஸ்போர்ட்ஸ் வந்தது..

“இது வீடா இல்ல ஸ்டேடியமா..?” யாமினி கோபமானாள்..

இப்போது ரிமோட் அவள் கைக்கு தாவியிருந்தது.. அவள் ‘டாக் ஷோ’ வைப் போட..

“அதான் எப்பப் பார்த்தாலும் பேச்சு.. பேச்சுன்னு.. ஆளாளுக்கு மாறிமாறிப் பேசி.. இந்த வீட்டை சந்தைக் கடையாக்கி வைச்சிருக்கீங்களே.. அது போதாதா..? டிவியிலயும் கர்ரே.. புர்ரேன்னு ஆளாளுக்கு கருத்துச் சொல்றதக் கேட்கனுமா..?” அனுராதா போர்க்கொடியை உயர்த்தினாள்.. ரிமோட் அவள் கைகளில் செல்லப்

பிராணியைப் போல பதுங்கியது.. அவள் சேனலை மாற்றினாள்..

“நாசமாப் போவே..” என்றாள் சீரியலில் வந்த ருத்தி..

“அருமையான ஆசிர்வாதம்..” நமட்டுச் சிரிப்புடன் சொன்னார் பிரதாப்..

யதுநந்தன் விழுந்து, புரண்டு சிரித்து வைத்ததில் அவரின் உற்சாகம் அதிகமானது.. அத்தி பூத்தாற்போல இதுபோன்ற சில தருணங்களில்தான்.. அவருடைய மகன் அவருடன் கூட்டணி போடுவான்.. அதுபோன்ற சந்தர்ப்பம் வாய்த்து விட்டதில் அகம் மகிழ்ந்து போனவர் அனுராதாவை இன்னும் கொஞ்சம் ஓட்ட ஆரம்பித்தார்..

“அது ஏண்டி சீரியல்களில மட்டும் வில்லன் இல்லாம வில்லிகளா வருகிறாங்க..? அதுவும் சும்மா வராம லேடி நம்பியாரப் போலக் கையைப் பிசைந்துக்கிட்டு வர்றாங்களே..”

“அதுவா மச்சான்.. சினிமாக்கள ஆம்பளைங் எல்லாம் ஒட்டு மொத்தமா குத்தகைக்கு எடுத்துக்கிட்டிங்கள்ல.. அதான்.. சீரியல நாங்க எடுத்துக்கிட்டோம்..” அவரை விட நக்கலாக பதில் சொன்னாள் அனுராதா..

“உன் கம்பெனி எப்படியிருக்கு..?” கன காரியமாக தங்கையிடம் விசாரித்தான் யதுநந்தன்..

யாமினிக்கா அண்ணன்காரனின் அக்கறையைப் பற்றித் தெரியாது..? அவள் வேலை செய்ய ஆரம்பித்தவுடன் அவளது கம்பெனி ஆட்டம் காணாமல்

அப்படியே நிற்கிறதா என்றுதான் அவன் கேட்க ஆரம்பிக்கிறான் என்று இனம் கண்டு கொள்ள முடியாத முட்டாளா அவள்..?

“உன் ஆபிசைப் போலவே அருமை.. பெருமையா இருக்கு..” பதில் சொன்னாள் யதுநந்தனின் தங்கை..

“என் ஆபிசை விடு.. அது நல்லாத்தான் இருக்கும்..”

“ஏன்னா.. நீ அங்கே வேலை பார்க்கிற..” யாமினி எடுத்துக் கொடுத்தாள்..

“அஃதே.. அஃதே..” யதுநந்தன் ஆமோதித்தான்..

“ஆனாலும் உனக்கு இத்தனை தன்னம்பிக்கை ஆகாதுடா அண்ணா.. நீ வேலை பார்த்தே உன் ஆபிஸ் கச்சிதமா நிற்கிறப்ப.. நான் வேலை பார்க்கிற கம்பெனி அதைவிடக் கச்சிதமா நிமிர்ந்து நிக்கும்டா..”

“இத நீதான் சொல்லிக்கனும்.. வேற யாரும் சொல்ல மாட்டாங்க..”

“மத்தவங்கள ஏன் இழுக்கிற..? நீ சொல்ல மாட்டேன்னு சொல்லு..”

ஆரோக்கியமான அந்த அண்ணன், தங்கையின் மோதலில் தன் வீட்டில் எப்போதும் இந்த மகிழ்ச்சி நிலைத்திருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள் அனுராதா..



4

எனை மயக்கும் இவன் யாரோ..?
எனக்கெனவே பிறந்து வந்தானோ..?

மலர்க்கொடி அரச வம்சத்தைச் சேர்ந்தவள்தான்.. காஞ்சியில் பிறந்து வளர்ந்த பார்த்திபனின் முன்னோர்களும் சிற்றரச வம்சத்தைச் சேர்ந்தவர்கள்தான்.. குறுநில மன்னர்களாக இருந்தவர்கள் பலதாரங்களை மணந்து ஒவ்வொரு மனையாட்டிக்கும் பதினாறுக்கும் குறையாத மக்கள் செல்வங்களை வழங்கி வாழ்ந்ததில் அந்நாள்களில் குறுநில மன்னர்களின் வம்சம் பல்கிப் பெருகி பரந்து விரிந்திருந்தது.. அவ்விதமாக பல்கிப் பெருகியிருந்த குறுநில மன்னர்களின் பாரம்பர்யத்தில் பிறந்த பார்த்திபன்.. அவனைப் போலவே குறுநில அரச வம்ச பாரம்பர்யத்தைக் கொண்ட மலர்கொடியை மணந்திருந்தான்..

அந்த வீதியிலேயே பார்த்திபனின் இல்லம்தான்.. காஞ்சியை ஆண்டு வந்த சம்புவரையர்களின் அரண் மனைக்கு நிகராக நிமிர்ந்து நின்றது..

அள்ள அள்ளக் குறையாத செல்வ வளம் மிக்க இல்லத்தில் வாழ வந்த மலர்க்கொடிதான் அக்கம் பக்கத்து இல்லத்தாரின் ஏசல், பேசல்களுக்கு அஞ்சி நடுங்கி நாத்தனாரை மகளைப் போலப் பேணி வளர்த்து வ்ருகிறாள்..

'இவ்விதமாக என் தமையனையும், அண்ணியையும் பதட்டம் கொள்ளச் செய்யும் விருந்தினன் எவன் என்பதைக் கண்டு வந்துவிட வேண்டும்..'

அவள் மனம் ஜொள்ளியதில் அவளது அறிவு கெக்கலிகொட்டி நகைத்து வைத்தது..

'உன்னைத் தெரியாதா..? மன்மதனைப் போன்ற பேரழகு கொண்ட அந்த வாலிபனை இன்னொரு முறை பார்ப்பதற்கு உனக்கு 'சாக்கு..' வேண்டும்.. அதை மறைத்து வேறு எதையோ ஏன் சொல்கிறாய்..?' அவளது அறிவு இடித்துரைத்தில் முகம் சிவந்து போனாள் மைதிலி..

'இல்லையில்லை.. அவன் ஒன்றும் என் மனதை மயக்கி விடவில்லை.. இத்துனை நிமிர்வாகவும், தெளிவாகவும், வீரமாகவும் உரையாற்றும் வாலிபனை இதுநாள்வரை நான் கண்டதில்லை என்பதால் இவன் மற்றவர்களிடமிருந்து வித்தியாசப் படுகிறானே என்று எண்ணிவிட்டேன்.. வேறு எதுவும் இல்லை..' மைதிலி மறுத்தாள்..

அவள் மறுப்பை, அவளது மனமும் கண்டு கொள்ள வில்லை.. அவளது அறிவும் சட்டை செய்யவில்லை..

என்னைப் பொருட்படுத்தாத இவற்றை நான் ஏன் பொருட்படுத்த வேண்டும் என்று மைதிலியும் அவற்றைக் கண்டு கொள்ளவில்லை..

மலர்க்கொடி பணியாள்களை எழுப்பி விட்டு ஆளுக்கொரு வேலைகளைச் சொல்லி ஏவி விட்டுத் திரும்பி வந்தாள்..

பார்த்திபனின் கண்களும் அவளது கண்களும் சங்கேதமொழியில் ஏதோ பேசிக் கொண்டன.. மலர்க்கொடி மைதிலியின் பக்கமாகத் திரும்பி..

"கிள்ளி வளவனும்.. முல்லைக் கொடியும் தனித்து உறங்குகின்றனர்.. அவர்கள் கண் விழித்தால் நான் அருகில் இல்லையென அச்சம் கொண்டு விடுவார்கள்.. எனவே நீ சென்று அவர்களின் அருகில் இரு மைதிலி.." என்று உத்தரவிட்டாள்..

'பலே..! அருமையாக உள்ளதண்ணி உங்களது திட்டம்..! நான்தான் முதன்முதலில் அந்த வழிப்போக்கனை கண்டு வந்து உங்களிடம் சொன்னேன்.. இப்போது என்னையே கழற்றி விட்டு விட்டு தாமும் தமையனும் மட்டும் அவரிடம் உரையாடச் செல்லப் போகிறீர்களா..? அதையும் பார்த்து விடலாம்..'

மைதிலி தலையை மேலும், கீழுமாகவும், இடவலமாகவும் அசைத்து வைத்து மலர்க் கொடியை குழப்பினாள்.. இவள் என்ன சொல்ல முனைகிறாள்.. பிள்ளைகளின் அருகில் செல்வாளா மாட்டாளா என்று புரியாமல் மலர்க்கொடி பார்த்திபனின் பின்னால் சென்றாள்..

மைதிலி மேன் மாடத்தின் பக்கம் தலையைக் கூடத் திருப்பாமல்.. பாதக் கொலுசின் சப்தம் கேட்காத எண்ணம் பாதங்களை அசையாமல் எடுத்து வைத்து தமையனையும், அண்ணியையும் பின் தொடர்ந்தாள்..

வாயில் கதவைத் திறந்து திண்ணைக்கு அருகில் வந்த பார்த்திபன் பிரமித்து நின்றான்.. அவனது கரங்கள் தாமாகக் குவிந்தன..

"அரசே..!" அவனது குரல் பக்தியுடன் ஒலித்தது..

அவன் வார்த்தையில் மலர்க்கொடி கதவின் மறைவிலிருந்து வெளியில் வந்தாள்.. சேலையின் முந்தானையை இழுத்துப் போர்த்தி.. நிலத்தைப் பார்த்த வண்ணம் தலை வணங்கிக் கரம் குவித்து..

“வணங்குகிறேன் மன்னரே..! தங்களின் பாதம் பட்டதால் எங்களின் இல்லம் மேன்மையுற்றது.. தங்களைத் தரிசிக்கும் பேறு பெற்ற இந்த நாள் எமது இல்லதார்க்கு இனிய நாளாக மாறி விட்டது.. வந்தனம்.. தங்களின் வரவு நல்வரவாகுக..” என்று கூறினாள்..

‘அடேங்கப்பா.. கட்டியமெல்லாம் பலமாய்த்தான் உள்ளது.. இந்த வழிப்போக்கன் அரசனா..? எந்த சாம்ராஜ்யத்தின் பேரரசன் இவன்..’ மறைவிலிருந்த மைதிலியின் குறுகுறுத்த பார்வை அவனை அளந்தது..

அரசன் என்று வணங்கப்பட்ட அந்த வாலிபன் திண்ணையை விட்டுக் குதித்து இறங்கினான்.. பார்த்திபனின் தோள்மீது கை வைத்து புன்னகையுடன்..

“நலமா பார்த்திபா..?” என்று நலம் விசாரித்தான்..

“தங்களின் அருளால் நலமே..” என்று பார்த்திபன் சொல்லி வைத்ததில் மைதிலிக்கு பெருத்த ஆட்சேபம் இருந்தது..

‘இவன் அருளால் நலமா..? அப்படி இவன் என்ன அருள் செய்து விட்டான்..? எமது வயலில் நாற்றுப்பாவ துணை புரிந்தானா..? எமது கறவை மாடுகளின் பசி தீர்க்கப் புல் வெளிகளை அளித்தானா..? இல்லை எமது இல்லத்தில் குவிந்திருக்கும் செல்வங்களை வாரி வழங்கினானா..?’

மைதிலி இதழ்களைச் சுழித்து அவனுக்கு அழகு காட்டினாள்.. அவள் மறைந்திருந்த இடத்தை பார்த்திபனும் மலர்க்கொடியும் பார்க்க முடியாது.. ஆனால்.. வந்திருப்பவனால் பார்க்க முடியும் என்பதை அவள் மறந்து விட்டாள்..

அவள் உதட்டைச் சுழித்த அதே நொடியில் அவன் அவளைப் பார்த்துவிட.. மைதிலியின் அழகு காட்டல் அப்படியே நின்று விட்டது.. அவள் திருதிருத்தாள்.. அங்கே அவள் மறைந்து நின்றிருப்பதை மட்டும் மலர்க்கொடி பார்த்து விட்டாளென்றால் அவளுக்கு விதம் விதமான மண்டகப்படிகள் கிடைத்து விடுமே..

அதனால் சொல்லிவிட வேண்டாம் என்று எச்சரிப்பதைப் போல தனது அதரங்களின் விரலை வைத்து அவள் சமிக்ஞை செய்ததில் அவன் கண்களில் மின்னல் வந்தது..

அவன் அவளைப் பார்த்தபடி பார்த்திபனிடம் உரையாடலைத் தொடர்ந்தான்..

"எமது அருளால் தாம் நலம் பெறவில்லை பார்த்திபா.. எங்கும் நிறைந்திருக்கும் ஏகாம்பரேஸ்வரரின் அருளால் தான் நலம் பெற்று வாழ்கிறீர்கள்.. தமது தாய், தந்தையர் விட்டுப் போன செல்வத்தை பலமடங்கு பெருக்கும் திறமை தமக்கு வாய்த்திருக்கிறது.. அந்தத் திறமையினால் தாம் உயர்வு பெற்றீர்.. இதில் எமது அருளுக்கு எங்கு இடமுள்ளது..?"

'மிகச் சரியாக உரைத்தீர்கள்..' மைதிலி கட்டை விரலையும் ஆட்காட்டி விரலையும் இணைத்து வளைய

மாக்கி உயர்த்திக் காட்டியதில் அவனது கண்களில் மின்னல் அதிகரித்தது..

மைதிலி பார்த்திபனைச் சுட்டிக்காட்டி விட்டுத் தனது தலையில் விரலை வைத்து ஒன்றுமே இல்லை என்று சைகை காட்டியதில் அவன் ஆட்காட்டி விரலை பார்த்திபனுக்குத் தெரியாமல் நீட்டி

'உனக்கா..?' என்று சைகை செய்தான்..

'இல்லையில்லை..' அவள் தலையாட்டி மறுத்து விட்டு..

'என் அண்ணனுக்குத்தான் தலையில் எதுவும் இல்லை..' என்று பார்த்திபனை நோக்கி விரல் நீட்டினாள்.

அவள் இளநகையுடன் மலர்க்கொடியைப் பார்த்தான்..

"தங்களின் நலம் விசாரிக்கச் சொல்லி கங்காதேவி செய்தி அனுப்பினாள் அம்மா.." என்றான்..

மலர்க்கொடியின் முகம் மலர்ந்து விட்டது.. அவன் உரைத்த கங்காதேவியைப் பற்றி மைதிலி அறிவாள்.. மலர்க்கொடிதான் சதாசர்வகாலமும் கங்காதேவியின் புகழைப் பாடிக் கொண்டிருப்பாளே..

"அவள் மிகப் பெரிய சாம்ராஜ்யத்தின் மகாராணி..! இருந்தும் எத்துனை எளிமையாக இருப்பாள் தெரியுமா..? பட்டத்து ராணிகள் அனைவரும் மாளிகைகளின் மீதும், ஆடை ஆபரணங்களின் மீதும்தான் ஆசை வைப்பார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறோம்.. இவள் என்னடா

வென்றால் எழுத்தாணியின் மீது ஆசை கொண்டிருக்கிறாள்.."

மலர்க்கொடி அளித்த தகவலைக் கேட்ட மைதிலிக்கும் வியப்பாகத்தான் இருந்தது..

"என்ன சொல்கிறீர்கள் அண்ணி..? எழுத்தாணியின் மீது ஆசை கொண்டிருக்கிறார்களா..?" அவள் விழி விரித்தாள்..

"ஆம் மைதிலி..! அவள் எழுத்தாணியின் மீது பிரியம் கொண்டவள்தான்.. எப்போது பார்த்தாலும் எழுத்தாணி கொண்டு ஏதேனும் வெண்பாவை வரைந்து கொண்டிருப்பாள்.. நீ காவியம்தான் இயற்றப் போகிறாய் என்று நான் சொல்லுவேன்.. அப்படியொரு காலமும் வரும்.. நான் காவியமும் இயற்றுவேன் என்று கூறுவாள்.."

மலர்க்கொடி விவரித்த கங்காதேவியைக் காண வேண்டுமென்ற ஆவல் மைதிலியிடம் வந்தது... மலர்க்கொடியின் தாய், தந்தையர் தொலை தூரத்தில் வசித்து வந்தார்கள்.. வருடத்திற்கு ஒருமுறை மலர்கொடி தனது தாயின் இல்லத்திற்கு சென்று திரும்புவதுண்டு.. அப்போதேல்லாம் உடன் செல்ல மைதிலி ஏக்கம் கொண்டாலும்... பார்த்திபன் அதற்கான அனுமதியை வழங்கியதில்லை.. அதில் மலர்க்கொடிக்கே மலையளவு வருத்தம் உண்டு..

"என்னதான் பெற்ற மகளைவிட பேணி வளர்த்தாலும் நான் அண்ணியென்பதை உணர்த்துகிறீர்களா..?" கணவனிடம் முறையிடுவாள்..

“அப்படியல்ல மலர்க்கொடி..! நமது இல்லத்தில் மைதிலி உனக்கு மகள் போன்றவள்.. உனது தாய் இல்லத்தில் அவ்வாறு இருக்க இயலாதே.. அவள் வேறொரு இல்லத்தைச் சேர்ந்த பெண்ணாகத்தானே அங்கு பார்க்கப் படுவாள்..? பெண் குழந்தைகளை உறவினர்களின் இல்லங்களுக்கு விருந்தினராக அழைத்துச் செல்வது நமது இல்லத்தாரின் வழக்கமல்லவே..” இதமாக எடுத்துரைப்பான் பார்த்திபன்..

அவன் கெட்டிக்காரன்.. எதை எவ்விதம் கூற வேண்டுமென்ற வளமை அறிந்தவன்.. எனது இல்லம் என்று தன்னை பிரித்து நிறுத்தாமல்.. நமது இல்லம் என்று மலர்க்கொடியையும் இணைத்து உரைத்து அவள் மனதை வென்று விடுவதில் வல்லவன்..

“ஆகட்டும்.. நான் திரும்பி வரும்வரை இவளைப் பத்திரமாக பார்த்துக் கொள்ளுங்கள்.. துடுக்குத்தனம் நிரம்பியவள்.. பால் போன்ற வெண்மை மனம் கொண்டவள்.. இவளை நாம்தான் பாதுகாத்து வளர்க்க வேண்டும்..” மலர்க்கொடியும் தன் கணவனுக்கு ஆயிரம் அறிவுரைகளை அள்ளி வழங்கிவிட்டு குழந்தைகளுடன் கிளம்பி விடுவாள்..

அவ்விதம் அவள் தாய் இல்லத்திற்கு சென்று வரும் போதெல்லாம் கங்கா தேவியைப் பற்றிய செய்தி எதையாவது கொண்டு வருவாள்..

“கேட்டாயா மைதிலி..” என்று ஆரம்பித்து.. அவள் பேசும் அத்தனை பேச்சுக்களும் கங்கா தேவியைப் பற்றிய புகழாரமாகத்தான் இருக்கும்..

'அந்த கங்காதேவியை இவனும் அறிவானா..? அவ்வாறெனில் இவன் அண்ணியின் உறவினனாக இருக்கக் கூடும்..'

மைதிலி நினைத்துக் கொண்டாள்.. குறுநில மன்னர்களின் பாரம்பர்யத்தில் அவர்கள் பிறந்திருப்பதைப் போல.. வந்திருப்பவனும் ஏதோ ஓர் சிற்றரசு வழியைச் சேர்ந்தவனாக இருக்க வேண்டும் என்பது அவளின் யூகமாக இருந்தது..

புரவியில் வந்திருக்கும் வழிப்போக்கனான அவன் மலர்கொடியின் உறவினனாக இருக்கக் கூடும் என்று தான் அவள் எண்ணினாள்.. ஆகையினால்தான் கங்காதேவி அனுப்பிய செய்தியைக் கொண்டு வந்திருக்கிறான்..

'இவனை வரவேற்கவா இத்தனை சங்கேத மொழி..?'

மைதிலிக்கு சுவரில் மோதிக் கொள்ளலாம் போல இருந்தது.. அவ்வாறு மோதினால் எழும்பிடும் ஓசையில் அவளது மறைவிடத்தை மலர்க்கொடி கண்டு பிடித்து விடுவாள் என்பதினால் அவள் கை, கால்களை அடக்கிக் கொண்டு சும்மா நின்றாள்..

"கங்காதேவி நலமாய் இருக்கிறாளா அரசே..?" மலர்க்கொடி பவ்யமாக வினவினாள்..

"நலமாகவே உள்ளாள்.." என்றான் அவன்..

"தாங்கள் வெகு தொலைவிலிருந்து வருகை தந்துள்ளீர்கள்.. நீராடி.. உணவருந்தி.. இளைப்பாறலாமே.." வினயத்துடன் வேண்டிக் கொண்டான் பார்த்திபன்..

'அதைத்தானே அண்ணா இவனும் வேண்டிக் கொண்டான்..' மறைவிடத்திலிருந்த மைதிலி தன் தலையில் தானே அடித்துக் கொண்டாள்..

அதையும் அவன் பார்த்து விட்டதில் பல்லையும் கடித்தாள்..

'அந்தப் பக்கமாக பார்..' என்று சமிக்ஞை செய்தாள்.

அவன் கண்டு கொள்வதாகவே இல்லை.. பார்த்தி பனிடமும், மலர்க்கொடியிடமும் பேசியபடியே அவளைப் பார்த்தபடிதான் இருந்தான்..

"தங்களின் தங்கை வாசலில் கோலமிட்டுக் கொண்டிருந்தாள்.. எனைக் கண்டதும் அஞ்சி இல்லத் திற்குள் ஓடி வந்து விட்டாளே.. எங்கே அவள்..?"

திடும் என அவன் பார்த்திபனிடம் கேட்டுவைத்ததில் மைதிலியைத் திகில் பற்றிக் கொண்டது..

அவள் அங்கே மறைந்து நிற்பதை தமையனிடம் அவன் காட்டிக் கொடுத்து விடுவானோ..

வியர்வைத் துளிகளை அவள் தாவணியின் முந்தானையில் ஒற்றி எடுத்துக் கொண்டிருந்தபோது பதவிசாகப் பதில் உரைத்தாள் மலர்க்கொடி..

"பாவம்.. சின்னஞ்சிறு பெண்.."

அவனது விழிகள் மலர்க்கொடி உரைப்பது மெய்தானா என்று அவதானிப்பதைப் போல அவளை அளந்து வைத்தன..

"ஆம்.. ஆம்.. சின்னஞ் சிறு பெண்தான்.."

ஒப்புக் கொள்வதைப் போல அவன் தலையை அசைத்ததில் மைதிலிக்கு சினம் துளிர்த்தது..

அவள் மறைந்திருப்பதை அறிந்திருப்பதை பயன் படுத்திக் கொள்கிறானே..

“அன்னியரிடம் உரையாடிப் பழக்கமில்லாதவள்..”

மலர்க்கொடியின் உரை தொடர்ந்தது.. அப்படியா என்பதைப் போல அவன் மைதிலி மறைந்திருந்த திசை நோக்கிப் புருவங்களை உயர்த்தினான்..

‘இவன் காட்டிக் கொடுக்காமல் விட மாட்டான் போல..’

மைதிலி தலையில் கை வைத்தாள்.. மறைவிடத்தை விட்டு வெளியே வந்தால் தமையனிடமும், அண்ணி யிடமும் மாட்டிக் கொள்வாள்.. அன்னியரிடம் உரையாடிப் பழக்கமில்லாதவள் என்று அவளைப் பற்றிப் பெருமையாக கூறிக் கொண்டிருக்கும் மலர்க்கொடிக்கு இதய நோவே வந்து விடும்..

‘தேவையா..?’ மைதிலி பல்லைக் கடித்துக் கொண்ட அவனைப் பார்த்து வேறு திசையில் பார்க்கும்படி சைகை செய்தாள்..

அவன் விடுவேனா என்று அவள் மறைந்திருந்த குதிரின் பின்புறத்தையே வைத்த கண் வா்ங்காமல் பார்த்துக் கொண்டிருநதான்..

இரண்டு ஆள்கள் ஒருவர் மீது ஒருவராக ஏறி நின்றாலும் எட்டாத ‘குதிர்’ அது.. பத்து ஆள்கள் கையோடு

கை சேர்த்து சுற்றி வளைத்தாலும் அவற்றுள் அடங்காத சுற்றளவைக் கொண்டது.. அறுவடை முடிந்ததும்.. இல்லத்திற்குத் தேவையான நெல்லை அக்குதிரில்தான் கொட்டி வைப்பார்கள்.. அந்தக் குதிரின் பின்புறம் நின்றால் வந்திருக்கும் வழிப்போக்கனை கண்காணிக்க ஏதுவாக இருக்கும் என்று அவள் அதன் பின்னால் மறைந்து நின்றால்.. அவ்விடம் அந்த வழிப்போக்கன் அவளைக் கண் காணிப்பதற்கு ஏதுவாக அமைந்து தொலைத்திருந்தது..

"தங்களைக் கண்டதும் நடுநடுங்கி ஓடி வந்து விட்டாள்.."

மலர்க்கொடியின் பெருமையில் போதுமே என்றிருந்தது மைதிலிக்கு..

'அண்ணி கூறுவதற்கெல்லாம் இவன் நையாண்டி நகைப்பு நகைத்து என்னைப் பார்க்கப் போகிறான்.. இது தெரியாமல் எனது அண்ணி இவனிடம் போய் இல்லாத பெருமைகளையெல்லாம் அள்ளி விடுகிறார்களே.. இதை எப்படி நிறுத்துவது..?'

"நான் என்ன.. சிங்கமா.. புலியா..?"

மைதிலியைப் பார்த்தபடி அவன் மலர்க்கொடியிடம் கேட்டு வைத்ததில்..

'இரண்டும் இல்லை.. கரடி..' என்று உதட்டை அசைத்தாள் மைதிலி.. அதில் அவனது விழிகள் பிரகாசித்தன.. கண்களில் நகைப்போடு அவளைப் பார்த்து கரடி போல உறுமிக் காட்டியவன் சடுதியில் முகத்தை மாற்றிக் கொண்டு சாந்தமாக மலர்க்கொடியைப் பார்த்தான்.

"தாங்கள் சிங்கம் என்பதை அவனியே அறியுமே.."

மலர்க்கொடியின் புகழுரையைக் கேட்டாயா என்பதைப் போல அவன் சமிக்ஞை செய்ய.. 'நான் அறிய மாட்டேன்..' என்று மைதிலி பதில் சமிக்ஞை செய்தாள்..

"தங்களின் வரவை அறியாமல் திண்ணையில் அமர வைத்து விட்டேன்.." மன்னிப்புக் கோரும் பாவனையில் கூறினான் பார்த்திபன்..

"வருந்த வேண்டாம் தோழரே..! புலராத இந்த விடிகாலைப் பொழுதின் இதமான காற்றை அனுபவிக்கத் தான் நான் திண்ணையில் அமர்ந்தேன்.." பெருந் தன்மையுன் அவன் விளக்கம் கூறினான்..

"இல்லத்திற்குள் வருகை தர வேண்டும்.. தங்களுக்காக மேன்மாடத்தில் உப்பரிகையுடன் கூடிய அறை தயார் நிலையில் உள்ளது.." பார்த்திபன் உபசரித்தான்..

"என் குதிரை..?"

"எனது பணியாள் பார்த்துக் கொள்வான்.."

"ஆகட்டும்.."

ஒரு வழியாக அவன் கிளம்புகிறானே என்று மகிழ்ந்து போனாள் மைதிலி.. நெற்குதிரின் பின்னே மறைந்திருப்பதில் அவளுக்குப் பல அசௌகரியங்கள் இருந்தன..

'இப்படியா அரித்து வைக்கும்..?'

கைக்கு எட்டாத முதுகுப் பகுதியில் நெற்துகளின் தூசி ஏற்படுத்திய அரிப்பைத் தாள மாட்டாமல் தவித்துக் கொண்டிருந்தாள் அவள்..

"முன்னே செல்லுங்கள்.. இதோ வருகிறேன்.."

அவனது பேச்சை மறுக்க முடியாமல் பார்த்திபனும், மலர்க்கொடியும் இல்லத்திற்குள் சென்று விட.. அவன் திரும்பி மைதிலி எதிர்பாராத தருணத்தில் அவளது காதைப் பிடித்து குதிரின் பின் பகுதியிலிருந்து வெளியே இழுத்தான்..

'எத்துனை தைரியம்..'

சினம் வந்தாலும் அதை வெளிக் காட்ட முடியாமல் மைதிலி காதை விடுவித்துக் கொள்ளப் போராடினாள்..

"மறைந்திருந்து உளவு பார்க்கிறாயா..?"

விசமமான அவனது வினாவில் நாசியை விடைத்தாள் மைதிலி..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



4

காற்றோடு கலந்து போனது..
கடந்த காலக் காதலா..?

படிகளில் தாவி ஏறிய யாமினி தனது உற்சாகத்தைக் கண்டு ஆச்சரியப் பட்டாள்.. அவளா இத்தனை உற்சாகத்துடன் வேலைக்குப் போகிறாள்..?

சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனியில் எம்.டியின் பெர்சனல் செக்கரட்டரியாக அவள் வேலைக்குச் சேர்ந்து

இருவாரங்கள் ஓடி விட்டன.. இந்த இருவாரமும் நிழலைப் போல சித்தார்த்தனை விட்டுப் பிரியாமல் அடை காத்தான் தாமோதரன்.. அதில் யாமினிக்கு கோம் கூட வந்தது..

'இவனோட பிரண்டை நான் என்ன செய்யப் போகிறேனாம்..? ஸ்வாஹா பண்ணி விடப் போகிறேனா..?'

தாமோதரன் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறான் என்பது அவனுடைய விழிகளில் மின்னிய சந்தேகத்திலிருந்து தெரிந்தது.. யாமினியைக் கண்டவுடன் அவன் விழிகளில் வந்து உட்காரும் எச்சரிக்கையிலும், சந்தேகத்திலும் யாமினி சங்கடம் கொண்டாலும்.. அதைக் கண்டு கொள்ளாமல் வேலை செய்ய பழகி விட்டாள்..

'அவனே இதை எதிர்பார்த்திருக்க மாட்டான்..'

தன்னம்பிக்கையுடன் கூடிய சிரிப்பு அவளுக்கு வந்தது.. தாமோதரன் அவளுடைய வேலைத்திறனை அங்கீகரித்ததில்லை.. அவள் எதைச் செய்தாலும் முகம் சுளித்தான்.. இப்படிச் செய்தால் அப்படிச் செய்ய வேண்டும் என்றான்.. அதை எதிர்பார்த்திருந்த யாமினி..

"இதோ.." என்று தயார் நிலையில் எடுத்து வைத்திருந்த ஸ்டேட்மெண்டைக் கொடுத்து அவன் மூக்கை உடைத்தாள்..

"இதை முன்னாடியே கொடுக்கிறதுக்கென்ன..?" அவன் எரிந்து விழுந்தால்..

"இதை இப்படியே கொடுத்திருந்தா.. வேற எப்படியாவது ஸ்டேட்மெண்டை முடிச்சிருக்கனும்னு

நீங்க சொல்லி வைப்பீங்க சார்.. உங்க ஈகோவுக்காக தப்பான ஸ்டேட்மெண்ட் ஃபார்ம் ஆகிறதை நான் விரும்பலை.. அதான்.. எக்குத்தப்பான ஸ்டேட்மெண்டை முதல்ல காட்டிட்டு.. நீங்க இப்படின்னு சொன்னதும் அப்படியே நான் வொர்க் பண்ணி வைச்சிருந்த ஸ்டேட் மெண்டை சைனுக்கு நீட்டினேன்..." என்று அலட்டிக் கொள்ளாமல் விளக்கம் கொடுத்தாள்..

"குட் ஜாப்.." என்று சித்தார்த்தனின் கைதட்டலைப் பெற்றுக் கொண்டாள்..

தாமோதரனுக்கு தனது மூக்கு உடைபட்டதைக் கூடப் பொறுத்துக் கொள்ள முடிந்தது.. யாமினியைப் பாராட்டி சித்தார்த்தன் கை தட்டியதைத் தான் பொறுத்துக் கொள்ள முடியவில்லை..

"இப்ப என்னத்துக்கு டெண்ட் கொட்டகையில மசாலா சினிமாவைப் பாத்துட்டு தரை டிக்கெட்காரன் கை தட்டறதைப் போல கை தட்டற..?" என்று வெடு வெடுத்தான்..

"டேய்.. யாமினியோட டேலண்டை அப்ரிசியேட் பண்ணனும்னு தோணுச்சு.. கை தட்டினேன்.. அது ஒரு தப்பா..?"

"தப்புத்தான்.. யாரு நீ..?"

"சித்தார்த்தன்.."

"வெறும் சித்தார்த்தன் இல்ல.. சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனீஸின் எம்.டி. இதை நினைப்பில் வைச்சுக்க.."

"இல்லேன்னா மறந்து போயிருமா..? ஹா.. ஹா.."

சித்தார்த்தனின் சிரிப்பில் யாமினிக்கும் சிரிப்பு வந்தது.. அவள் உதட்டைத் துடைப்பதைப் போல சிரிப்பை மறைத்தபடி தன் வேலையில் கவனமானாள்.. அதில் தாமோதரனுக்கு கொள்ளை கொள்ளையாய் எரிச்சல் வந்தது..

"வேலையைத் தவிர மத்ததை எல்லாம் கவனி.."

யாமினியைப் பார்த்துப் பல்லைக் கடித்தபடி சித்தார்த்தனிடம் சொல்வதைப் போல அவன் சொன்னான்.. யாமினிக்கா அவன் யாரைச் சொல்கிறான் என்று தெரியாது..?

அவள் நீ பாட்டுக்கு சொல்லிக் கொண்டிரு.. நான் பாட்டுக்கு இந்தக் காதில் வாங்கி.. அந்தக் காதில் விட்டு விட்டு வேலையைப் பார்க்கிறேன் என்று எவருக்கு வந்த விருந்தோ என்பதைப் போல.. தனது வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்து தப்பித்தாள்..

தாமோதரன் தேளாக அவளைக் கொட்டினான்.. அவளுக்கு வலிக்கவில்லை.. தீயாக தகித்தான்.. அவளுக்குச் சுடவில்லை.. வார்த்தைக்கு வார்த்தை அவளை மட்டம் தட்டினான்.. அவளுக்கு உறைக்க வில்லை..

எவ்வளவுதான் அவன் கொடுமை செய்தாலும்.. அவனை வெறுத்து விலக முடியாமல் ஏதோ ஒரு பாசம் அவளைக் கட்டிப் போட்டது.. அது அவன் வீசிய சாட்டையடிகளை ஆனந்தமாக ஏற்றுக் கொள்ளச் சொன்னது.. அது.. எது..?



5

நீரோட்டம் போன்ற வாழ்வில்.. நீர்ச் சுழலாய் ஏன் வந்தாய்..?

“உளவா..? தம்மையா..?”

மைதிலி பரிகாசச் சிரிப்புடன் காதை விடுவித்துக் கொண்டு.. அவளை அவன் பார்வையால் அளவிட்டதைப் போல.. அவனைப் பார்வையால அளந்து வைத்தாள்..

“என்ன பார்வை..?” அவன் குறுஞ்சிரிப்புடன் வினவினான்..

இவனுக்கு என்னைக் கண்டால் எவ்விதம் தோன்றுகிறது.. சீண்டிப் பார்ப்பதையே கடமையாகக் கொண்டிருக்கிறானே..

அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது..

“ஊம்..? தாம் என்னைப் பெண் பார்க்க வருகை தந்துள்ளீர்கள்.. அல்லவா..? அதனால் தாம் எனக்கு ஏற்ற மணமகன்தானா என்று பார்த்து வைக்கிறேன்.. வந்து விட்டார்.. வக்கனைண பேச.. பேசாமல் போய் விடுங்கள்..”

“எங்கே..?”

“மேன் மாடத்தின் உப்பரிகையுடன் கூடிய விருந்தினர் அறைக்கு.. வேறு எங்கு போகச் சொல்வேன்..?”

“இங்கு வரும்வரை எனக்கு எவ்வித நோக்கமுமில்லை..”

"வந்த பின்னால் என்னவோ..?"

"தாம் கூறுவதைப் போலத் தம்மைப் பெண் ...த்தால் என்ன என்று தோன்றி வைக்கிறது.."

"என்னது..?...!"

அவள் திடுக்கிட்டு விழித்ததை குறும்பு நகைப்புடன் ...ன் ரசிப்பதைக் கண்ணுற்றவளுக்கு இவனுக்கு ...லாமே விளையாட்டுத்தானா என்ற கோபம் வந்தது..

"தோன்றும்.. தோன்றும்.. ஏன் தோன்றாது..? ...ளுக்குத்தான் இவ்வாறெல்லாம் தோன்றி வைக்கும்.. ...ருந்தினராக வந்தவர் முறைப்படி தம்மை அறிமுகப் ...த்திக் கொள்ளாமல் சைவமும் வைணவமும் ஒன்று ...ட கதையை எடுத்துக் கூறி வாசலில் தேமே என்று ...லமிட்டுக் கொண்டிருந்த அறியாப் பெண்ணை ...லத்துக்குள் விரட்டியடிப்பாராம்.."

"சற்றுப்பொறு.. இங்கே அறியாப் பெண் என்று ...ரை நீ கூறினாய்..?"

அவன் சற்று முற்றும் தேடுவதைப் போல செய்த ...வனையில் அவன் முதுகில் மொத்தினால் என்ன என்று ...கம் கொண்டாள் மைதிலி..

"ஏன்..? என்னைப் பார்த்தால் அறியாப் பெண் என்று ...க்குத் தோன்றவில்லையோ..?"

"அறியாப் பெண்தான் நெற்குதிரின் மறைவில் ...றைந்து நின்று உளவு பார்ப்பாளோ.."

"மீண்டும் உளவா..? அதுசரி.. இவர் பெரிய விஜய நகரப் பேரரசின் சக்கரவர்த்தி.. மதுரை சுல்தானை விரட்டியடிக்கப் படை திரட்டி வந்திருக்கிறார்.. இவரை நான் உளவு பார்க்கிறேன்.."

உதட்டைச் சுழித்து அவள் பரிகாசம் பேச.. இமைக்காமல் அவளையே பார்த்த அவனது பார்வை ஏதோ சொல்லியது.. அவனது முகத்தில் வந்து போன மாறுதலில் மைதிலி திகைத்தாள்..

'இவன் யார்..?'

நொடிப் பொழுதில் அவன் முகம் இயல்பு நிலைக்கு மாறியதில் எதிரில் நிற்பவன் சாதாரணமான ஓர் புரவி வீரனல்ல என்று அவள் மனம் சொன்னது..

"அப்பேற்பட்ட பெரும் பேரெல்லாம் எனக்குக் கிடையாது பெண்ணே.. நான் சாதாரண புரவி வீரன்.."

"அதைத்தான் நான் அறிவேனே.. என் தமையனும் அண்ணியும்தான் தம்மை 'அரசே..!' என்று விளித்து வைக்கிறார்கள்.."

மிகப் பெரிய நகைச்சுவையைச் சொல்லி விட்டதைப் போல வாய் பொத்திச் சிரித்தவளை பொருள் விளங்காத மர்மப் பார்வையொன்றை பார்த்து விட்டு.. ஏதும் நிகழாததைப் போல புன்னகை வேறு செய்து வைத்தான் அவன்..

"அது பிரியத்தினால் உரைப்பது.."

"அதற்காக அரசே என்றா அழைப்பார்கள்..? ஹா..ஹா.."

அவள் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தாள்.. அவன் என்னவென்று இனம் கண்டு கொள்ள முடியாத ஒரு பார்வை வீச்சை அவள் பக்கம் வீசிவிட்டு.. அவளின் முதுகுப்புறமாகப் பார்த்து..

"வாருங்கள் மலர்க்கொடி.." என்றான்..

அவ்வளவுதான்.. மைதிலியின் சிரிப்பு அந்தரத்திலேயே நின்று விட்டது.. அவள் கைவிரல்கள் தந்தியடிக்க..

"இல்லை அண்ணி.. நான் சும்மாதான் உரையாடிக் கொண்டிருந்தேன்.. இவரை வேண்டுமானால் கேட்டுப் பாருங்கள்.." என்று உளறியபடி திரும்பிப் பார்த்தாள்..

அங்கே யாரும் இல்லை.. இப்போது அவன் விழுந்து விழுந்து சிரித்து வைத்தான்.. கூடவே..

"ஏமாந்தாயா..?" என்றும் கேட்டு வைத்தான்..

"பொய்யுரைத்தீர்களா..?" அவள் நாசியை விடைத்தாள்..

"ஆம்.. அதைக்கூடக் கண்டு கொள்ளாமல் நடு நடுங்கினாயே.. இவ்வளவுதானா நீ..? என்னவோ கெட்டிக்காரியைப் போல வார்த்தையாடினாயே.."

அவளைக் கேலியாகப் பார்த்தபடி அவன் இல்லத்திற்குள் சென்று விட்டான்.. தோற்று விட்ட ஆத்திரத்துடன் நாசியை விடைத்த மைதிலிக்கு கண்கள் கலங்கி விட்டன..

எவ்வளவு எளிதாக அவளை ஏமாற்றி விட்டான்..?

அதற்கு மேலும் அதையே நினைத்துப் பொருமிக் கொண்டிருக்க வழியில்லாமல்..

"மைதிலி.." என்று அழைத்து வைத்தாள் மலர்க்கொடி..

"இதோ அண்ணி.." அனைத்தையும் மறந்து ஓடினாள் மைதிலி..

"கிள்ளி வளவனும், முல்லைக்கொடியும் எழுந்து விட்டார்களா..?"

மைதிலி நெற்குதிரின் பின்னே பதுங்கியிருந்ததைப் பற்றி மலர்க்கொடிக்கு என்ன தெரியும்..?

'யாருக்குத் தெரியும்..?' என்று சொல்ல இருந்த மைதிலி..

'ஆஹா..! என்னிடம்தானே குழநதைகளின் அருகில் இருக்கச் சொல்லி அண்ணி உத்தரவிட்டார்கள்..' மூளையில் மின்னல் வெட்டியதில்..

"அவர்கள் துயில் கலையவில்லை அண்ணி.." என்று சமாளித்தாள்..

"இன்னுமா உறக்கம் கலையவில்லை..? நன்றாக உள்ளது.. அக்கம் பக்கத்து இல்லத்தார் என்ன சொல்வார்கள்..?" மலர்கொடியின் கேள்வியில்..

'இது ஒன்று உள்ளது அண்ணியிடம்..' என்று வெறுத்துப் போனாள் மைதிலி..

"இது என்ன அண்ணி வம்பாக உள்ளது..? சிறு குழந்தைகள் உறக்கம் கொள்வதற்குக் கூட அக்கம் பக்கத்து

இல்லத்துப் பெண்களிடம் அனுமதி வாங்க வேண்டுமா..?" அவள் படபடத்தாள்..

"சும்மா இரு மைதிலி.. உனக்கு ஒன்றும் தெரியாது.."

"ஆமாமாம்.. அடுத்த இல்லத்து அன்னபூரணிக்குத் தான் அனைத்தும் தெரியும்.. சென்று பாருங்கள்.. அந்த அம்மையாரின் இல்லக் கதவு இன்னும் இழுத்து மூடப் பட்டுள்ளது.. கதிரவனின் கதிர்கள் உச்சிப் பொழுதை எட்டும் போதுதான் வாசலில் நீர் தெளித்து கோலமிடுகிறார்.. இந்த லட்சணத்தில் இந்த விடிந்தும் விடியாத அதிகாலைப் பொழுதில் குழந்தைகளின் உறக்கத்திற்கு அவர் குதர்க்கம் பேசி விடுவாரா என்ன..? அப்படிப் பேசினால் தெரியும் சேதி.."

"என்ன செய்வாய்..?"

"எதையும் செய்வேன்.."

"செல்.. சென்று அவளிடம் வம்பைக் கட்டி இழுத்து வா.. அப்போது இருக்கிறது உனக்கு.."

மலர்க்கொடி சினத்துடன் கண்களை உருட்டி விழித்தபடி காலை வேளைக்கான பலகார வகைகளை பார்வையிட ஆரம்பித்தாள்.. அவற்றை எட்டிப்பார்த்த மைதிலிக்கு உண்ண வேண்டும் போல இருந்தது.. மலர்க்கொடியிடம் வினவினாள்.. பல் துலக்கி, நீராடி, மாற்றுடை அணிந்தபின்தான் எதையும் உண்ண முடியும் என்று கறாராக அவள் சொல்லி விட்டாள் என்பதில், இமை கொட்டிய மைதிலி..

"ஏன் அண்ணி..?" என்றாள்..

"என்ன..?" நாத்தனாரின் குணமறிந்த மலர்க்கொடி சந்தேகத்துடன் கேட்டாள்..

"அப்போது எனக்கு அளிப்பதை இப்போதே அளித்தால் என்ன..?"

"எதை..?"

"பலகாரத்தைத்தான்.."

"ஆமாமாம்.. நீ அன்னபூரணியிடம் வம்பைக் கட்டி இழுப்பாய்.. அதற்காக நான் உன்னைப் பாராட்டி பலகாரம் ஊட்டுவேன்.. காத்துக் கொண்டு இரு.."

"அப்போது இருக்கிறது உனக்கு என்பதன் பொருள் பலகாரம் ஊட்டுவதுதானே அண்ணி..? நான் அவ்விதம் தான் நினைத்தேன்.."

"நீ எவ்விதமும் நினைப்பாய்.. நகர்ந்து நில்.. எனக்கு இல்லப்பணிகள் தலைக்கு மேல் உள்ளது.."

"அவ்வாறா..?"

மலர்க்கொடியின் தலைக்கு மேல் உற்றுப்பார்த்த மைதிலி..

"அங்கே ஒன்றும் இல்லையே.." என்று கூறிவிட்டு மலர்க்கொடியிடம் குட்டு வாங்கினாள்..

மிகப்பெரிய நவரத்தினக் கற்கள் பதித்த மோதிரத்தை விரலில் மாட்டியிருந்தாள் மலர்க்கொடி.. அவள் குட்டு வைத்த போது விரல்களை மடக்கிக் குட்டு வைத்ததில் அந்த மோதிரம் வாகாக மைதிலியின் தலையில் வலியை உண்டாக்கியதில்..

"ஸ்..ஆ.." என்று தலையைத் தடவிக் கொண்ட மைதிலி..

"இதைத்தான் குட்டுப் பட்டாலும் மோதிர விரல் கொண்ட கையால் குட்டுப் பட வேண்டும் என்று பெரியோர்கள் சொன்னார்களோ..?" என்று மலர்க்கொடியிடம் விளக்கம் கேட்டாள்..

மலர்க்கொடிக்கு நகைப்பு வந்து விட்டது.. அவள் வாய் விட்டு நகைத்தபடி இங்கும் அங்குமாக நடந்து இல்லப் பணிகளை கவனித்துக் கொண்டிருந்தாள்... அவள் பின்னாடியே சேலை முந்தானையைப் பிடிக்காத குறையாக அலைந்த மைதிலி..

"என்றைக்கும் இல்லாத வகையில் இன்று பரபரப்பாக நடமாடுகிறீர்களே.. என்ன விவரம் அண்ணி..?" என்று கேட்டாள்..

"நம் இல்லத்திற்கு விருந்தினர் வந்திருப்பதை நீ அறிவாயல்லவா..?"

"வந்தால் என்ன..? தினத்துக்கு ஒரு விருந்தினர் வந்து கொண்டுதானே இருக்கிறார்கள்..? விருந்தோம்பலில் நாங்கள் இந்த அளவுக்கு மூழ்கியதில்லையே.. இவர் மட்டும் என்ன பெரிய இவரா..?" உதட்டைச் சுழித்தாள் மைதிலி..

"மைதிலி.." அதட்டினாள் மலர்க்கொடி..

"ஏன் அண்ணி..?"

"இதுபோல வெளியில் உரைத்து வைக்காதே.. வந்திருக்கும் விருந்தினர் அதி முக்கியமானவர்.."

"எவ்வகையிலாம்..? சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியோ..?"

எதையோ கூற வாயெடுத்த மலர்க்கொடி தன்னை கட்டுப்படுத்தியவளாக நாத்தனாரை முறைத்தாள்..

"அவசியம் அனைத்தையும் கூறியாக வேண்டுமா..? ஆமாம்.. இல்லப் பணிகளையும் கவனிக்காமல்.. குழந்தைகளையும் உறக்கம் கலையச் செய்யாமல்.. என் பின்னே எதற்காக குட்டி போட்ட பூனையைப் போலச் சுற்றிக் கொண்டிருக்கிறாய்..?"

"நான் ஒன்றும் பூனையல்ல.." மைதிலி சிணுங்கினாள்..

"அதற்கு பூனைதான் கோபம் கொள்ள வேண்டும்.. எனக்கு ஆயிரம் பணிகள் உள்ளன.. நான் ஒன்றும் உனது நாத்தனாரைப் போல பணிகள் எதையும் செய்யாமல் வெட்டியாக அலையவில்லை.. உனது நாத்தனாருடன் என்னை இணை கூட்டாதே என்று என்னுடன் வாதுக்கு வர வேண்டும்.. நீயேன் சுணங்குகிறாய்..?"

"போங்கள் அண்ணி.."

"நீ முதலில் நீராடப் போ.."

'விட மாட்டார்களே..'

முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு.. நீராடக் கிளம்பினாள் மைதிலி.. ஏதோ நினைவுக்கு வந்தவளாக மலர்க்கொடி நாத்தனாரை கரம் கொட்டி அழைத்தாள்..

"என்னவாம்..?"

"நம் இல்லத்தின் விருந்தினரைப் பற்றி எவரிடமும் உரைக்க வேண்டாம்.."

"எவரிடம் உரைக்கப் போகிறேன் அண்ணி..? அக்கம், பக்கத்து இல்லங்களில் இருப்பவர்கள் உங்களுடன் தோழமை பூணும் வயதைக் கொண்டவர்கள்.. என் வயதில் எவருமில்லையே.."

"இந்த வீதியில் இல்லை.. அடுத்த வீதியில் உள்ள அம்பலவாணரின் இல்லத்தில் உனக்கென்று ஒரு தோழியை பிடித்து வைத்துள்ளாயே.."

"அதுவும் கூடாதா..?"

"கூடாதென்று நான் கூறினால் நீ கேட்டு விட்டுத்தான் வேறு பணியை பார்ப்பாய்.."

"தோழமை பூணுவது கூடத் தவறா..?"

"இல்லையம்மா.. இல்லை.. நீ தாராளமாக அம்பல வாணரின் புதல்வியான கோசலையிடம் தோழமை பாராட்டு.. அதைப் பற்றி நான் ஏதும் கூறப் போவதில்லை.. கூறி என்ன பிரயோசனம்..? இது பணிக்கு ஆகாது என்று உன் வழியின் உன்னை விட்டு விட்டேனே.. நான் கூற வந்தது வேறு.. கோசலையிடம் நீ நாட்டு நடப்பைப் பேசு.. இல்ல நடப்பைப் பேசு.. தப்பித் தவறி.. நம் இல்லத்திற்கு வருகை புரிந்திருக்கும் விருந்தினரைப் பற்றி மட்டும் பேசி விடாதே.."

"எதற்காக இந்த தடையுத்தரவு..?"

"விளக்கம் சொன்னால்தான் நீ கேட்பாயா..? நான் கூறினால் கேட்டுக்கொள்ள மாட்டாயா..?"

“என்ன வார்த்தை சொல்லி விட்டீர்கள் அண்ணி.. நீங்கள் கூறினால் அந்த மலை உச்சியிலிருந்து கூடக் குதிப்பேனே.. இதைக் கேட்க மாட்டேனா..?”

“ப்ப்பா...! இதையே எத்தனை முறை கூறுவாய்.. வாய்ப்பந்தல் இடுவதில் உனக்கு நிகர் நீதான்.. செல்..”

“எங்கே..?”

“நீராட..”

“அதை மறக்கவே மாட்டீர்களா..?”

“மாட்டேன்..”

மலர்க்கொடி நகைப்புடன் மைதிலியை விரட்டுவதைப் போல பாவனை செய்தாள்.. நகைத்தபடி விலகி ஓடிய மைதிலி.. இல்லத்தின் பின்புறமாக ஓடிக் கொண்டிருந்த ஆற்றை ஒட்டியிருந்த நீராடும் மண்டபத்தை நோக்கி நடந்தாள்.. கூந்தலைப் பிரித்து விட்டு நீரில் மூழ்கி நீந்திக் களித்தவள்.. மறுகரையில் படித்துறையைத் தொட்டு எழுந்து படியில் அமர்ந்தாள்.. வாளிப்பான அவளது தேகத்தைச் சுற்றியிருந்த ஒற்றை ஆடை அவளது உடலோடு ஒட்டி நீர்த் துளிகளைச் சொட்டிக் கொண்டிருந்தது..

“கண்ணன் என்னும் மன்னன் பெயரைச்
சொல்லச் சொல்ல..
கல்லும் முள்ளும் பூவாய் மாறும்..
மெல்ல.. மெல்ல..”

தன்னிச்சையாக பாடிக் கொண்டிருந்தாள் அவள்.. ஏனோ தெரியவில்லை.. அவள் மனதில் இனம் விளங்காத

குதூகலம் புகுந்து கொண்டிருந்தது.. அன்றுதான் புதிதாகப் பிறந்திருப்பதைப் போல அவள் உணர்ந்தாள்.. எதனால் அந்த உணர்வு ஏற்பட்டிருக்கிறது என்று புரியாதவளாக அவள் உல்லாசம் ததும்ப நீரில் பாய்ந்தாள்..

"எண்ணம் என்னும் ஆசைப்படகுச்
செல்லச் செல்ல
வெள்ளம் பெருகும் பெண்மை உள்ளம்
துள்ளத் துள்ள.."

தண்ணீரின் மேல்பரப்பில் அவளது தலை வந்து மீண்டும் நீரில் அமிழ்ந்தது.. சற்றுத் தொலைவு சென்றதும் நீரின் மேல்பரப்புக்கு வந்து மூச்சு வாங்கிய மைதிலி.. நீரை அள்ளி கரையோர நாணல்களின் மீது வீசினாள்..

"தென்றல் இன்று பாடும் பாடல்..
என்ன என்ன..?
சின்னக் கிளிகள் சொல்லும் மொழிகள்..
என்ன.. என்ன..?
கண்ணும் நெஞ்சும் ஒன்றுக்கொன்று
பின்னப் பின்ன..
என்னைத் துன்பம் செய்யும் எண்ணம்
என்ன.. என்ன.?"

அதிகாலைத் தென்றல் காற்றுடன் குழைந்து.. இழைந்து.. ஒலித்தது அவளுடைய பாடல்.. கரையோர நாணல்கள் தலையாட்ட.. ஆற்று நீரின் மெலிதான அலையோசை அவளது பாடலுக்கான தாள லய ஓசையைப் போல இருந்தது..

"அக்கம் பக்கம் யாரும் பார்த்தால்..
வெட்கம்..! வெட்கம்..!
அன்பே உன்னை நேரில் கண்டால்
நாணம்..! நாணம்..!
ஆசை நெஞ்சைச் சொல்லப் போனால்
அச்சம்.. அச்சம்..
அன்றும்.. இன்றும்.. அதுதான் நெஞ்சில்
மிச்சம்.. மிச்சம்.."

பாடியபடியே நீரில் அமிழ்ந்து உள் நீச்சலாய் படித்துறையைத் தொட்டுத் தண்ணீருக்குள் இருந்து வெளிவரும் தாமரை மலராய் நீர்ப்பரப்பின் மேல் பகுதிக்கு வந்து மூச்சுத் திணற வேகமாக ஆசைதீர காற்றை சுவாசித்தவளின் அருகாமையில் தெரிந்தது அவன் முகம்..

'இவனா..?'

அவள் அதிர்ச்சியுடன் மார்பளவு நீரில் மறைந்து நின்று கொண்டாள்.. அவ்னது விழிகளில் தெரிந்த ரசனை நெடுநேரமாக அவன் அங்கு நின்றிருப்பதைக் கூறியதில் அவளது தனிமை கலைந்த சினம் அவளுக்கு வந்தது..

"இங்கு என்ன செய்கிறீர்கள்..?" மைதிலி சீறினாள்..

"அருமையான பாடல்..!" அவளது கேள்விக்குப் பதிலளிக்காமல் அவளது பாடலை அவன் சிலாகித்தான்..

"நான் கேட்டது தங்களின் மர மண்டையில் உறைக்கவில்லையா..?"

"ஏன் உறைக்கவில்லை..? சுளீரென்று கதிரவனின் கதிர்போல உறைக்கத்தான் செய்தது.. உனது பாடலின்

இனிமையிலிருந்து நான் இன்னும் மீளவில்லையல்லவா..? அதனால் எனது பாராட்டுதலை முதலில் கூறினேன்.."

"யாருக்கு வேண்டும் தங்களின் பாராட்டு..?"

"உனக்கு வேண்டாமா..?"

"அதைக் கொண்டு நான் என்ன செய்யப் போகிறேன்..?"

"எத்தனையோ செய்யலாம்.. எனது பெயர் அத்துனை பிரசித்தி பெற்றது பெண்ணே..! உனது பாடலை நான் பாராட்டினேன் என்று இந்த அவனியில் நீ கூறினால் ஓர் தினத்திலேயே பிரபலமான பாடகியாக மாறி விடுவாய்.."

"அடேங்கப்பா..! தற்புகழ்ச்சியெல்லாம் பிரமாதமாக இருக்கிறது.."

"இது தற்புகழ்ச்சியல்ல.."

"எப்புகழ்ச்சியாகவோ இருந்து விட்டுப் போகட்டும்.. எனக்கு பிரசித்தி பெற்ற உம்மிடமிருந்து எந்தவொரு பாராட்டும் தேவையில்லை.. அதைத் தாமே வைத்துக் கொள்ளுங்கள்.."

"அவ்வாறா கூறுகிறாய்..?"

"ஆமாம்.. ஆமாம்.. ஆமாம்.. இங்கே எதற்காக வந்தீர்கள்..?"

"ஆற்றங்கரைக்கு எதற்காக வருவார்கள்..? நீ எதற்காக வந்தாயோ.. அதற்காகவே நானும் வந்தேன்.. வந்த இடத்தில் தேனினும் இனிய உனது கானத்தைக் கேட்டு நீராட மறந்து நின்று விட்டேன்.."

'இவன் உண்மையாகத்தான் பாராட்டுகிறானா..?'

ஆம் என்று நம்ப முடியாமல் அவனது இதழோரம் குறுஞ்சிரிப்பு தவழ்ந்து அவனது புகழ்ச்சியை வஞ்சகப் புகழ்ச்சியாக அவளுக்கு அறிவித்தது..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



5

உன் முகத்தைக் காணும் போது.. உடன் பிறந்த பாசம் வருவதேன்..?

வாசல் கதவைத் திறந்து விட்ட செக்யூரிட்டியிடம் சிரித்தபடி குட்மார்னிங் சொன்னாள் யாமினி.. பதிலுக்கு அவன் அகலமான புன்னகையுடன் சல்யூட் வைத்தான்..

இதைப் போன்ற தோழமையை தாமோதரன் கொடுத்திருக்கிறானா என்று அவள் யோசித்தாள்..

இல்லை.. கொ..டுவாளாக அவளை வெட்டி வீழ்த்திவிடப் போவதைப் போல முறைப்பவன் ஓர்நாள் கூட தோழமையுடன் அவளைப் பார்த்ததில்லை.. இன்னும் சொல்லப் போனால் அவன் யாமினியை நேர் கொண்ட பார்வையுடன் ஓர்நாள் கூடப் பார்த்ததே இல்லை என்று தான் சொல்ல வேண்டும்..

அடிப்பார்வையில் முறைப்பான்.. ஓரப்பார்வையில் சுட்டெரிப்பான்.. மேல் பார்வையில் அவளை உதாசீனம்

செய்வான்.. நேர்கொண்ட பார்வையால் மட்டும் அவளைப் பார்க்கவே மாட்டான்..

அப்படிப் பார்க்க நேர்ந்த ஓரிரு தருணங்களில் அவனது இமை துடிப்பதையும் விழிகளில் ஓர் அதிர்வு உண்டாவதையும் யாமினி கவனித்திருக்கிறாள்.. உடல் நடுங்க சட்டென்று அவன் நகன்றிருக்கிறான்..

அந்த அதிர்வு எதனால் அவனுக்குள் ஏற்பட்டது..? ஏற்படுகிறது..?

விசித்திரமான வகையில் யாமினிக்கு சித்தார்த்தனை விட அதிகமாக தாமோதரனைப் பிடித்திருந்தது.. அவனுடன் பேசும் போதும்.. சண்டையிடும் போதும்.. யது நந்தனுடன் பேசிச் சண்டையிடுவதைப் போல அவள் உணர்ந்தாள்..

அவளைப் புறக்கணிப்பவனின் மீது சகோதரபாசம் ஏற்படுகிறதா..? ஏன்..?

அதுதான் அவளுக்குப் புரியவில்லை..

"தாயின் முகம் இங்கு நிழலாடுது..
தந்தை மனம் இங்கு உறவாடுது..
கோவில் விளக்கொன்று..
கூடப் பிறப்பென்று..
பாடும் குரல் கேட்குது - அண்ணா..
பாடும் குரல் கேட்குது.."

இரண்டு நாள்களுக்கு முன்னர்.. இந்தப் பாடலைப் பாடியபடி அவள் வேலை செய்து கொண்டிருந்தாள்..

சித்தார்த்தன் இல்லை.. பிஸினெஸ் லன்ச்சிற்காக ஏதோ ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டலுக்குப் போவதாகச் சொல்லி விட்டுப் போயிருந்தான்.. அது திடிரென்று உருவான மீட்டிங்.. ஒருவாரம் கழித்து வர வேண்டிய பாரின் கம்பெனிக்காரர்கள் முன்கூட்டியே வந்து விட்டதால் அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்ட பிஸினெஸ் லன்ச் அது.

தாமோதரனுக்கு அது பற்றித் தெரியாது.. அவன் வழக்கம் போல ஆபிஸ் வந்ததும் சித்தார்த்தனை கண்காணிக்க வந்து விட்டு.. அடையாரில் இருந்த அவர்களின் கம்பெனி பிரான்ச்சிற்குப் போயிருந்தான்.. அவன் திரும்பி வருவதற்குள் பிஸினெஸ் லன்ச் முடிவாகி சித்தார்த்தன் கிளம்பியிருந்தான்..

"சித்தார்த்.." என்றபடி உள்ளே வந்தவன்.. அந்தப் பாடலைக் கேட்டதும் அப்படியே நின்றுவிட்டான்..

"அண்ணா.. பாடும் குரல் கேட்குது.." என்று பாடியபடி தலைநிமிர்ந்த யாமினியும் தாமோதரனின் பார்வையைச் சந்தித்ததும் அப்படியே உறைந்து போய் அமர்ந்து விட்டாள்..

அதுதான் முதன் முதலாக தாமோதரன் நேருக்கு நேராக யாமினியின் பார்வையைச் சந்தித்த முதல்பார்வை..!

அவனது இமையும்.. உதடுகளும் துடிக்க.. யாமினி கண்கலங்க.. அவர்கள் சிலை போல இருந்த போது.. வயலெட் அறைக்குள் வந்து விட்டாள்..

அவள் வந்ததைக் கூட அறியாமல் தாமோதரனும் யாமினியும் விழியோடு விழி கலக்க.. உறைந்து போய்

இருந்த நிலையைக் கண்டவள்.. யாமினியின் தோளில் மூங்கித் தட்டி சுய நினைவுக்கு கொண்டு வந்தாள்..

"வாங்க.. வயலெட்.." யாமினி கம்யூட்டரில் கவனமாக.. தாமோதரன் தன்னிலைக்குத் திரும்பியவனாய் சித்தார்த்தன் எங்கே என்று யோசித்தான்..

"நான் அப்பவே வந்துட்டேன்.. உங்க ரெண்டு பேருக்கும்தான் அது தெரியல.. என்ன..? லவ்வா..?"

கேள்வி கேட்ட வயலெட்டின் மீது கனமான ஃபைல் வந்து விழுந்தது.. அதிர்ச்சியில் நிலை குலைய நின்றவளிடம்..

"கெட்.. லாஸ்ட்.." என்று உறுமினான் தாமோதரன்..

அதுபோன்ற ஆவேச நிலையில் அவனை அதற்கு முன்னால் யாருமே கண்டதில்லையென்று யாமினியிடம் வயலெட் சொன்னாள்..



6

கார்கால மேகத்திலே..
கோடையிடியின் குமுறல் உண்டு..

விருந்தினனுக்காக என்று மலர்க்கொடி கொடுத்தனுப்பிய குவளை நிரம்பிய பாலைச் சுமந்தபடி மேன் மாடத்தின் விருந்தினர் அறைக்கு வந்த மைதிலி.. அறையில் எவரையும் காணோமல் திகைத்து நின்றாள்..

அவன் எங்கே போயிருப்பான் என்று விழிகளால் துழாவியவளுக்கு உப்பரிகையில் அவளுக்கு முதுகு காட்டி நின்றிருந்தவனின் தோற்றம் தென்பட்டது..

‘அங்கே என்ன செய்கிறான்..?’

அறியும் ஆவல் மனதில் குறுகுறுக்க... சப்தம் எழுப்பாமல் அருகில் சென்று பார்த்தாள்.. பார்த்தவளின் விழிகள் விரிய பிரமித்து நின்று விட்டாள்..

அங்கே சித்திரம் வரையும் திரைச்சீலையில் அற்புதமான இயற்கையழகை சித்திரமாக தீட்டியிருந்தான் அவன்..

“இதைத் தாங்களா தீட்டினீர்கள்..?”

வியப்பு நிரம்பிய அவளது குரலில் திரும்பிப் பார்த்தவன்..

“நீதானா..?” என்றான்..

“எங்கள் இல்லத்தில் நான் வராமல் வேறு எவர் வருவார்கள்..?” அவள் அதற்கும் வாதுக்கு வந்தாள்..

“உன் தமையனோ.. மலர்க்கொடியோ.. அவர்களின் குழந்தைகளோ வரலாம் அல்லவா..? இன்னும் பணிபுரியும் பணியாள்களும் இவ்வில்லத்தில் உள்ளனரே..”

“ஓ.. எம் இல்லத்தில் எவரெவர் உள்ளனர் என்று தாம் சொல்லித்தான் நான் அறிந்து கொள்ள வேண்டுமா..? அதை எமக்கு அறிவுறுத்தத்தான் தாம் வருகை தந்துள்ளீரா..?”

"நீ எதற்காக வருகை தந்திருக்கிறாய்..? என்னுடன் வாது புரிய வந்தாயா..?"

இளநகையுடன் அவன் கேட்டபின்னர்தான் கையில் இருந்த பால் குவளையின் நினைவே மைதிலிக்கு வந்தது.. அவனது பார்வையில் தெரிந்த கேலியில் அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது..

'எந்த உரையென்றாலும்.. இறுதி வெற்றி இவனுக்குத்தான் கிட்டுமா..?'

மனதுக்குள் பொருமியபடி அவள் பால் குவளையை நீட்டினாள்.. குறும்புப் பார்வையுடன் அவன் பால் குவளையை வாங்கிக் கொண்ட போது பட்ட அவனது கரங்களின் ஸ்பரிசத்தில் மைதிலி தடுமாறிப் போனாள்.. பூர்விதமான பரபரப்புக் கலந்த படபடப்பு அவளுக்குள் உற்பத்தி ஆனது.. இடுப்பில் பட்டு வேஷ்டியை மட்டும் கட்டி.. வெற்று மார்புடன் அவன் நின்றிருந்த தோற்றம் அவளது கன்னி மனதை சலனப் படுத்தியது..

அவனது பரந்து விரிந்த சிவந்த மார்பில் சொர்ண ஆபரணம் புரண்டு கொண்டிருந்தது.. மைதிலியால் அவனைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.. உருண்டு, திரண்ட புஜங்களுடன் அவளையே பார்த்த வண்ணம் பாலை அருந்திக் கொண்டிருந்தவனின் விசமம் நிரம்பிய பார்வை அவளை ஏதோ செய்தது.. மனதுக்குள் உண்டான கிளர்ச்சியை மறைக்க முடியாமல் அவள் தவித்தாள்.. அவளது கடைக் கண் பார்வையை அவனது நேர்கொண்ட பார்வை சந்தித்த நொடியில் அவள் முகம் சிவந்து விட்டது.

அவனது புருவங்கள் உயர்ந்தன.. வியப்புடன் அவளைப் பார்த்தவன் சிரித்தான்..

"உன்னிடம் துடுக்குடன் நாணமும் நிரம்பி யுள்ளதே.."

அவனது வார்த்தைகளில் மைதிலியின் நாணம் அதிகமானது.. அன்னிய ஆடவரிடம் பேசியறியாதவள் அவனது அருகாமையில் மனம் மயங்கினாள்.. அதை மறைக்க.. ஓவியத்தை உற்றுப் பார்த்து..

"உங்களிடம் ஆணவத்துடன் கலைத் திறமையும் நிரம்பியுள்ளதே.. இதைப்போல்தான்.." என்று கூறினாள்..

"பதிலுக்குப் பதில்..?" அவன் ரசித்து நகைத்தான்..

நகைக்கும் போது அவனது கவர்ச்சி அதிகரித்ததில்.. இந்தக் கள்வன் எங்கிருந்து வந்தான் என்று அவள் தடுமாறினாள்..

அவளது கன்னி மனதை அலைக்கழிக்க என்று வருகை தந்துள்ளானா..?

"தாங்கள் எந்த ஊர்..?" கேட்டு விட்டாள்..

"ஊம்..?" அவன் அதற்கும் அவளை வசீகரிக்கும் வகையில் புருவங்களை உயர்த்தி விட்டு கேலியாக நகைத்தான்..

'என்ன ஒரு ஆணவம்..!'

மைதிலி மயக்கத்தைத் தூக்கிக் கிடப்பில் போட்டு விட்டு அவனை முறைத்துப் பார்த்தாள்..

"ஒருவேளை தமக்கென்று ஊரில்லையோ..?" இடக்காக வினவினாள்..

"ஊம்..? எமக்கு யாதும் ஊரே.. யாவரும் கேளிர்.." என்றான் அவன்..

"ஓஹோ.. ஐயா நாடோடி போல.." அவள் அவனை மேலும் கீழுமாக பார்த்து வைத்தாள்..

அவனைச் சீண்டுவதற்காக அவள் அவனை பார்வையிட்டால்..

"மாலையிடப் போகும் மணாளனைப் பார்ப்பதைப் போல பார்க்கிறாயே.." என்று அவன் அவளைச் சீண்டினான்..

சில தினங்களுக்கு முன்னர் அவன் அந்த இல்லத்திற்கு விருந்தினனாக வருகை தந்த முதல் நாளில் அவளைப் பெண் பார்க்க வந்த மணமகனா என்று அவள் வம்பிழுத்தாளாம்.. இத்துணை தினங்களாக அதை நினைவில் வைத்திருந்து அவன் திருப்பி அளிக்கிறானாம்..

'கெட்டிக்காரன்தான்..'

அவள் இதழ்களைச் சுழித்ததில் அவன் கண்களில் மின்னல் வந்தது.. அந்த மின்னல் இவளைத் தாக்கித் தொலைத்தது..

'விருந்தினனாக வருகை தரும்போதே வசியப் பொடியை மடியில் கட்டிக் கொண்டு வந்து தொலைத்திருக் கிறானே..'

கட்டவிழும் மனதை கட்டுத்தறியில் கட்டுவதற்காக அவள் வெகுவாக பிரயத்தனங்களை மேற்கொள்ள வேண்டியிருந்ததில்..

"நாடோடிக்கு மாலையிட நான் என்ன அறிவிலியா..? எனது தமையன் யார் தெரியுமா..?" என்று சீறிவிட்டாள்..

அவளது சீற்றத்தைப் பற்றி அவன் சிறிதளவு கூட அலட்டிக் கொள்ளவே இல்லை என்பதில் அவளது சீற்றம் அதிகமானது.. அருந்தி முடித்து விட்ட பால் குவளையை மேன் மாடத்தின் சுற்றுச் சுவரில் வைத்தவன்.. தனது கைகளிரண்டையும் மார்போடு சேர்த்துக் கட்டிக் கொண்டு கம்பீரமாக நின்று அவளைப் பார்த்து வைத்தான்..

'தோரணைக்கொன்றும் குறைவில்லை..'

மாற்றி, மாற்றி தோற்றம் காட்டி அவள் மனதை அலையின் மீது துரும்பாக அலைக்கழித்துக் கொண்டிருக்கும் அந்த கட்டழகனை அவள் மனதுக்குள் திட்டித் தீர்த்தாள்..

"உனது தமையனின் பெயர் பார்த்திபன்.. இது எனக்குத் தெரிந்ததுதானே.." நிதானமாகச் சொன்னவனை முறைத்தாள்..

"பார்த்திபன் என்று சொல்லி விட்டால் போதுமா..?"

"வேறு என்ன சொல்ல வேண்டும்..? ஒருவேளை அவரை மலர்க்கொடியின் கணவர் என்று சொல்ல வேண்டுமோ..?"

கேள்வி என்னவோ வினயமாகத்தான் வெளிவந்தது.. கேலி அவனது விழிகளில் இருந்தது.. அது அவளைச் சீண்டிப் பார்த்தது.. அவள் பற்களை நறநறத்தாள்..

"அது மட்டும்தான் தமக்குச் தெரியுமா..?"

"இன்னொன்றும் தெரியுமே.."

"பரவாயில்லை.. எனது தமையனின் மேன்மையை அறிந்து வைத்துள்ளீர்.. அந்த இன்னொன்றைக் கூறுங்கள்.."

"கூறவா..?"

"கூறத்தானே சொன்னேன்..?"

"கூறி விடுவேன்.."

அவன் அச்சுருத்துவதைப் போலக் கூறி அவளது எரிச்சலை அதிகப்படுத்தினான்.. இவனுக்கு பால் குவளையைக் கொண்டு வந்திருக்கவே கூடாது என்று தன்னைத்தானே நொந்து கொண்டாள் மைதிலி..

"கூறித்தான் தொலைங்களேன்.."

"நீ இத்துனை அளவுக்கு கடிந்து கொள்வதால் கூறுகிறேன்.. அவர் கிள்ளிவளவனுக்கும், முல்லைக் கொடிக்கும் தந்தை..!"

சொல்வதையும் சொல்லி விட்டு.. எவ்வாறு என்ற விதத்தில் பெருமையாக பார்த்து வைத்தவனின் பார்வையில் மறைந்திருந்த கேலி கலந்த சீண்டலில் மைதிலி வெகுண்டாள்..

"ஆஹா..! மிகச் சிறந்த கண்டுபிடிப்பு..! எனது தமையன் எனது அண்ணிக்கு கணவர்..! அவரது

பிள்ளைகளுக்குத் தந்தை..! மாபெரும் கண்டு பிடிப்பைத் தான் தாம் கண்டு பிடித்துள்ளீர்கள்.. இதைக் கண்டு பிடித்துக் கூறவா காஞ்சிக்கு வருகை தந்துள்ளீர்கள்..?”

அவளது கேள்வியில் அவன் விழிகளில் ஏதோ வந்து மறைந்து போனது.. பொருள் புரியாத அவனது மர்மப் பார்வைகளுக்கு அவள் பழக்கமாகியிருந்ததால்.. இது வேறா என்று மூச்சை இழுத்து விட்டு தன்னை நிதானப் படுத்திக் கொண்டாள்..

அதற்குள் அவனது முகம் இயல்பு நிலைக்கு திரும்பி விட்டிருந்தது... பழைய கேலி கலந்த சீண்டல் பார்வையுடன்..

“இதற்கு மட்டுமல்ல.. தமது இல்லத்தில் விருந்தினனாக சில காலம் தங்கி இளைப்பாறவே வருகை புரிந்தேன்..” என்றான்..

“தாங்கள் இளைப்பாற எனது இளைப்பாறலை கொள்முதல் செய்து கொண்டுள்ளீர்கள்..” அலுத்துக் கொண்டாள் மைதிலி..

“ஏன்..? தமது இளைப்பாறலுக்கு என்ன நேர்ந்தது..?” அக்கறையுடன் அவன் வினவினான்..

“என்ன நேர்ந்ததா..? தங்களுடன் வாதாடியே அது காணாமல் போய் விடுகிறது..” கழுத்தை ஒரு புறமாக சாய்த்து நொடித்தாள் மைதிலி..

“ஊஹீம்.. இதுபோன்ற பரிட்சார்த்த முயற்சிகளில் இறங்காதே.. கழுத்தில் சுளுக்கு ஏற்பட்டு விடக் கூடும்..

பெண்கள் மென்மையாக கழுத்தைத் திருப்பிப் பேசிப் பழக வேண்டும்.." அவன் அறிவுரை கூறினான்..

"ஆகட்டும் தாத்தா.. அவ்விதமே பேசிப் பழகுகிறேன்.." அவள் தலைசாய்த்து வணக்கத்துடன் சொன்னாள்..

"என்னைப் பார்த்தால் உனக்குத் தாத்தா போலவா உள்ளது..?"

அவன் சிரித்து விட்டான்.. போடா என்று அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.. அவன்தான் சிரித்துத் தொலைக்கும் போது இன்னமும் அழகாக இருந்து தொலைக்கிறானே.. அவன் சிரித்து மயக்குவானாம்.. இவள் அதில் சிக்கித் தவிப்பாளாம்.. எங்கிருந்து இவன் வந்தான்..?

"நான் தாத்தா என்றால் நீ பாட்டி.."

அவன் குரல் காதோரமாக ஒலித்ததில் அவள் திடுக்கிட்டுத் திரும்பினாள்.. திரும்பிய வேகத்தில் அவன் மார்பில் மோதி சரிந்து விழுந்தாள்.. சட்டென்று அவன் குனிந்து அவள் இடையிலே கை கொடுத்துத் தாங்கிக் கொண்டான்.. பற்றுக்கோலை நாடி பூங்கொடி தழுவிக் கொள்வதைப்போல அவனது கழுத்தை அவளது வளைக் கரங்கள் பற்றிக் கொண்டன..

அவனது கரத்தில் அவள் வளைந்திருக்க.. அவன் குனிந்து அவள் முகம் பார்த்தபோது மைதிலி.. தன்னை மறந்து விண்ணில் பறந்தாள்.. அவன் விழிகளோடு விழி கலக்க அவள் உறைந்து நின்ற போது.. அவன் இலகுவாக அவளைத் தூக்கி நிறுத்தி நகைத்தான்..

“பேச்சில்தான் வலிமை போல.. தேகத்தில் வலிமை இல்லை..பஞ்சுப் பொதியைப் போல கனமின்றி லேசாக இருக்கிறாயே.. என்ன உண்ணுவாய்..? ஒரு துளி பால் மட்டும்தானா..? இல்லை அதுவுமின்றி காற்றை சுவாசித்து தண்ணீரை உண்டு வாழ்ந்து வருகிறாயா..?”

“தாம் பெரிய மல்யுத்த மாவீரர்..!”

தந்நினைவுக்குத் திரும்பி விட்ட மைதிலி இதழ்களைச் சுழித்தாள்..

“என்னவோ.. தடுமாறி விழுந்த பெண்ணை இவர் தாங்கிப் பிடித்துக் காத்து விட்டாராம்.. பீற்றிக் கொள்கிறார்.. செல்வீர்களா..! அதை விடுத்து எனது தேகம் இரும்பு.. உனது தேகம் பஞ்சு என்று பறை சாற்றிக் கொண்டுள்ளீர்களே..”

“நல்லது.. இரும்பின் அருகில் பஞ்சு இருந்தால் சேதமில்லை..”

அவன் குறுகுறுத்த பார்வையுடன் கூறிய போது.. அவளது வயிற்றுக்குள் பட்டாம் பூச்சிகள் பறந்தன.. தேகத்தின் தகிப்பில் ஓர் ஜ்வாலையை உணர்ந்தவள்.. மனம் படபடக்க நிலம் பார்த்தாள்.. அவன் சொல்வதில் ஏதோ ஓர் பொருள் பொதிந்திருக்க வேண்டும் என்று அவளது அடிமனது அறிவுறுத்தியதில்..

“சொல்வதைப் புரியும்படி சொல்ல வேண்டும்.. எங்கே..? நாம்தான் எச்சொல்லை உதிர்த்தாலும் அதைப் புதிர்போல உதிர்த்து வைக்கிறோமே..” என்று சொன்னாள்..

"புதிரா..? நானா..?" அவன் அதற்கும் நகைத்தான்..

அவளை ஊன்றிப் பார்த்த அவனது பார்வையில் இது புதிர் அல்லாமல் வேறு என்னவாம் என்று அவள் மனம் சிணுங்கியது..

"பஞ்சும், நெருப்பும் பக்கத்தில் பக்கத்தில் இருக்கக் கூடாது என்று பெரியவர்கள் சொல்வார்கள்.."

அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே பொருள் புரிந்து விட்டதில் அவளது கன்னம் சிவந்து விட்டது..

'இவன் நெருப்பாக இருந்தால் பஞ்சாக இருக்கும் நான் பற்றிக் கொள்வேனாம்.. அடேயப்பா.. இவன் எத்துனை இலகுவாக எல்லா விவரங்களையும் கூறி வைக்கிறான்..'

"நான் இரும்பு என்று தமது திருவாயாலேயே சொல்லி விட்டாயல்லவா..? அதனால்தான் நல்லது என்று கூறினேன்.."

அவனது குறுகுறுத்த பார்வையிலும் குறும்பு நகைப்பிலும் அவளது மனம் சிக்கித் தவித்தது..

"எவருக்கு நல்லதாம்..?"

அவளையுமறியாமல் அவள் எழுப்பி விட்ட வினாவில் அவன் ஆச்சரிய பார்வை பார்த்தான்.. மைதிலி நாவைக் கடித்துக் கொண்டாள்..

'இறைவா..! இது என்ன சோதனை..? இவன் சும்மாவே மனதை வாசித்துத் தொலைப்பானே.. இந்தக் கேள்வி வேறு சேர்ந்து கொண்டால் வேறு வினையே வேண்டாம்.. தாளிதம் பண்ணப் போகிறான்..'

அவள் அஞ்சியபடிதான் ஆனது.. அவளது வார்த்தையைப் பிடித்துக் கொண்டான் அவன்..

“தமக்குத்தான் நல்லது என்று எண்ணினேன்.. அவ்விதம் இல்லையா..? இந்த இரும்பினால் பஞ்சுக்கு எவ்விதமான சேதமும் ஏற்படாது என்பதில் உனக்கு உடன்பாடில்லையா..?”

அவன் கேள்வியில் அவள் திணறிப் போனாள்..

“அப்படியென்று எவர் சொன்னது..? நான் சொன்னேனா..?”

“மலைத்து நின்றால் வேறு எவ்விதம் பொருள் கொள்வது..?”

“அதற்காக இவ்விதம்தான் பொருள் கொள்வீர்களா..?”

“ஆம் பெண்ணே..! இரும்பாக நான் இருப்பதில் தமக்கு விருப்பமில்லை போலும்.. நெருப்பாக மாறி..”

அவன் முடிக்காமல் விட்ட வாக்கியத்தில் பஞ்சாக அவள் மனது பற்றிக் கொண்டது..

“மாறி...?”

உடல் நடுங்க அவள் வினவியதற்கு அவன் இமை சிமிட்டி நகைத்தான்..

“நெருப்பாக மாறி.. ஆற்றங்கரையில் நீராடப் போகிறேன்.. ஹா.. ஹா..”

அவனது நகைப்பில் அவளது சுவாசம் சீரானாலும்.. ஏதோ ஓர்விதமான ஏமாற்றம் அவள் மனதில் பரவிப் படர்ந்ததில் அவள் நடுக்கம் கொண்டாள்..

"என்ன.. எனது பதில் சரியானதுதானா..?" குறும்பாக அவன் வினவி வைத்தான்..

"எனது தமையனின் மேன்மை அறியாமல் வாயாடுகிறீர்கள்.."

மனதின் ஏமாற்றத்தை மறைக்க அவள் கோபம் கொண்டாள்..

"உனது தமையனின் மேன்மையைப் பற்றித்தான் வரிசைக் கிரமமாக எடுத்துச் சொல்லி விட்டேனே.." என்றான் அவன்..

"அத்துனை மேன்மைகளையும் கூறியவர் முக்கியமான மேன்மையைச் சொல்ல மறந்து விட்டீர்களே.."

"என்ன அது.."

"எனது தமையனும், அண்ணியும் சிற்றரச பரம்பரையில் பிறந்தவர்கள்.. அரச பாரம்பர்யத்தைச் சேர்ந்தவர்கள்.." மைதிலி படபடத்தாள்..

"அப்படியா..?"

நிதானமாகக் கேட்டவனின் ஊடுறிவிய பார்வை.. எதையோ அவளுக்கு உணர்த்த முயன்றதில் எது.. அது.. என்று தெரியாமல் அவள் தடுமாறி நின்றாள்..

"உன் தமையன் அரச பாரம்பர்யத்தைச் சேர்ந்தவர் என்றால் நீ யார்..? நீயும் அதே வம்சப் பெருமையில் பிறந்து வந்தவள்தானே..!"

'இவன் என்ன சொல்ல வருகிறான்..' மைதிலிக்குப் புரியவில்லை..

அவள் அரச வம்சத்தைச் சேர்ந்தவள்.. அவன் சாமானிய நாடோடி என்பதைச் சுட்டிக் காட்டுகிறானா..?

மைதிலிக்கு அந்த அரச பாரம்பர்யப் பெருமை உவப்பானதாக இருக்கவில்லை.. அவனை மண்ணாக்கி.. அவள் விண்ணாக உயர்ந்து நிற்பதில் அவளுக்கு விருப்பமில்லை.. அது ஏன் என்றும் அவளுக்குப் புரியவில்லை..

அவனைக் கண்ட நொடி முதல் இந்த நொடி வரைக்கும் அவளைச் சீண்டிக் கொண்டிருப்பதைத் தலையாய கடமையாக கொண்டிருந்தவனை மட்டம் தட்ட ஒரு வாய்ப்புக் கிடைத்து விட்டது என்று அவளால் மகிழ்ந்து விட முடியவில்லை..

"எனக்கொன்றும் அரசப் பாரம்பர்யத்தில் பிறந்தோம் என்ற கர்வமெல்லாம் கிடையாது.." அவள் அவரசமாகச் சொன்னாள்..

"ஊஹீம்..?" அவன் அமைதியாக அவனுடைய அதரங்களை மடித்து புருவங்களை உயர்த்தியதன் பொருள் என்னவாக இருக்கக்கூடும் என்று அவளுக்குப் புரியவில்லை..

யார் எத்துனை உயரத்தில் இருந்தால் என்ன.. தான் ஒரு நாடோடிதானே என்று எண்ணுகிறானோ..?

மைதிலியின் மனதை துயரம் பிசைந்தது.. எதற்காக இந்தத் தம்பட்டத்தை அடித்தோம் என்று தன்னைத் தானே கடிந்து கொண்டாள்..

"வருத்தம் கொள்கிறீர்களா..?" குற்ற உணர்வுடன் கேட்டாள்..

அவன் ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தான்.. அவளது முகவாடலில் அவன் நெற்றியில் கோடுகள் வந்தன..

"என்ன ஆனது..? நான் எதற்காக வருத்தம் கொள்ளப் போகிறேன்..?" விசாரித்தான்..

"இல்லை.." மைதிலி இழுத்தாள்..

"என்ன இல்லை..?" அவன் தூண்டினான்..

"நான் அரச பாரம்பர்யத்தில் பிறந்தவள்.."

"அதற்கு..?"

"தாங்கள் ஒரு சாமானிய வழிப்போக்கர் என்பதில் வருத்தம் கொண்டீரோ..?"

அவனது முகம் எதற்காக மாறுகிறது..? அவன் விழிகளில் தெரிவது எது..? எதற்காக அவன் விழுந்து விழுந்து நகைக்கிறான் என்று ஓர் மண்துகளும் மைதிலிக்குத் தெரியவில்லை..

"நீ உள்ளாயே.."

ஒரு வகையாக நகைத்து முடித்தவன் சொன்னதும்..

"அதுதான் உள்ளேனே.." என்று கடுப்புடன் கூறினாள் மைதிலி..

இப்படியா ஒருவன் கருணையைக் கண்டு எள்ளி நகையாடுவான்..?

'நாடோடியாய் இருக்கும் போதே இவனுக்கு இத்துனை கர்வம் உள்ளதே.. இவன் மட்டும் நாடாளும் மன்னனாக இருந்து விட்டால் கரம் கொண்டு பிடிக்க முடியாது போல உள்ளதே..'

அவளின் ஒரு மார்க்கமான பார்வையில் அவன் புருவங்களை உயர்த்தினான்.. இவன் ஒருவன் என்ற எரிச்சலுடன் அவள் சித்திரத்தைப் பார்த்தாள்.. அவனைப் பார்த்தால்தான் அவன் நகைத்து.. மின்னலுடன் பார்த்து.. புருவங்களை உயர்த்தி என்று பல்வேறு விதமாக வசியப்பொடியினை அவள்மீது தூவி வசியப் படுத்தி வைக்கிறானே..

சித்திரத்தின் அழகில் மீண்டும் பிரமித்தவள்..

"என்னையும் சித்திரமாக தீட்டுவீர்களா..?" என்று ஆவலுடன் கேட்டாள்...

அதுவரை அவனுடன் சரிக்குச் சரியாக வாதிட்டுக் கொண்டிருந்த அந்த துடுக்குத்தனம் நிரம்பிய பெண்ணிடம் தென்பட்ட குழந்தைத்தனமான கோரிக்கையில் அவன் மென் முறுவலுடன் தலையசைத்தான்..

மறுதினத்தில் அவளது உருவத்தை சித்திரமாகத் தீட்டிய திரைச் சீலையை அவன் பரிசளித்தபோது அவளுக்குப் பேச்சே வரவில்லை.. சித்திரத்தைப் பார்த்தாள்.. அழகான அச்சித்திரத்தில் அதீதமான அழகோடு அவள் இருந்ததில் அவன் மீதான ஈர்ப்பு அவளுக்குள் தோன்றி விட்டது..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'

6

காலங்களைக் கடந்தும் வாழ்வது..
காதல் மட்டுமல்ல.. பாசமும்தான்..

"பூகம்பமே வந்தாலும் அலட்டிக்க மாட்டார்... அவர் மனசில என்ன ஓடுதுன்னு அவ்வளவு சுலபத்தில யாராலும் கண்டு பிடிச்சுர முடியாது.. உடம்பெல்லாம் கண்ணிருக்கும்.. வாசல்ல அவர் தலையைக் கண்டதுமே போனை வைச்சுருவேன்.. மனுசன் என்னைக் கிராஸ் பண்றப்ப நான் யாரோட பேசினேன்.. எவ்வளவு நேரம் பேசினேன்ங்கிற புள்ளி விவரத்த பிட்டுப்பிட்டு வைப்பார்.. என்ன நடந்தாலும் கல்லுளிமங்கன் போல ஒரு பார்வையிலேயே எல்லாத்தையும் ஆட்டி வைக்கிற மனுசனுக்கு இம்புட்டுக் கோபம் எங்கிருந்து வந்துச்சு..?"

வயலெட்டின் ஆச்சரியத்தில் உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாமல் இருந்தாள் யாமினி.. அவளது உள்ளம் கேட்டது..

'ஏன் வந்தது..?'

யாமினி யாரோ எவரோ.. தாமோதரனுக்கு எந்தவிதச் சம்பந்தமுமில்லாதவள்.. அவனுடைய நண்பனின் மனநிலையைக் கலைக்க வந்த காரிகையென்று தாமோதரனால் வெறுக்கப் படுபவள்.. அவளையும்,

தாமோதரனையும் இணைத்து வயலெட் பேசினால் அவனுக்கு முதலில் வர வேண்டியது..

'சீச்சீ..' என்ற வெறுப்பு அல்லவா..?

அதை விட்டு தார்மீகக் கோபம் ஏன் வந்தது..

"யாரோட யாரை இணை சேர்க்கிறதுன்னு விவஸ்தையே இல்லையா..? டாமிட்.."

அவன் போட்ட கூச்சலில் வயலெட் ஆடிப் போய் விட்டாள்..

"இந்தக் கம்பெனியில நான் ஜாயின் பண்ணின நாள் முதலா ஜி.எம். கிட்ட இருந்து திட்ட மட்டும்தான் மூட்டை, மூட்டையா.. வாங்கிக் கட்டிக்கிட்டு இருக்கேன்.. ஒரு நாள் கூடப் பாராட்ட வாங்கிக் கட்டிக்கிட்டதில்ல.. ஆனாலும் பாரு யாமினி.. அவர் திட்டறதைக்கூடக் கூலா.. வாழைப் பழத்தில ஊசியை ஏத்தறதைப் போல கொடுத்துக் கட்டற ஆளு.. இவ்வளவு கோப்பபட்டு நான் பார்த்ததில்ல.."

அப்படியா..? அந்த அளவுக்கு அதிர்வைக் காட்டாமல் எதிரியைத் தலையால் தண்ணீர் குடிக்க வைக்கும் வல்லவன்.. அன்று தன்னிலை மறந்து கத்தினானா..?

"ஆபிஸே வேடிக்கை பார்க்குது.. எனக்கில்ல ஷேமா போயிருச்சு..? நான் யதார்த்தமாத்தானே கேட்டேன்..?"

யாமினிக்கு எரிச்சல் வந்தது.. வயலெட்டின் யதார்த்தத்தில் அவள் கோபம் கொண்டாள்.. வயலெட் கேட்ட கேள்வியை இன்னமும் நியாயப் படுத்துவதை தாமோதனின் காதுகளில் போட்டுக் கொடுத்து

புண்ணியத்தைக் கட்டிக் கொள்ளலாமா என்று கூட அவளுக்கு தோன்றி விட்டது.. அதை வயலெட்டிடம் சொன்ன போது..

"அடிப்பாவி..!" என்று அலறினாள்..

"பேசறதையெல்லாம் நீங்கபேசிட்டு என்னைப் பாவிம்பீங்களா..?"

"ஹேய்.. இதெல்லாம் யூசுவல் டயலாக்குப்பா.. இல்லேன்னா இல்லேன்னு சொல்லிட்டுப் போங்க.. அதுக்காக இடைவிடாம வீடு கட்டி வெளுத்து வாங்கு வீங்களா..?"

"டயலாக்கே தப்புங்கிறேன்.. அதில யூசுவல் டயலாக்குன்னு நீங்க சப்பைக்கட்டு கட்டறிங்களா..? அதெப்படி அவ்வளவு பெரிய வார்த்தையை பட்டுன்னு சொல்லுவீங்க..?"

"என்மேல தப்பில்ல யாமினி.. நீங்க ரெண்டு பேரும் உத்துப் பார்த்துக்கிட்டு அசையாம நின்னா நான் என்னன்னு சொல்றது..?"

"அதுக்காக எதை வேணும்னாலும் சொல்லிரு வீங்களா..? ஏங்க.. நீங்க அண்ணன், தம்பிகூடப்பிறந்த வங்கதானே.."

இந்த வார்த்தையை ஏன் கேட்டாள்.. எதற்காகக் கேட்டாள் என்று யாமினிக்கே தெரியவில்லை.. எப்படி அந்தக் கேள்வி அவள் வாயில் வந்தது என்றும் அவளுக்குத் தெரியவில்லை..

அவள் கேட்ட கேள்வியில் வயலெட் அயர்ந்து போனாள்..

அதுவரை அவள் அப்படியொரு கேள்வியைக் கேள்விப் பட்டதே இல்லை.. அக்கா, தங்கையுடன் பிறந்திருக்கிறீர்களா என்ற கேள்வியைக் கேட்டுப் பழகியிருந்தவளுக்கு இதுபோன்ற கேள்வி புதுமையாக இருந்தது..

"என்னப்பா.. இப்படிக் கேக்கறிங்க..?"

"வேற எப்படிக் கேட்கச் சொல்கிறீங்க..? உங்க அண்ணன், தம்பிகூட உங்களை இணைச்சுப் பேசினா உங்களுக்குக் கோபம் வருமா..? வராதா...?"

"கட்டாயம் வரும்.."

"அந்தக் கோபம்தான் இங்கேயும் வந்திருக்கு.."

"பாருடா.. அப்ப ஜி.எம் அண்ணன்.. நீங்க அவருக்குத் தங்கையா..? சொ..ல்..ல..வே.. இல்ல.."

வயலெட் இழுத்து ராகம் போட்டதில் இவளுக்கு தாமோதரன் நடத்திய மண்டகப்படி குறைவு என்று பல்லைக் கடித்தாள் யாமினி...

"இப்படியும் ஒரு வியு இருக்கும்ன்னு நான் நினைச்சே பாக்கல.. ஆனா யாமினி.. அண்ணன் தங்கை பாசத்தைப் பத்தி உங்களுக்குத் தெரியும்.. அது ஓகே.. ஏன்னா.. உங்களுக்கு அண்ணன் இருக்கார்.. தாமோதரனுக்கு எப்படித் தெரியும்..? அவருக்குத்தான் அக்கா.. தங்கை இல்லையே.. வீட்டுக்கு ஒற்றை பிள்ளையாச்சே.." வயலெட் விடவேயில்லை..



7

சித்திரத்தை வரையச் சொன்னால்.. முத்திரையை பதித்து விட்டான்..

மைதிலி சினத்துடன் இருந்தாள்.. அண்டைய இல்லத்தின் அன்னபூரணியின் பார்வையில் அவள் பட்டு விட்டதில்.. அன்னபூரணி..

"ஏ பெண்ணே..! இங்கே வா.." என்று அழைத்தாள்..

'பெண்ணா..? அதுவும் 'ஏ பெண்ணே'வா..? இப்படித்தான் பக்கத்து இல்லத்தின் பெண்ணை அழைப்பார்களா..? எனது தாய், தந்தை எனக்கென்று பெயரேதும் சூட்டவில்லையா..?'

பொங்கி வந்த பெருஞ்சினத்தில்..

"என்ன அம்மையாரே..!" என்று இவளும் கேட்டு விட்டாள்..

"அம்மையாரா..?" அன்னபூரணியின் முகம் இஞ்சி தின்ற குரங்கின் முகத்தைப் போல ஆகிவிட்டது..

"என்னடியம்மா இது..? நீ பிறந்தவுடன் மகவாக கையில் ஏந்தி வந்து என்னிடம்தான் கொடுத்தார்கள்.."

கேட்டுக் கேட்டுப் புளித்து விட்ட கதையை அன்னபூரணி சொல்ல ஆரம்பித்த போது..

"அறியாமல் கொடுத்து விட்டார்கள்.. என்னிடம் ஆலோசனை கேட்டிருந்தால் வேண்டாமென்று மறுத் திருப்பேன்.." என்றாள் மைதிலி..

அவளுக்கு அருகில் நின்ற கிள்ளி வளவனும், முல்லைக் கொடியும் அத்தையின் பேச்சை ரசித்து வாய் பொத்தி நகைத்தார்கள்..

“நீதான் சொல்பேச்சுக் கேட்காமல் சண்டித்தனம் புரிகிறாயென்றால்.. இந்தக் குழந்தைகளையும் உன் போல ஆக்கப் பார்க்கிறாயா..?”

அன்னபூரணியின் அதட்டலில் மைதிலிக்கு பொங்கியிருந்த பெருஞ்சினம் தலைக்கு ஏறி விட்டது..

அவளது தமையனின் குழந்தைகளுக்கும் அவளுக்கும் இடையில் அகழி பறிக்கப் பார்க்கிறாளா இந்த அன்னபூரணி..?

“நான் பிறந்தவுடன் கைகளில் வாங்கிய தாங்கள் எனக்குத் தாலாட்டுப் பாடி வளர்த்தீர்களோ இல்லையோ.. நான் இந்தக் குழந்தைகள் பிறந்தது முதல் கைகளில் ஏந்தித் தாலாட்டுப் பாடி வளர்த்திருக்கிறேன்.. அத்தையைப் போலத்தான் தமையனின் பிள்ளைகளும் இருப்பார்கள்.. உங்களால் ஆனதைப் பார்த்துக் கொள்ளுங்கள்..”

மைதிலி விரல் சொடுக்கி அறை கூவலை விடுத்துக் கொண்டிருந்தபோது.. சோதனையாக மலர்க்கொடி அங்கு வந்து விட்டாள்..

‘போச்சுடா..’ மைதிலி மானசீகமாக தலையில் கை வைக்க.. கிள்ளி வளவனும், முல்லைக் கொடியும்.. மைதிலி அன்னபூரணியின் முற்றுகையில் அகப்பட்டுக் கொண்டாள் என்று சைகை செய்தார்கள்..

அன்னபூரணியின் விழிகளில் வெற்றிப் பெருமிதம் வந்தது..

"கேட்டாயா மலர்க்கொடி.."

அவள் ஆரம்பித்தவுடன் அங்கிருந்து நகர முற்பட்டாள் மைதிலி..

"பொறு பெண்ணே..! எதற்கு இத்துணை அவசரம்..? உன்னை வளர்த்து வைத்திருக்கும் லட்சணத்தைப் பற்றி உனது அண்ணி அறிந்து கொள்ள வேண்டாமா..? உனது அறை கூவலைப் பற்றி அவளிடமே சொல்கிறேன்.. நீயும் கேட்டுக்கொள்.." அன்னபூரணி அவளைத் தடுத்து நிறுத்தி விட்டாள்..

"என்ன ஆனது அம்மா..? எதற்காக எங்கள் மைதிலியை மிரட்டுவதைப் போல பேசுகிறீர்கள்.." வளர்த்த தாயின் கோபத்தோடு கேட்டாள் மலர்க்கொடி..

"இவளை நான் மிரட்டுகிறேனா..? இவள் மற்றவர்களை மிரட்டினால் போதாதா..? உன்னிடம் கோடி முறை கூறிவிட்டேன் மலர்க்கொடி.. தாயில்லாத பெண்ணைக் கண்டித்து வளர்க்க வேண்டும் என்று.. எங்கே..? எனது குரல் உன் காதுகளில் விழுந்தால்தானே.."

"இப்போது என்னவாகி விட்டது..?"

"இன்னும் என்ன ஆக வேண்டும் என்று எதிர் பார்க்கிறாய்..? இதற்கு மேல் ஆவதற்கு ஏதும் உள்ளதா என்ன..?"

"நடந்ததைக் கூறுங்களேன்.."

“உனது நாத்தனார் எனைப் பார்த்து விரல் சொடுக்கி.. உன்னால் ஆனதைப் பார்த்துக் கொள் என்று அறைகூவல் விடுக்கிறாள்..”

இதைக் கேட்ட மலர்க்கொடி... ஏன் அவ்வாறு சொன்னாய் என்று மைதிலியை பிடிபிடியென்று பிடிப்பாள் என்ற எதிர்பார்ப்போடு அன்னபூரணி காத்திருந்தாள்.. அவளோ..

“எதற்காக அப்படிச் சொன்னாள்..?” என்று அன்னபூரணியிடமே கேட்டு வைத்தாள்..

“அப்படிக் கேளுங்கள் அண்ணி..” ஊடே புகுந்த மைதிலி..

“அத்தையைப் போலத்தான் அவளுடைய தமையனின் பிள்ளைகளும் இருப்பார்கள்.. உங்களால் ஆனதைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்றேன்.. எனக்கும், தங்களின் பிள்ளைகளுக்கும் இடையே வேறுபாடு வரலாமா அண்ணி..?” மைதிலி உருக்கமாக வினவியதில்..

“ஏன் அம்மா அவ்வாறு கூறினீர்கள்..?” என்று அன்னபூரணியிடம் சண்டைக்கு கிளம்பி விட்டாள் மலர்க்கொடி..

“அப்படியல்ல மலர்கொடி.. உனது நாத்தனாரைப் போலவே உனது பிள்ளைகளும் வளரக்கூடாது என்று சொன்னேன்.. அது தவறா..?”

“தவறுதான்.. திருமண வயதில் இருக்கும் பெண்ணைப் பற்றி இப்படியா பேசுவது..? என் பிள்ளை

களுக்கும், நாத்தனாருக்கும் இடையில் வேறுபாடு பார்த்து நான் வளர்க்கவில்லை.. மைதிலி எனது மூத்த குழந்தை.."

"அப்படியே வைத்துக்கொள்.. சீராட்டு.. எவர் தடுத்தது..? உனது செல்லப் பெண் என்னை அம்மையாரே என்று அழைக்கிறாள்.. அதற்கொரு நியாயம் சொல்லி விட்டு உனது இல்லத்தைப் பார்த்துச் செல்.. எவர் வேண்டாமென்று சொன்னது..?"

"மைதிலி.."

"அண்ணி.."

"பெரியவர்களை இப்படியா கேலி செய்வதைப் போல நையாண்டியாக அழைத்து வைப்பது..? இது தவறில்லையா..? இதுதான் உன்னை வளர்த்த எனக்கு நீ பெற்றுத் தரும் நற்பெயரா..?"

"இல்லையண்ணி.. இவர்கள்தான் என்னைப் பார்த்து 'ஏ பெண்ணே..!' என்று அழைத்தார்கள்.. அதனால்தான் நானும் பதிலுக்கு அம்மையாரே என்று அழைத்தேன்.."

மைதிலியின் விளக்கத்தில் பல்லைக் கடித்தாள் மலர்க்கொடி.. நாத்தனாரின் துடுக்குத்தனம் இழுத்து விடும் இம்சையைச் சமாளிப்பது அவளுக்கு பெரும்பாடாக இருந்தது.. இருப்பினும் அன்னபூரணியின் முன்னிலையில் நாத்தனாரை விட்டுக் கொடுக்காமல்..

"கேட்டீர்களா..?" என்று அன்னபூரணியிடம் கேட்டாள்..

"நான் கேட்டு என்ன பண்ண..? உன் நாத்தனாரை நீதான் கேட்க வேண்டும்.." என்றாள் அன்னபூரணி..

இப்படியாகப்பட்ட அறிவுக்கொழுந்திடம் மல்லுக்கு நிற்க வைக்கும் நாத்தனாரை என்ன செய்தால் தேவலாம் என்ற கொலை வெறிக்கு ஆளான மலர்க்கொடி.. தலையைப் பிடித்தபடி..

"நீங்கள் வயதில் பெரியவர்கள்.." என்றாள்..

"இதைஉன் நாத்தனாருக்கு அறிவுறுத்து.." என்றாள் அன்னபூரணி..

"முதலில் உங்களுக்கு அறிவுறுத்துகிறேன்.. எதை பிறருக்கு கொடுக்கிறோமோ.. அதுவேதான் நமக்குக் கிடைக்கும்.. இதை அறிந்தவர்தானே நீங்கள்..? எங்கள் வீட்டுப் பெண்ணிற்கு 'மைதிலி' என்ற அழகான பெயர் இருக்கிறது.. அதைச் சொல்லி அழைத்திருந்தால் அவளும் 'என்ன அம்மா..?' என்று பதிலுக்குக் கேட்டிருப்பாள்.. அதை விடுத்து.. 'ஏ.. பெண்ணே..' என்று அழைத்தால்.. அவளும் 'என்ன அம்மையாரே..' என்றுதானே கேட்பாள்..?" நறுக்கென்று கேட்டு வைத்தாள் மலர்க்கொடி..

அன்னபூரணிக்கு என்ன சொல்வதென்றே தெரிய வில்லை.. மைதிலி சிறுகுழந்தையாக இருந்த போது.. அவளைப் பற்றிய புகார்களைக் கேட்டுக் கொண்டாள் மலர்க்கொடி.. புகார் சொன்னவர்களின் முன்னிலையில் நாத்தனாரைக் கண்டிக்கவும் செய்வாள்..

அதுவே.. மைதிலி வளர்ந்து.. பருவமடைந்து.. திருமணவயது மங்கையாக நின்றபோது.. அவளைப் பற்றி எவர் புகார் சொன்னாலும் அவர்களோடு சண்டைக்கு கிளம்பி விடுவதை வழக்கமாக வைத்திருந்தாள் மலர்க்

கொடி.. அவர்கள் அகன்றவுடன் மைதிலியை தாளிதம் பண்ணிக் காய்ச்சி எடுத்து விடுவாள் என்பது வேறு விவரம்.. ஆனால் பருவ வயதில் இருக்கும் நாத்தனாருக்கு எதிரான எந்த வார்த்தையையும் மலர்க்கொடி அனுமதிக்கவே மாட்டாள்..

"இல்லத்தில் ஏதோ கருகிய வாசனை வருகிறது.."

அன்னபூரணி தப்பித்துப் பிழைத்து இல்லத்திற்குள் ஓடி விட்டாள்.. மலர்க்கொடி கடுமையுடன் நாத்தனாரைப் பார்த்தாள்.. மாட்டிக் கொண்ட மைதிலி தப்பிக்க மார்க்கம் இல்லாமல் விழித்தாள்..

"இப்போது மகிழ்ச்சிதானே..?"

"இல்லையண்ணி.. அந்த அம்மாதான்.."

"பேசாதே.. வயதில் பெரியவர்களிடம் இப்படியா வாதுக்கு நிற்பது..? மலர்க்கொடி பெண்ணை வளர்த்து வைத்திருக்கும் லட்சணத்தைப் பார் என்று இந்த ஊர் சொல்ல வேண்டும்.. அதுதானே உனக்கு..?"

"என்ன அண்ணி இவ்வாறு பேசுகிறீர்கள்..? அந்த அன்னபூரணியை அவர்களின் அம்மா வளர்த்திருக்கும் லட்சணத்தை விடக் குறைவாகவா நீங்கள் என்னை வளர்த்துள்ளீர்கள்..?"

"இந்த வாய்தான் என்னை வருத்தம் கொள்ள வைக்கிறது..? அன்னபூரணியும் நீயும் ஒன்றா..? அது போல்தான் உன்னை நான் வளர்த்திருக்கிறேனா..?"

"அண்ணி.."

"என் முன்னே நிற்காமல் சென்றுவிடு.. வாய் வலிக்கப் புத்திமதிகளைச் சொல்லித்தான் வளர்த்து வருகிறேன்.. நீ கேட்டுக் கொள்வதாகவே இல்லையென்றால் நான் வன்பாடு பட்டு உன்னை வளர்த்து வருவதற்கு பொருளே இல்லையென்றல்லவா ஆகிறது..?"

மலர்க்கொடியின் கோபத்தில் மைதிலி.. நந்தவனத்தின் பக்கமாக சென்று விட்டாள்.. மனம் முழுவதும் அன்னபூரணி மூட்டி விட்ட தீயைப் பற்றியே கோபமாக இருந்தது.. அந்தக் கோபத்துடன் நந்தவனத்துக்குள் சென்றவளின் காதில் விழுந்தது.. வீணையின் இன்னிசை..

'யார் வீணையை மீட்டுவது..?'

நாதம் வந்த திசையில் அவள் கால்கள் சென்றன.. நந்தவனத்தின் மையப்பகுதியில் இருந்த குளக்கரையின் மேடையில் அவன் அமர்ந்திருந்தான்.. அவன் மடியிலிருந்த வீணையை மெலிதாக மீட்டிக் கொண்டிருந்தான்.. அதில் எழுந்த இசையில் கவரப்பட்டாள் மைதிலி..

'இவன் வீணை மீட்டுவதிலும் வல்லுனனா..?'

கை தேர்ந்த கலைஞன் ஒருவன் அவள் இல்லத்தில் விருந்தினனாக உள்ளான் என்பதில் அவளுக்குள் பிரமிப்பு கலந்த ஆனந்தம் பரவியது.. கண்களை மூடி இசையென்னும் இன்பச் சாகரத்தில் மூழ்கியிருந்தவனின் முகத்தில் பிரதிபலித்த உணர்வுக் கலவைகளைக் கண்ணுற்றவளுக்கு அவன் மீதான ஆர்வம் அதிகரித்தது.. சந்தடி செய்யாமல் அவனுக்கு எதிரே சென்று அமர்ந்தாள்..

கண்மூடி அந்த தெய்வீக கானத்தில் நனைந்தாள்.. நாழிகை நகர்ந்ததை உணராமல் அவள் இசையென்னும் இன்ப வெள்ளத்தில் நனைந்திருந்த போது இசை நின்றது.. அவள் செவியருகே..

"என்ன ஆனது..? நீ ஓரிடத்தில் அடங்கி அமரும் பெண்ணில்லையே.." என்ற குரல் கேட்டது..

உலுக்கி விட்டதைப் போல விழித்தவளின் முகத்திற்கு வெகு அருகாமையில் அவன் முகம் இருந்தது.. மைதிலியின் கண்களுக்குள் உற்றுப் பார்த்த அவன் கண்களின் காந்த சக்தியிலிருந்து விடுபட முடியாமல் அவள் திணறினாள்..

அவனது பார்வையின் ஈர்ப்புச் சக்தியில் கரைந்து அவனுள் கலந்து விட்டதைப் போன்ற பிரமை அவளுக்கு உண்டானது.. அவனது முறுக்கிய மீசையின் ரோமங்கள் அவளது முகத்தில் உராய்ந்து விடுமோ என்று அஞ்சினாலும் விலக மனமில்லாமல் அப்படியே.. செதுக்கி வைத்த சிலையைப் போல அசையாமல் அமர்ந்து விட்டாள்..

அவளது விழிகளின் தீட்சண்யத்தில் அவன் நெற்றியில் மெலிதான கோடுகள் உருவாகின.. புருவங்கள் சுருங்க விலகி அமர்ந்தவன்..

"நீ கூட இசையை ரசிப்பாயா..?" என்று பேச்சை மாற்றி அவளது பரவச நிலையைக் கலைத்தான்..

"அது என்ன 'நீ கூட..' என்பது..? ஏன்.. நான் இசையை ரசிக்க மாட்டேனா..? இல்லை.. இசையை

நான் ரசிக்கக் கூடாதா..?" மைதிலி ரோசத்துடன் வாதுக்கு கிளம்பினாள்..

"இது.." அவன் சிரித்தான்..

"இதுதான் நானறிந்த மைதிலி.. இதை விடுத்து நீ மோன நிலையில் அமர்ந்தால் எவரையோ பார்ப்பதைப் போல உள்ளது.."

"எனக்கும் அவ்வாறுதான்.." அவள் அறிவித்தாள்..

"எவ்வாறுதான்..?" அவன் தூண்டினான்..

"மட்டம் தட்டிப் பேசுவதை விடுத்து.. இசையென்னும் இன்ப சாகரத்தில் சஞ்சரிப்பதைப் போல விழி மூடி வீணையை நீங்கள் மீட்டும்போது எவரையோ பார்ப்பதைப் போல இருந்தது.."

"எவரைப் பார்ப்பதைப் போல இருந்ததாம்..?"

"என்னைப் பார்க்கும் போது எவரையோ பார்ப்பதைப் போல உங்களுக்கு இருந்ததல்லவா.. அவரைப் பார்ப்பதைப் போலவே எனக்கும் இருந்தது.."

"ஹா.. ஹா.."

"போதும்.."

"எதைப் போதுமென்று மறுக்கிறாய்..? எனது இசையையா..?"

'அதைப் போதுமென்று எவரும் சொல்வார்களா..?'

கடந்த மணித்துளிகளின் அற்புதமான நினைவலைகளில் மூழ்கிய மைதிலி நினைத்துக் கொண்டாள்.. அவனை

யார் இத்துனை விரைவில் வீணை மீட்டுவதை நிறுத்தச் சொன்னது என்ற கோபமும் அவள் மனதில் வந்தது..

“அதைத்தான் ஏறக்கட்டி விட்டு மேடையை விட்டு இறங்கி வந்து விட்டீர்களே.. நான் தமது நகைப்பைச் சொன்னேன்..”

மைதிலியின் குரலில் தொனித்த ஏமாற்றத்தில் அவன் முகம் கனிந்தது.. குறும்புத்தனம் நிரம்பிய அந்தப் பெண்ணுக்குள் இசையையும், சித்திரத்தையும் ரசிக்கும் மனம் இருப்பதை எண்ணி அவன் வியந்தான்..

ஒவ்வொரு கோணத்தில் ஒவ்வொரு விதமாக வெளிப்பட்டு பரிமளித்தாள் மைதிலி.. அவள் வெளிப் படுத்திய பரிணாமங்களின் ஆழத்தில் அவள் சாதாரணப் பெண்ணல்ல என்று அவனுக்குத் தோன்றியது..

‘இவள் யார்..?’

அவன் மனது அவளை காவியக் கதாநாயகிகளுடன் இணை கூட்டி சிந்தித்து அலசி ஆராய முற்பட்டது..

அனைத்திலும் மேலாக அவளைக் கண்டவுடன் கவர்ந்த அவளது துடுக்குத்தனத்தை ரசித்தவன்.. அவளுடன் வாயாடக் கிடைத்த அந்த இனிய பொழுதை நழுவவிட மனமில்லாமல்..

“எமது நகைப்புக்கு என்னவாம்..?” என்று உரையாடலைத் தொடர வைத்தான்..

“கர்ண கடூரமான நகைப்பு..! இப்படியா நந்தவனத்து மலர்களின் தேனருந்த வருகை தரும் பட்டாம்பூச்சிகளை பயமுறுத்தி விரட்டியடிப்பது..?”

"ஹா.. ஹா.."

"தாம் ஒரு முடிவோடுதான் உள்ளீர்கள்.."

"என்ன முடிவு..?"

"எங்கள் இல்லத்தின் நந்தவனத்தை பட்டாம் பூச்சிகளற்றதாக மாற்றிக் காட்டும் முடிவுதான்.. வேறு என்ன..?"

"ஹா.. ஹா.."

"மறுபடியும் நகைப்பா..?"

"என்ன செய்வது பெண்ணே..! ஆண்களின் குரல் அவர்களின் தோற்றத்தைப் போலவே கரடு, முரடாகத்தான் இருக்கும்.. பெண்களின் குரல் அவர்களின் தோற்றத்தைப் போல மென்மையாக.. சோழிகளை அள்ளி இறைத்ததைப் போல இனிமை கொஞ்ச வெளிப்படும்.. எங்களது நகைப்பில் வெள்ளிக் காசுகளை அள்ளி இறைக்கும் கல..கல.. ஓசையை எதிர்பார்த்தால் எப்படி..? இது இடியோசை பெண்ணே.."

வார்த்தைக்கு வார்த்தை அவன் 'பெண்ணே..!' என்று அவளை அழைத்தான்.. எப்படி என்னைப் பெயர் சொல்லி அழைக்காமல் பெண்ணே என்று அழைக்கலாம் என்று அன்னபூரணியிடம் சண்டைக்குக் கிளம்பியதைப் போல அவனுடன் சண்டையிட ஏன் தோன்றவில்லை என்ற வியப்பும்.. அதைக் குறித்த பயமும் அவள் மனதில் எழுந்தது.. அந்த பயத்தில்..

"இப்போதுதான் இது குறித்த யுத்தம் முடிந்து நந்தவனத்தில் இளைப்பாற வந்திருக்கிறேன்.. மறுபடியும்

என்னைப் போர் முரசு கொட்ட வைத்து விடாதீர்கள்..” என்று அவனை எச்சரிக்கும் பாவனையில் ஒற்றை விரலை ஆட்டினாள்..

“பாரடா..”

அவன் முகத்தில் படிந்திருந்த ஆழ்ந்த சிந்தனை களில் தடயங்களான ரேகைகளும்.. தீவிரமும் மறைந்தோடி விட்டன.. அவளுடன் பேசிக் கொண்டிருந்தால் மனது இலகுவாக மாறிவிடும் விந்தையில் அவன் உற்சாகமாகி விட்டான்..

“என்னையே எச்சரிக்கிறாயா..?”

“எ..ன்..னை..யே.. என்றால்..? நீங்கள் என்ன பெரிய இவரா..?”

“ஹா..ஹா.. பெ..ரி..ய.. இவர்..! ஹா.. ஹா.. அப்படியென்றால் என்ன பொருள்..?”

“பெரிய இவர் என்றால் நந்தவனத்தின் சுற்றுச் சுவர் என்று பொருள்.. போதுமா..?”

“ஹா.. ஹா.. உன்னைப் பெண்ணே என்று அழைக்காமல் எப்படி அழைப்பதாம்..? தாம் பெண்ணல்லவா..?”

“நான் மட்டுமல்ல.. எனது அண்ணியும் பெண்தான்.. இல்லையென்று மறுப்பீர்களா..?”

“எப்படி மறுப்பேன்..? ஹா.. ஹா..”

“இதற்கும் ‘ஹா..ஹா..’ வா..? கிழிந்தது..”

"எது..?"

"என் காதுதான்.. வேறு என்ன..? எனது அண்ணியை மட்டும் மலர்க்கொடியென்று அழைப்பவர் என்னை மட்டும் எதற்காக பெண்ணே.. பெண்ணே.. என்று அழைக்கிறாராம்..? அண்ணிக்கு மட்டும்தான் அவர்களின் தாய், தந்தை பெயரிட்டு வளர்த்துள்ளனரா..? எனது தாய், தந்தை எனக்குப் பெயரிட்டு வளர்க்கவில்லையா...? இல்லை மலர்க்கொடி என்ற பெயர்தான் நன்றாக உள்ளதா..? மைதிலி என்ற பெயர் நன்றாக இல்லையா..?"

மூச்சு விடாமல் அவள் பேசியதில்.. அவன்..

"அப்பப்பா.." என்றான்..

மைதிலி பேச்சை நிறுத்தி மூச்சை வாங்கினாள்.. கனிவுடன் அவளைப் பார்த்தவனின் முகத்தில் மென்மை படர்ந்தது..

"நீ அழகான ராகத்தைப் போன்றவள்.. அதிசய மானவள்.. உன்னருகில் உள்ளோர்க்கு ஆனந்தத்தை அள்ளி வழங்குபவள்.. உனது பெயர் பிரசித்தி பெற்ற தாயிற்றே.. நீ மிதிலையின் மைதிலி அல்லவா..?"

அவன் பேசப்பேச.. மைதிலியிடம் குடி கொண்டிருந்த சினம் காற்றாகப் பறந்தது.. அவளைப் பற்றி அவன் கூறிய அத்தனை வார்த்தைகளும் சில்லென்ற பனித் துகள்களை அவள்மீது தூவி சிறகை விரித்து வானத்தில் பறக்க வைத்தன..

'மெய்யாகவா..?'

கேட்க நினைத்த வார்த்தைகள் கேட்க இயலாமல் தொண்டைக் குழியிலேயே தேங்கி நின்றன.. ஏதுமறியாத பேதையாக அவன் வார்த்தைகளில் மனம் உருகி அவள் நின்றாள்..

"நான் ராகத்தைப் போன்றவள் என்றா சொல்கிறீர்கள்..?"

"ஆம்.."

"அவ்வாறெனில்.. எனக்காக.. நான் கேட்பதற்காக மட்டும் நீங்கள் ராகம் இசைப்பீர்களா..?"

அதரங்கள் துடிக்க அவனை ஏறிட்ட அவள் பார்வையில் மனம் கரைந்தான் அவன்.. ஏனோ.. அவளது கோரிக்கையை மறுக்க அவனுக்கு மனம் வரவில்லை.. காருண்யத்துடன் தலை அசைத்தான்..

"கட்டாயம் இசைக்கிறேன்.. உனக்காக எனது பாடலை.. நீ கேட்பதற்காக மட்டும்.. நான் இசைக்கிறேன்.."

"எப்போது..?"

"இரு தினங்கள் செல்லட்டும்.."

"எங்கே..?"

"இதே நந்தவனத்தில்.."

அவளது விழிகளில் தெரிந்த மகிழ்வு அவனை நகரவிடாமல் கால்களைக் கட்டி வைத்தது.. அசையாமல் அவளையே பார்த்த வண்ணம் நின்றிருந்தவனின் முகத்தில் மெலிதான துயர் படர்ந்தது..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



7

எந்தப் பிறவியிலே.. உருவான பந்தம் இது..?

'இதையெல்லாம் உணக்கையாய் தெரிஞ்சு வைச்சிருப்பாளே..'

வயலெட்டுடன் பேசவே பிடிக்கவில்லை யாமினிக்கு.. இவளெல்லாம் ஒரு மனுஷி என்று தலையைப் பிடித்தபடி கம்யூட்டரைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.. வயலெட்டா பேச்சு வார்த்தையிலிருந்து பின்வாங்கு வாள்..? அவள் யாமினியின் தோளைப் பிடித்துக் குலுக்கினாள்..

"உங்க கிட்டத்தான் பேசிக்கிட்டு இருக்கேன் யாமினி.."

"எனக்கு வேலையிருக்குங்க.."

"எனக்கு மட்டும் வேலையில்லையா..? வெட்டியாவா பொழுதை ஓட்டிக்கிட்டு இருக்கேன்..?"

"அதைப்பற்றி எனக்கென்ன தெரியும்.. ஜி.எம் முக்குத்தான் தெரியும்.."

இகழ்ச்சியாக உதட்டை வளைத்தபடி சொல்லி விட்டாள் யாமினி.. அவளும்தான் என்ன செய்வாள்..? தாமோதரன் குடு..குடுவென்று குடுத்துக் கட்டிய பின்பு

அவளுக்கு வயலெட்டைக் கடிந்து கொள்ள வேண்டிய தேவையே இல்லாமல் போய் விட்டது.. போய்த் தொலையட்டும்.. அவளுக்குத் தெரிந்தது இவ்வளவு தான் என்று எதையும் கண்டு கொள்ளாமல் இவள் வேலையைக் கவனிக்க ஆரம்பித்தால்.. அவள் அதற்கும் விடாமல் தொடர்ந்து தொல்லை கொடுப்பாளா..? வயலெட் வேலை பார்க்கும் லட்சணத்தைப் பற்றி இவளுக்குத் தெரியாதா..? அதுதான் தெரியாதவர்களுக்கெல்லாம் தெரிய வைக்கும் விதத்தில் தினமும் தாமோதரன் வயலெட் வேலை செய்யும் லட்சணத்தைப் பற்றிக் கிழி.. கிழியென்று கிழித்துத் தோரணம் கட்டித் தொங்க விட்டுக் கொண்டிருக்கிறானே.

யாமினி எதிர்பார்த்தபடியே வயலெட்டின் முகம் கருத்து விட்டது.. யாமினிக்கு ரொம்பவே திருப்தியாக இருந்தது..

‘இவளுக்கு மட்டும்தான் பேசத் தெரியுமா..? எனக்குத் தெரியாதா..?’

அவள் புருவங்களை உயர்த்திய விதத்தில் வெகுவாக பாதிக்கப் பட்டாள் வயலெட்.. அமைதியின் சிகரம் போல இருந்த யாமினி இப்படிப் போட்டுத் தாக்குவாள் என்று அவள் எதிர்பார்க்கவில்லையே..

“இந்த ஜி.எம் பண்ற அழும்பில நேத்துப் பெய்த மழையில இன்னைக்கு முளைத்த காளான்களுக்கெல்லாம் சீனியர்கிட்ட எப்படிப் பேசிப் பழகறதுன்னு தெரியாம போயிருச்சில்ல..?”

"உங்களுக்குத்தான் தெரிஞ்சிருக்கே.. நீங்க வேணா எடுங்களேன்.."

"எதை..?"

"கிளாஸை.."

"நானென்ன டீச்சரா..? இந்த கிரேட் சித்தார்த் குரூப் ஆஃப் கம்பெனீஸின் சீஃப் ரிசப்சனிஸ்ட் நான்தாம்மா.."

"சீஃப்ன்னு சொல்லிக்கறிங்க.. சீப்பா பேசறிங்க.."

"யாமினி.."

வயலெட் அலறினாள்.. யாமினி வலது கையின் ஆள்காட்டி விரலை உதட்டின் மீது வைத்து..

"உஸ்ஸ்ஸ்.." என்று அவளை எச்சரிக்கை செய்தாள்.

"என்னையே காம் டவுன்னு சொல்றியா..? தலையிருக்க வால் ஆடக் கூடாது யாமினி.. என் பவர் தெரியாம என்கிட்ட மோதாதே.."

"உன் பவரைப் பத்தி எனக்கா தெரியாது..? ஆனானப் பட்ட ஜி.எம்முக்கே அல்வா கொடுக்கப் பார்க்கற ஆள்தானே நீ.. என்ன சொன்ன..? நேத்துப் பெய்த மழையில இன்னைக்கு முளைச்ச காளானா..? ஆமாம்.. நான் காளான்தான்.. பிறக்கும் போதே மழையில நனையாம இருக்க குடையோடு பிறந்த காளான்.. தெனாவெட்டும் திமிரும் அதிகமாத்தான் இருக்கும்.. அமைதியா இருந்தா அப்பாவின்னு எடைபோட்டிராதே.. ஜி.எம்முக்கு கூடப் பிறந்தவங்க இல்லைங்கிற விவரம் உனக்கு எப்படித் தெரிஞ்சது..?"

"ஊம்.. விசாரிச்சேன்.."

"என்ன அலுவலுக்கு..? உன்னைப் போலவே நானும் கேட்கனும்னா.. நீயென்ன அவர் வீட்டுக்கு மருமகளாப் போகனும்னா நினைச்ச..? அவர் குடும்ப விவரத்த புள்ளி விவரத்தோட கேட்டு வைச்சிருக்க.."

"அந்தக் கொடுமையை நான் ஏன் இழுத்து விட்டுக்கப் போறேன்..? ஆபீசில படற இம்சை பத்தாதா..? வீடு வரைக்கும் அந்த இம்சை தொடரனுமா..?"

"அதை அவர் சொல்லனும்.."

"சொல்லிட்டாலும்..! இதோ பார் யாமினி.. நெருப்புன்னு தெரிஞ்சிருந்தும் விரலை நீட்டி சுட்டுக் கிறதுக்கு நான் ஒன்னும் பைத்தியம் இல்லை.. லேடிஸ்ன்னு கூட இரக்கம் பாக்காம இந்தக் காய்ச்சு காய்ச்சறாரே.. இவருக்கெல்லாம் கூடப் பிறந்த அக்கா, தங்கை இருக்காதுன்னு கெஸ் பண்ணி விசாரிச்சேன்.. நான் நினைச்சதைப் போலவே அக்கா, தங்கையும் இல்லை.. கூடவே அண்ணன், தம்பியும் இல்லை.."

"நீ அதுக்கு மட்டும் விசாரிச்சிருக்க மாட்டியே.."

யாமினியின் சந்தேகத்தில் வந்த சில நாள்களுக்குள் தன் புத்தியை இவள் இத்தனை தெளிவாக கண்டு வைத்திருக்கிறாளே என்று கடுப்பானாள் வயலெட்..

"உண்மைதான்.. என்னைக்காவது ஒருநாள்.. நீங்கள்ளாம் அக்கா, தங்கை கூடப் பிறந்திருந்திருந்தா பெண்களோட அருமை புரியும்ன்னு கேட்கிறதுக்காகத்தான் விசாரிச்சு வைச்சேன்.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?" அவள் கேட்க நினைத்த கேள்வி அவளுக்கே திரும்பி விட்ட ஆத்திரத்தில் பொருமினாள் வயலெட்..



8

தூரத்தின் இடி முழக்கம்.. உரைக்கின்ற செய்தி என்ன..?

நிமிர்ந்த.. கம்பீரமான நடையும், நேர்கொண்ட ஊடுருவும் தீட்சண்யம் மிக்க பார்வையுமாக நந்தவனத்திற்குள் பிரவேசித்தவன்.. தூரத்தில் இருந்த தாமரைக்குளத்தின் கரையில் அவனுக்காக காத்திருந்த மைதிலியைக் கண்டதும் அப்படியே நின்றான்..

அவள் முகத்தில் தெரிந்த எதிர்பார்ப்பில் அவனது நெற்றியில் கோடுகள் விழுந்தன..

'சின்னஞ்சிறு பெண்..!' அவன் பெருமூச்சு விட்டான்..

ஓர்நொடி திரும்பிச் சென்று விடலாமா என்ற எண்ணம் அவன் மனதில் வந்தது.. அதற்குள் அவனைப் பார்த்து விட்ட மைதிலி உற்சாகத்துடன் எழுந்து நின்றாள்.. அந்த உற்சாகத்தைக் கலைக்க மனம் வரவில்லை அவனுக்கு.. அவளை நோக்கி நடந்தான்..

பவளமல்லி மரத்தடியில் நின்றிருந்த மைதிலி கரங்களைத் தட்டிக் குதூகலித்தாள்..

"வாக்களித்ததைப் போலவே வருகை தந்து விட்டீர்களே.."

"நான் வாக்குத் தவறாதவன்.."

இறுக்கமான அவனது குரலின் வேறுபாட்டை மைதிலி புரிந்து கொள்ளவில்லை.. பவளமல்லி மரத்தின் அடியிலிருந்த மேடையில் அவன் அமர்ந்ததும் சற்றுத் தள்ளி அமர்ந்து.. ஆர்வத்துடன் அவனைப் பார்த்தாள்.. அந்தப் பார்வையில் அவன் பார்வை ஓர்நொடி பின்னிப் பிணைந்து பின் விலகியது..

நெடுமூச்சை விட்டான்.. அது எதன்பொருட்டு என்று புரியாமல் அவள் விழித்தாள்..

"கவலை கொண்டுள்ளீர்களா..?"

"இல்லையென்று சொல்ல மாட்டேன்.."

"எதன்பொருட்டு கவலை..?"

"அதற்குக் காரணங்கள் பல உண்டு.."

"தற்போது எனக்கு வாக்களித்தபடி பிரத்யேகமான பாடல் ஒன்றை எனக்காகப் பாடுவீர்கள்தானே..?"

"அதற்காகத்தானே வந்திருக்கிறேன்.."

அவனுடைய பதிலில் மைதிலியின் முகம் மலர்ந்தது.. அவள் உற்சாகமாக முழங்கால்களைக் கட்டி அமர்ந்து.. அதில் தலை சாய்த்த வண்ணம் அவனைப் பார்த்தாள்.. அவளது விழிகளில் தென்பட்ட ஆவலில் அவன் மனம் லயித்தான்..

"தாம் கவலை கொண்டிருந்ததில் அஞ்சி விட்டேன்.."

"உனக்கு அச்சம் கூட வருமா..?"

"அதில் உங்களுக்கு மிக்க மகிழ்வு போல உள்ளதே.."

"ஹா.. ஹா.. எனது கவலை கண்டு தாமும் கவலை கொண்டிருந்தால் அதில் ஓர் அர்த்தமுண்டு.. எமது கவலையில் தாம் ஏன் அச்சம் கொள்ள வேண்டும்..?"

"கவலையினால் கானம் இசைக்க நீங்கள் மறுத்து விட்டால் எனக்கு ஏமாற்றமாக இருக்காதா..? இருதினங்களை நான் கழித்ததே பெரும்பாடு.. இந்தப் பொழுதிற்காக எத்துனை ஆவலுடன் காத்திருக்கிறேன் தெரியுமா..?"

"கவலைகள் அற்ற மனிதப் பிறவி இவ்வுலகில் இல்லை மைதிலி..! கவலைகள் அற்ற வாழ்க்கையென்பது.. அலைகளற்ற கடலைப் போன்றது.. எனவே.. எமது கவலை குறித்த அச்சத்தைத் தவிர்த்துவிடு.."

"அப்படியே ஆகட்டும்.."

"அட..! நீ கூட சொல்பேச்சைக் கேட்பாயா..?"

"எனக்காக பாடல் இசைப்பதால் கேட்பேன்.."

"இசைமீது உனக்கு இத்துனை பிரியமா..?"

"ஆம்..! எனது தாய் வீணை மீட்டுவதில் வல்லவராம்.. இனிமையான கானம் இசைப்பாராம்.. அதைக் கேட்டதில் எனக்குள் வீணையின் மீதும்.. இசையின் மீதும் ஓர் பிடிப்பு வந்து விட்டது.."

"கற்றுக் கொள்வதுதானே..?"

"கற்றுக் கொண்டேனே.. தொடர்ச்சியாக கற்றுக் கொள்ள முடியாமல் சுல்தானைப் பற்றிய பயம் வந்து

வழிமறித்து விட்டது.. காஞ்சியை ஆளும் சம்புவரையர்கள் மதுரையின் சுல்தானுக்கு கப்பம் கட்டும் சிற்றரசர்கள் ஆயிற்றே.. இங்கு சுல்தானின் படைவீரர்களின் நடமாட்டம் உண்டு.."

"ஒ..."

அவன் முகம் மாறியது.. இசையைப் பற்றிய பேச்சு எங்கோ திரும்பி விட்டதை உணர்ந்தாள் மைதிலி.. அழகான ஸ்வரத்தின் இடையே அபஸ்வரம் தட்டி விட்டதைப் போல அவர்களுக்கு இடையே நிகழ்ந்த உரையாடலுக்கு ஊடே இருந்த நுண்ணிய உணர்வலைகள் அறுந்து போனதைப் போல அவளுக்கு இருந்தது..

"தற்போது எதற்காக இங்கு வந்துள்ளோம்..?"

அறியாப் பெண்ணைப் போல முகத்தை வைத்துக் கொண்டு கேட்டாள்.. அவனது மாறிய முகத்தில் மீண்டும் நகைப்பு வந்து அமர்ந்தது..

அவளது கேள்வியின் உட்பொருளைப் புரிந்து கொண்டவனாக அவள் போக்கிலேயே அவன் பதில் சொன்னான்..

"இசை கேட்க விரும்பினாய்.. அதற்காக வந்துள்ளேன்.."

"நினைவில் உள்ளதல்லவா..? அதை விடுத்து நாட்டு நடப்பைப்பற்றிய கலந்துரையாடல் நமக்கு எதற்கு..? தாம் என்ன சுல்தானுக்கு எதிராக வாளேந்தி யுத்த களம் புகப் போகிறீர்களா என்ன..?"

பூச்சரம் தைக்கப்பட்ட நீண்ட பின்னலை கையில் சுழற்றியபடியே கேட்டாள் மைதிலி.. அவனது பொருள் புரியாத பார்வையிலே அவளது புருவங்கள் ஏறின..

"என்ன..?" என்றாள் குழப்பமாக..

"ஒன்றுமில்லை.." என்றான் அவன்..

"அதுதான் எனக்குத் தெரியுமே.. விருந்தினராக வந்திருப்பவர் அறுசுவை உணவை உண்டு.. ஓய்வெடுத்து.. இளைப்பாறத்தான் விரும்புவார்.. தாங்களும் அவ்விதம்தான் உள்ளீர்கள்.. என்ன ஒன்று.. தங்களிடம் கூடுதலாக சித்திரம் வரைவது.. இசைப்பது என்று நுண்ணிய கலைகள் ஒளிந்துள்ளன.. அவற்றை வெளிப் படுத்தி பொழுதை உபயோக முள்ளதாக மாற்றிக் கொள்கிறீர்கள்.. நிலைமை இவ்வாறிக்க.. ஒன்றுமில்லை என்ற மெய்யில் ஓராயிரம் மர்மங்கள் ஒளிந்திருப்பதைப் போலவே சொல்லி வைக்கின்றீர்களே.. அதுதான் ஏனென்று எனக்கு ஒரு மண்துகளும் விளங்கவில்லை.." அலுத்துக் கொண்டாள் மைதிலி..

"விளங்காததை கயிறு போட்டு இழுக்கக் கூடாது.. விட்டு விடு.." என்றான் அவன்..

"அதற்கென்ன..? விட்டு விட்டால் போயிற்று.. இழுத்துப் பிடித்து எனக்கென்ன ஆகப் போகிறது..?" தோள்களைக் குலுக்கிய மைதிலி.. அவனைப் பார்த்து..

"இப்படிப் பேசிப்பேசியே.. நாழிகைகளை கடத்தி விடலாமென்ற யுக்தியை வகுத்து வைத்துள்ளீர்களா..?" என்று கேட்டாள்..

"ஹா.. ஹா.." அவன் ரசித்து நகைத்தான்..

"போதும் இந்த நகைப்பு.. நந்தவனத்தின் பட்டாம் பூச்சிகளின் எண்ணிக்கை பாதிக்கு மேல் குறைந்து விட்டதாம்.. மீதமுள்ளவைகளையாவது விரட்டி அடித்து விடாமல் கருணை காட்டுங்கள்.. அவை பிழைத்துப் போகட்டும்.." வினயத்துடன் வேண்டிக் கொண்டாள் மைதிலி..

"ஹா.. ஹா.." அவன் அதற்கும் நகைத்து வைத்தான்.

"எனக்கென்னவோ இன்றைய பொழுதிற்குள் நீங்கள் பாடலைப் பாடி விடுவீர்கள் என்று தோன்றவில்லை.. இல்லத்திற்குச் சென்றாலாவது.. அடுத்த இல்லத்தின் அன்னபூரணி அம்மையார்.. எனது அண்ணியிடம் எனைப் பற்றிப் பற்ற வைப்பதை தடுத்து நிறுத்தலாம்.."

பொறுமையிழந்த மைதிலி எழுந்து நடந்தாள்.. அவள் இரண்டடி வைத்திருப்பாள்..

"*அதிசய ராகம்..*" என்ற பாடல் காதில் விழுந்தது..

அவள் ஆனந்தத்துடன் திரும்பி பவளமல்லி மரத்தின் அடியிலிருந்த மேடைக்கு ஓடி வந்தாள்.. அவள் முகத்தையே ஆழ்ந்து பார்த்தபடி பாட ஆரம்பித்தவனின் அருகே.. அமர்ந்து பாடலை ரசிக்க ஆரம்பித்தாள்..

"அதிசய ராகம்..! ஆனந்த ராகம்..!
அழகிய ராகம்..! அபூர்வ ராகம்..!"

அவன் பாடும் பாடலைக் கேட்டு மழையில் நனையும் சாதகப் பட்சியைப் போல அவள் சந்தோஷித்ததில்

அவன் முகம் கனிந்தது.. சித்திரத்தையும்.. இசையையும் ரசித்து நுகரும் அற்புத ரசனை கொண்டவள் அதை பகிர்ந்து கொள்ளத் தோழமையின்றி.. வாடியிருப்பதை அவன் மனம் புரிந்து கொண்டது..

"வசந்த காலத்தில் மழை தரும் மேகம் - அந்த
மழை நீரருந்த மனதினில் மோகம்.."

அவன் குரலில் குழைந்த மோகத்தை அவனது விழிகள் ஓர் நொடி பிரதிபலித்து மறுநொடியில் அதை மறைத்தன.. அவளது தேகமெங்கும் சிலிர்ப்புப் பரவியது..

"இசையெனும் அமுதினில்..
அவளொரு பாகம்..
இந்திர லோகத்து சக்கரவாகம்.."

அவளையா அவன் குறிப்பிடுகிறான்..? அவள் அவன் விழிகளுக்கு அதிசய ராகமாகத் தெரிகிறாளா..?

மைதிலிக்குள் இருந்த மழலைத்தனம் மறைந்து.. பருவம் எய்திய மங்கையாக அவள் மாறிப் போனது அத்தருணத்தில்தான்..

மின்னலென அவள் வாழ்வில் விருந்தினனாக இல்லம் புகுந்து.. வியக்கத்தகு சித்திரமாக அவளை வடித்து.. அவளை அதிசய ராகமாக இசைத்து.. அபூர்வ ராகமாக அவள் மனதில் நுழைந்து விட்ட மாயத்தை அறிந்தும்.. அறியாதவனைப் போல.. அவளது பின்னலைப் பார்த்தபடி அவன் பாடலைத் தொடர்ந்தான்..

"பின்னிய கூந்தல் கருநிற மேகம்..
பெண்மையின் இலக்கணம் அவளது தேகம்.."

அவன் விழிகள் மலரை மொய்க்கும் வண்டாக.. அவளது தேக எழிலை மொய்த்தன.. மைதிலியின் பார்வை தாழ்ந்தது.. அவனது பார்வையைத் தாள முடியாத தவிப்பில் அவள் தேகம் நடுங்கியது.. அவன் முகத்தில் தாபத்துடன் கூடிய துயர் தெரிந்தது..

"தேவர்கள் வளர்த்திடும் காவிய யாகம்..
அந்த தேவதை கிடைத்தால்..?"

அவன் பாடல் சுருதிலயத்துடன் இணைந்து கேட்ட கேள்வியில் அவள் அதிர்ந்தாள்.. அவன் என்ன சொல்லப் போகிறான் என்று அறியும் ஆவலில் அவள் மனம் இன்பப் பரபரப்பில் மூழ்கித் தவித்தது..

"அந்த தேவதை கிடைத்தால்..
அது என் யோகம்..!"

தீட்சண்யம் கொண்ட அவன் விழிகளில் பொங்கி வழிவது தாபமா அல்லது துயரா என்று இனம் காணும் வகை தெரியாமல் தவித்து மருகியது அவளின் பேதை மனது..

அவள் சிற்றரசர் பாரம்பர்யத்தில் பிறந்து வளர்ந்த மங்கை..! அவனோ நாடோடி..! சில தினங்கள் அவளது இல்லத்தில் விருந்தினனாகத் தங்கி இளைப்பாற வருகை தந்திருப்பவன்..

எட்டாக்கனியின் மீது ஆசை கொள்வது தவறு என்பதால்தான் அவன் துயர் கொள்கிறானோ.. அவள் கிடைத்தால் அவனுடைய யோகமாக கருதுவானாமே.. அது நிகழுமா..?

மைதிலியின் மனம் படபடவென்று அடித்துக் கொண்டது.. எதையோ எதிர்பார்த்துத் திறந்த கதவு.. ரகசியச் சுரங்கத்தின் படிக்கட்டுக்களை அவளது கண் முன்னே நிறுத்தியதில்.. அதில் கால் பதிப்பதா.. இல்லை. பின் வாங்குவதா என்று தடுமாறி நின்றாள் அந்த பருவ மங்கை..!

"ஒரு புறம் பார்த்தால்..
மிதிலையின் மைதிலி..!"

அவன் பாட... அவளது கண்களுக்கு அவன் காவிய கால ராமனாகத் தெரிந்தான்.. உப்பரிகையில் மைதிலி நிற்கிறாள்.. நகர்வலம் வருபவனின் விழிகள் அண்ணாந்து நோக்கி அவளது விழிகளுடன் கலக்கின்றன.. அண்ணலும் நோக்கினான்.. அவளும் நோக்கினாள்.. கண்ணோடு கண் கலக்க அங்கே காதல் பிறந்தது..

இமைகள் படபடக்க விழியுயர்த்தி அவனைப் பார்த்தாள் மைதிலி.. பவளமல்லி மேடையில் இருந்தவன்.. உப்பரிகையில் உள்ளவளைப் பார்ப்பதைப் போலவே பார்த்து வைத்ததில் உள்ளம் மத்தளம் கொட்ட அவசரமாக விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள்..

ஒருபுறம் பார்த்தால் அவள் மிதிலையின் மைதிலி என்றால் மறுபுறம் பார்த்தால் எவர் போல இருப்பாளாம்..?

அவளது உள்ளம் கேட்ட கேள்விக்கு அவனது பாடல் பதிலைத் தந்தது..

"மறுபுறம் பார்த்தால்..
காவிரி மாதவி..!"

நர்த்தனமாடும் நடன மங்கையைப் போல அவள் உள்ளாள் என்கிறானா..? நர்த்தனமாடியது அவளது உள்ளம்.. எத்துணை துணிவு இவனுக்கு என்று அவள் சினந்து கொண்டிருந்த போது.. அந்த சினத்தைத் தணித்தது அவனது பாடல்..

"முகம் மட்டும் பார்த்தால்..
நிலவின் எதிரொலி..!
முழுவதும் பார்த்தால்..
இவளொரு பேரொளி..!"

ஒளியின் வெள்ளத்தைக் காண முடியாமல் கண்கள் கூசுகிறவனைப் போல அவன் பார்வையைத் திருப்பிக் கொண்டு சடுதியில் எழுந்து சென்று விட்டான்..

மைதிலி பவளமல்லி மரத்தின் அடியிலேயே வெகு நேரம் அமர்ந்திருந்தாள்.. அவனது பாடல் அவள் காதுகளில் ரீங்கரமிட்டுக் கொண்டிருந்தது.. அவளைச் சுற்றி விழுந்த பவளமல்லி மலர்கள் அவளது மனதை வாசித்து விட்டதைப் போல மணம் பரப்பி அவளுடன் தோழமை கொண்டாடின..

தனிமையில் கரைந்தாள் மைதிலி.. வந்திருக்கும் விருந்தினனின் பெயர் என்ன..? ஊர் எது..?

இவை எதுவுமே அவள் மனதில் தோன்றவில்லை.. பெயர்.. ஊர்.. அறியாத நாடோடி போன்றவனின் மீது அவள் மனம் மையல் கொள்வதை திகிலுடன் உணர்ந்தாள் மைதிலி..

இரவுகளில் அவளால் நிம்மதியுடன் கண்ணுறங்க முடியவில்லை.. பஞ்சணையில் படுத்தவுடன் நித்திரா தேவியைத் தழுவிக் கொண்டதினங்கள் அவள் மனதில் ஊர்வலம் வந்தன.. அப்போதெல்லாம் அவள் மனம் அவள் வசத்தில் இருந்தது..

கள்ளமில்லத பிள்ளை மனதுடன் இருந்தவளை பஞ்சணையில் வீழ்ந்தவுடன் உறக்கம் வந்து அரவணைத்துக் கொண்டது..

தற்போதுதான் அவள் மனதில் கள்ளம் புகுந்து விட்டதே.. பிள்ளை மனதைத் தொலைத்து விட்டு.. பேதை மனதை அழைத்துக் கொண்டு விட்டாளே..

நிம்மதியான நித்திரைக்கு அவள் எங்கு செல்வாள்..?

உறக்கமில்லாத இரவுகளில் நிசப்தம் நிலவிய பொழுதுகளில் சப்தம் எழுப்பாமல் விம்மித் தனக்குள் கரைந்தாள் அந்தப்பேதை..

மற்றைய தினங்கள் என்றால்.. தான் வளர்த்த நாத்தனாரிடம் தென்படும் மாற்றங்களை மலர்கொடி கண்டு கொண்டிருப்பாள்..

விருந்தினனாக அவன் வருகை தந்த தினத்தி லிருந்து.. அவள் விருந்தோம்பலில் கவனமாக.. சதா சர்வ காலமும் பரபரப்பில் இருந்தமையால் மைதிலியிடம் ஏற்பட்டிருந்த மாற்றங்களைக் கவனிக்கவில்லை..

மைதிலிக்குள் ஆச்சரியம் எழுந்தது.. அவனே ஒரு நாடோடி..! அவனுக்குப் போய் ஒரு அரசனுக்குரிய

சகல மரியாதைகளையும் அளித்து.. நான்கு வேளையும் அறுசுவை உணவுடன் கூடிய விருந்தினை படைக்க வேண்டுமா..?

அவளது தமையனும், அண்ணியும் அது போல ஊதாரித்தனமாக கைப்பொருளை செலவளிப்பவர்கள் அல்லவே..

இருப்பினும்.. அளிக்கப்படும் அத்துனை விருந்தும், மரியாதையும் அவனுக்கானது என்பதில் அவள் மனம் விசித்திரமான வகையில் ஓர் நிறைவைக் கண்டது..

நந்தவனத்தில் அவளை 'அதிசய ராகம்..' என்று அழைத்துப் பாடியவனை அதற்குப் பின்னால் அவளால் பார்க்க இயலவில்லை.. பொழுது மயங்கி இரவு நெருங்கும் வேளைகளில் மாறுவேடம் தரித்து குதிரையின் மீது ஏறி அவன் எங்கோ சென்றான்.. பொழுது புலரும் வேளையில் திரும்பி வந்தான்..

'எங்கே செல்கிறான்..?'

மைதிலியின் மனதை சந்தேகம் வாட்டியது.. மலர்கொடியிடம் அது குறித்து வினவிய போது..

"அதைப் பற்றி உனக்கென்ன..?" என்று அவள் கடுமை காட்டினாள்..

அத்துடன் நில்லாமல் சுற்று முற்றும் பார்த்து விட்டு..

"அதைப்பற்றி மற்றவர்களிடம் உரைத்து வைத்து விடாதே.." என்று எச்சரித்தாள்..

இதைத்தான் அவன் விருந்தினனாக அந்த இல்லத்துக்குள் அடி எடுத்து வைத்த முதல் தினத்தி

லேயே மலர்கொடி கூறிவிட்டாளே.. அடுத்தும் இந்த எச்சரிக்கையைத் தொடர வேண்டுமா என்ன..?

“விருந்தினனைப் பற்றியும் உரைக்கக் கூடாது.. அவரது செயல்களைப் பற்றியும் உறைக்கக் கூடாது.. அனைத்தும் மூடு மந்திரமாகவே உள்ளது..” முணு முணுத்தாள் மைதிலி..

“நீ என்ன சொல்கிறாய் என்று என் காதுகளில் விழவில்லை.. எதற்கும் இதுபோலவே நீ பேசிப் பழகு.. அதுதான் நல்லது..” உத்தரவிட்டாள் மலர்கொடி..

“யாருக்கு நல்லது அண்ணி..?”

“உனக்கல்லம்மா.. எனக்கு.. தாயற்ற நாத்தனாரை சரியான முறையில் வளர்க்கவில்லையென்ற இடி சொல்லிற்கு ஆளாகாமல் தப்பிப்பேன் அல்லவா..?”

எப்போதும் மலர்க்கொடியுடன் தர்க்கம் புரிபவள்.. அன்று ஏனோ அமைதியாகி விட்டாள்.

‘நான் வளர்த்த மைதிலியா இப்படி அமைதி காப்பது..?’

மயக்கம் போடாத குறையாக அவளை வியப்புடன் நோக்கிவிட்டு அங்கிருந்து அகன்று விட்டாள் மலர்க் கொடி..

‘அவனைப் பற்றி என் மனதில் உள்ள எண்ணங்களை அறிந்தால் அண்ணி என்ன கூறுவார்களோ..?’

மைதிலிக்கு துயரமாக இருந்தது.. அவனுடன் தனித்துப் பேச முடியாதது அதை விடத் துயரமாக இருந்தது.. அவளை ‘அதிசய ராகம்’ என்று விளித்து..

அவளுக்காக அவன் பாடலைப் பாடிய நந்தவனத்திலேயே அவள் பொழுதைக் கழித்தாள்..

என்றேனும் ஓர்நாளில் இந்த பவழமல்லி மரத்தடியின் நினைவு வந்து அவன் வருகை தரமாட்டானா என்று ஏங்கினாள்..

அவள் காத்திருந்த நாளும் வந்தது.. அவனும் வந்தான்.. அவனைக் கண்டதும் ஆவலுடன் படபடத்த அவளது இமைகளின் அடியிலிருந்த விழிகளுடன் விழி கலந்தான்.. கூர்ந்து பார்த்த அவனது பார்வையில் அவனது மனதின் ஆழத்தில் என்ன உள்ளது என்று அறிய முடியாமல் அவள் தடுமாறினாள்..

“நான் புறப்படவேண்டும்.. உன்னிடம் விடைபெற வந்துள்ளேன் மைதிலி..” நிதானமாகச் சொன்னான் அவன்.

“என்னது..?” மைதிலி துடித்துப் போனாள்..

“ஆம்.. நான் புறப்பட்டுத்தான் ஆக வேண்டும்.. நான் எந்தப் பணிக்காக வந்தேனோ அந்தப் பணியை முடித்து விட்டேன்..”

“பணிக்காக வந்தீர்களா..? இளைப்பாற வர வில்லையா..?”

“இளைப்பாறலா..? எனக்கா..?”

சின்னஞ்சிறு மழலையைப் போல அவளைப் பாவித்து சின்ன நகைப்புடன் அவள் முகத்தை கூர்ந்து பார்த்தான் அவன்.. அந்தப் பார்வையில் தெரிந்த காருண்யத்தில் மைதிலி துடித்துப் போனாள்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



8

எட்டாத உயரத்தில் இருந்தாலும் உனைத் தொடர்வேன்..

"**வாட்** எ ஜோக்..!"

யாமினி பொங்கிச் சிரித்தாள்.. அவளின் சிரிப்பை அடக்கும் வழி தெரியாமல் பல்லைக் கடித்தாள் வயலெட்..

"நீ ஜி.எம்மைப் பார்த்து உங்களுக்கு அக்கா, தங்கை இருந்தாத்தான் அந்த அருமை தெரியும்ன்னு சொல்ல நினைச்சியா..? உன்னைப் பார்த்து.. அண்ணன் தம்பி கூடப் பிறந்தவங்கதானேன்னு நான் கேட்டு வைச்சேன் பாரு.. அங்கே நிக்கிறாரு கடவுள்..! இதைத்தான்..

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் - தமக்கின்னா
பிற்பகல் தானே வரும்..

அப்படின்னு பொய்யாமொழிப் புலவர் வள்ளுவர் அந்தக் காலத்துக் ஹைக்கூக் கவிதையான திருக்குறளில சொல்லி வைச்சார் போல.."

"வாட்..?"

"குறள்ம்மா.. திருக்குறள்..! அதுசரி.. உனக்கெங்கே இதெல்லாம் தெரியப்போகுது.. நீ ராக் மியூஸிக்கில நீச்சலடிக்கிற ஆளாச்சே.."

"நான் எந்த மியூஸிக்கிலயும் நீச்சலடிப்பேன்.. அதைப் பத்தி உனக்கென்ன..? மைன்ட் யுவர் ஓன் பிஸினெஸ்.."

"என்ன.. என்ன..? இப்ப மட்டும் மைண்ட் யுவர் ஓன் பிஸினெஸா..? இவ்வளவு நேரமும்.. ஜி.எம்முக்கு எத்தனை உடன் பிறப்புன்னு அலசி ஆராய்ஞ்சியே.. அது யாரோட ஓன் பிஸினெஸ்..?"

யாமினி இந்த அளவுக்குப் போட்டுத் தாக்குவாள் என்று நினைத்துக் கூடப் பார்த்ததில்லை வயலெட்..!

"அப்பாவியாய் முகத்தை வைச்சுக்கிட்டு.. சாது போல வேலையைப் பாத்துக்கிட்டு இருக்கிற இந்த அமுக்குணிக்கு இருக்கிற வாயைப் பாரேன்.."

அன்று முழுவதும் கண்ணில் எதிர்படுபவர்களிடமெல்லாம் இதைச் சொல்லியே புலம்பிக் கொண்டிருந்தாள் அவள் என்று காற்றுவாக்கில் செய்திகள் பறந்து வந்து யாமினியின் காதுகளில் நுழைந்தன..

அவள் தோள்களைக் குலுக்கிக் கொண்டு அவற்றை அலட்சியம் செய்து விட்டு வேலையில் ஆழ்ந்தாள்..

"சித்தார்த்.. எங்கே..?"

அவள் முகத்தைப் பார்க்காமல் எங்கோ ஓர் திக்கில் பார்த்தபடி எள்ளும், கொள்ளும் முகத்தில் வெடிக்கக் கேட்டான் தாமோதரன்..

மற்ற நாள்களாக இருந்திருந்தால்.. அவனுடைய பாராமுகத்தை யாமினி கண்டு கொண்டிருக்கவே

மாட்டாள்.. அன்றைக்கு என்னவோ அது அவளை மிகவும் பாதித்தது.. வயலெட்டின் வார்த்தைகளினால் தான் அவன்.. அவள் முகத்தைப் பார்ப்பதைத் தவிர்க்கிறானோ என்று மனம் கலங்கிப் போனாள்..

"நீங்க புத்திசாலி சார்.. நான் சொல்லி நீங்க தெரிஞ்சுக்கனும்னு இல்லை.." பீடிகை போட்டாள்..

தாமோதரன் எரிச்சலானான்.. அவனுக்கு சித்தார்த்தனிடம் பேச வேண்டியிருந்தது.. அதி முக்கியமான விவரங்களைப் பற்றி விவாதிக்க வேண்டியிருந்தது.. நிலைமை புரியாமல் யாமினி சம்பந்தாசம்பந்தம் இல்லாமல் பேசியதில் அவன் கடுப்பானான்..

"லுக்..! உனக்கு என்ன வேலையைக் கொடுத்திருக்கோ.. அதை மட்டுமே செய்.. இந்த அட்வைஸ் பண்ணுகிற வேலையை எல்லாம் இங்கே வைத்துக் கிட்டேன்னு வை.. சீட்டைக் கிழித்து வீட்டுக்கு அனுப்பிருவேன்.. ஜாக்கிரதை.." சீறினான்..

கோபத்தில் அவன் யாமினியை 'நீ' என்று ஒருமையில் அழைத்ததை அவள் பெரிதாகவே எடுத்துக் கொள்ளவில்லை.. அதைப் பற்றிய நினைவு வந்தபோது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.. யாமினி இப்படி சுயமரியாதையை விட்டுக் கொடுப்பவள் அல்ல.. வயலெட் 'வா.. போ..' என்று வார்த்தை மாறிய மறுநொடியிலேயே.. அவளை ஆயிரத்தைந்து முறை 'வா.. போ..' என்று அழைத்துப் பேசியிவள்தான் அவள்..

இப்போது அந்த சுயமரியாதை எங்கே போனது..?

தாமோதரன் அவளை 'வா.. போ..' என்கிறான்.. அதைக் குறித்த சிந்தனை துளியளவு கூட இல்லாமல் இயல்பாக அதை அவள் ஏற்றுக் கொள்கிறாளே.. ஏன்..?

"உங்க இஷ்டம் ஜி.எம். சார்.. நீங்க என்ன டிசைட் பண்ணினாலும் எனக்கு ஓகே தான்.. பட்... இந்த வயலெட்டெல்லாம் முட்டாள்தனமா ஒரு வார்த்தை சொல்லிட்டான்னு என் முகத்தையே பார்க்காம நீங்க கேள்வி கேட்கிறதுதான் எனக்குக் கஷ்டமாயிருக்க.."

தன்மையான குரலில் சொன்னாள் யாமினி.. சட்டென்று அவள் முகம் பார்த்தான் தாமோதரன்.. அவன் முகத்திலிருந்த கடுமை தானாக அகன்றது.. சொல்லத் தெரியாத பந்தத்துடன் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்..

"அவங்க பேசறதுதான் முட்டாள்தனம்ன்னு தெரியுதில்ல.. அதை நீங்களும் நோட் பண்ணனுமா..? லூசில விடுங்க யாமினி.. தன்னைப் போல் பிறரையும் நினைன்னு இயேசு சொன்னார்.. இவங்க.. இவங்களைப் போலவே மத்தவங்களையும் நினைக்கிறாங்க.. லீவ் இட்.. அதை மறந்திருங்க.. சித்தார்த் எங்கே..?"

அவன் இயல்பாகி விட்டதில் யாமினியின் மனதில் ஏன் அந்த அளவுக்கு நிம்மதி சூழ்ந்தது என்று அவளுக்கே தெரியவில்லை.



9

மனதினைக் கொய்து சென்ற - அந்த மாயவன் எவரடி..?

"சளக்.. சளக்.."

தாமரைக் குளத்தில் மைதிலி விட்டெறிந்த சிறு கற்கள் ஓசை யெழுப்பியபடி குளத்தினில் மூழ்கின.. மூழ்கிய கற்கள் உண்டாக்கிய அலைகள் சின்னஞ்சிறு வட்டங்களாக நீரின் மேற்பரப்பில் உருவாகி.. பெரிய வட்டங்களாக விரிந்து குளத்தின் சுற்றுக்கரையைத் தொட்டுத் திரும்பின..

"நீ இங்குள்ளாயா..?"

அவள் தோளைத் தொட்ட கரத்தின் ஸ்பரிசத்தில் சிந்தனை கலைந்தவளாக ஏறிட்டுப் பார்த்தாள் மைதிலி.. அம்பலவாணரின் புதல்வியான கோசலை அவள் முன்னால் நின்றிருந்தாள்..

"உன்னைத்தேடி உன் இல்லம் சென்றேன்.. அங்கு நீயில்லை.. உன் அண்ணியிடம் வினவினேன்.. பருவம் எய்திய பெண் இவ்விதம் இல்லம் தங்காமல் நகர்வலம் வரலாகுமா என்று என்னிடமே நியாயம் கேட்டார்கள்.. இதே வார்த்தைகளைத்தான் எனது அம்மா சொல்லக் கேட்டு விட்டு வந்துள்ளேன் என்ற உண்மையை எப்படி உன் அண்ணியிடம் சொல்வது..? எனவே.. நியாயமல்ல என்று நியாயமில்லாமல் நியாயம் சொல்லி விட்டு வெளியே

வந்தேன்.. திண்ணையில் விளையாடிக்கொண்டிருந்த கிள்ளிவளவனும், முல்லைக் கொடியும்தான் நீ தாமரைக் குளக்கரையில் குடியிருப்பாய் என்று விவரம் சொல்லி வழியனுப்பி வைத்தார்கள்.. இங்கு வந்து பார்த்தால் நீ அவ்விதம்தான் இருக்கிறாய்.. என்னடி ஆனது..? இதுபோல நீ ஓரிடத்தில் அடங்கி உட்காரும் பெண் இல்லையே..?"

நீட்டி முழக்கிய கோசலையின் வரவில் தனிமை கலைந்து விட்ட எரிச்சலில் இருந்த மைதிலி..

"ஆமாமாம்.. நான் ஓரிடத்தில் உட்காரும் பெண்ணல்ல.. நீதான் உன் இல்லத்தின் வாயில்படியைத் தாண்டாத மாதர்குல மாணிக்கம்.." என்று வெடுவெடுத்தாள்..

"இதற்குப் போய் இத்துனை கோபமா..?"

கோசலை மைதிலியின் அருகில் அமர்ந்து கொண்டாள்.. காலைப் பொழுதின் காற்றும்.. நந்தவனத்தின் சூழலும்.. தாமரைக் குளத்தின் ஈரப்பசை நிரம்பிய காற்றும் அவள் மனதிற்கு புத்துணர்வை ஊட்டின.. குளத்தில் மலர்ந்திருந்த தாமரைப் பூக்களின் அழகில் மயங்கினாள் கோசலை..

"கொடுத்து வைத்தவளடி நீ.. அரண்மனை போன்ற இல்லம்.. அரசிகளுக்கு மட்டுமே கிட்டும் நந்தவனம்.. அதன் நடுவில் தாமரைக் குளம் என்று வாழ்வை ரசித்து வாழ்கிறாய்.. எனது இல்லத்தையும் பார்.. முன் கட்டும்.. பின்கட்டும்.. நடுவில் முற்றமுமென்று சின்னஞ்சிறு இல்லம்.. இந்தக் குளக்கரையைக் கண்டவற்க்கு இங்கேயே குடியிருக்கத்தான் தோன்றி வைக்கும்.."

பொறாமை ததும்பிய கோசலையின் வார்த்தைகளில் பெருமூச்சை விட்டாள் மைதிலி.. குளக்கரையின் அழகில் மயங்கியா அவள் அங்கேயே வாசம் செய்கிறாள்..? அக்குளக்கரையின் பவளமல்லி மரத்தின் அடியில் அவள் மனம் கவர்ந்த நாயகன் 'அதிசய ராகம்..' என்று அவளை அழைத்துப் பாடலிசைத்தான்.. அந்த நினைவுப் புதையல்களைவிட்டு மீள மனமின்றி அல்லவா அவள் அங்கேயே வாசம் செய்கிறாள்..?

இந்தக் குளக்கரையில்தான் அவன் வீணை மீட்டுவதை அவள் கேட்டு பிரமித்தாள்.. இந்தக் குளக்கரையில்தான் அவளது வேண்டுகோளுக்காக.. அவளுக்கான பிரத்யேகப் பாடலை அவளுக்கு மட்டும் என்று அவன் பாடினான்.. இந்தக் குளக்கரையில்தான் அவளை மிதிலையின் மைதிலி என்று சொன்னான்.. இந்தக் குளக்கரையில்தான் அவளிடம் பிரிவைக் கூறி விடை பெற்று பிரிந்து சென்றான்..

'எங்கே சென்றிருப்பான்..?' தவித்தது அவள் மனது.

"இளைப்பாற வரவில்லையா..? பின் எதன் பொருட்டு எங்களின் இல்லத்திற்கு வருகை தந்தீர்கள்.. விருந்தாடவா..?"

அவள் கேட்ட போது அவன் நகைத்தான்..

"ஹா.. ஹா.. அதற்கான பொழுதும் எனக்கு இல்லை.."

"தாம் யார்..?"

"உனது பார்வையில் நான் ஒரு நாடோடி அல்லவா..? அவ்விதமே இருந்து விட்டுப் போகிறேன்.."

"என்னிடம் மெய்யுரைக்க மாட்டீர்களா..?"

"பொய்யுரைக்கவும் மாட்டேன்.. ஏன் மைதிலி.. நான் நாடோடியென்றால் எனை மதித்து உரையாட மாட்டாயா..?"

அவன் கேள்வியில் அவள் துணுக்குற்று நிமிர்ந்தாள்.. கண்கள் குளமாக.. அதரங்கள் துடிக்க.. அவனையே இமைக்காமல் பார்த்தாள்.. அதில் தொனித்த குற்றச் சாட்டில் அவன் மௌனமாகி விட்டான்.. அவன் பார்வை மட்டும் காருண்யத்தைப் பொழிந்து கொண்டிருந்தது.. அந்தக் காருண்யம் அவள் மனதை வாள் கொண்டு அறுத்தது..

எழில் பொங்கும் தாமரைக் குளக்கரையில் யௌவனம் ததும்பும் அழகான பருவ மங்கையுடன் உரையாடும் கம்பீரமான ஆண்மகனுக்கு காதல் பார்வையல்லவா வர வேண்டும்..? காருண்யப் பார்வை ஏன் வந்தது..? எதற்காக வந்தது..?

அவன் காருண்யம் கொள்ளும் விதத்தில் மைதிலியின் வாழ்க்கைத்தரம் இல்லையே.. சிற்றரசரின் பாரம்பர்யத்தில் பிறந்து வளர்ந்தவள்.. செல்வம் நிரம்பிய இல்லத்தைச் சேர்ந்தவள்.. தாய், தந்தை இல்லாத குறை தெரியாமல் வளர்க்கும் தமையனையும், அண்ணியையும் கொண்டவள்.. காஞ்சியிலேயே அழகுமிகு மங்கை எனப் பெயர் பெற்றவள்.. உயர்தர ஆடைகளையே அணிபவள்.. வைர, வைடூரிய ஆபரணங்களைக் கொண்டவள்.. அவள்

ஆலய வழிபாட்டிற்குச் சென்று வர என்று அவளுக்கென்று தனி ரதமே உள்ளது..

அத்தகையவளை.. அந்த இல்லத்தில் வழிப் போக்கனைப் போல் நுழைந்து விருந்தினனாக சில தினங்கள் தங்கிய.. பெயர்.. ஊர்.. தெரியாத வாலிபன் காருண்யப் பார்வையைப் பார்த்தால் அவள் என்னவென்று பொருள் கொள்ளுவாள்..?

'ஏன் இந்தப் பார்வை..?'

அவனிடம் கேட்டு விடலாமா என்று நினைத்தாள்.. சங்கோஜமாக இருந்ததில் அந்தக் கேள்வியைத் தவிர்த்து விட்டு..

"தற்போது சென்றால் எப்போது வருவீர்கள்..?" என்று கேட்டு வைத்தாள்..

"எங்கு..?" அவன் பார்வை அவளை ஊடுறிவியது..

"எங்களின் இல்லத்திற்கு.." அவள் தடுமாறினாள்..

"இங்கு ஏன் நான் வரவேண்டும்..?" நிதானமான அவனது கேள்வியில் துணுக்குற்று தலை நிமிர்ந்தாள்..

இதற்கு என்ன பொருள்..? அவன் தேடி வர வேண்டிய எதுவும் அவள் இல்லத்தில் இல்லையென்றல்லா பொருளாகிறது..? அவ்வில்லத்தில் அவள் இல்லையா.. அவளுக்காக அவன் வருகை புரிய மாட்டானா..?

"காஞ்சிக்கு வருகை புரியவே மாட்டீர்களா..?"

"காஞ்சிக்கு வருகை புரிய மாட்டேனென்று எவர் சொன்னது..?"

"தாம் சொன்னீர்களே.."

"எப்போது..?"

"தற்போது.."

"தமது இல்லத்திற்குத்தான் வருகை புரிய மாட்டேனென்று சொன்னேன்.. காஞ்சிக்கு அல்ல.."

"அவ்வாறெனில்.. காஞ்சிக்கு வருகை புரிந்தால் எமது இல்லத்தை விடுத்து வேறு எவர் இல்லத்தில் தங்குவீர்கள்..?"

அவளது படபடத்த கேள்விக்கு விடையளிக்காமல் அவன் நகைத்தான்.. அவனது பார்வையின் காருண்யம் மிகுதியானது.. அதில் துயரம் தோய்ந்திருப்பதாக அவளுக்குத் தோன்றியது..

'கற்பனை..'

தனக்குள் சொல்லிக் கொண்டாள்.. அவன் ஏன் துயரம் கொள்ள வேண்டும்..? அதற்கான அவசியம்தான் என்ன..? நாடோடி போல நாடுகளை வலம் வருபவனுக்கு என்ன துயர் இருக்க முடியும்..?

"மைதிலி..!"

மென்மையாக அவன் அழைத்தான்.. பரிவு ததும்பிய அவனது குரலில் மைதிலியின் மனம் ததும்பியது.. பிரிவுத் துயருடன் விழிநீர் ததும்ப அவனைப் பார்த்தாள்.. அவன் அசைவற்று நின்றான்..

"நீ சின்னஞ்சிறு பெண்..!"

"அது தவறா..?"

கண்கள் கலங்கிய அந்த நிலையில் வெடுக்கென்று வெளிவந்த மைதிலியின் பதிலில் அவன் மெலிதாக புன்னகைத்தான்..

"இதில் உனது தவறு என்று எதுவுமில்லை.. எனது தவறு என்றும் எதுவுமில்லை.. இயல்பான நிகழ்வுகளுக்கு எவரும் பொறுப்பாளியாகி விட முடியாது.."

ஆழ்ந்த சிந்தனையுடன் அவன் பேசினான்.. இங்கு என்ன நிகழ்ந்து விட்டது என்று இவன் இவ்விதமான தத்துவங்களை உதிர்க்கிறான் என்று அவள் எரிச்சல் கொண்டாள்..

மேன்மாடத்தின் உப்பரிகையில் சித்திரத்தை தீட்டியவன்.. தாமும் ஓர் சித்திரத்தைப் போலவே உள்ளாய் என்று அவளைக் கட்டியணைத்து முத்தமிட்டானா..?

அல்லது.. தாமரைக் குளத்தின் பவளமல்லி மரத்தின் அடியிலிருந்த மேடையில் அவளை வர்ணித்து வசியப் பொடியைத் தூவியவன் அவளது அழகில் சொக்கிப் போய் அவளை ஆண்டு விட்டானா..?

இவை எதுவும் இல்லாமல்.. அன்பே.. நீ அங்கே.. நான் இங்கே.. என்று ஏழடிகள் இடைவெளி விட்டு தள்ளி நின்று கலந்துரையாடி விட்டு.. தற்போது நினைத்து நினைத்து தத்துவோபதேசம் செய்வது என்ன பணிக்காக..?

"அப்படியென்ன நிகழ்ந்து விட்டது..?"

அவளது வேகமான கேள்வியில் அவன் முகத்தில் ஆயிரமாயிரம் உணர்வலைகள் வந்து போயின.. ஊடுறிவிய அவனது பார்வையின் வேகம் தாளாமல் அவள் தலை கவிழ்ந்தாள்.. அவனது முகம் கனிந்தது..

"எதுவும் நிகழவில்லையெனில் எதன்பொருட்டு கண்கலங்குகிறாய்..?" இதமாக வினவினான்..

"அது.. அது.." வார்த்தைகள் வெளிவராமல் அவள் தடுமாறினாள்..

"மைதிலி.."

"பெண்ணே என்று அழைப்பீர்களே.."

"உனக்குத்தான் அவ்வழைப்பு பிடிக்காதே.."

"அதன் பொருட்டு மாற்றிக் கொண்டீர்களா..?"

"ஆம்.."

"தாங்கள் புறப்படுவது கூடத்தான் எனக்குப் பிடிக்கவில்லை.. தங்களது புறப்பாட்டை நிறுத்தி விடுவீர்களா..?"

அவளது கேள்விக்கு 'இல்லை..' எனும் விதமாக இடம், வலமாக அவன் தலையை அசைத்தான்.. மைதிலியின் மனதில் மலையளவு பாரம் ஏறி அமர்ந்தது.. கனத்த மனதுடன் அவனிடம் பார்வையால் யாசித்தாள்..

அவன் காருண்யம் பொங்க பார்த்து வைத்தானே தவிர.. சம்மதம் எனும் விதத்தில் தலையை அசைக்க வில்லை..

"நான் புறப்பட்டுத்தான் ஆக வேண்டும் மைதிலி.."

"எங்கே..?"

"எனது நாட்டுக்கு..?"

"உமது நாடா..? நாடோடிக்கு நாடேது..?"

"இந்த நாடோடிக்கு நாடுண்டு.."

"எப்போது வருகை தருவீர்கள்..?"

"வெகு விரைவில்.."

"எமது இல்லத்திற்குத்தானே.."

"இல்லை.. காஞ்சிக்கு.."

"இரண்டும் ஒன்றுதானே.."

"இல்லை மைதிலி.. இரண்டும் வேறு வேறு.. அதை தற்போது நீ அறிய வேண்டாம்.."

"புதிர் போடுகிறீர்களா..?"

"வெகு விரைவில் இப்புதிர்கள் விடுபடும்.."

அவ்விதம் விடுபடும் நாளில் அப்புதிர்களைத் தாங்கிக் கொள்ளும் சக்தி அவளின் இதயத்திற்கு இருக்குமா என்று அவன் மனம் வினவியது.. அவனது பார்வையின் காருண்யம் மிகுந்தது..

கொன்றுதின்ற அந்தக் காருண்யப் பார்வையில் நிலை குலைந்தாள் மைதிலி.. அவள் மனம் அவள் வசத்தில் இல்லை.. அதை அவனிடம் சொல்ல வரும்போது.. அவன் அங்கிருப்பதாகவே இல்லை என்று அறிவிக்கிறானே..

"எமது இல்லத்தில் தங்காமல் எங்கு தங்குவீர்கள்..?"

"அப்போது அதையும் நீ அறிவாய்.."

"இப்போதே அதைச் சொல்ல மாட்டீர்களா..?"

இறைஞ்சிய அவள் குரலுக்கு 'மாட்டேன்' என்று மறுக்கும் விதமாக இடம் வலமாக அவன் தலையை அசைத்தான்..

அவளது மனதை வருத்தும் சொற்களை அவன் உதிர்க்க விரும்பவில்லை என்பதில் அவள் கலங்கினாள்.. இவ்விதமாக பரிவை உதிர்க்கும் அழகுத்திருமகன்.. அவளிடம் எவ்விதமான உரிமை வார்த்தைகளையும் உதிர்க்காமல் பற்றுதலின்றி விலகிச் செல்கிறானே என்று மறுகினாள்..

"என் நினைவு தங்கள் மனதில் இருக்குமா..?"

அவளது குரல் நடுங்கியது.. அவன் விழிகளில் சிறுமின்னல் வந்து போவதையும்.. இமையோரம் துடிப்பதையும் அவள் கண்டாள்.. துரிதத்தில் தன்னை சரிப்படுத்திக் கொண்டவன் அவளது கேள்விக்கு ஆம் என்றோ.. இல்லை என்றோ பதிலளிக்காமல் தலையும் அசைக்காமல்..

"நாழிகை ஆகிறது.. நான் செல்ல வேண்டும்.." என்று மட்டுமே சொன்னான்..

"எனது கேள்விக்குப் பதில் என்ன..?"

"சில கேள்விகளுக்குப் பதில் உரைக்க முடியாது மைதிலி.. இருப்பினும் ஒன்றை உனக்குச் சொல்லுவேன்."

தீவிரமான அவனது குரலில்.. இறுகிக் கல்லை விடக் கடினமான அவனது முகத்தில்.. அவள் முகம் பார்க்காமல், விண்ணைப் பார்த்த அவன் பார்வையில்.. அவள் மனதை வருத்தும் எதையோ அவன் உரைக்கப் போகிறான் என்பதை அவள் உணர்ந்து விட்டாள்..

'சொல்லாதே..' அவளது இதயம் நடுங்கியது..

அவளது இதயத்தின் குரல் அவன் இதயத்தைத் தொட்டு விட்டதோ என்னவோ.. அவன் பேச இயலாமல் சில நொடிகள் மௌனித்தான்.. பின் சிறு நெடுமூச்சுடன் பேசினான்..

"சலனங்களுக்கு உன் மனதில் இடம் கொடுத்து விடாதே.."

கரகரத்த அவன் குரல் உணர்த்திய உண்மையில் மைதிலி வெகுண்டாள்.. இதன் பொருள் என்ன..? அவன் மீதான அவளின் காதல் அவன் பார்வையில் சலனமாகத் தோன்றுகிறதா..?

"சலனத்திற்கும்.. நேசத்திற்கும் பெருத்த வித்தியாச முண்டு.. எதையெதையோ அது வேறு, இது வேறு என்று பொருள் கொள்ளும் தமக்கு இவையிரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாட்டைத் தெரியாமல் போனதேன்..?"

"அல்ல மைதிலி.. நேசத்தையும் தாம் அளவோடு நிறுத்திக் கொள்வது நன்மை பயக்கும்.."

"எவருக்கு நன்மை பயக்கும்..?"

"தமக்கு.."

"எமது நன்மை, தீமையைப் பற்றித் தாம் முடிவு செய்ய வேண்டாம்.. யாமே அதை முடிவு செய்து கொள்வோம்.. மனதில் ஒன்று.. வாக்கில் ஒன்று என இருக்கும் தாங்களா எனக்குப் புத்திமதி சொல்வது..?"

"மனதில் ஒன்று.. வாக்கில் ஒன்று என நான் இருந்தேனா..? இது என்ன புதுப்பழி..?"

"பழியல்ல.. உண்மை.. தமது மனதில் எனதுருவம் ஆழப் பதியாமலா.. எனது உருவத்தை தத்ரூபமாக சித்திரத்தில் வடித்தீர்கள்..?"

மைதிலி குமுறினாள்.. அவனது நெற்றியில் கோடுகள் விழுந்தன.. மனம் குமுறும் அந்த அழகிய மங்கையை வேதனையுடன் அவன் பார்த்தான்..

"ஒருவரின் உருவம் நம் மனதில் ஆழப் பதிந்திருந்தால் அவர் மீது நாம் ஆழ்ந்த நேசம் கொண்டிருக்கிறோம் என்று அர்த்தமாகாது மைதிலி.."

"ஆஹாஹா..! இவர்தான் அனைத்து உணர்வு களுக்கும் அகராதி அளிக்கும் உணர்வியல் நிபுணர்.. தங்களின் அகராதியில் அதற்கு வேறு என்ன அர்த்தமாம்..?"

அவன் பதில் சொல்லவில்லை.. மைதிலியின் கண்கள் சினத்திலும் குமுறலிலும் கலங்கிச் சிவந்திருந்தன.. கனமான கண்ணீர்த்துளிகள் விழுந்து அவளது கன்னத்தை நனைத்தன.. அதில் அவன் துயர் கொண்டான்..

"அதற்குத்தான் பொருள் இல்லை.. இதோ இந்த.. தாமரைக் குளத்தின் கரையில்.. பவளமல்லி மரத்தின்

அடியில் உள்ள மேடையில்.. எனக்காக பிரத்யேகமாக பாடல் இசைத்தீர்களே.. அதற்கு என்ன அர்த்தமாம்..?"

"நீ வேண்டிக் கொண்டாய்.. நான் பாடினேன்.."

"பாடினீர்கள்.. என்ன பாடலைப் பாடினீர்கள்..? ஏகாம்பரேஸ்வரரையும், அருளாளப் பெருமாளையும் அழைத்தா பாடினீர்கள்..? அதிசய ராகம் என்று என்னை அழைத்தல்லவா பாடினீர்கள்..? மிதிலையின் மைதிலி என்றீர்கள்.. அந்த தேவதை கிடைத்தால் அது தங்களின் யோகம் என்றீர்கள்.."

"இசைப் பாடலை தனித்துப் பொருள் கொள்ளக் கூடாது.."

"ஆஹாஹா..! இவர் மிதிலையின் மைதிலி என்பாராம்.. அதன் பின்னால் தனித்துப் பொருள் கொள்ளக் கூடாது என்பாராம்.. எந்த ஊர் நியாயம் இது..?"

அவளின் குமுறல் மிகுதியானது.. அவன் அவள்மீது பச்சாதாபம் கொண்டான்.. விசனம் ததும்பிய அவனது விழிகள்.. அவன் முதன் முதலில் கண்ட கள்ளமற்ற சின்னஞ்சிறு பெண்ணின் உள்ளம் எங்கே என்று துழாவின..

அவள் மனதில் காதல் எனும் கள்ளம் புக அவனே காரணமாகி விட்டானே.. அவன் மனம் நைந்தது..

"மன்னித்துவிடு பெண்ணே..!" அவன் மனமார மன்னிப்புக் கேட்டான்..

"எனது பெயர் மைதிலி..! தமது வார்த்தைகளில் சொல்வதானால் மிதிலையின் மைதிலி.." அவள் குமுறினாள்..

"பெண்மை ததும்பும் தம்மை பெண்ணே என்றே அழைக்க விரும்புகிறேன்.. தமது கள்ளமில்லா மனதில் நான் சலனத்தை ஏற்படுத்தியிருந்தால் அதன் பொருட்டு எனை மன்னித்து விடு.."

"அது சலனம் அல்ல.."

"எனக்கு அது சலனம் தான்.."

"அது மரியாதைக்குரிய உணர்வு.. உன்னதம் நிரம்பியது.."

"இருக்கலாம்.. இல்லையென்று நான் சொல்ல வில்லையே.. ஆனால்.. ஒரு போதும் அவ்வுணர்வுகளுக்கு நான் பாத்திரமாக இயலாது பெண்ணே..!"

"அதுதான் ஏன்..?"

"ஏனெனில்.. எனது மனம் எனது வசத்தில் இல்லை.."

உணர்ச்சிப் பெருக்குடன் அவன் உரைத்ததை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை.. மழலையாக விழித்தாள்.. அவன் காருண்யம் கொண்டான்.. அதைத் தாள முடியாமல் அவள் தவித்தாள்..

"தமக்கு இது புரியாது.. நான் கர்மவீரன்..! கடமையாற்ற காஞ்சிக்கு வந்தவன்.. இனியும் வருகை தரவிருப்பவன்.. எனது சூளுரைகளையும், சபதங்களையும் நீ அறிய மாட்டாய்.. என் வாள் முனையின் வலிமை

பற்றியும் நீ அறிய மட்டாய்.. நீ நாடோடி என அறிந்து பழகிய இந்த வழிப்போக்கன் எவன் என்ற உண்மை ஓர்நாள் உனக்குத் தெரிய வரும்.. அப்போது உனது நேசத்தை நான் ஏற்க முடியாமல் விலகிச் சென்றதற்கான காரணத்தை நீ அறிவாய்.."

அவன் புறப்பட யத்தனித்தான்.. மைதிலி பதறிப் போனவளாக அவன் கரம் பற்றி நிறுத்தினாள்.. கடினமான முகத்துடன் அவளது கரத்தை விலக்கி நிறுத்தினான் அவன்..

"வேண்டாம்.. என்னை ஸ்பரிசிக்க முனையாதே.. நான் தீயின் தணல்..!"

"அச்சுறுத்துகிறீர்களா..?"

"அறிவுறுத்துகிறேன்.."

அவன் புரவியில் ஏறி விரைந்து விட்டான்.. நந்தவனத்தின் வாயிலுக்கு ஓடோடிச் சென்ற மைதிலியின் விழிகளுக்கு புரவி எழுப்பிச் சென்ற புழுதிப் படலம்தான் தெரிந்தது.. அவளது செவிகளில் ஒலித்த புரவியின் குளம்போசை தேய்ந்து.. கரைந்து பின் மறைந்து விட்டது..

அவனுடன் சென்றுவிட்ட அவளது உயிரின் துடிப்பை உணர்ந்தவளாக வெகுநேரம் அங்கேயே நின்றிருந்தாள் மைதிலி.. மனதில் அவன் தீட்டிய சித்திரம் ஆடியது.. செவிகளில் அவன் பாடிய பாடல் ஒலித்தது..

"ஒரு *புறம் பார்த்தால்..*
மிதிலையின் மைதிலி..!

மறுபுறம் பார்த்தால்..
காவிரி மாதவி..!"

அவனுக்கு அவள் யார்..? மைதிலியா.. அல்லது மாதவியா..?

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



9

ஏதோ சொல்ல நினைத்தேன் - அது
என்னவென்பதை மட்டும் மறந்தேன்..

அரிது.. அரிது.. என்று ஔவையார் பாடிய அத்தனை அரிதிலும் அரிது.. அவளுடன் தாமோதரன் இணக்கமாகப் பேசுவது என்பதில் இதம் கொண்டாள் யாமினி..

அந்த இதம் வெகு நேரம் நீடிக்கவில்லை.. சட்டென்று கடுமையான முகபாவத்திற்கு மாறிய தாமோதரன்..

"சித்தார்த்.. எங்கே..?" என்று சிடுசிடுத்தான்..

"பிஸினெஸ் லன்ச்சுக்குப் போயிருக்கார்ன்னு சொன்னேன் சார்.. மறந்துட்டிங்களா..?"

"ஏன்...? இன்னொரு தடவை சொல்ல மாட்டிங்களா..? சொன்னா வாய் வலிச்சிருமா..?"

"இல்லை சார்.."

"என்ன இல்லை.."

"எனக்கு வாய் வலிக்காது சார்.."

யாமினிக்கு தலை வலிக்க ஆரம்பித்தது.. இவன் வேண்டுமென்றே படுத்துகிறான் என்று நினைத்துக் கொண்டாள்.. வலிய வரவழைத்துக் கொண்ட கோபம் என்னும் முகமூடிக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு பூச்சாண்டியைப் போல அவளை மிரட்ட முயல்கிறான்..

அவனைப் பார்த்தாள்.. பூச்சாண்டி முகபாவத்துடன் அவனுடைய முகபாவம் பொருந்தி வருகிறதா என்று ஆராய்ந்தாள்..

'வாரான் வாரான் பூச்சாண்டி..
ரயிலு வண்டியிலே..
வாரணாசி ரோடு தாண்டி
மெயிலு வண்டியிலே..'

நேரம் காலம் தெரியாமல் அவள் மனதில் பூச்சாண்டிப் பாட்டு ஒலித்து வைத்தது.. அந்தப் பாட்டின் வரிகளில் அவளுக்குச் சிரிப்பு வந்து தொலைக்க.. தாமோதரன் அவளை உறுத்துப் பார்த்தான்.. யாமினி வாயை மூடிக் கொண்டாள்..

"என்ன..?" தாமோதரன் அதட்டினான்..

"நத்திங் சார்.."

"நத்திங்ன்னு சொல்லிக்கிட்டு அத்தனை அழும்பையும் பண்ணிக்கிட்டு உட்கார்ந்திருக்கீங்க.. நேற்று வரைக்கும் சித்தார்த்தனுக்குப் பிக்ஸ் ஆகாத பிஸினெஸ் லன்ச் இன்றைக்கு மட்டும் எப்படி பிக்ஸ் ஆச்சு..?"

பேசாமல் யாமறியேன் பராபரமே என்று சொல்லி விடலாமா என்று யோசித்தாள் யாமினி.. என்னவோ கிரிக்கெட் பெட்டிங்கை பிக்ஸ் பண்ணினதைப் போல.. அவளை தாமோதரன் விசாரித்த ரேன்ஜில் அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது..

“திடிர்ன்னு அந்த ஃபாரின் காண்ட்ராக்ட் காரங்க சைன் வாங்க வந்திட்டாங்க சார்.. எம்.டி சார் அவசரமாக் கிளம்பிப் போனார்.. உங்களிடம் சொல்லலையா..?”

யாமினி என்னவோ இயல்பாகத்தான் கேட்டாள்.. ஆனால்... அவளுடைய கேள்வி தாமோதரனின் சுய மரியாதையை சீண்டி விட்டு விட்டது.. ஒரு தினுசாக யாமினியைப் பார்த்தான்..

‘கடவுளே..! என்னத்தைச் சொல்லித் தொலைச் சேன்..? ஏன் இப்படிப் பார்க்கிறான்..?’

யாமினிக்கு ஏஸி அறையிலும் வியர்த்துக் கொட்டியது..

“ஸோ.. நேத்து வந்த உனக்குத் தெரிஞ்ச இன்பர்மேசன்.. அவன் கூடவே ஸ்கூல்ல இருந்து ஒன்றாப் படிச்சு குப்பை கொட்டின எனக்குத் தெரியலைன்னு சொல்லிக் காண்பிக்கிற..?”

தாமோதரனின் இடுங்கிய கண்களில் அரண்டு போனாள் யாமினி.. அவள் அந்த அர்த்தத்தில் சொல்ல வில்லையே என்ற பதட்டத்தில் அவன் அவளை ஒருமையில் கூப்பிட்டதை கவனிக்கவே இல்லை..

"நோ சார்.. நான் அப்படி மீன் பண்ணலை.."

"நோ.. நீ அப்படித்தான் மீன் பண்ணின.. இந்தக் கம்பெனியில ஜி.எம்மை விட பெர்சனல் செக்கரட்டரிக்கு பவர் அதிகமாகிருச்சில்ல..?"

"சார்.. ப்ளீஸ்.."

"நீ ஏம்மா ப்ளீஸ் போடனும்.. உன் பவர் என்னன்னு தெரியாம உன்கிட்டக் கேள்வி கேட்ட நான்தான் ப்ளீஸ் போடனும்.. உன்கிட்ட எனக்கென்ன பேச்சு..? நான் சித்தார்த்தன்கிட்டயே பேசிக்கறேன்.."

இதைமுதலிலேயே செய்து தொலைத்திருந்தால் என்ன என்று மனதுக்குள் எரிச்சல் பட்டாள் யாமினி..

இப்படியா ஒருவன் முன்னால் போனால் கடிப்பேன்.. பின்னால் போனால் உதைப்பேன் என்று அடம் பிடிப்பான்..?

அவள் எப்படிப் போனாலும் தாமோதரன் கடித்துக் குதறுவான் என்பது அவளுக்குப் புரிந்து விட்டது.. அவனுடைய நோக்கம் ஒன்றே ஒன்றுதான்.. அது யாமினி அந்தக் கம்பெனியில் வேலை செய்யக் கூடாது..



10

மன்னவன் என்பதனை மனது அறியுமா..?

மிதிலையின் மைதிலியாக அவளை அவன் நினைத்திருந்தால் இணை பிரியாமல் என்னுடன் வா.. வனவாசம் சென்றாலும் சேர்ந்தே செல்லலாம் என்று உடன் அழைத்துக் கொண்டல்லவா போயிருப்பான்..? அவ்வாறு அவன் செய்யவில்லையே..

அவ்வாறெனில் அவன் மனதில் அவள் யாராக இருக்கிறாள்..? மாதவியாகவா..?

மைதிலியின் மனம் குமுங்கியது.. தனக்குள் மறுகிக் கொண்டிருந்தவளின் தோள் தொட்டு அசைத்தாள் கோசலை..

“செய்தி அறிவாயா..?”

பரபரப்புடன் அவள் கூற.. அசுவராஸ்யமாக தாமரைக் குளத்தில் கற்களை விட்டெறிந்த வண்ணம்..

“என்ன செய்தி..?” என்று கேட்டாள் மைதிலி..

“என்னடி ஆனது உனக்கு..? காஞ்சியை போர்மேகம் சூழ்ந்துள்ளது.. யுத்தம் ஆரம்பமாகப் போகிறதாம்.. நீயானால் எவருக்கு வந்த விருந்தோ என்று தாமரைக் குளத்தில் உள்ள மலர்களை எண்ணிக் கொண்டுள்ளாயே..?”

“என்னது..?”

தன் கவலை மறந்து கோசலையை ஏறிட்டாள் மைதிலி.. தோழியின் பரபரப்பு அவளையும் தொற்றிக் கொண்டது..

“காஞ்சியை போர் மேகம் சூழ்ந்து விட்டதா..?”

“ஆம் மைதிலி.. ஆம்..”

“எவர் படையெடுத்திருப்பது..? சுல்தானா..?”

“காஞ்சியை ஆளும் சம்புவரையர்கள்தான் சுல்தானுக்கு கப்பம் கட்டும் சிற்றரசர்கள் ஆயிற்றே.. சுல்தானுக்கு ஆதரவான சம்புவரையர்களின் மீது சுல்தான் ஏன் படையெடுத்து வரப் போகிறான்..?”

“அப்பாடி..”

மைதிலி அச்சம் அகன்றவளாக நிம்மதிப் பெருமூச்சை விட்டாள்..

“ஒர்நொடி அஞ்சி விட்டேன் கோசலை..”

“அச்சம் தவிர்..”

“நீ எனக்குச் சொல்கிறாயா..? படையெடுத்து வந்திருப்பது எவர்..?”

“அதையேன் கேட்கிறாய்..”

“என்னடி சொல்கிறாய்..? கொடூர மனம் படைத்த அரசன் எவனாவது படையெடுத்து வந்து விட்டானா..?”

“இல்லை மைதிலி.. கொடூர மனம் படைத்த சுல்தானிடமிருந்து நமைக் காக்கும் கரம் வந்துள்ளது..”

"காக்கும் கரமா..?"

"ஆம் காக்கும் கரம்தான்... படையெடுத்து வந்திருப்பது எவர் தெரியுமா..?"

"எவர்..?"

"விஜயநகரப் பேரரசர் புக்கராயரின் புதல்வர்.. இளவரசர் குமார கம்பண்ணன் படையெடுத்து வந்துள்ளார்.. அறிவாயா.. விஜயநகரப் பேரரசில் கோவில் சொத்துக் களைக் கண்ணுக்குள் வைத்துக் காப்பார்களாம்.."

"அவ்வாறா உரைக்கிறாய்..?"

"என்னடி இது..? உனது அண்ணி பிறந்தது விஜய நகரத்தில்தானே.. அவர்கள் இவற்றையெல்லாம் உன்னிடம் கூறியதேயில்லையா..?"

"எங்கே..? அவர்களின் தூரத்து உறவு முறையில் பிறந்த அரசகுமாரி ஒருவர் கவிதை இயற்றுவதிலும்.. காவியம் தீட்டுவதிலும் தலைசிறந்தவளாம்.. அவளது பெருமைகளை மட்டுமே வாய் வலிக்கும் வரை கூறுவார்கள்.."

"ஆச்சரியமாக உள்ளதே.. பெண்கள் யாழ் மீட்டவும்.. பாடல் இசைக்கவும் தான் பிரியப்படுவார்கள்.. இப்பெண் எழுத்தாணி கொண்டு காவியம் தீட்டுகிறாளா..? அருமை.. அவள் பெயர் என்ன..?"

"கங்காதேவியாம்.."

"என்னவோ போ மைதிலி.. மதுரையை ஆளும் சுல்தான் சிக்கந்தர்ஷாவின் கொடுமைகள் நாளுக்கு நாள்

அதிகரிக்கிறதாம்.. இந்து மதத்தினரின் கோவில்கள் இடிக்கப் படுகின்றனவாம்.. மதுரை மீனாட்சியம்மனின் ஆலயம் இழுத்து மூடப்பட்டு விட்டதாம்.. மக்கள் தெய்வச்சிலைகளைப் பாதுகாக்க மண்ணில் புதைத்து வைக்கிறார்களாம்.. திருவரங்கத்தின் ரங்கநாதரின் திருவுருவச்சிலை திருப்பதி திருமலையின் வனத்தில் மறைத்து வைக்கப்பட்டதாம்.. பின்னர் திருப்பதி கோவிலில் தனியாக கர்ப்பகிரகம் கட்டி அதில் ரங்கநாதரின் சிலையை வைத்துப் பூஜை செய்கிறார்களாம்.."

ஆழ்ந்த பக்தையான மைதிலியின் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.. கோசலை சொல்வதைக் கேட்டவளின் மனம் தாளவில்லை.. அவள் வணங்கும் தெய்வங்களிடம் நியாயம் கேட்டு மனதுக்குள் முறையிட்டாள்..

"மதுராபுரியில் திருவிழாக்கள் தடை செய்யப்பட்டு விட்டனவாம் மைதிலி!. அங்குள்ள மக்கள் அண்டை நாடுகளில் புகலிடம் கேட்டுக் குடியேறி வருகிறார்களாம்.. இவ்வாறு விஜயநகரத்தில் குடியேறிய மக்கள் தாம் அனுபவித்த துயர்களை விஜயநகரப் பேரரசின் ஹரிஹரரிடமும்.. புக்கராயரிடமும் சொல்லிப் புலம்பினார் களாம்.. புக்கராயர் தமது மகன் குமார கம்பண்ணனை அழைத்து சுல்தானை வீழ்த்தி விட்டு வா என்று ஆணையிட்டாராம்.. அதன்படி குமார கம்பண்ணன் காஞ்சியின்மீது படையெடுத்து வந்துள்ளார்.."

"என்னடி இது.. தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனை மரத்தில் நெறி கட்டுகிறது என்கிறாய்..

மதுராபுரியின் மீது படையெடுத்துச் செல்வதை விட்டுக் காஞ்சியின் மீது ஏன் அந்த இளவரசர் படையெடுத்து வரவேண்டும்..? சுல்தான் என்ன காஞ்சியிலா வாசம் செய்கிறான்..? அவன் வசிப்பது மதுராபுரியில் அல்லவா..?"

"சுல்தான் காஞ்சியில் வாசம் செய்யவில்லையென்ற மனக்குறை உனக்குள்ளதா..?"

"அடிப்பாவி..! நான் உனக்கு என்னடி தீங்கிழைத்தேன்..? இப்படி ஓர் பழியைத் தூக்கி என் தலையில் சுமத்துகிறாய்..?"

"தப்பித்தோம் என்று நினை.. நல்லவேளையாக காஞ்சியின் பக்கம் அவன் வரவில்லை.. சுல்தான் காஞ்சியில் வாசம் செய்யவில்லைதான்.. ஆனால் அவனுக்கு கப்பம் கட்டும் தொண்டை மண்டலத்தின் ராஜநாராயண சம்புவராயர் காஞ்சியில் அல்லவா வாசம் செய்கிறார்..? இவரை வென்று தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றினால்தானே குமார கம்பணனின் படை மதுரையை நோக்கி முன்னேற முடியும்..?"

இலகுவாகக் கூறிய கோசலையை வியப்புடன் பார்த்தாள் மைதிலி.. அவளுக்குத் தெரிந்த நாட்டு நிலவரங்களைக் குறித்த ஆச்சரியம் அவளுக்குள் வந்தது.. அவள் போல நாட்டைப் பற்றி ஆலோசிக்காமல்.. எவனோ ஒரு நாடோடியின் நினைவிலேயே உழன்று கொண்டிருக்கிறோமே என்று மனதுக்குள் வெட்கினாள் மைதிலி..

கோசலையுடன் பேசியபடி இல்லம் நோக்கிச் சென்றாள்.. வாசலிலே பதட்டமாகக் காத்திருந்த மலர்க்கொடி.. தோழியர் இருவரையும் கடிந்து கொண்டாள்.

“போர் ஆரம்பித்துள்ளது.. முன்போல நகர்வலம் வராமல் பருவம் எய்திய பெண்களாய்.. லட்சணமாய்.. இல்லத்துக்குள் பாதுகாப்பாய் இருந்து பழகுங்கள்..”

மலர்கொடியிடம் தலையை ஆட்டி விட்டு.. அவள் தலை மறைந்ததும் மைதிலியின் காதைக் கடித்தாள் கோசலை..

“பருவம் எய்திய பெண்கள் அனைவரும் லட்சணமாய் இருக்கிறார்களா..?”

மைதிலிக்கு நகைப்பு வந்தது.. அந்தச் சூழலை மறந்து பழைய மைதிலியாகி அவள் தனது தோழிக்கு விடையளித்தாள்..

“உன்னைக் குறித்துச் சொல்கிறாயா..? உன்னை விட அனைவருமே லட்சணமாகத்தான் உள்ளார்கள்..”

அதற்குள் இல்லத்திலிருந்து மலர்க்கொடியின் அழைப்பு வந்து விட்டது.. கோசலையை அவள் தாய் அழைக்க.. தோழியர் இருவரும் பிரிந்து அவரவரின் இல்லத்திற்கு ஏகினார்கள்..

பார்த்திபன் சுறுசுறுப்பாக இருந்தான்.. அவன் எங்கு செல்கிறான்.. என்ன செய்கிறான்.. என்று மைதிலிக்கு விளங்கவில்லை.. அதிகாலையிலும்.. அர்த்த ஜாமங்களிலும் அவன் இல்லத்திற்கு வந்து சென்றான்.. அதைக் குறித்த மைதிலியின் வினாவிற்கு..

"இது ஒரு விடுதலைப் போராட்டம் மைதிலி.. உனது தமையனும் இதில் பங்கெடுக்கிறார்.." என்று பதிலளித்தாள் மலர்க்கொடி..

"விடுதலைப் போராட்டமா..?"

"ஆம்.. உனக்கு இது புரியாது.. நீ கிள்ளி வளவனிடம் செல்.. அவனும் முல்லைக்கொடியும் உன்னுடன் விளையாடுவதற்காகக் காத்துக் கொண்டுள்ளார்கள்.."

'நான் என்ன மழலையா..?'

சினம் பொங்கினாலும்.. அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கிள்ளிவளவனை நாடிச் சென்றாள் மைதிலி..

போர் வலுத்தது.. தினமும் போர் பற்றிய செய்திகளை உடனுக்குடன் அனல் குறையாமல் மைதிலியிடம் கொண்டு வந்து சேர்த்தாள் கோசலை..

'இவளுக்கு மட்டும் எப்படி இவ்வளவு விவரம் கிட்டுகிறது..?'

மைதிலி மலைத்தாள்.. எங்கே.. எவ்விதம் விவரம் சேகரிப்பாளோ.. பக்கத்தில் இருந்து பார்வையிட்டதைப் போல அனைத்து விவரங்களையும் மைதிலியிடம் வந்து ஒப்பித்து விட்டுத்தான் கோசலை துயில் கொள்ளப் போவாள்..

ஓர்நாள் மாலையில் உற்சாகமாக ஓடி வந்தவள்..

"செய்தி தெரியுமா..? விஜயநகரப் பேரரசின் இளவரசர் குமார கம்பண்ணன் தொண்டை மண்டலத்தை வென்று விட்டார்.." என்றாள்..

“ஏண்டி.. இதுவரை நமை ஆண்டு வந்த சிற்றரசர் தோற்று விட்டார்.. அதை எண்ணிப் பார்த்தாயா..?” என்றாள் மைதிலி..

“அது என்ன தேவைக்கு..? ஆண்டது சம்புவரையர்களாக இருந்தாலும்.. அடிமைப் பட்டுக் கிடந்தது சுல்தானிடம் அல்லவா.. தொண்டை மண்டலம் இன்றிலிருந்து சுல்தானின் ஆட்சியிலிருந்து விடுபட்டு விட்டது..”

“அதைக்கூறு..”

மைதிலிக்கு உற்சாகமாக இருந்தது.. வெற்றியுடன் நகரப்பிரவேசம் செய்யும் குமார கம்பணனை வரவேற்க காஞ்சி மாநகரம் திருவிழாக் கோலம் பூண்டது.. இல்லங்கள் தோறும் அலங்கரிக்கப்பட்டன.. இல்லத்தின் வாசல்களில் நீர் தெளித்துக் கோலமிட்டனர்.. நகரத்தின் ஆடவரும், பெண்டிரும்.. புத்தாடை அணிந்து புது ஆபரணங்களைப் பூட்டி.. நகர்வலம் வரும் காஞ்சியின் புதிய அரசரான குமார கம்பண்ணனைக் காண வீதிகளில் திரண்டு நின்றார்கள்..

மைதிலி கோசலையுடன் வாய் பேசியபடி வரப்போகும் மன்னனைக் காண அவளது இல்லத்தின் வாசலில் நின்றிருந்தாள்..

“கேட்டாயா..? புதிய அரசர் அழகு மிக்கவராம்..” என்றாள் கோசலை..

“அதனால் நீ மாலை சூடப் போகிறாயா..?” மைதிலி தோலியைக் கேலி செய்தாள்..

"உஸ்ஸ்.. பெண்களா..! அமைதியாகப் பேசக் கற்றுக் கொள்ளுங்கள்.. வாசலில் நிற்கும் பொழுது இப்படியா பேசுவது..?" மலர்க்கொடி தோழிகளை கடிந்து கொண்டாள்..

"அமைதியாக எப்படியடி பேசுவது..?" மைதிலியின் காதில் முணுமுணுத்தாள் கோசலை..

"அந்த அம்மையாரிடம் வேண்டுமானால் அது பற்றிய பாடத்தைக் கற்றுக் கொண்டு வருவோமா..?" மைதிலி அண்டை இல்லத்தின் அன்னபூரணியைச் சுட்டிக் காட்டினாள்..

"நீ உள்ளாயே.."

கோசலை மைதிலியின் தோளைத் தட்டி நகைத்தாள்.. அதற்குள் கட்டியகாரர்களின் கட்டிய மொழிகள் கேட்க ஆரம்பித்து விட்டன.. வீதியின் முனையில் தோன்றிய பரபரப்பில்..

"நமது வீதியில் நகர்வலம் வரப் போகிறார் மன்னர்.." என்றாள் கோசலை..

புதிய மன்னர் எப்படி இருப்பார் என்பதைக் காண மைதிலிக்கும் ஆர்வமாகத்தான் இருந்தது.. விஜய நகரத்தின் இளவரசனைப் பற்றிய கீர்த்திகளைக் கேட்டதிலிருந்து குமார கம்பண்ணனின் மீது அவளுக்கு ஓர்விதமான மரியாதை தோன்றியிருந்தது.. நாடு பிடிக்கும் நோக்கமில்லாமல்.. இந்து சமயத்தையும், கோவில்களையும் பாதுகாக்க ஓர் மன்னன் படையெடுத்து வந்திருக்கிறான் என்றால் அவன் எப்படி இருப்பான்..?

"அதோ.. மன்னர்.."

கோசலை கூவினாள்.. அவள் சுட்டிக்காட்டிய திசையில் பார்த்த மைதிலியின் விழிகள் அகன்றன..

'இவனா..?...'

அங்கே.. முன்னும், பின்னும் பக்கவாட்டிலும் குதிரை வீரர்கள் புடை சூழ்ந்துவர.. யானையின் மீதிருந்த அம்பாரியில் கம்பீரமாக வீற்றிருந்தது வேறு எவருமல்ல..

எவனை நாடோடி என்று மைதிலி நினைத்துக் கொண்டிருந்தாளோ.. எவன் தன்னை ஓர் வழிப்போக்கன் என்று கூறிக்கொண்டு அவள் இல்லத்தில் விருந்தினனாக சில தினங்கள் தங்கிச் சென்றானோ.. அவன்தான் விஜயநகர சாம்ராஜ்யத்தின் இளவரசன் குமார கம்பண்ணனாக.. தொண்டை மண்டலத்தை வென்ற அரசனாக காஞ்சிக்குள் நகரப் பிரவேசம் செய்து கொண்டிருந்தான்..

மைதிலிக்கு கண்ணைக் கட்டிக் கொண்டு வந்தது.. நிற்க முடியாமல் அவள் தள்ளாடினாள்.. பற்று கோலைத் தேடும் கொடியைப்போல அவளது இல்லத்தின் தூணை இறுக்கிப் பற்றிக் கொண்டாள்..

அவளது இல்லத்தின் வாசலைக் கடந்த போது.. யானையின் மீதிருந்து அவன் ஓர்நொடி அவளைப் பார்த்தான்.. அவளது பிரமித்த பார்வையின் அதிர்ச்சியைக் கண்டவனின் முகம் மெலிதாக துயர் கொண்டது.. மறு நொடியில் பார்வையை விலக்கிக் கொண்டான்.. அவன்

அமர்ந்திருந்த யானை அவர்களுடைய இல்லத்தைக் கடந்து போய் விட்டது..

'மீண்டும் காஞ்சிக்கு வருவீர்களா..?'

'வருவேன்..'

'எமது இல்லத்திற்குத்தானே..'

'இல்லை...'

அன்று நடந்த உரையாடல் அவள் மனதில் ஓடியது.. காஞ்சிக்கு வருபவன் அவளது இல்லத்தில் தங்காமல் வேறு எங்கு சென்று தங்குவான் என்று அவள் எண்ணினாளே..

அவன் காஞ்சியின் அரண்மனையில் வாசம் செய்யப் போகிறான் என்பதை அறியாமல் போனாளே..

மிகப்பெரிய சாம்ராஜ்யத்தின் இளவரசனிடம்.. தொண்டை மண்டலத்தின் வருங்கால அரசனிடம் சென்று தான் சிற்றரசுப் பாரம்பர்யத்தில் பிறந்து வளர்ந்தவள் என்று பெருமை பீற்றிக் கொண்ட தனது மடமையை எண்ணி மனம் நொந்தாள் மைதிலி..

அவனா நாடோடி..? ஓரிடத்தில் நிற்காமல் அவன் சஞ்சாரம் செய்தது நாட்டைச் சுற்றவா..? இல்லையே.. நாட்டைக் காப்பாற்ற அவன் சஞ்சரித்திருக்கிறானே..

அதை உணராமல் அவனை வழிப்போக்கன் என்று அழைத்தாள்.. நாடோடி என்று நாமம் இட்டாள்.. அனைத்தையும் கேட்டும் அலட்டிக் கொள்ளாமல் நகைத்து

வைத்தானே.. அத்தருணங்களில் அவளைப் பற்றி அவன் என்ன நினைத்திருப்பான்..?

உலகம் தெரியாத பேதை என்றுதானே எண்ணியிருப்பான்..?

புரியாத புதிர்கள் பல ஓர்நாளில் விடுபடும் என்றானே.. அவை இப்பேறபட்ட புதிர்களாக இருக்கக் கூடும் என்று அவள் எண்ணிப் பார்க்கவில்லையே..

"கண்டாயா மைதிலி.."

கோசலை கூவினாள்.. அவளது கூவல் ஜனக் கூட்டத்தின் சலசலப்பில் அமிழ்ந்து மைதிலியின் செவியோரமாக ஒலித்தது.. எதைக் கண்டேன் என்று வினவக்கூடச் சக்தியில்லாமல்... உடலில் இருந்த சக்தியனைத்தும் வடிந்து விட்டதைப் போல தொய்ந்து சரிந்து திண்ணையின் தூணோடு தூணாக சாய்ந்து அமர்ந்தாள் மைதிலி..

அதை உணராதவளாக தானும் திண்ணையில் அமர்ந்தபடி கோசலை பேசிக் கொண்டிருந்தாள்..

"இவர் உன் இல்லத்தில் விருந்தினராக சில தினங்கள் தங்கிச் சென்றவர்.."

மைதிலி அறியாததைச் சுட்டிக் காட்டுகிறவளைப் போலச் சொன்னாள் கோசலை.. ஆத்திரம், இயலாமை, துயரம் என்று பல்வேறு உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டிருந்த மைதிலி..

"அதற்கு என்ன..?" என்று எரிந்து விழுந்தாள்..

"அதற்கு என்னவா..? என்னடி இத்துணை இலகுவாக சொல்லிவிட்டாய்..? விஜயநகரப் பேரரசின் இளவரசரும்.. தொண்டை மண்டலத்தின் தற்போதைய அரசருமான குமார கம்பண்ணா உனது இல்லத்தில் விருந்தினராக சில தினங்கள் தங்கிச் சென்றுள்ளார் என்பது இலகுவில் எடுத்துக் கொள்ளப்படக் கூடிய விவரமா..?"

"என்ன செய்யலாம் என்கிறாய்..? அவர் தங்கியிருந்த இல்லத்தை இடம், வலமாக திருப்பி வைத்து விடலாமா..?"

"யாரடி இவள்..! எப்பேற்பட்ட புகழ் உனைத் தேடி வந்துள்ளது என்பதை அறியாமல் மழலைத்தனமாக பிதற்றுகிறாளே.."

"மழலை.. கிழலை என்றால் மண்டையை உடைத்து விடுவேன்.."

"எதற்காக இந்தக் கொலைவெறி..? உன்னிடத்தில் நானிருந்தால்.."

கோசலை என்னவோ.. அவளுடைய இல்லத்தில் குமார கம்பண்ணன் விருந்தினனாக தங்கிச் சென்றிருந்தால்.. அதைக் குறித்து எத்துணை பெருமை பீற்றியிருப்பாள் என்ற அர்த்தத்தில்தான் சொன்னாள்..

மைதிலியோ.. குமார கம்பண்ணனை மனதில் சுமந்திருக்கும் அவளிடத்திற்கு கோசலை வர நினைப்பதாக அர்த்தம் செய்து கொண்டு..

"உன்னைக் கொன்று விடுவேன்.. ஜாக்கிரதை.." என்று கோசலையின் கழுத்தில் விரல்களைப் பதித்து விட்டாள்..

"விடு.. விடுடி என்னை.."

பலத்த பிரயத்தனத்திற்குப் பின்னர் தனது கழுத்தை விடுவித்துக் கொண்ட கோசலை சுற்றிலும் பார்வையை ஓட்டினாள்.. அருகில் நின்றிருந்த அனைவரும் சுல்தானின் ஆட்சியிலிருந்து விடுபட்டு விட்ட பெருமையைப் பேசிக் கொண்டிருந்தார்களே தவிர.. அந்தத் தோழிகளின் போராட்டத்தைக் கவனிக்கவில்லை..

"இங்கொருத்தி உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந் தாள்... அதை ஏனென்று கேட்க இக்கூட்டத்தில் எவருமில்லையென்றால்.. இந்தக் கொடுமையை எவரிடம் போய் சொல்வது..? நானாகப் போராடி விடுபட்டதால் எனது உயிர் தப்பிப் பிழைத்தது.. இல்லையெனில் என் கதி என்னவாக ஆகியிருக்கும்..?"

கோசலை புலம்பினாள்.. மைதிலி 'ஜாக்கிரதை' என்ற ரீதியில் முறைத்து விட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.. புதிய மன்னரின் நகரப் பிரவேசத்தைப் பற்றிக் கலகலப்பாக கணவனுடன் பேசியபடி அங்கே வந்த மலர்க்கொடி கோசலையைக் கண்டதும்..

"என்ன கோசலை..! எங்களுடன் இழையாமல் உன் தோழியிடம் இழைந்து ரகசியம் பேசிக் கொண்டிருக் கிறாயாக்கும்.. உன்மீது மைதிலிக்கு இருக்கும் அன்புப்பிடியை நினைத்தால் ஆச்சரியமாக உள்ளது.. வலிமையான அன்புப்பிடி.." என்று அந்தத் தோழிகளின் தோழமையைப் பாராட்டிப் பேசினாள்..

"எத்துனை வலிமையான அன்புப் பிடியென்பதை தற்போதுதான் அனுபவ பூர்வமாக உணர்ந்தேன் அண்ணி.." கோசலை மைதிலியின் கைவிரல்கள் பதிந்த கழுத்தைத் தடவிக் கொண்டாள்..

"இத்துனை நேசம் கொண்ட தோழி கிட்ட நீ கொடுத்து வைத்திருக்க வேண்டும் கோசலை..!" மலர்க்கொடி தனது நாத்தனாரை பெருமையுடன் பார்த்துக் கொண்டாள்..

"எதைக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் அண்ணி..? கழுத்தையா..?" கோசலை பொருமினாள்..

"கழுத்தை ஏன் இவளிடம் கொடுக்கிறாய்..? அதை உனக்கு மாங்கல்யத்தைக் கட்டப் போகும் மணவாளனிடம் கொடு.. எங்கள் மைதிலி எவர்மீது நேசம் வைத்தாலும் ஆழ்ந்த.. வெறித்தனமான நேசத்தை வைப்பாள்.." மலர்க்கொடி நகைத்தாள்..

"ஆமாமாம்.. கொலைவெறி கொண்ட நேசம்.." கோசலை பல்லைக் கடித்தபடி எழுந்து இல்லத்தைப் பார்த்துச் சென்றாள்..

"இவளுக்கு என்னவாகி விட்டது..? முன்னுக்குப் பின் முரணாய் பேசி வைக்கிறாளே..?"

மலர்க்கொடி கேட்ட கேள்விக்கு மைதிலியிடமிருந்து பதில் கிடைக்கவில்லை..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



10

நான் கேட்கும் குழலின் ஓசை..
எனக்கான உன்மனதின் ஓசை..

"நீ மாறிட்டடா.."

தாமோதரனின் குற்றச்சாட்டில் சித்தார்த்தன் தன்னைத் தானே ஓர்தடவை பார்த்துக் கொண்டான்..

"இல்லையே.. எந்தச் சேன்ஜீம் என் கண்ணுக்குத் தெரியலையே.."

எப்போதும் போல கைகளை விரித்துத் தோள்களைக் குழுக்கியவனை கடுமையாக முறைத்துப் பார்த்தான் தாமோதரன்.. அவனுடைய கடுமையில் புருவங்களை உயர்த்திய சித்தார்த்தனுக்கு நண்பனின் கோபத்தைப் பார்க்க வேடிக்கையாக இருந்தது..

"என்னடா..? எந்த உப்புச் சப்பில்லாத விசயத்துக்கு இத்தன டென்சனா இருக்க..?"

கழுத்து டையை லேசாக தளர்த்தி விட்டுக் கோட்டை அவிழ்த்து சுழல் நாற்காலியின் முதுகுப் பகுதியில் போட்டபடி கேட்டான் சித்தார்த்தன்.. தாமோதரனோ அவனை முறைத்தான்..

"என் டென்சனைப் பார்த்தா உனக்கு கிண்டலா இருக்கில்ல..?"

"ஹேய்.. ஈஸி தாமு.. வரவர எதுக்கெடுத்தாலும் நீ கட்டின பெண்டாட்டி மாதிரியே கோவிச்சுக்கறேடா."

"ஸோ..! உன்னைக் கட்டின பெண்டாட்டிக்குத்தான் உன்மேல அதிகாரம் இருக்கு.. எனக்கு இல்லன்னு சொல்லவர்ற.."

குதர்க்கமாகக் கேட்ட நண்பனை ஆச்சரியத்துடன் பார்த்தான் சித்தார்த்தன்.. இந்தத் தாமோதரனை இதற்கு முன்பு அவன் பார்த்ததில்லை.. சித்தார்த்தனின் உயிர் நண்பனான தாமோதரன் டென்சனுக்கே டென்சன் கொடுக்கும் வல்லமை கொண்டவன்.. திருநெல்வேலிக்கு அல்வா கொடுத்து விடும் கெட்டிக்காரன்..

இப்படித் தொட்டாச் சிணுங்கியாக சித்தார்த்தனுடன் எதற்கெடுத்தாலும் மல்லுக்கு நிற்கும் தாமோதரன் சித்தார்த்தனனின் கண்களுக்குப் புதியவனாகத் தெரிந்தான்..

"வாட் ஹேப்பன் டு யு தாமு..?"

"எங்கே போயிட்டு வர்ற..?"

"பாத்தியா.. கட்டின பெண்டாட்டி மாதிரியே கொஸ்டின் பண்ற..? ஹா.. ஹா.. இதைச் சொன்னா கோவிச்சுக்கிற.."

"ஐ நீட் யுவர் ஆன்ஸர் சித்தார்த்..."

"ஓகே.. ஓகே.. பிஸினெஸ் லன்ச்சுக்குப் போயிட்டு வரேன்.. போதுமா..?"

"இன்னைக்கு பிஸினெஸ் லன்ச் இருக்குன்னு என்கிட்ட ஏண்டா நீ சொல்லலை..?"

“எனக்கே ஆபிஸ் வந்த பின்னால்தான் அதைப் பத்தியே தெரியும் தாமு.. அந்த ஃபாரின் கம்பெனிக்காரங்க அக்ரிமெண்ட கைல பிடிச்சுக்கிட்டு மார்னிங் பிளைட்டில வந்து இறங்கிட்டாங்க.. பிஸினெஸ் லன்ச்சுக்கு வா.. அக்ரிமெண்டில சைன் போடுன்னு போன் வந்துச்சு.. அவசரமா கிளம்பிப் போனதில உனக்கு இன்பார்ம் பண்ண மறந்திட்டேன் தாமு.. தட்ஸ் ஆல்..”

“தட்ஸ்.. ஆல்..?”

ஒரு தினுசாக வினவிய தாமோதரனின் குரலில் தெரிந்த ஒட்டாத தன்மையில் துணுக்குற்றான் சித்தார்த்தன்..

“வாட்’ஸ் ராங் வித் யு தாமு..?”

“நத்திங்.. எனக்கென்னவோ நீ என்னைவிட்டு விலகி தூரமா போகிறதைப்போல இருக்கு சித்தார்த்...”

“ரப்பிஷ்..! நீயும் நானும் நகமும் சதையும்டா.. யாராலேயும் நம்மைப் பிரிக்க முடியாது..”

“அப்படியா..?”

மீண்டும் ஒட்டாத வெறுமையான குரல்.. என்ன சொல்லி நண்பனின் மனதில் பழைய தோழமையை கொண்டு வருவது என்று புரியாமல் திகைத்தான் சித்தார்த்தன்..

“எதனால் உனக்கு இப்படியொரு டவுட் வந்ததுன்னு சொல்லுடா..”

“நீ பிஸினெஸ் லன்ச் போகிற விசயம் யாமினிக்குத் தெரிஞ்சிருக்கு.. எனக்குத் தெரியலை.. அவளைக் கேட்டு

நான் தெரிஞ்சுக்க வேண்டியதா இருக்கு.. இனிமே உன் சம்பந்தப்பட்ட எல்லாத்தையும் அவளைக் கேட்டுத்தான் நான் தெரிஞ்சுக்கனுமோ..?"

"டேய்ய்.."

தலையைப் பிடித்துக் கொண்டான் சித்தார்த்தன்.. தாமோதரனின் குடைச்சலால் யாமினி இருக்கும் திசையில் கூட அவன் திரும்பிப் பார்ப்பதில்லை.. யாமினியும் அப்படித்தான்.. வேலை விவரம் என்றால் கூட சித்தார்த்தனின் முகம் பார்க்காமல்தான் பேசுவாள்.. இருந்தும் தாமோதரன் அவளையும் முறைப்பான்.. சித்தார்த்தனையும் சாடுவான்..

'யாமினியைக் கண்டாலே இவனுக்கு ஆகாது.. இப்போது இதுவும் சேர்ந்துக்குச்சா..' சித்தார்த்தனுக்கு தலைவேதனையாக இருந்தது..



11

என் மனதை என்ன செய்தாய்..?
வேதனையை விதைத்து விட்டாய்..

காஞ்சியின் அரண்மனையின் பிரம்மாண்டமான பெரிய கதவுகள் பார்த்திபனின் குடும்பம் வந்த ரதத்திற்கு வழிவிட்டு அகலமாகத் திறந்தன..

ரதத்தில் அமர்ந்திருந்த பார்த்திபன் பட்டாடையும், பட்டுத் தலைப்பாகையும், வைர ஆபரணங்களுமாக தோரணையில் மாறிப் போயிருந்தான்.. சம்புவரையர்களின்

ஆட்சிக் காலத்தின் போது அடக்கி வாசித்த தமையனா இவன் என்ற வியப்பு மைதிலியின் மனதில் எழுந்தது..

கணவனின் அலங்காரத்திற்கு சற்றிலும் குறையாத அலங்காரத்துடன் முகமெல்லாம் புன்னகையும் பூரிப்புமாக இருந்தாள் மலர்க்கொடி..

அவர்களின் குழந்தைகளையும் அவர்களைப் போலவே அலங்கரித்திருந்ததில் கிள்ளி வளவனும், முல்லைக்கொடியும்.. இளவரன், இளவரசியைப் போல இருந்தார்கள்..

மைதிலியையும் அவர்களைப் போலவே அலங்கரித்துக் கொள்ளச் சொன்னாள் மலர்க்கொடி..

"அரண்மனையிலிருந்து அழைப்பு வந்துள்ளது.. அரசர் குமார கம்பண்ணன் நமைக் குடும்பத்துடன் விருந்துண்ண வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.. ஆஹா.. எப்பேர்பட்ட இனிய செய்தி இது.."

குதூகலத்துடன் அவள் கூறியபோது மைதிலி இகழ்ச்சியாக இதழ்களைச் சுழித்து அழகு காட்டினாள்..

"எதற்காக இத்துணை மகிழ்வு அண்ணி..? நமது இல்லத்தில் சமைக்கப்படும் அறுசுவை உணவுப் பதார்த்தங்களை விட அதிகமான சுவையையா அரண்மனையின் விருந்து அளித்து விடப் போகிறது..?"

"மக்குப் பெண்ணே..! இது உயரிய கௌரவம்.. அரசர் நம்மை விருந்துக்கு அழைத்துள்ளார்.. இதை உணராமல் பேசாதே.."

"அவருக்கும் இது போல நாம் கௌரவம் செய்தோம்.. நமது இல்லத்தில் விருந்தினராக சிலதினங்கள் அவர் தங்கியிருந்தார்.. விருந்துண்டார்.. பதிலுக்கு ஒருவேளை நமக்கு உணவளிக்க விரும்புகிறார்.. இதற்குப் போய் இத்துனை பரபரப்பைக் கொள்ள வேண்டுமா..?"

"அறிவிலி போல பிதற்றாதே.. அக்கம் பக்கத்து இல்லங்களில் உள்ளவர்கள் நம்மீது பொறாமை கொண்டுள்ளனர்.."

"அப்பாவிகள்..! இதில் பொறாமை கொள்ள என்ன இருக்கிறது..?"

வெறுப்புடன் பேசிய மைதிலியை ஏதோ காற்றும், கருப்பும் பிடித்து ஆட்டுகின்றன என்ற முடிவுக்கு வந்தாள் மலர்க்கொடி..

'இல்லையெனில் இவள் இவ்வாறு உளர மாட்டாள்..'

விளைவு..? மைதிலியை ஆட்டுவிக்கும் காற்றையும் கருப்பையும் ஓட்ட மந்திரித்து விட இல்லத்திற்கு வருகை தந்தார் அம்மன் கோவில் பூசாரி..

அவர் அடித்த வேப்பிலையில் காற்றும், கருப்பும் ஓடினவோ இல்லையோ.. கிள்ளி வளவனும், முல்லைக் கொடியும் அஞ்சி நடுங்கி ஓடி விட்டார்கள்..

'இல்லாத காற்றையும், கருப்பையும் ஓட்டுகிறேன் என்று வேப்பிலையையா ஒடித்துக் கொட்டுகிறாய்..? இருக்கிறது பூசாரி உனக்கு..'

மைதிலியின் விழிகள் கொட்டிய யுத்த முழக்கத்தில் மிரண்டு போன பூசாரி.. இரண்டு மூட்டை நெல்லையும்,

இருபது பொற்காசுகளையும் காணிக்கையாகப் பெற்றுக் கொண்டு ஓடிப் போனார்..

இப்படியாக காற்றையும், கருப்பையும் விழியனுப்பி வைத்து விட்டு அரண்மனையின் விருந்துக்குக் கிளம்ப ஆயத்தமானாள் மலர்க்கொடி..

"அழகான பட்டாடைகளை அணிந்து.. வைர ஆபரணங்களைப் பூட்டிக் கொள்.."

மைதிலியை வற்புறுத்தினாள்.. மைதிலி அசைந்து கொடுக்கவில்லை.. எளிமையான அலங்காரத்துடன்..

"எனக்கு இதுவே போதும் அண்ணி.." என்று கிளம்பி விட்டாள்..

"நன்றாக உள்ளது.. மலர்க்கொடி பெற்ற பெண்ணை இளவரசியைப் போல அலங்கரித்து அழைத்துக் கொண்டு.. வளர்த்த நாத்தனாரைப் பணிப் பெண்ணைப் போல எளிமையாக அலங்கரித்து அழைத்துக் கொண்டு அரண்மனை விருந்துக்குச் சென்றாள் என்று இந்த ஊரார் என்னை ஏசட்டும் என்ற நல்ல எண்ணமா உனக்கு..?"

மலர்க்கொடி காய்ச்சிய காய்ச்சலில் அதிக அளவில் இல்லாமல் பட்டாடையும்.. பதக்கம் கொண்ட அட்டிகையுமாக மைதிலி கிளம்பிய பின்னர்தான் அமைதியானாள் மலர்க்கொடி..

குதிரைகள் பூட்டிய ரதத்தில் குடும்பத்தினருடன் மைதிலி ஏறி அமர்ந்ததை கோசலை பொறாமையுடன் பார்த்தாள்.. அதை மைதிலியும் பார்த்தாள்.. கசப்பான புன்முறுவல் அவள் அதரங்களில் வருகை தந்தது..

'எதற்காக இத்துனை பெறாமை கோசலை..? இந்த விருந்துக்குச் செல்வதில் எனக்கு விருப்பமே இல்லை.. அங்கிருக்கும் மன்னன் என்னை உயிரிருந்தும் ஜடமாக்கியவன்.. அவனிடம் ஓர்நாள் நான் சிற்றரசுப் பாரம்பர்யத்தில் பிறந்தவள் என்று பெருமை பீற்றிக் கொண்டேன்.. அப்போதே அவன் இகழ்ச்சியாக நகைத்து வைத்தான்.. அப்போது அந்த நகைப்பிற்கு எனக்கு அர்த்தம் விளங்கவில்லை.. இப்போது விளங்குகிறது.. அடி பைத்தியக்காரி..! இந்தக் காஞ்சியை ஆளப் போகும் வருங்கால மன்னன் நான்.. என்னிடம் வந்து உனது சிற்றரசுப் பாரம்பர்யத்தின் பெருமையைப் பீற்றுகிறாயா என்ற இகழ்ச்சியல்லவா அது..! அன்று நகைப்பில் கேட்டதை இன்று நேரிடையாக கேட்கவே இந்த விருந்துக்கு அழைப்பு விடுத்திருக்கிறான்.. அது தெரியாமல் நீயும் ஏனடி எனது வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறாய்..?'

அரண்மனையின் உள்ளே சென்ற நீண்ட அலங்காரமான வளைவுகளைக் கொண்ட பாதையில் பார்த்திபனின் ரதம் விரைந்தது.. மன்னரின் மாளிகையின் அருகே ரதம் நின்றது.. இறங்கிய பார்த்திபனின் குடும்பத்திற்கு முகமன் கூறி வரவேற்றார் அமைச்சர்..

"வரவேண்டும் பார்த்திபரே..! தங்களின் குடும்பத்திற்கு நல்வரவு.. மாளிகையினுள் வாருங்கள்.."

அளிக்கப்பட்ட வரவேற்பில் முகமெல்லாம் பிரகாசிக்க பார்த்திபனைப் பின் தொடர்ந்தாள் மலர்க்கொடி..

மாளிகையினுள் சென்றுதான் ஆக வேண்டுமா என்று வெறுப்புடன் தேங்கி நின்ற மைதிலியை மலர்க்கொடி திரும்பிப் பார்த்து முறைத்ததில் வேண்டா வெறுப்பாக அவள் தமையனின் குடும்பத்தைப் பின் பற்றினாள்..

"அமருங்கள்.. மன்னர் வருகை தருவார்.."

பார்த்திபனின் இல்லத்தில் பாதியளவுக்கு இருந்த வரவேற்பறையின் ஆசனங்களில் அவர்களை அமர வைத்து விட்டுச் சென்றார் அமைச்சர்.. அங்கிருந்த கலைப் பொருள்களையும்.. சித்திரங்களையும் விழிவிரிய பார்த்துக் கொண்டிருந்தாள் மலர்க்கொடி.. மனைவியின் வியப்பான மொழிகளுக்கு காதுகளைக் கொடுத்து தலையைத் தலையை ஆட்டிக் கொண்டிருந்தான் பார்த்திபன்..

"அப்படியே பூம் பூம் மாடுதான்.."

கிள்ளிவளவன் மைதிலியின் காதருகே கிசுகிசுத்தான்.. மைதிலிக்கு நகைப்பு வந்தது.. அதை மறைத்துக் கொண்டு..

"தந்தையாரை அவ்விதமாக சொல்லக்கூடாது.." என்று தமையனின் புத்திரனை மிரட்டினாள்..

முல்லைக்கொடியோ.. அங்கிருந்த ஆசனங்களின் வேலைப்பாடுகளில் ஆர்வமாகி.. அவற்றைத் தொட்டுப் பார்க்க ஆரம்பித்தாள்..

"இவ்விதம் துருதுருவென ஓடக்கூடாது.. இது நமது இல்லமல்ல.. அயலாரின் அரண்மனை..!"

முல்லைக்கொடியை கடிந்தபடி திரும்பிய மைதிலி திகைத்து நின்றாள்.. அவளை ஊடுறிவிப் பார்த்த வண்ணம் வெகு அருகில் நின்றிருந்தான் குமார கம்பண்ணன்..

அவனைக் கண்டதில் உண்டான பரபரப்பில் விரல்கள் நடுங்க.. மைதிலி தலை குனிந்த போது.. மெல்லிய குரலில் அவளிடம் கேட்டான் குமார கம்பண்ணன்..

"நான் அயலானா..?"

சட்டென்று விழியுயர்த்திய மைதிலியின் கலங்கிய விழிகளுடன் அவன் விழிகள் கலந்தன.. அவனது விழிகளுக்குள் அவளுக்கான காதலைத் தேடினாள் மைதிலி..

'நீ அயலான் இல்லையெனில் யார்..?'

அவளது இதயம் நடுங்கும் ஓசையினை உணர்ந்தவனைப் போல் அசைவற்று ஓர்நொடி நின்றவன்..

"உனது இல்லத்தில் விருந்தினனாக சில தினங்கள் இருந்தவனின் அரண்மனை... அயலாரின் அரண்மனையாக ஆகி விடுமா..?" என்று கேட்டு அவள் மனதை உடைத்தான்..

'கொன்று விடு..'

மைதிலியின் பற்கள் உதடுகளில் உணர்ச்சிப் பெருக்குடன் அழுந்தப் படிந்ததில் உண்டான காயத்தில் குமார கம்பண்ணனின் விழிகளில் வலி தெரிந்தது..

"உன்னையே ஏன் நீ வருத்திக் கொள்கிறாய்..?" என்று கேட்டான்..

"அதைப் பற்றிய கவலை தங்களுக்கு வேண்டாம் அரசே..! தாங்கள் விண்..! நான் மண்..! இந்த உண்மை தெரியாமல் நான் தங்கள் மீது காதல் கொண்டு விட்டேன்.. இதை உணர்ந்த தாங்கள் எனது காதலை நிராகரித்து விட்டீர்கள்.. மறுக்கப்பட்ட காதலைக் கொண்டவளின் வலியையும் வேதனையையும் மன்னாதி மன்னரான உங்களால் எப்படி உணர முடியும்..?" கண்ணீருடன் முகம் திருப்பிக் கொண்டாள் மைதிலி..

குமாரகம்பண்ணன் விசனம் கொண்டான்.. மறுக்கப் பட்ட காதல் என்ற மைதிலியின் வார்த்தை அவன் மனதை அசைத்தது.. விருந்தினருக்கான அறைக்குள் பார்த்தான்.. குமார கம்பண்ணனும் மைதிலியும் நின்றிருந்த இடத்திலிருந்து சற்றுத் தொலைவில் பார்த்திபனும் மலர்கொடியும் அமர்ந்திருந்தார்கள்.. தங்களுக்குள் ஆழ்ந்த குரலில் பேசிக் கொண்டிருந்த அவர்கள் இருவரும் குமார கம்பண்ணனின் வருகையைக் கவனிக்கவில்லை.. கிள்ளி வளவனும்.. முல்லைக்கொடியும் ஆசனங்களைத் தொட்டுப் பார்ப்பதை ஒரு விளையாட்டாகக் கருதி.. இங்கும் அங்குமாக அறைக்குள் ஓடிக் கொண்டிருந் தார்கள்..

"இல்லை மைதிலி.." குரல் கரகரக்கக் கூறினான் குமார கம்பண்ணன்..

"எது இல்லை அரசே..? எனது காதலை நீங்கள் மறுக்கவில்லையா..?" குரல் உடைய நியாயம் கேட்டாள் மைதிலி..

“மறுத்தேன்.. அதற்கான காரணம் நான் மன்னன் என்பதற்காக அல்ல.. வலுவான காரணங்கள் பல உண்டு.. அவற்றை உன்னிடம் உரைத்திடும் துணிவு எனக்கு இல்லை..”

“நம்பச் சொல்கிறீர்களா..? சுல்தானுக்கு எதிராக படைதிரட்டி தொண்டை மண்டலத்தை வென்று அதன் அரசனாகியிருக்கும் விஜயநகரத்தின் இளவரசனுக்கு துணிவு இல்லையென்று சொன்னால் தற்போதுதான் பிறந்திருக்கும் மழலை கூட அதை நம்பாது.. நான் மழலை அல்ல..”

“விண்ணாக நானிருக்கலாம்.. மண்ணாக உனை நினைத்து விலகவில்லை.. எனது விலகலுக்கான காரணம் வேறு..”

“இதைத் தவிர்த்த காரணம் வேறு எதுவாக இருக்கக் கூடும்..? அத்துடன் அதை அறிந்து எனக்கு ஆகப் போவதென்ன.? மறுக்கப்பட்ட காதலைக் கொண்ட பேதையின் காதுகளில் தமது சமாதான வார்த்தைகள் நுழையாது அரசே..!”

மைதிலி துயரத்துடன் நகர்ந்து விட்டாள்.. குமார கம்பண்ணன் அவளைத் தடுக்கப் போனான்.. அதற்குள் பார்த்திபனும், மைதிலியும் குமார கம்பண்ணனைப் பார்த்து விட்டு அவசரமாய் எழுந்து நின்று கரம் குவித்தார்கள்.. வேறு வழியின்றி அவர்களுக்கு அருகில் சென்றான் குமார கம்பண்ணன்..

"வாருங்கள் பார்த்திபரே..! உபசரணைகள் குறைவின்றி நடைபெற்றனவா..?" இன் முகத்துடன் விசாரித்தான்..

"தங்களின் அமைச்சரே வரவேற்று உபசரணைகள் செய்தார்.. அரசே..! தாங்கள் அளித்திருக்கும் இந்த உயரிய கௌரவத்திற்கு தலை வணங்குகிறேன்.." உணர்ச்சிப் பெருக்குடன் கூறினான் பார்த்திபன்..

"தாம் எனது உறவினர்.. உறவினரின் மத்தியில் நன்றி நவிலல் தேவையற்றது பார்த்திபரே..! தம்மை எனது படையின் உபதளபதிகளில் ஒருவராக நியமனம் செய்துள்ளேன்.." குமார கம்பண்ணன் கூறினான்..

"பெரும்பேறு பெற்றேன்..." பார்த்திபன் வணங்கினான்..

மலர்க்கொடி மகிழ்ந்து போனாள்.. இச்செய்தியை அண்டை இல்லத்தின் அன்னபூரணி அறிந்தால் எத்துனை பொறாமை கொள்வாள் என்று நினைக்கும் நினைவே அவளுக்குத் தித்தித்தது..

"வாருங்கள் உணவு உண்ணச் செல்லலாம்.."

குமார கம்பண்ணனே அழைத்ததில் மட்டற்ற மகிழ்ச்சி கொண்டான் பார்த்திபன்.. மலர்க்கொடியின் விழிகளிலும் அந்த மகிழ்வு பிரதிபலித்தது.. மைதிலி மட்டும் இதழ்களை சுழித்து மடித்தாள்..

'இவன் பல தினங்கள் எங்கள் இல்லத்தில் விருந்தினனாகத் தங்கிச் சென்றான்.. பதிலுக்கு

ஒரு வேளை விருந்தளிக்கிறான்.. அதற்கு இத்துனை மகிழ்வா..?'

அவளது அகத்தின் உரை முகத்தில் தெரிவதைப் போல குமார கம்பண்ணன் அவளை உற்று நோக்கினான்.. மனதை வாசிக்கும் அவனது பார்வையில் அவள் கலங்கிச் சிவந்திருந்த விழிகளுடன் அவனை உறுத்து நோக்கினாள்.. அவனுக்கு அவளுடைய சினம் கொண்ட பார்வையின் பொருள் என்னவென்று புரிந்திருந்தது..

'ஆயினும்.. என்னால் இவள் காதலை ஏற்க இயலாதே..'

இறுக்கத்துடன் பார்வையை விலக்கிக் கொண்டான் அவன்.. அதில் மைதிலி அடிபட்ட பறவையைப் போலத் துடித்துப் போனாள்.. அங்கிருந்து ஓடி விட வேண்டும் போல அவளுக்கு இருந்தது.. அது இயலாது என்பதால் ஊமைக் கண்ணீரோடு.. செழுத்தப்பட்ட பதுமை போல தமையனின் குடும்பத்துடன் சென்றாள்..

உணவுக் கூடத்தில் குமார கம்பண்ணன் கலகலப்பாக பேசிக் கொண்டிருந்தான்.. இடையிடையே அவன் பார்வை கத்தியின் கூர்மையோடு மைதிலியின் சோக வதனத்தில் படிந்து, படிந்து மீண்டது.. தலை நிமிராமல் உணவுண்ட மைதிலி சில தருணங்களில் யதேச்சையாக விழிகளை உயர்த்தி அவன் பார்வையை சந்தித்தாள் அத்தருணங்களில் அவள் செயலற்றுப் போய் உறைந்து விடுவதையும்.. அவனைப் பார்த்த பார்வையை விலக்க முடியாமல் தவித்துப் போவதையும் உணர்ந்த குமார கம்பண்ணனின் மனதில் வேதனை உண்டானது..

'என்னிடம் ஏன் மனதை வைத்தாய் பெண்ணே..? நான் கடமைகளால் கட்டுண்டவன்... காதலிக்கும் நிலையில் நானில்லை..' மனதுக்குள் கூறிக் கொண்டான்..

அவனைக் கட்டிப் பிணைத்திருப்பது கடமை மட்டும்தானா..?

மனதில் எழுந்த வினாவிற்கு மறுமொழி கூற அவனால் இயலவில்லை..

விருந்துண்ட பார்த்திபனின் குடும்பத்தார் கரம் குவித்து குமார கம்பண்ணனிடம் விடை பெற்றார்கள்.. குமார கம்பண்ணனின் கர அசைவில் சேடிப் பெண்கள் வந்து நின்றனர்.. அவர்களின் கரங்களில் பட்டுத் துணிகளைக் கொண்டு மூடிய தங்கத் தட்டுக்கள் இருந்தன..

"இது தமக்கு.." பார்த்திபனிடம் முதல் தட்டை நீட்டினான் குமார கம்பண்ணன்..

பார்த்திபன் பெற்றுக் கொண்ட தட்டின் பட்டுத் துணியை விலக்கிப் பார்த்தபோது.. அங்கே வைரங்கள் பதிக்கப்பட்ட குறுவாள் இருந்தது..

"மிகப் பெரும் பரிசு..!" பார்த்திபன் பிரமித்தான்..

"தமக்கு ஏற்ற பரிசு இதுதான் பார்த்திபரே..!" புன்னகைத்தான் குமார கம்பண்ணன்..

மலர்க்கொடிக்கு அளிக்கப்பட்ட தட்டின் பட்டுத் துணி விலகியபோது அங்கே வைரப் பதக்கம் கொண்ட நீண்ட மாலை இருந்தது.. தங்கத்தினால் உருவாக்கப்

பட்டிருந்த அந்த ஆபரணம் நுண்ணிய வேலைப் பாடுகளுடன் காண்பவரின் கருத்தைக் கவரும் வண்ணம் ஜொலித்தது.. அதன் வைர முகப்பு விலை மதிப்பற்றது என்பதில் மலர்க்கொடி பேச்சிழந்தாள்..

"அரசே.." அவள் தடுமாறி நின்ற போது..

"தாம் எமது சகோதரிக்கு நிகரானவர்.. சகோதரனின் அரண்மனைக்கு வந்து திரும்பும் சகோதரிக்கான சீர்வரிசைகளை நான் அளிக்க வேண்டமா..?" என்று கனிவுடன் கேட்டான் குமார கம்பணன்...

'இதிலொன்றும் குறைவில்லை..' நொடித்துக் கொண்டாள் மைதிலி..

அவள் மனம் பற்றி எரிந்தது.. செல்வம் கொண்டு அனைவரையும் விலைக்கு வாங்கி விடலாம் என்று எண்ணுகிறானா விஜயநகரத்தின் மன்னன் என்று சினம் கொண்டாள்..

கிள்ளிவளவனுக்கும், முல்லைக்கொடிக்கும் பட்டாடைகளும் வைர ஆபரணங்களும் பரிசாகக் கிடைத்தன.. மைதிலியிடம் தட்டு நீட்டப்பட்ட போது.. அவள் அதைக் கவனிக்காததைப் போன்ற பாவனையுடன் நகர்ந்து கொள்ள முயன்றாள்..

"மைதிலி..!"

பார்த்திபனின் கண்டிப்பான அழைப்பு அவள் கால்களைக் கட்டிப் போட்டது.. வேறு வழியின்றி குமார கம்பண்ணன் நீட்டிய தங்கத்தட்டைப் பெற்றுக் கொண்டாள்..

“எவரைக் கொண்டு என்னைப் பணிய வைக்கலாம் என்ற சாதுர்யம் கற்றுள்ளீர்களா..?” அடிக்குரலில் கம்பண்ணனிடம் சீறினாள்..

“உனைப் பணிய வைக்க மாற்றாரின் துணை எனக்குத் தேவையில்லை.. என் சிறு பார்வையே போதும்.. நீ பணிந்து விடுவாய்..” அதே குரலில் அமர்த்தலாகப் பதில் சொன்னான் குமார கம்பண்ணன்..

“ஆணவமா..?” கலங்கிச் சிவந்திருந்த விழிகளுடன் அவனை உறுத்துப் பார்த்தாள் அவள்..

“இல்லை.. உன்னிடம் என்றுமே நான் ஆணவக் காரனாக நடந்து கொண்டதில்லை.. அதை உன் மனம் அறியும்..” அமைதியுடன் அவளைப் பார்த்தான் அவன்..

“மனம்..! அது தங்களுக்கு உள்ளதா..?”

“உள்ளது.. அதையும் நீ அறிவாய்..”

“எஃகினால் செய்யப்பட்ட எந்திரம்தானே உமது மனம்..?”

“அல்ல பெண்ணே..! உணர்வுகளால் வேயப்பட்டது எனது மனம்..”

அவள் எதைக் கூறினாலும் அமைதியுடன் அவ்வார்த்தைகளை எதிர்கொண்டு பதிலுரைத்து அவளது சினத்தை மென்மேலும் அதிகப் படுத்திக் கொண்டிருந்தான் குமார கம்பண்ணன்..

“ஆடை, ஆபரணங்களை அளித்து உமது செல்வச் செழிப்பை என்னிடம் பறைசாற்ற யத்தனிக்கிறீர்களா அரசே..?”

"நீ விரும்புவது பட்டாடைகளையும் வைர ஆபரணங்களையும் அல்ல.. உனை அறிந்தவன் நான்.. உனக்கேற்றப் பரிசைத்தான் அளித்துள்ளேன்.. திரை விலக்கிப் பார்.. தெரியும் உனக்கு.."

அழுத்தமான அவனது வார்த்தைகளில் நான் விரும்புவது உன்னைத்தானே.. உன்னையா எனக்களித்து விட்டாய்..? என்று பார்வையால் குற்றம் சாட்டியபடி பட்டுத் துணியை விலக்கித் தங்கத்தட்டைப் பார்த்தாள் மைதிலி..

அங்கே.. குழலூதும் கண்ணனின் இசையில் கட்டுண்டு அவன் காலடியில் சரிந்திருந்த ராதையின் சித்திரமும்.. நுண்ணிய வேலைப்பாடுகளைக் கொண்ட ஹாரமும் இருந்தன.. மைதிலியின் கண்கள் கண்ணீரை உகுத்தன..

'எனக்கேற்ற பரிசு இவைதான்..'

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



11

பாதை தெரியாத ...
பயணம் இது..

"**தா**மு.. அவள் என் பி.ஏ.."

"தெரியுது.."

"நீ என் கம்பெனியோட ஜி.எம்டா.."

“நீதான் மெச்சிக்கணும்.. ஜி.எம்மோட பவர்தான் இங்க பப்பரப்பான்னு ஊத்திக் கவிழ்ந்திருச்சே.. ஆப்டர் ஆல்.. நேத்து வந்த பி.ஏ..! என்னைவிட அவ உனக்கு உசத்தியாப் போயிட்டா..”

“ம்ப்ச்..! அநியாயமாய் பேசாதே தாமு.. நீ கோவிச்சுக்கறேன்னு நான் அவகிட்ட அன்னெஸசரியா ஒரு வார்த்தை கூடப் பேசறதில்ல தெரியுமா..?”

“பேசாமத்தான் நீ பிஸினெஸ் லன்ச்சுக்குப் போயிருக்கிற விவரம் அவளுக்கு மட்டும் தெரியுமா..? ஏண்டா டேய்.. அவகிட்டச் சொல்லியிருக்கியே.. அந்த நியுஸை ஒரு வார்த்தை என் காதிலயும் போட்டு வைக்கனும்னு உனக்குத் தோணலை பாத்தியா..?”

“ஓ... நோ.. தாமு..! அவகிட்ட நான் சொல்லனும்னு சொல்லலைடா.. பிஸினெஸ் லன்ச்சுக்கு கிளம்பற அவசரத்தில சீட்டை விட்டு எழுந்திருச்சேன்.. இவ ஏதோ லெட்டர்ல சைன் வாங்கனும்னு கேபினுக்குள்ள வந்தா.. அர்ஜண்ட் கால்ஸ் அண்ட் விசிட்டர்ஸ் வந்தா நான் பிஸினெஸ் லன்ச்சுக்குப் போயிருக்கேன்னு சொல்லிருங்கன்னு சொல்லிக்கிட்டே சைன் பண்ணினேன்.. யார்கூட பிஸினெஸ் லன்ச் அட்டெண்ட் பண்ணப் போறிங்க சார்ன்னு அவ கேட்டா.. இன்னார் கூடம்மான்னு நான் விவரம் சொன்னேன்.. இது எதையும் பிளான் பண்ணிச் சொல்லலைடா.. தானா நடந்தது..”

“இதை நான் நம்பனும்கிற..?”

“நம்பித்தாண்டா ஆகனும்..”

"இனி இப்படித்தான் நடக்குமில்ல.. இந்தக் கம்பெனியோட ஜி.எம்முக்கு கம்பெனியைப் பத்தின விவரம் வேணும்னா எம்.டியோட பி.ஏ. கிட்டக் கேட்டுத்தான் தெரிஞ்சுக்கனும்ல்ல..?"

"தாமு.. இது ரொம்ப ஓவர்.."

"நீ செஞ்சதும்.. செய்கிறதும்தான் ஓவர்.."

"இப்ப என்னதாண்டா வேணும் உனக்கு.. அந்தப் பெண்ணோட சீட்டைக் கிழிச்சு வீட்டுக்குப் பற்றி விட்டுட்டா நீ நிம்மதியா இருப்பில்ல..? என்னையும் நிம்மதியா இருக்க விடுவில்ல..? அதுதானே உன் பிராப்ளம்..?"

சித்தார்த்தனின் நேரடியான கேள்வியில் பல்லைக் கடித்தபடி முகத்தைத் திருப்பிக் கொண்டான் தாமோதரன்.. நண்பன் சொன்னதில் இருந்த உண்மை அவனைச் சுட்டது..

"நீ இன்செக்யூராய் ஃபீல் பண்றேன்னு நான் சொல்ல மாட்டேன்.. வெரி ஸ்ட்ராங் பெர்சன் நீ.. வேணும்னே இதை மாதிரி பேசி வைக்கிற.."

தாமோதரனை தீர்க்கமாகப் பார்த்தபடி சொன்னான் சித்தார்த்தன்.. தாமோதரன் அதை மறுக்கவில்லை.. ஏற்றுக் கொள்வதைப் போலவும் முகத்தை வைத்துக் கொள்ள வில்லை.. முகம் மாறாமல் சண்டைச் சேவலைப் போல சித்தார்த்தனை முறைத்துக் கொண்டிருந்தான்..

ஓர் அளவுக்கு மேல் சித்தார்த்தனால் முடியவில்லை.. அப்படியொரு கோபத்துடன் தாமோதரனை அவன்

பார்த்ததே இல்லை.. எவ்வளவுதான் கோபமிருந்தாலும் ஓரிரு நிமிடங்களில் சரியாகி விடுவான்.. சித்தார்த்தன் தான் மூட்-அவுட் ஆவான்.. தாமோதரன் மூட் அவுட் ஆக மாட்டான்.. உறண்டை இழுக்கும் சித்தார்த்தனின் மூடை சரிக்கட்டி இழுத்து விடுவான்.. எதைச் சொன்னாலும் "லூசில விடுடா.." என்பான்..

'அந்த தாமோதரனா இவன்..?'

சித்தார்த்தனுக்குத் தாங்கவில்லை..

"தாமு.." என்று அழைத்தபடி நண்பனின் தோளில் கை வைக்கப் போனான்..

"டோன்ட் டச் மீ.." கண்டிப்புடன் பின்னால் நகர்ந்தான் தாமோதரன்..

"அடச் சீ..." சித்தார்த்தனுக்கு வெறுத்துப் போய் விட்டது..

"ஏண்டா.. பிரண்டைப் போலவா பேசற..? என்னவோ ரேப் பண்ண வருகிற வில்லனப் பாத்து ஹீரோயின் பேசறதைப் போல பேசி வைக்கிற..? ஏண்டா இப்படி வெறுப்பேத்தற..?"

"வரும்டா.. வெறுப்பு வரும்.. புதுசு புதுசா ஆளுக வந்தாச்சுல்ல.. பழைய பிரண்டைப் பாத்தா உனக்கு வெறுப்பு வரத்தான் செய்யும்.. போடா.. போயி உன் பிரியத்த யாருகிட்ட காண்பிக்கனுமோ.. அவங்ககிட்ட மட்டும் காண்பி.. என்கிட்ட வெறுப்பக் காண்பி.."

தாமோதரன் விர்ரென்று கேபினைவிட்டு வெளியேறி விட்டான்.. வேகமாக அவன் போனதில் ஆடிய கதவைப்

போல சித்தார்த்தனின் மனமும் ஆடியது.. தலையைப் பிடித்துக் கொண்டு கண்களை மூடியவனின் எதிரே காபித் தம்ளரும்.. தலைவலி மாத்திரையும் வைக்கப் பட்டன.. சத்தம் கேட்டு கண்விழித்தான்.. அருகில் நின்றிருந்த யாமினி.. மௌனப் பார்வை பார்த்தாள்.. ஓர் புரிதலோடு அவர்களின் பார்வைகள் சங்கமித்தன..



12

என்ன வசியம் செய்து.. என் மனதை பிணைத்தாய்..?

அகன்ற ஜன்னலின் வழியாக தவழ்ந்து வந்த தென்றல் காற்று அந்த மேன்மாட அறையில் நிரம்பியிருந்தது.. அறையுடன் இணைந்த உப்பரிகையில் இருந்த மயில் வடிவ பஞ்சணையில் அமைதியின்றி அமர்ந்திருந்தாள் மைதிலி..

தடையின்றி காற்று வருவதற்காக அமைக்கப் பட்டிருந்த உப்பரிகையின் திறந்த வெளியின் வழியாக உள்ளே வந்த சில்லென்ற குளிர் காற்றினால் அவள் தேகம் குளுமை அடையவில்லை.. தகித்த தேகத்துடன் அனல் பெருமூச்சுடன் அவள் குமார கம்பணன் அளித்த சித்திரத்தை மடியில் தாங்கி விழிகளை அகற்றாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்..

'எதைக் கருத்தில் கொண்டு இந்தச் சித்திரத்தைத் தீட்டி எனக்களித்தான்..? வசியப்பொடியைத் தூவி

ராதையை வசியம் செய்த மாயக் கண்ணன் அவன் என்பதை சொல்லாமல் சொல்கிறானா..? இல்லை.. ராதையால் கண்ணனை உருகி.. உருகிக் காதலிக்கத்தான் முடியும்.. மாலை சூடி கண்ணுக்கு மனையாட்டி ஆக முடியாது.. அந்தப் பேறுக்குரியவள் ருக்மிணிதான் என்பதை உணர்த்துகிறானா..?'

நினைத்து நினைத்து அவள் இதயம் குமுறினாள்.. அவன் அளித்த யாழை மீட்டும் போது.. அவனே குழலூதி எதிரில் வந்து நிற்பதைப் போல இருந்ததில் துயர் கொண்டாள்..

"மைதிலி.." மலர்க்கொடியின் குரல் கேட்டது...

மேன்மாடப் படிகளில் காலரவம் கேட்டதில் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் மைதிலி.. அவசரமாக முகத்தைத் திருத்திக் கொண்டவள் வரவழைத்துக் கொண்ட முக மலர்ச்சியுடன்..

"அண்ணி..?" என்று எழுந்து நின்றாள்..

"என்ன ஆனது உனக்கு..? காலை உணவைக் கூட உண்ணாமல் அறையில் அடைந்து கிடக்கிறாய்.. நந்தவனத்தில் அம்மானை விளையாடப் போவதில்லை.. உப தளபதியின் தங்கை என்ற கர்வம் உனக்கு வந்து விட்டது என்று கோசலை குற்றம் சொல்கிறாள்.. நீ எப்போதும் போல அவளுடன் உரையாடுவதில்லையாம்.. அவளே உன்னைத் தேடி வந்தாலும் பேசுவதில்லையாம்... அந்தப் பேச்சையும் அவளே பேசினாலும் பதில் சொல்லாமல் சில தருணங்களில் 'ஊம்' கொட்டுகிறாயாம்..

சில தருணங்களில் அதையும் செய்வதில்லையாம்.. என்னிடம் வந்து புகார் சொல்லி விட்டுப் போகிறாள்.. ஏனம்மா..? அவளுடன் உனக்கென்ன பிணக்கு..?"

"பிணக்காவது.. ஆமணக்காவது.. அப்படியெதுவு மில்லை அண்ணி.. அவள் சளசளவென்று பேசி எனக்குத் தலைவலியை வர வைப்பாள்.. அந்த வேதனையில் பதில் சொல்லாமல் இருந்திருப்பேன்.."

மைதிலி சொன்னதைக் கேட்ட மலர்க்கொடி முகவாயில் கை வைத்து ஆச்சரியப்பட்டாள்..

"பாரடா..! சளசளவென்று பேசுவதைப் பற்றி நீ சொல்கிறாய்.. உன்னை மிஞ்சி சளசளக்க ஒருத்தியால் முடியுமா..?"

"கோசலையால் முடியும் அண்ணி.."

"என்னவோ போ.. உனக்கு உடல்நிலை குறையாடில்லையே..? நலமாகத்தானே உள்ளாய்..?"

மலர்க்கொடியின் பரிவில் மைதிலியின் கண்களில் நீர் தளும்பியது..

"எனக்கென்ன கேடு..?" என்றாள் விரக்தியாக..

மலர்க்கொடி புருவங்கள் சுருங்க நாத்தனாரை கன்னிப்பாகப் பார்த்தாள்.. அவள் முகத்தில் சிந்தனை படிந்தது.. எதையோ நினைத்துக் கொண்டவளாக..

"போகட்டும் விடு.. தற்போது எழுந்து தலையை சீர் படுத்திப் பின்னலிட்டு பூ முடி.. பட்டாடையையும்.. வைர

ஆபரணங்களையும் அணிந்து கொள்.." என்று துரிதப் படுத்தினாள்..

"ஏன் அண்ணி..?"

"நாம் ஒருவரைச் சந்திக்கச் செல்ல வேண்டும்.."

"எவரை.."

"என் உறவினரை.."

காஞ்சியை விட்டுச் செல்ல வேண்டுமா..? ஏனோ மைதிலி அதை விரும்பவில்லை.. குமார கம்பணன் காஞ்சியில் இருக்கும் போது அவள் அதை விட்டு நீங்குவதாவது..

"எப்போதும் போல தாங்களும், குழந்தைகளும் சென்று வரலாமே அண்ணி.. நான் எதற்கு..? தவிர.. தமையன் என்னை அயலூருக்கு அனுப்ப மாட்டாரே.."

"நாம் அயலூர் செல்லப் போவதாக யார் சொன்னது..?"

"நீங்கள்தானே உங்களின் உறவினரைச் சந்திக்கச் செல்ல வேண்டும் என்றீர்கள்..?"

"ஆம்.."

"உங்களின் உறவினர்கள் அயலூர்களில்தானே உள்ளனர்..?"

"அயலூரில் இருந்த உறவினர் காஞ்சிக்கு வருகை தந்திருக்கலாமில்லையா..?"

"ஓ.."

அதற்கு மேலும் மறுத்துப் பேச இயலாமல் மைதிலி பெட்டகத்தை நோக்கிச் சென்றாள்.. அதைத் திறந்து அவள் பட்டாடைகளையும்.. வைர ஆபரணங்களையும் எடுத்துக் கொண்டிருந்த போது மலர்க்கொடி பஞ்சணையில் இருந்த சித்திரத்தைக் கவனித்தாள்..

'இது குமார கம்பண்ணன் பரிசளித்த சித்திரமல்லவா..? அரசர் அளித்த சித்திரத்தைப் பத்திரப்படுத்தாமல் இவள் பஞ்சணையில் வைத்து ரசிப்பது ஏன்..?'

புருவங்கள் முடிச்சிட சித்திரத்தையே கூர்ந்து பார்த்தாள்..

"செல்லலாமா அண்ணி..?"

மெலிதான அலங்காரத்துடன் புறப்பட ஆயத்தமாகி இருந்த மைதிலியின் குரலில் திரும்பியவள் அவளிடம் எதையும் கேட்காமல்..

"ம்..ம்..ம்.." என்று தலையை அசைத்து விட்டுப் படியிறங்கினாள்..

வீட்டு வாசலில் குதிரைகள் பூட்டப்பட்ட ரதம் காத்திருந்தது.. அதில் ஏற்கனெவே ஏறி அமர்ந்திருந்த கிள்ளிவளவனும், முல்லைக்கொடியும்.. நகர்வலம் செல்லப் போகும் உற்சாகத்தில் பேசிக் களித்துக் கொண்டிருந்தனர்..

"தமையன் வரவில்லையா அண்ணி..?" மைதிலி கேட்டாள்..

"உபதளபதி இல்லத்திலேயே உட்கார்ந்திருந்தால் அவரது பணியை எவர் பார்ப்பது..? நீ சென்று பார்ப்பாயா..?" மலர்க்கொடி கடுமையாக வினவினாள்..

வாயை மூடிக்கொள்வதே உசிதம் என்று வாய்மூடி ரதத்தில் ஏறி அமர்ந்தாள் மைதிலி.. ஆழ்ந்த சிந்தனையுடன் அவளருகில் அமர்ந்தாள் மலர்க்கொடி.. ரதம் ராஜபாட்டையில் விரைந்தது..

கடந்து போகும் இல்லங்களையும், வீதிகளையும் வேடிக்கை பார்த்த வண்ணம் வந்த மைதிலிக்கு... ரதம் செல்லும் பாதையை உணர்ந்ததும் தூக்கிவாரிப் போட்டது..

"அண்ணி..! ரதம் அரண்மனைக்குச் செல்லும் மார்க்கத்திலே விரைகிறதே.." பதட்டத்துடன் சொன்னாள்..

"அரண்மனைக்குச் செல்வதற்கு அரண்மனைக்குச் செல்லும் மார்க்கத்திலேதானே ரதம் சென்றாக வேண்டும்..?" விசித்திரமாக மைதிலியைப் பார்த்தபடி கூறினாள் மலர்க்கொடி..

"அரண்மனைக்கா..?"

அச்சத்துடன் அகன்றன மைதிலியின் கரிய பெருவிழிகள்..

'மறுபடியும் அவனைக் காண வேண்டுமா..?'

இம்சையான இன்ப வேதனை அவள் மனதில் எழுந்தது.. அவன் முகத்தைப் பார்க்க அவள் விரும்ப வில்லை.. அதே தருணத்தில் அவனிருக்கும் அரண்மனைக்குச் செல்வதில் ஆனந்தப் பரவசம் கொண்டாள்.. அவனைக் கொன்று விடவேண்டும் போல சினம் கொண்டிருந்த மனது.. அவனைக் காணப் போவதில்

களி நடனம் புரிந்ததை அவளால் தாங்கிக் கொள்ள இயல வில்லை..

அவளை அவதானிப்பதைப் போல உற்றுப் பார்த்த மலர்க்கொடியின் முகத்திலிருந்து அவள் என்ன நினைக்கிறாள் என்று கணிக்க முடியவில்லை..

"ஆம்.. அரண்மனைக்குத்தான்.."

சலனமில்லாத முகத்துடன் கூறி விட்டு நாத்தனாரை ஆராயும் பார்வை பார்த்தாள்.. அதில் தன்னை நிதானப் படுத்திக் கொண்ட மைதிலி.. போராடி தன் மன உணர்வுகளைக் கட்டுக்குள் கொண்டு வந்தாள்..

"தங்கள் உறவினர் வருகை தந்திருப்பதாகச் சொன்னீர்களே.. அவர் வருகை தந்திருக்கும் இல்லத்திற்கு நாம் செல்ல வேண்டாமா..?"

"எந்த இல்லத்திற்கும் அவர் வருகை தரவில்லை.. அரண்மனைக்குத்தான் அவர் வருகை தந்திருக்கிறார்.."

நறுக்கென்ற மலர்க்கொடியின் பதிலில் அவள் மனதில் ஏதோ ஐயம் முளைத்திருக்க வேண்டும் என்று சஞ்சலம் கொண்டாள் மைதிலி..

வெளிப்படையாக எதையும் கேட்டு விட முடியாது என்பதில் பெண்கள் இருவருமே மௌனமானார்கள்..

"முல்லை..! கண்டாயா.. அரண்மனைக்கு வந்துள்ளோம்.." குதூகலத்துடன் கூவினான் கிள்ளி வளவன்..

“ஆம் அண்ணா..” மூன்று வயதுக்கேயுரிய மழலையுடன் தனது குதூகலத்தையும் வெளிப்படுத்தினாள் முல்லைக்கொடி..

நெடிதுயர்ந்த அரண்மனையின் படிக்கட்டுகளில் குழந்தைகள் முன்னே ஓடிவிட.. மலர்கொடியின் பின்னால் தளர்ந்த நடையுடன் ஏறினாள் மைதிலி..

“உனக்கு என்ன ஆனது..? ஆமை போலப் பின் தங்குகிறாயே.. நீ மைதிலிதானா என்று எனக்குச் சந்தேகமாக உள்ளது..”

மலர்க்கொடியின் வார்த்தைகளில் அவள் மறுபடியும் பூசாரியை வெற்றிலை பாக்கு வைத்து அழைத்து வேப்பிலை அடிக்கச் சொல்லி விடுவாளோ என்று அரண்டு போனாள் மைதிலி..

‘இது அவனிருக்கும் அரண்மனை..!’

மனதில் பாரம் கால்களில் இரும்புக் குண்டாக கனத்து அவளை அடியெடுத்து வைக்க விடாமல் தடுத்தது.. பூசாரியின் வேப்பிலை குறித்த நினைவு விரைந்து நகர்ந்து செல்லத் துடித்தது.. இரண்டுக்கும் நடுவில் மாட்டிக் கொண்ட மைதிலி வன்பாடுபட்டு மலர்க்கொடியின் வேகத்துக்கு ஈடுகொடுத்து கூடவே நகர்ந்தாள்..

அரச மாளிகையை நோக்கி மலர்க்கொடி நடந்ததில் மைதிலிக்கு குழப்பமானது..

“அண்ணி..” தயக்கத்துடன் அழைத்தாள்..

“என்ன..?” கடினமாக வெளிவந்து மலர்க்கொடியின் குரல்..

"அரசருடைய மாளிகையை நோக்கி நடக்கிறீர்களே..?"

"அங்குதான் செல்கிறேன்.. அதற்கு என்ன..?"

"தங்களின் உறவினர் வருகை தந்திருப்பதாகச் சொன்னீர்களே.."

"ஆம் சொன்னேன்தான்.. அதற்கும்தான் என்ன..?"

"அரச மாளிகையிலா தமது உறவினர் தங்கியுள்ளார்..?"

"ஆம்.. ஏன்..? அரச மாளிகையில் எனது உறவினர் தங்கக் கூடாதா..?"

கூடாது என்று மைதிலி எப்படிச் சொல்வாள்..? சும்மாவே அவள் மலர்க்கொடியின் முன்னால் வாய் திறக்க மாட்டாள்.. தற்போதோ மலர்க்கொடி எதன் பொருட்டோ மைதிலியிடம் சினம் கொண்டு பேசிக் கொண்டிருக்கிறாள்.. இந்நிலையில் மைதிலி எதிர்த்து வழக்காடுவாளா..?

வாயை மூடிக் கொள்வதே உசிதம் என்று வாயை மூடிக் கொண்டாள் மைதிலி.. மௌனமாக மலர்க் கொடியுடன் நடந்தாள்.. அரண்மனையின் அலங்கார வளைவுகளையும்.. பூங்காக்களையும்.. நீருற்றுக் களையும்.. அங்கு கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்த பட்ஷிக் கூட்டங்களையும்.. பார்க்குப் போது எப்போதும் மைதிலிக்கு வரும் பரவசம் அப்போது வந்து தொலைக்க வில்லை.. எங்கோ ஒரு குயிலின் கானம் தனிமையில் இசைப்பதை சோகத்துடன் கேட்டபடி அவள் வெறுமையான மனதுடன் நடந்தாள்..

அருகில் வந்த நாத்தனாரின் முக பாவனைகளை கூர்ந்து கவனிப்பதும்.. தனக்குள் சிந்திப்பதுமாக நடந்த மலர்க்கொடியின் முகத்தில் என்றும் இல்லாத வகையில் கடுமை விரவிக் கிடந்தது..

மாளிகைக்குள் சென்றதும் சேடிப்பெண்கள் ஓடி வந்து அவர்களை வரவேற்றார்கள்..

"வாருங்கள்.."

அவர்கள் வழிகாட்டி அழைத்துச் சென்ற மேன் மாடத்தின் அறை பார்த்திபனின் இல்லத்தை விட இரு மடங்கு பெரியதாக இருந்தது.. அறையின் தூண் வளைவுகளில் பட்டுத் திரைச் சீலைகள் அலங்கார மடிப்புகளுடன் கட்டப் பட்டிருந்தன.. சுவர் முழுவதும் சித்திரங்கள்.. ஆங்காங்கே மஞ்சங்களுடன் கூடிய ஆசனங்கள்.. தங்கத்தட்டுக்களில் அடுக்கப் பட்டிருந்த பழ வகைகள்..

'எத்துணை அழகான அறை..!'

மைதிலி சோகத்தை மறந்து வியப்புக் கொண்டாள்.. அந்த அறை முழுவதும் பரவியிருந்த செல்வச் செழிப்பு.. அது அரச குடும்பத்தினருக்கான பிரத்யேக அறை என்பதை அறிவுறுத்தியது..

'அண்ணியின் உறவினர் இந்த அறையில் தங்கியுள்ளாரா..?'

யார் அது என்று அறியும் ஆவலுடன் மைதிலியின் விழிகள் துழாவிய போது.. உப்பரிகையில் இருந்து.. யாழின் இனிய நாதம் போல..

"வரவேண்டும்.. வரவேண்டும்.." என்ற பெண் குரல் கேட்டது..

அந்தக் குரலில் மலர்க்கொடியின் முகம் மலர்ந்து விட்டது.. அவள் உப்பரிகைக்கு விரைந்தாள்.. மைதிலியும் தொடர்ந்தாள்.. அங்கே ஹம்ச தூளிகா மஞ்சத்தில் எழுத்தாணியுடன் அமர்ந்திருந்த அழகே வடிவான பெண்ணொருத்தி எழுந்து நின்றாள்.. மஞ்சம் முழுவதும் அவள் எழுதி வைத்திருந்த லிகித வடிவிலான சீலைகள் பரந்திருந்தன..

"கங்காதேவி..!"

மலர்க்கொடி அன்பு சொட்டும் குரலில் அழைத்ததில் மைதிலி விழி விரித்தாள்..

'இவளா கங்காதேவி..? விஜயநகரத்தின் இளவரசி இவளா..? ஆடை, ஆபரணங்களின்மீது ஆசை கொள்ளாமல் எழுத்தாணியின் மீது தீராத காதல் கொண்ட அறிவு மிக்க அரசகுல மங்கை இவள்தானா..? மிகப் பெரும் சாம்ராஜ்யத்தின் ராணியாக இருந்தும்.. புலமை மிக்க தனித்துவத்துடன் விளங்கும் மகாராணி கங்காதேவி இவள்தானா..?'

"அண்ணி.."

கங்காதேவி பிரியத்துடன் மலர்க்கொடியின் கரங்களைப் பற்றிக் கொண்டாள்..

'அண்ணியா..?'

மைதிலியின் முகத்தில் எழுந்த கேள்விக்கு மலர்க்கொடி விடை சொன்னாள்..

“கங்காதேவி எனது அத்தையாரின் புதல்வியாவாள்.. அதனால் சிறுவயது முதற்கொண்டே என்னை அண்ணியென்று தான் அழைப்பாள்..”

மலர்க்கொடியின் விளக்கத்துக்கு தலையசைத்த மைதிலியின் மீது கங்காதேவியின் பார்வை படிந்தது..

“இவள்தான் எனது நாத்தனார்.. மைதிலியென்று பெயர்..”

மலர்க்கொடி அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.. இனிமையான புன்முறுவலுடன் தலை அசைத்த கங்காதேவியின் எழில் சொல்லில் அடங்காததாக இருந்தது..

அலைபாயும் நீண்ட கூந்தலும்.. கொடி போன்ற உடலுமாக இருந்தவள்.. உலகில் உள்ள அத்தனை அழகையும் ஒட்டு மொத்தமாக குத்தகைக்கு எடுத்திருப்பவளைப் போன்ற பேரழகுடன் இருந்தாள்..

வட்ட முகமும்.. தீர்க்கமான நாசியும்.. நீள் வடிவிலான மீன் போன்ற விழிகளையும் கொண்டிருந்தவளின் பேரழகில் மைதிலி பிரமித்து நின்றாள்..

“தாம் மிகவும் அழகாக உள்ளீர்கள்..”

மைதிலியின் மனம் திறந்த பாராட்டில் கங்காதேவி இதழ் விரித்து நகைத்தாள்.. அவளை விட வயதில் மிகவும் இளையவளாக இருந்த மைதிலியின் கள்ளங்கபடமற்ற பேச்சு அவளைக் கவர்ந்தது..

"நீயும் தான் அழகு..! இவ்வுலகில் பிறந்த அனைத்து ஜீவன்களும் அழகு கொண்டவைதான்.. அழகற்ற படைப்பை ஆண்டவன் படைப்பதில்லை.."

கம்பீரமாகக் கூறிய கங்காதேவியின் வார்த்தைகள் மைதிலியை ஈர்த்தன.. அழகுடன் கூடிய கம்பீரத்தை ஒரு பெண் பெற்றிருப்பதை அன்றுதான் அவள் கண்டாள்.. நளினம் நிறைந்த கங்காதேவியிடம் அறிவின் ஆழமும் இருந்தது.. எழிலுடன் கூடிய அவளது சுபாவத்தில் வீரம் நிறைந்திருந்தது..

ஓர் அரசிக்குரிய அத்துனை தன்மைகளையும் தன்னகத்தே கொண்டிருந்த கங்காதேவி.. கூடுதலாக அறிவாற்றலுடன் கூடிய வீரத்தைத் தன் தனி அடையாளமாகக் கொண்டிருந்தாள்..

'இப்படியொரு அரசியை இதற்கு முன்பு நான் பார்த்ததில்லை..'

மைதிலி அனைத்தையும் மறந்தாள்.. ஆர்வத்துடன் கங்காதேவி வடித்து வைத்திருந்த வெண்பாக்களை வாசித்துப் பார்த்தாள்.. அதில் வெளிப்பட்ட சொல்வீச்சில் அயர்ந்து போனாள்..

"ஆஹா..! அற்புதம்..! இந்த வெண்பாக்களை வரைந்த கரங்களுக்கு நான் முத்தம் கொடுக்கலாமா..?"

வெகுளியாக வினவிய மைதிலியின் மழலைத் தனத்தில் ஈர்க்கப்பட்ட கங்காதேவி தன் கரங்களை நீட்டினாள்.. அவற்றைப் பற்றி அதரங்களைப் பதித்து

நிமிர்ந்த மைதிலி.. மலர்க்கொடியின் பார்வையில் தெரிந்த ஏதோ ஒன்றில் திகைத்தாள்..

'அண்ணியின் பார்வையில் ஏதோ மர்மம் ஒளிந்துள்ளதே.. அது என்னவாக இருக்கக் கூடும்..'

விழிகளை மூடிய இமைகளுடன் அவள் யோசிக்க முற்பட்டபோது..

"சிந்தனைகளையெல்லாம் இல்லம் திரும்பியபின் பார்த்துக் கொள்.. தற்போதைய பொழுது ஆலோசிப் பதற்கானது அல்ல.. அளவளாவுவதற்கானது.." என்று கங்காதேவி அவள் கன்னம் தட்டி நகைத்தாள்..

விஜயநகர பேரரசின் ராணியாக இருந்தும்.. அவள் மைதிலியை சமதையாக பாவித்து உரையாடியதில் மனம் நெகிழ்ந்தாள் மைதிலி..

'இவள் அரிதானவள்..! கோடியில் ஒருத்தி..!'

கங்காதேவியையே விழிகளை விலக்காமல் பார்த்தபடி அவளருகில் அமர்ந்து கொண்ட மைதிலி..

"உங்களை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.." என்று வெகுளியாகக் கூறினாள்..

சரேல் என்று உயர்ந்த மலர்க்கொடியின் மர்மப் பார்வை வீச்சில் மைதிலி கொண்ட குழப்பத்தை கங்காதேவியின் நகைப்பு விரட்டியடித்தது..

"எனக்கும் உன்னைப் பிடித்திருக்கிறது மைதிலி.."

"தெரியுமா..? நான் வணங்கும் கங்கையம்மனின் பெயர்தான் உங்களுக்கும்.. என்ன ஒரு ஆச்சரியம் இது..!"

"அப்படியா..? கங்கையம்மன் உனக்கு இஷ்ட தெய்வமா..?"

"எனக்கு இஷ்டதெய்வமும், குலதெய்வமும் கங்கையம்மன்தான்.. எனது தோழியைப் போல கங்கையம்மனைப் பாவித்து எனது வேண்டுதல்களை உரையாடலைப் போல அவள் சன்னதியில் சொல்வேன்.."

"அற்புதம்..! தெய்வத்தையே தோழியாக்கிக் கொண்டாயே.. நீ கெட்டிக்காரிதான்.. என்னையும் உனது தோழியாக்கிக் கொள்வாயா..?"

இலகுவாக கேட்ட கங்காதேவியை பிரமிப்புடன் நோக்கினாள் மைதிலி..

கங்காதேவி எங்கே.. இவள் எங்கே.. மலை மடுவிடம் தோழமை கொள்ள ஆசை கொள்கிறதா..? எட்டாத உயரத்தில் விண்ணில் பவனி வரும் முழுநிலவு.. மண் துகளிடம் கரம் நீட்டி நட்பு பாராட்டுகிறதா..?

'யார் இவள்..?'

தேவதை என்று தோன்றியது மைதிலிக்கு..

கங்காதேவி தேவதை போலதான் இருந்தாள்.. அவள் வணங்கும் கங்கையின் அழகோடு அபரிதமான அறிவோடு கானக்கிடைக்காத பொக்கிசம் போலதான் இருந்தாள்..

'இவள் ஒரு வரம்..!'

கங்காதேவியின் கரங்களைப் பற்றித் தன் விழிகளில் ஒற்றிக் கொண்ட மைதிலி.. மறுபடியும் மலர்க்கொடியின் மர்மம் நிறைந்த பார்வையை சந்திக்க நேரிட்டது..

"இன்றிலிருந்து நீ எனது அந்தரங்கத் தோழி..!"

அவளை அனைத்துக் கொண்ட கங்கா தேவியின் வார்த்தைகளில் அவளது கண் நிறைந்தது..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



12

உன் விழியில் தூசு பட்டால்.. என் விழியே கலங்குவதேன்..?

மௌனமாக இமைகளைத் தாழ்த்தி கீ போர்டில் கவனமாக இருந்தாள் யாமினி..

தலையைப் பிடித்தபடி இமை மூடி சுழல் நாற்காலியில் சரிந்திருந்த சித்தார்த்தனைப் பார்க்கும் போது அவள் மனதில் குற்றஉணர்வு படிந்தது.. அவளால்தானே நெருங்கிய நண்பர்களுக்கிடையே விரிசல் தோன்றியுள்ளது என்ற வேதனை அவளுள் படர்ந்தது..

அதி முக்கியமான ஒப்பந்தத்தில் கையெழுத் திடத்தான் அன்று பிஸினெஸ் லன்ச் என்று ஸ்டார் ஹோட்டலுக்குப் போயிருந்தான் சித்தார்த்தன்.. இது போன்ற சந்திப்புக்களுக்கு தாமோதரன் இல்லாமல் அவன் சென்றதில்லை.. எப்போதும் அதுதான் அவர்களுக்குள் எழுதப்படாத ஓர் செயல்பாடாக இருந்தது..

அன்று மட்டும் எப்படி தாமோதரன் இல்லாமல் போய் வந்தான்..? அதுவும் அதுபோன்ற சந்திப்பிற்கு அவன்

போகிறான் என்ற விவரத்தைச் சொல்லாமலே போய் விட்டானே.. ஏன்..?

சித்தார்த்தனுக்கு மன உளைச்சலாக இருந்தது.. ஒப்பந்தம் பற்றிய முக்கிய விவரங்களை அவன் சொல்லச் சொல்ல.. கம்யூட்டரில் அதை டைப் பண்ணிக் கொண்டிருந்த யாமினி.. அவனிடமிருந்து சப்தம் வராததில் விழியுயர்த்தி அவனைப் பார்த்தாள்..

அதே சமயத்தில் இமை திறந்து அவனும் அவளைப் பார்த்ததில் இருவரின் பார்வையும் மறுபடியும் சங்கமித்தன.. புரிதலுடன் கூடிய இந்த சங்கமத்தில்.. அவன்..

'இது செகண்ட் டைம்...' என்று நினைத்துக் கொண்டான்..

அவனைப் பற்றிய புரிதல் தாமோதரனிடம் மட்டுமே இருக்கும்.. சித்தார்த்தன் மனதில் நினைப்பதை அவன் வாய் விட்டுச் சொல்லாமலே அறிந்து கொள்ளும் புரிதல் உடைய நண்பன் அவன்..

நீரஜாவிடம் அந்தப் புரிதல் இருந்ததில்லை... அவள் என்ன நினைக்கிறாள் என்பதை மற்றவர்களால் அனுமானிக்கவும் முடியாது.. மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று அவளும் அறிய நினைத்த தில்லை..

ஒரு அலட்சியப் பார்வையும்.. மிடுக்கான தோள் குலுக்கலும் நீரஜாவுக்குச் சொந்தமானவை..

அவளுக்கும் தாமோதரனுக்கும் இடையில் எப்படி அப்பேற்பட்ட அன்யோன்யம் ஏற்பட்டது என்று சித்தார்த்தன் அடிக்கடி ஆச்சரியப்படுவான்..

அதிலும் சித்தார்த்தனிடம் நெருப்பாக கொதிக்கும் தாமோதரன்.. நீரஜாவிடம் நீராக குளிர்ந்து போவதுதான் விந்தையிலும் விந்தையாக அவனுக்குத் தோன்றும்..

அந்தத் தாமோதரன் சித்தார்த்தனின் மனம் நோகப் பேசிவிட்டுப் போய் விட்டான்.. அவன் பேச்சில் வலி கொண்ட மனதிற்கு மருந்து தடவுவதைப் போல புரிதலான பார்வையுடன் யாமினி சித்தார்த்தனுக்கு எதிரில் உட்கார்ந்திருந்தாள்..

'இதைத்தான் தாமு சொன்னானோ.. நானும் யாமினி வந்ததிலிருந்து தாமுவை இக்னோர் பண்றேனோ..'

சித்தார்த்தனுக்கு மறுபடியும் தலையை வலித்துத் தொலைத்தது.. மௌனப் பார்வையுடன் யாமினி அங்கிருந்து அகன்றாள்..

'வேலையை பாதியில விட்டுட்டு இவ எங்கே போறா..?'

அதற்கு மேல் யோசிக்க முடியாமல் தலைவலி அவனைப் பாடாய்ப் படுத்தியதில் சித்தார்த்தன் தலையைப் பிடித்துக் கொண்டான்..

"இந்தா.."

அவன் முன்னால் வேண்டாத புருசனுக்கு பல்லைக் கடித்தபடி மனைவி கொடுக்கிற காபியைப் போல 'ணங்' என்ற ஓசையுடன் காபி கப் வைக்கப்பட்டது..

'இந்த லட்சணத்தில யாரு காபிக் கப்ப வைக்கிறது..?' கோபத்துடன் கண் திறந்து முறைத்த சித்தார்த்தன்.. எதிரில் அவனை விட அதிகமாக முறைத்தபடி நின்றிருந்த தாமோதரனைக் கண்டதும்..

"டேய் தாமு.." என்றான் வாயெல்லாம் பல்லாக..

"போதும்.. இந்த நடிக்கிற வேலையையெல்லாம் வேற யார்கிட்டயாவது வைத்துக்க.. என்கிட்ட வேணாம்.. இந்தா.. காபியோட சேத்து இந்த டேப்லெட்டையும் முழுங்கித் தொலை.."

இப்படிக் கொடுக்கப்படும் காபியையும், மாத்திரையும் மனிதன் தொட்டுப் பார்ப்பானா..?

சித்தார்த்தன் தொட்டுப் பார்த்தான்.. என்னவோ.. காணாததைக் கண்டவன் போல காபிக் கப்பைக் கைப்பற்றி மடக்.. மடக்கென்று குடித்து முடித்தான்..

"இந்த டேப்லெட்டை எவன் முழுங்குவான்..?"

"நான் முழுங்க மாட்டேன்.. போடா.."

"இம்சையைக் கிளப்பாதே.. ஹெட் ஏக்குன்னு தலையைப் பிடிச்சுக்கிட்டு உக்காந்திருக்கத் தெரியுதில்ல.. டேப்லெட்டைப் போட்டால்தான் ஹெட்ஏக் குறையும்ன்னு தெரியாது..?"

"தெரியாதுடா.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?"

சித்தார்த்தன் சந்தோசமாகச் சிரித்தான்.. தலைவலி போன சுவடே தெரியாமல் சிரித்த முகமாய் இருந்தவனை கேபினுக்கு வெளியே இருந்து பார்த்த யாமினியின் மனம் லேசானது..



13

விதி வகுக்கும் பாதைதன்னை.. உணர்ந்தவரே இப்புவியில் இல்லை..

அன்றைய பொழுது இனிதாக விடிந்துள்ளது.. என்று மைதிலிக்குத் தோன்றியது..

முன்தினம் வரை அவள் யாரோ.. கங்காதேவி யாரோ.. அன்றைய தினத்தில் அவள் வேறோ.. கங்காதேவி வேறோ.. என்று அந்தரங்க தோழிகளாக மாறி விட்ட விந்தையில் திக்கு முக்காடிப் போயிருந்தாள்..

என்னதான் சிற்றரசுப் பாரம்பர்யத்தில் பிறந்து வளர்ந்தவள் என்று பெருமை பீற்றிக் கொண்டாலும்.. அரச குடும்பத்திற்கும் மைதிலிக்கும் ஏணி வைத்தாலும் கூட எட்டாத தொலைவு இருந்தது..

அவ்வாறு எட்டாத தொலைவில் இருப்பவள் தனக்குச் சரிக்குச் சமமாக மைதிலியை பாவித்து தோழமை பூண்டதில் மனம் நெகிழ்ந்து பாகாக உருகி விட்டாள் மைதிலி..

அவளை அணைத்திருந்த கங்காதேவியின் தோள் வளைவில் முகம் பதித்திருந்தவள்.. பார்வையை உயர்த்தியதும் அதிர்ந்து விட்டாள்..

அங்கே கங்காதேவியின் அணைப்பிலிருந்த மைதிலியையே இமைக்காமல் பார்த்த வண்ணம் குமார கம்பண்ணன் நின்றிருந்தான்..

'இவனா..?'

அவனைப் பார்த்து விட்ட சந்தோசத்தில் அவள் விழிகள் பளபளத்தன.. அந்த பரவசத்தைப் பார்த்தவனின் நெடுமூச்சில் அவளது முகம் வாடியது... அவளது பரவசத்தை பார்த்த வண்ணம் அருகில் வந்தான் குமார கம்பண்ணன்..

வெட்கத்துடன் கங்காதேவியின் அணைப்பிலிருந்து விலகி நின்றாள் மைதிலி.. அவளது பார்வை போன திக்கில் பார்த்த கங்காதேவியின் முகத்தில் புன்னகை படர்ந்தது..

"தாங்களா..?" என்றவள் மைதிலியைச் சுட்டிக் காட்டி..

"இவளை அறிவீர்களா..?" என்று வினவினாள்..

மைதிலியின் பார்வையும்.. குமார கம்பண்ணனின் பார்வையும் சந்தித்து மீண்டன.. ஓர் பெருமூச்சுடன்..

"அறிவேன்.." என்றான் குமார கம்பண்ணன்..

"அறிந்திருப்பீர்கள்.. அண்ணியின் இல்லத்தில்தானே விருந்தினராகத் தங்கியிருந்தீர்கள்.. இவள் எத்துணை பிரியமானவள் என்பதை அறிந்திருக்க மாட்டீர்கள்.."

கங்காதேவி பரிவுடன் மைதிலியைப் பார்க்க.. குமார கம்பண்ணன் குற்ற உணர்வுடன் பார்த்தான்..

'இவளது பிரியத்தையும் அறிவேன்..'

அவன் மனம் கனத்தது..

"கிள்ளை மொழியும்.. பிள்ளை சுபாவமும் கொண்டவள்.. பச்சிளம் மழலை போல பேச்சு.. சந்தித்த சில நொடிகளிலேயே என் மனதில் இடம் பெற்று எனக்குப் பிரியமான தோழியாகி விட்டாள்.."

"அப்படியா..?"

"ஆம்.. அரண்மனையின் சேவகர்களிடம் சொல்லி வைத்து விடுங்கள்.. இவள் என்னைச் சந்திக்க எந்த வேளையிலும் வந்து செல்லலாம் என்ற உத்தரவைப் பிறப்பித்து விடுங்கள்.."

"ஆகட்டும்.."

ஆணையிடுவதைப் போல குமார கம்பண்ணனிடம் கங்காதேவி பேசிய விதத்தையும்.. அதற்கு ஒப்புதலாக அவன் தலையை அசைத்ததையும் விசித்திரமாக பார்த்து வைத்தாள் மைதிலி..

'காஞ்சியின் அர்சன் குமார கம்பண்ணன்தானே.. இல்லை.. இங்கு கங்காதேவியின் ஆட்சி நடக்கிறதா..?'

கங்காதேவி வெகு உரிமையுடன் குமார கம்பண்ணனிடம் பேசிப் பழகினாள்.. அவள் சொன்ன அத்தனை வார்த்தைகளையும் மறுப்புச் சொல்லாமல் ஏற்றுக் கொண்டான் குமார கம்பண்ணன்..

விருந்திற்குப் பின்னால் இல்லம் திரும்பிய போது.. மலர்க்கொடியிடம் எதையே வினவ யத்தனித்தாள் மைதிலி..

"உஷ்ஷ்..."

அதரங்களில் வலது கையின் ஆள் காட்டி விரலை வைத்து விழிகளால் ரதமோட்டியைச் சுட்டிக் காட்டி எச்சரித்தாள் மலர்க்கொடி.. மௌனமாகி விட்டாள் மைதிலி..

விரைந்தோடிய ரதம் இல்லத்தின் முன்னால் நின்றது.. விளையாடிக் களைத்து.. விருந்துண்ட அயர்வில் கிள்ளி வளவனும், முல்லைக்கொடியும் ரதத்திலேயே துயில் கொண்டு விட.. மைதிலியும், மலர்க்கொடியும்.. ஆளுக்கொரு பிள்ளையைத் தூக்கிய வண்ணம் ரதத்தை விட்டு இறங்கினார்கள்..

இல்லத்துக்குள் சென்று பஞ்சணைகளில் பிள்ளைகளைப் படுக்க வைத்தவுடன் மலர்க்கொடி மையல் கூடத்திற்கு சென்று விட்டாள்.. அங்கிருந்த பணியாள்களிடம் அவள் வேலை சொல்லிக் கொண்டிருக்க.. மைதிலி அவள் பின்னாடியே அவளது சேலையின் முந்தானையைப் பிடிக்காத குறையாக சுற்றிக் கொண்டிருந்தாள்..

ஒரு வழியாக மலர்க்கொடி ஓய்வெடுக்கப் போன போது பின்னாடியே தொடுத்துச் சென்றவள்..

"அண்ணி.." என்று அழைத்தாள்..

"ம்ம்ம்.."

பஞ்சணையில் தலைக்கு அணைவாக மஞ்சத்தைப் போட்டபடி மைதிலியைப் பார்த்தாள் மலர்க்கொடி..

"உங்களிடம் ஒன்று கேட்க வேண்டும்.,"

"ஒன்றென்ன.. ஓராயிரம் கேள்.. சொல்கிறேன்.."

"கங்காதேவி உங்களின் உறவுக்காரப் பெண்தானே.."

"ஆமாம்.. அத்துடன் அவள் மகாராணி என்பதையும் நினைவில் கொள்.. கனவிலும் அதை மறந்து விடாதே.."

"ஏன் அண்ணி கடுமையாக பேசுகிறீர்கள்..?"

"அப்படியொரு நேர்த்திக் கடனை நேர்ந்துள்ளேன்.. போதுமா.. இன்னும் வேண்டுமா..?"

"போதும்.. போதும்.. இதுவே அதிகம்.. இன்னும் வேண்டுமென்று வாங்கிக் கட்டிக்கொள்ள நான் என்ன அறிவிழியா..?"

"நீ அறிவிழிதான்.. புத்திசாலிப் பெண் இத்தகைய சிக்கலில் சிக்கிக் கொள்ள மாட்டாள்.."

"என்ன சொல்கிறீர்கள்.."

"நீ கேட்க வந்ததைக் கேட்டு விடு.. அப்போது நான் சொல்ல வருவதையும் நீ புரிந்து கொள்வாய்.."

"விஜய நகரத்தின் ராணி காஞ்சிக்கு ஏன் வருகை தர வேண்டும்..?"

"ஏன்..? அதற்கு உன் அனுமதியைப் பெற வேண்டுமா..?"

வெடுக்கென்றுதான் கேட்டு வைத்தாள் மலர்க் கொடி.. மிளகாயின் காரத்தோடு அவள் கேட்ட கேள்வியில் மைதிலியின் முகம் வாடி விட்டது.. கன்றி விட்ட அவள் முகத்தைக் கண்ட மலர்க்கொடியின் மனம் வலித்தது..

"அப்படியல்ல அண்ணி.."

"பின்.. எப்படி..?"

"அது.. வந்து.. அண்ணி.. வந்து.. நான் என்ன கேட்க நினைக்கிறேன் என்றால்.."

"இழுத்து ராகம் பாடாதே.. கேட்க வருவதை நேரடியாக கேள்.."

"கங்காதேவி தனித்து வருகை தந்துள்ளார்களா..?"

"ஆம்.."

"அவருடன் வேறு எவரும் வருகை தரவில்லையா..?"

"எவர் வர வேண்டும்..?"

மலர்க்கொடியின் விழிகள் மைதிலியைத் துளைப்பதைப் போல பார்த்தன.. ஊடுறிவிய அந்தப் பார்வையில் பேச இயலாதவளாக தடுமாறினாள் மைதிலி..

"அவருடைய உறவினர் எவராவது.."

"அவளுடைய உயிருக்கு நிகரான உறவினரே இங்குள்ள போது வேறு எவர் வர வேண்டும்..?"

'உயிருக்கு நிகரான உறவா..? அண்ணியைச் சொல்கிறார்களா..?'

மைதிலி சொந்தத்துடன் மலர்க்கொடியின் கரங்களைப் பற்றியபடி..

"உங்களைச் சொல்கிறீர்களா அண்ணி..?" என்று சலுகையுடன் வினவினாள்..

அவளையே வெறித்துப் பார்த்த மலர்க்கொடி கரங்களை உதறினாள்..

"இல்லை.. என்னைச் சொல்லவில்லை.." என்றாள்..

"பின்.. வேறு யார் அண்ணி..?" குழந்தை போல வினவினாள் மைதிலி..

அவளை இரக்கத்துடன் பார்த்த மலர்க்கொடியின் விழிகள் கலங்கிச் சிவந்தன.. நாத்தனாரை உறுத்துப் பார்த்து விழித்தவள் ஓர்நொடி பேச்சின்றி இமை மூடித் திறந்தாள்..

"சொல்லுங்கள் அண்ணி.."

மைதிலியின் தூண்டலில் இமை திறந்து அவளைப் பார்த்தவளின் முகம் இறுகியிருந்தது..

"ஒரு பெண்ணுக்கு உயிருக்கு நிகரான உறவு கணவன்தான்.." எங்கோ பார்த்தபடிச் சொன்னாள்..

"கணவனா..?" மைதிலி ஆச்சரியத்துடன் கேட்டாள்..

"கணவன்தான்.. இதில் உனக்கு ஏன் இத்துனை ஆச்சரியம்..? அவள் உன்னை விட வயதில் பெரியவள்.. திருமணமானவள்.." என்றாள் மலர்க்கொடி..

"அதில் ஆச்சரியமில்லை அண்ணி.. ஆனால் கங்காதேவியின் கணவர் காஞ்சியில் உள்ளாரா..? அவர் விஜயநகரத்தில் இருக்கிறார் என்றல்லவா நான் நினைத்தேன்..?" மைதிலி வலது கையை முகவாயில் வைத்து அதிசயித்தாள்..

"முன்பு அவர் விஜய நகரத்தில்தான் இருந்தார்.. தற்போது காஞ்சியில் உள்ளார்.."

"தங்களுக்கு அவரைத் தெரியுமா..?"

"தெரியும்.."

"தமையனுக்கு..?"

"தெரியும்.."

"ஆச்சரியமாக உள்ளதே.. உங்களுக்கும், தமையனுக்கும் கங்காதேவியின் கணவரைத் தெரிந்திருக்கிறது.. இந்த இல்லத்தில் அவரைத் தெரியாத மண்டூகங்களாக நானும், கிள்ளி வளவனும், முல்லைக் கொடியும்தான் இருக்கிறோம் போல.."

மைதிலியின் நகைப்பில் மலர்க்கொடி அவளை பச்சாதாபத்துடன் பார்த்தாள்.. அந்தப் பார்வையில் மைதிலியின் நகைப்பு நின்றது..

"அண்ணி..?" என்றாள் கேள்வியாக..

"இல்லை மைதிலி.. நீங்கள் மண்டூகங்கள் இல்லை.. நீயும், கிள்ளிவளவனும், முல்லைக்கொடியும் அவரை அறிவீர்கள்.."

விசனத்துடன் கூறினாள் மலர்க்கொடி.. அவளது விசனத்தில் மைதிலியின் இதயம் பதைத்தது.. அவளது மனதை துகள் துகளாக்கும் உண்மையை மலர்க்கொடி அறிந்து வைத்திருக்கிறாள் என்று அவளது ஆழ்மனம் அறிவுறுத்தியது..

"எப்படி அண்ணி..?" குரல் நடுங்கக் கேட்டாள்..

“நம் இல்லத்தில் சில தினங்கள் அவர் விருந்தினராகத் தங்கியிருந்தார்.. அவருடன் நீங்கள் மூவரும் உரையாடி யுள்ளீர்கள்..” வறண்ட குரலில் பதில் சொன்னாள் மலர்க்கொடி..

“அண்ணி..?..?...?”

மைதிலியின் மனம் மத்தளமானது.. மலர்க்கொடி சொல்ல வரும் செய்தி என்ன..? அப்படியானால்..? அப்படியானால்..?

“ஆம்.. காஞ்சியின் அரசர் குமார கம்பண்ணன்தான் கங்காதேவியின் கணவர்..! அவள் விஜயநகரப் பேரரசின் இளவரசரின் மனைவி..! விஜயநகரப் பேரரசின் மருமகள்..! ராணி..! தற்போது காஞ்சியின் மகராணி..!”

“அண்ணி..!”

மைதிலி நெஞ்சைப் பிடித்துக் கொண்டு மயங்கிச் சரிந்தாள்..

“மைதிலி..”

மலர்க்கொடி தான் வளர்த்த வளர்ப்பு மகளைத் தூக்கி மடியில் போட்டுக் கொண்டு பதறினாள்.. அருகில் இருந்த குவளையில் இருந்த நீரை அவள் தெளித்ததில் மைதிலி கண் திறந்தாள்..

“எழுந்திரு.. பிள்ளைகளின் அருகே படுத்து உறங்கு..”

“அண்ணி..”

“முதலில் ஓய்வெடு.. மற்றவற்றை பிறகு பேசிக் கொள்ளலாம்..”

கண்டிப்புடன் அதட்டி நாத்தனாரைத் தூங்க வைத்தாள்.. மாலையில் அவளுடன் கோவிலுக்குச் சென்றாள்.. பிரகாரத்தில் அமர்ந்து நாத்தனாருக்குப் புத்திமதிகள் சொன்னாள்..

"கண்ணில் காணும் அனைத்தையும் நாம் சொந்தம் கொண்டாடி விட முடியாது மைதிலி..! காஞ்சியின் அரசர் குமார கம்பண்ணன் விண்..! நீ மண்..! விண்ணுக்கும் மண்ணுக்கும் முடி போட எவராலும் இயலாதம்மா.."

"அண்ணி.." மைதிலி விம்மினாள்..

"அழு.. அழுது உன் மனதில் உள்ள ஆசைகள் அனைத்தையும் கரைத்து விடு.. குமார கம்பண்ணன் உனக்குக் கிட்ட மாட்டார்.. அவர் கங்காதேவியின் கணவர்.. இன்னொரு பெண்ணை மனைவியாக வரிக்க அவரால் முடியாது.. கங்காதேவியின் ஆளுமை அப்படிப் பட்டது.. பார்த்தாயல்லவா..? அரசருக்கே ஆணையிடும் ஆற்றல் அவளுக்கு மட்டும்தான் உண்டு.. அவள் குடியிருக்கும் குமார கம்பண்ணனின் மனதில் உனக்கு இடமில்லை.."

"முழு மனதும் எனக்கு வேண்டாம்.. ஒரு ஓரத்தில்.. சிறு மூலையில்.. எனக்காக சிறு இடம் ஒதுக்க மாட்டாரா..?"

"மாட்டார்.."

உறுதியுடன் தலை அசைத்தாள் மலர்க்கொடி.. நாத்தனாரின் நைந்து போன மனமும்.. நலிந்த குரலும்

அவளை உலுக்கின.. வளர்த்த தாயின் மனது தவியாய் தவிக்கத்தான் செய்தது..

'ஆயினும்.. கிட்டாதாயின் வெட்டென மறக்க வேண்டுமல்லவா..?' மலர்க்கொடி தன் மனதைக் கல்லாக்கிக் கொண்டாள்..

"எனக்காக கருணை காட்டுங்கள் அண்ணி.."

"எவ்விதம் மைதிலி..? கங்காதேவியின் உறவுக்காரி நான்.. அவளிடம் சென்று உன் கணவரை எனது நாத்தனாருக்கு விட்டுக் கொடு என்று வெட்கமின்றிக் கேட்கச் சொல்கிறாயா..?"

"அண்ணி..!"

"அவள் வெட்டிப் போட்டு விடுவாள்.. கங்கா தேவியை யாரென்று நினைத்தாய்..? கோபம் கொண்டால் அவள் மகிசாசுர வர்த்தினி..! மறந்து விடாதே.."

"ஆனால் அண்ணி.. குமார கம்பண்ணனிடம் என் மனம் சிக்கியுள்ளதே.. நான் என்ன செய்வேன்..?"

"அவர் மனம் உன்னிடம் சிக்கியுள்ளதா..?"

ஆழ்ந்த குரலில் கேட்டாள் மலர்க்கொடி.. பதிலளிக்க முடியாமல் திணறிப் போனாள் மைதிலி..

"அண்ணி..!.."

"அறிவேன் நான்.. கங்காதேவியின் கணவன் மற்ற மங்கையரின் காதலில் சிக்க மாட்டார்.. உன் காதலை அவர் ஏற்றிருக்க மாட்டார்.. உண்மையை உணர்ந்து

கொள் மைதிலி.. அவர் உன்னை அறியும் முன்னரே கங்காதேவியை அறிந்தவர்.. அவளுக்கு மாலையிட்டு மாங்கல்யம் அணிவித்தவர்.. அவளுடன் வாழ்ந்தவர்.. வாழ்ந்து கொண்டிருப்பவர்.. ஈடு இணையில்லாத கங்கா தேவியை மனைவியாக அடையப் பெற்றவரின் மனம் வேறொரு பெண்ணை நாடுமா..?"

"அண்ணி.."

"பச்சிளம் மழலை நீ.. உலகம் அறியாதவள்.. கங்காதேவி அப்படியல்ல.. பக்குவமடைந்த அறிவாளி.. இந்த உலக விவரங்களை விரல் நுனியில் வைத்திருப்பவள்.. தேர்ந்த அறிவாளி..! ஓர் அமைச்சரின் சாதுர்யத்தையும், படைத்தலைவனின் வீரத்தையும் தன்னகத்தே கொண்டவள்.. அவளுக்கு நிகரான பெண் இப்புவியில் இல்லை... அவளுடைய கணவன் மீது நீ காதல் கொண்டுள்ளாயா..?"

மைதிலி மனம் சோர்ந்தாள்.. அவள் மனதை ஒடிக்கும் வார்த்தைகளைச் சொல்பவள்.. அவளைப் பெற்ற தாயினும் பேணி வளர்த்த வளர்ப்புத் தாயான அண்ணி என்பதில் இன்னும் அதிகமாக மனம் சோர்ந்தாள்.. ஈடு இணையில்லாத கங்காதேவிக்கு அவள் இணையில்லை என்பதை இரக்கமே இல்லாமல் அவளுடைய அண்ணி சுட்டிக் காட்டியதில் மனம் துடித்துப் போனாள்.. கங்கா தேவிக்கு நிகரான பெண் இப்புவியில் இல்லை என்பதில் மைதிலியும் அடக்கம் என்பதில் மனம் நைந்து போனாள்.. தன்னிகரற்ற கங்காதேவியின் முன்னால் மைதிலியால்

நிற்கக்கூட இயலாது என்ற தாழ்வு மனப்பான்மையில் மனம் குன்றிப் போனாள்..

"அண்ணி..! அவரைத்தான் நான் அறிவேன்.. அவர் மன்னவர் என்பதையோ.. கங்காதேவியின் மணாளர் என்பதையோ நான் அறியேன்.. அவர் மீது என் மனம் சென்றபோது அவரை ஒரு வழிப்போக்கனாக.. நாடோடியாக மட்டுமே நான் அறிந்திருந்தேன்.."

மைதிலியின் துடிப்பில் குமார கம்பண்ணன் ஒரு நாரோடடியாகவே இருந்திருக்கக் கூடாதா என்று துயரம் கொண்டாள் மலர்க்கொடி..

செல்வமற்றவனுக்கு செல்வத்தை அளித்து.. தாய் வீட்டுச் சீதனமாய் மஞ்சக்காணி நிலங்களை அளித்து.. மேடேற்றி விடலாம்.. செல்வத்திலேயே பிறப்பெடுத்த மன்னவனின் மீது மனம் சென்றால் அந்த மையல் நிறைவேறுமா..? அதிலும் கங்காதேவியைப் போன்ற காணக்கிடைக்காத காரிகையை மணந்தவனின் மனம் வேறு பெண்ணின் மீது காதல் கொள்ளுமா..?

"உனக்கான மணாளனை நீயே தேடிக்கொள்ள வேண்டும் என்று நீ நினைத்ததினால் வந்த வினை இது..! என்னதான் உன்னைப் பேணிப் பாதுகாத்து பெற்ற மகளைப் போல வளர்த்தாலும் நான் உன்னைப் பெற்றவளில்லை.. எனது வளர்ப்பு சரியில்லை என்பதை நீ நிரூபித்து விட்டாய்.. தானாக மணமகனைத் தேடிக் கொள்ளும் துணிவை கொண்டு விட்டாய்.. அக்கம் பக்கத்தாரின் பழிச்சொல்லுக்கு என்னை ஆளாக்க முனைந்து விட்டாய்.."

"இல்லை.. அண்ணி.. இல்லை.."

மைதிலி கதறினாள்.. மலர்க்கொடியின் மனம் கலங்கியது.. அதை மறைத்து கல்மனம் கொண்டவள்போல் முகத்தை வைத்துக் கொண்டாள்..

இது வலி கொடுக்கும் ரணசிகிச்சை.. இதைச் செய்யாமல் மைதிலியின் மனதை மலர்க்கொடியால் மீட்டெடுக்க முடியாது.. நாத்தனாரின் மழலைத்தனம் மிக்க சுபாவத்தை அவள் நன்கு அறிவாள்.. ஒன்றின் மீது மனதை வைத்துவிட்டால் ஆழமாக அதன் மீது பிடிப்பை வைத்து விடுவாள்.. குமார கம்பண்ணனின் மீதான மைதிலியின் பிடிப்பை உடைக்க மலர்க்கொடி கடுமை காட்டினாள்..

"என்ன இல்லை..? உனக்கென்ன தமையன் இல்லையா..? அண்ணி இல்லையா..? தாய், தந்தை இல்லையெனில் தானாக வரன் தேடிக் கொள்ள நீ எண்ணி விடுவாயா..?"

"என்ன வார்த்தையை உரைத்து விட்டீர்கள் அண்ணி.. என் மனம் என் வசத்தில் இல்லை.. அது எப்போது அந்த நாடோடி மீது சென்றதென்று நான் அறியேன்.. எவ்விதமோ என் மனதில் அவன் வந்து விட்டான் அண்ணி.."

"அவர் நாடோடி அல்ல.. இந்த தொண்டை மண்டலத்தின் மன்னர்.."

"அது இப்போது.. நான் சொல்வது.. 'அப்போது..'"

“அறியாப் பெண்ணே..! ‘அப்போது’ம் அவர் நாடோடியில்லை.. விஜயநகரத்தின இளவரசர்..”

“நான் அறியேனே..”

“சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை..! நீ சிறுபிள்ளையிலும் பிள்ளையாகி விட்டாய்.. எத்துனை முறை சொன்னாலும் உன் காதுகளில் ஏறாதா..? அப்போதுதான் நீ அவரை அறிந்திருக்கவில்லை.. இப்போது அறிந்து கொண்டு விட்டாயல்லவா..? உன் மனதை சீர் படுத்து..”

“எப்படி..?”

பரிதவிப்புடன் வினவினாள் மைதிலி.. அவள் முகத்தில் துயரம் அப்பியிருந்தது.. அது அறியாமையினால் அவள் மனதை விட்டு விட்ட துயரம்.. அதை மீட்க முடியாமல் மிரண்டு நிற்கும் துயரம்..

“எனைக் கேட்டால்..? எனக்கு எப்படித் தெரியும்..? எனைக் கேட்டா மனதை அவர்மீது வைத்தாய்..? எனைக் கேட்காமல் மனதை அவர்வசம் வைத்துவிட்டு.. மீட்டெடுக்க மட்டும் என்னிடம் வழி கேட்கிறாயா..?”

“அண்ணி..”

“முடிவாக நான் உரைப்பதைக் கேட்டுக்கொள் மைதிலி.. ஓர்நாளும் உன் எண்ணம் ஈடேறாது.. குமார கம்பண்ணன் இந்த தொண்டை மண்டலத்தின் அரசர் மட்டுமல்ல.. வீர மங்கையான கங்காதேவியின் கணவர்.. அவர்மீது நீ ஆசை கொள்வதை நான் அனுமதிக்க முடியாது.. அவரை மறந்துவிடு..”

அதைவிட இறந்து விடலாமே என்ற துக்கத்துடன் விழிமூடி மறுகினாள் மைதிலி..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



13

உன் இமையோரப் பார்வையிலே..
ஒளிந்திருக்கும் மர்மம் என்ன..?

'நோய் உடலிலா..
மனதிலா.. தேவனே..?'

அருமையான பாடல் வரிகள்..! யாமினி அடிக்கடி ரசித்துக் கேட்கும் பாடல் வரிகள்..! மனதை தட்டி எழுப்பும் பாடல் வரிகள்..!

உடல் நோய்க்கு மருந்துண்டு.. மனதில் ஏற்படும் நோய்க்கு மருந்து எது..? அதைக் கண்டு உணர்ந்தவர் யார்..?

அதைத்தான் கண்டு உணர்ந்து சித்தார்த்தனுக்கு தேடிக் கொடுத்தாள் யாமினி..

தலைவலி என்பது உடல் நோயால் ஏற்பட்டிருந்தால்.. யாமினி கொடுத்த காபியிலும், மாத்திரையிலும்.. அது சரியாகியிருக்கும்..

வலி மனதில் ஏற்பட்டிருந்ததினால்தான் சித்தார்த்தனின் தலைபாரம் குறையவில்லை.. அதற்கான மருந்து காபியும், மாத்திரையுமல்ல..

சித்தார்த்தனின் உயிர் நண்பன் தாமோதரன்...!

யாமினி சித்தார்த்தனனின் அறையை விட்டு வெளியேறி தாமோதரனின் கேபினுக்குப் போனாள்.. அறைக் கதவை ஒற்றை விரலால் லேசாகத் தட்டினாள்..

"டொக்.. டொக்.."

அங்கேயும் தலையைப் பிடித்துக் கொண்ட உட்கார்ந்திருந்த தாமோதரன் தனிமை கலந்த எரிச்சலுடன்..

"யார்..?" என்றான்..

"மே ஐ கமின் சார்..?" யாமினி தலையை நீட்டினாள்..

"அதான் வந்து தொலைச்சாச்சுல்ல..? அப்புறமும் எதுக்காக பெர்மிசன் வாங்கறதைப் போல ஆக்டிங் வேண்டிக் கிடக்கு..?" எரிந்து விழுந்தான் தாமோதரன்..

"கர்ட்டஸி சார்.." யாமினி உள்ளே வந்தாள்..

"அதைப் பத்தியெல்லாம் நீங்க ஏங்க பேசறிங்க..? அதுக்கும் உங்களுக்கும் ரொம்பத் தூரம்.. வந்த விவரத்த சட்டுப்புட்டுன்னு சொல்லிட்டு இடத்தக் காலி பண்ணுங்க.." கறாராகப் பேசினான் தாமோதரன்..

"உட்கார்ந்துக்கவா சார்..?"

பதிலை எதிர்பார்க்காமல் யாமினி உட்கார்ந்ததில் பல்லைக் கடித்த தாமோதரன் அவளை ஒரு தினுசாக பார்த்தபடி..

"ஒட்டகமும் நீங்களும் ஒன்னுங்கிறதைப் புரூவ் பண்றீங்க.." என்று ஒரு தினுசான குரலிலேயே சொல்லி வைத்தான்..

"புரியலையே.." என்றாள் யாமினி..

"உங்களுக்கா புரியாது..? ஊருக்கே பாடம் எடுக்கிறவங்க நீங்க.. இந்த ஒட்டகக் கதையை புரியாதுங்கறிங்க.. என்ன..? காது குத்தறிங்களா..?" தாமோதரன் முறைத்தான்..

"ஆமாம் சார்.. நான் உங்க தாய் மாமி பாருங்க.. உங்களுக்கு காதணிவிழா நடத்த வந்திருக்கேன்.." வெடுக்கென்று சொன்னாள் யாமினி..

"தாய் மாமியா..?"

டேபிள் வெயிட்டை உருட்டியபடி.. வெடுக் கெடுக்கென பதில் சொல்லும் யாமினியை யோசனையுடன் பார்த்தான் தாமோதரன்..

"ஆமாம்.. தாய் மாமிதான்.."

"இப்படி ஒரு சொல்லை இன்னைக்குத்தான் கேள்விப்படறேன்.. யாரு நீங்க.."

"அதையும் நீங்களே சொல்லிருங்க ஜி.எம்.சார்.."

"தமிழுக்கே அகராதி சொல்லித் தர்றவங்க இல்ல.. நீங்க இதையும் சொல்லுவீங்க.. இதுக்கு மேலேயும் சொல்லுவீங்க.."

"இதுக்கு மேலேயும் இருக்கா..? வேண்டாம் சார்.. அதுக்கு விளக்க உரை.. பொழிப்பு உரை சொல்ல என்னால முடியாது.. தாய் மாமன்தான காதணி விழாவில முக்கியமான ஆளு.. அதான்.. தாய் மாமனுக்குப் பெண்பாலா தாய் மாமின்னு சொன்னேன்.."

"ஓ.."

"தாய் மாமியப்பத்தி நான் சொல்லிட்டேன்.. ஒட்டகக் கதையை நீங்க சொல்றீங்களா..?"

"சொல்லிட்டாப் போச்சு.. இடத்தக் கொடுத்தா.. மடத்தப் பிடுங்குமாம்.."

"எது..?"

"ஒட்டகம்தான்.. வேற எது..? முதல்ல கூடாரத்துக்குள்ள தலைய நீட்டுமாம்.. அப்புறம் கழுத்தைக் கொண்டு வருமாம்.. கடைசியில மொத்தமாக உள்ளே நுழைஞ்சுக்கிட்டு.. கஷ்டப்பட்டு கூடாரம் போட்டிருந்தவன வெளியே துரத்தி விட்டுட்டு இது மட்டும் ஹாயாய் படுத்துத் தூங்குமாம்.."

தாமோதரன் சொல்ல வருவது என்ன என்பதைத் தெள்ளத் தெளிவாகப் புரிந்து கொண்டாள் யாமினி...

செக்கரட்டரி போஸ்டில் நுழைந்தவள்.. சித்தார்த் குரூப் ஆஃப் கம்பெனிஸின் ஆணி வேரான தாமோதரனின் இடத்தை ஆட்டிப் பார்ப்பதாக அவன் நினைக்கிறான்.. அதைத்தான் ஒட்டகக் கதை மூலம் யாமினிக்கு உணர்த்துகிறான்..

"நான் ஒட்டகமில்லை சார்.." உண்மையாகச் சொன்னாள்..

தாமோதரன் உதட்டை இகழ்ச்சியாக வளைத்து சீட்டில் சாய்ந்து அமர்ந்து அவளைப் பார்த்து வைத்தான்.. அந்தப் பார்வை..

'உன்னை நம்ப நான் என்ன முட்டாளா..?' என்று கேட்டது..



14

வாள் முனையின் கூர் முனையை.. வெல்லுகின்ற வஞ்சியிவள்..

*"எனையென்ன செய்தாய்..
வேங்குழலே..?"*

உயிர் உருகும் நாதம் என்பது இதுதானோ என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள் கங்காதேவி..!

உயிரை உருக்கும் நாதத்தை அவள் கேட்டிருக்கிறாள்.. அவள் அறியாத கலைகளில்லை.. ரசிக்காத ராகமில்லை.. நுண்ணிய உணர்வுகளால் வேயப்பட்ட வீரம் மிகுந்த மங்கை அவள்.. இமயவனின் மகளாம் உமையவள் மண்ணில் ஒரு மானிடப் பெண்ணாகப் பிறந்தால் இவ்விதம்தான் இருப்பாள் என்று அவளைக் காண்போர் தமக்குள் ஒருமித்த கருத்துடன் உரையாடிக் கொள்வர்..

அவள் மிகச் சிறந்த நர்த்தகி..! கால்களில் சலங்கையைக் கட்டிக் கொண்டு சுழன்றாடினால் அவளது பாதங்கள் தரையினில் பாவாமல் அரங்கத்தை அளந்து சதிராடும்.. அவளது கைவிரல்களின் அபிநய முத்திரைகளில் பரதக் கலையின் அத்துனை லயங்களும் வந்து செல்லும்..

அவள் கரம் தேர்ந்த பாடகி..! யாழை மீட்டியபடி கானம் இசைப்பதில் வல்லவள்.. அவளது விரல்களில் பிறக்கும் இசையின் ஸ்வரமும்.. அவளது குரலில் பிறக்கும்

பாடலின் ஸ்வரமும் ஒன்றுடன் ஒன்று பிணைந்து கேட்பவரின் மனதை பாகாய் உருகச் செய்துவிடும்..

இவை அனைத்திலும் மேலாக.. அவள் ஆடல், பாடல் கலைகளையும் தாண்டி எழுத்தாணியை கரத்தில் ஏந்தியவள்.. வெண்பாக்களை வடிப்பதில் பெயர் பெற்றவள்.. காவியம் இயற்றும் புலமை கொண்டவள்..

விஜயநகரத்தின் ராணிகளில் பெயர் பெற்றவள் கங்காதேவி..! தனது தனித்திறமையினால் அவள் திக்கெட்டும் அவள் பெயர் சொல்லும் புகழைப் பெற்றாள்..

அழகும், இளமையும், புலமையும், கலைகளும் தன்னகத்தே உறையப் பெற்ற அரசி அவள்..

அத்தகைய கங்காதேவியின் முன்னிலையில் தான் தனை மறந்து யாழ் மீட்டி உயிர் உருகப் பாடிக் கொண்டிருந்தாள் மைதிலி..

ஓர்நாள் மலர்க்கொடியின் இல்லத்திற்கு வருகை தந்தாள் கங்காதேவி.. அந்த வீதியில் உள்ள அனைத்து இல்லங்களும் பொறாமை மேவிய விழிகளுடன் பிரமித்துப் போய் நிற்க.. வீதியை அடைக்கும் படை பரிவாரங்களுடன் பல்லக்கில் வந்து இறங்கினாள் தொண்டை மண்டலத்தின் அரசியான கங்காதேவி..

“எனது கணவர் விருந்தினராக தங்கியிருந்த அறையை நான் பார்க்க வேண்டும்..”

கம்பீரமான அவளது வார்த்தைகளில் தொனித்த உரிமை கலந்த காதலில் துவண்டு போனாள் மைதிலி..

காஞ்சி மாநகரமே அந்த வீதியில் வந்து திரண்டு.. மலர்க்கொடியின் இல்லத்திற்கு வருகை தந்திருக்க அவர்களுடைய அரசியைக் காண வந்திருந்தது..

அனைவரையும் நோக்கிப் புன் முறுவலுடன் அவள் கரம் அசைத்ததில் வெளிப்பட்ட மகாராணிக்கேயுரிய கம்பீரத்தில் மைதிலியின் நடை தொய்ந்தது..

உரிய மரியாதைகளுடன் கங்காதேவியை வரவேற்று இல்லத்திற்குள் அழைத்துச் சென்றாள் மலர்க்கொடி.. விருந்து உபசாரங்களுக்குப் பின்னர்.. குமார கம்பண்ணன் தங்கியிருந்த மேன் மாட அறையைச் சுற்றிக் காட்டினாள்..

அங்கிருந்த சித்திரங்களைப் பார்வையிட்டவள்..

"சித்திரத்தில் ஈடுபாடு கொண்டவர்.. எனை மிஞ்சும் வகையில் சித்திரம் வரைய வேண்டும் என்று அடிக்கடி சொல்லுவார்.." என்று மெலிதாக நகைத்தாள்..

"தாம் சித்திரம் வரைவீர்களா..?" வியப்புடன் கேட்டாள் மைதிலி..

"அறிவேனே.. எமது கணவர் இதனைக் கூறவில்லையா..?"

"இல்லை மகாராணி.. அவர் அரசர் என்றே எனக்குத் தெரியாது.."

"உண்மையாகவா..?"

"ஆம்.. மகாராணி.."

"பின்.. எவரென்று அவரை நினைத்தாய்..?"

'ஓர் நாடோடியென்று நினைத்தேன்..'

சொல்ல முடியாமல் துயரப் புன்னகை பூத்த மைதிலி..

"எவரோ ஓர் உறவினர்.. விருந்தினராக எங்கள் இல்லத்தில் தங்கியிருக்கிறார் என்று நினைத்தேன்.." என்றாள்..

"அருமையான நகைச்சுவை..!" மனம் விட்டு நகைத்தாள் கங்காதேவி..

நகைக்கும் போது பெருகிய அவளது கம்பீரமான அழகில்.. அவள் முன் நிற்கக்கூடத் தனக்கு தகுதியில்லை என்று மறுகிப் போனாள் மைதிலி..

அறையைச் சுற்றி வந்த கங்காதேவியின் முகம் கனிந்தது..

"எடுத்துக் கொண்ட சபதத்தை நிறைவேற்று வதற்காக என் கணவர் எத்துனை பிரயத்தனங்களை மேற்கொண்டிருக்கிறார்.." என்றாள்..

"சபதமா..?" மைதிலி திகைத்தாள்..

"சபதம்தான்.. நீ அறிய மாட்டாய்.. சின்னஞ்சிறு பெண் நீ... மழலைத்தனம் மிக்கவள்.. வந்திருப்பது விஜய நகரத்தின் இளவரசர் என்பதை அறியாத பேதை.. விருந்தினர் என்று நீ நினைத்துக் கொண்டிருப்பவர் சரித்திரத்தில் இடம் பெறப் போகும் சபதத்தை செய்தவர் என்பதை எப்படி நீ அறிந்திருப்பாய்..?"

கங்காதேவியின் காருண்யம் கூரிய அம்புகளாக மைதிலியின் மனதைத் துளைத்தது..

தனைப் பற்றிய எந்தச் செய்தியையும் மைதிலியிடம் பகிர்ந்து கொள்ள குமார கம்பண்ணன் நினைத்ததில்லை என்பதில் அவள் துயர் கொண்டாள்..

அவை அனைத்தையும் கங்காதேவி அறிவாள் என்பதில் அதைவிட அதிகமான துயர் கொண்டாள்..

மனதில் உள்ளவற்றை குமார கம்பண்ணனால் கங்காதேவியிடம் மட்டுமே பகிர்ந்து கொள்ள முடிகிறது என்பதில் கானகத்தில் தொலைந்து போன ஓர் அநாதை போல தன்னை உணர்ந்தாள் மைதிலி..

அவளை ஓர்நாளும் குமார கம்பண்ணன் தேடப் போவதில்லை..

அவளுடைய உயிரைத் துளைக்கும் இந்த உண்மையில் அவள் குற்றுயிரும்.. குலையுயிருமாக ஆகிப் போனாள்..

“இது எவருடைய அறை..?”

மைதிலியின் அறையைக் காட்டி கங்காதேவி வினவினாள்..

“எனது அறைதான் மகாராணி..” என்ற மைதிலி.. அறைக்குள் அவளை அழைத்துச் சென்றாள்..

பஞ்சணையில் இருந்த சித்திரத்தை கங்காதேவி கையில் எடுத்துப் பார்த்தபோது மைதிலி பதறிப் போனாள்..

அது குமாரகம்பண்ணன் மைதிலிக்கு பரிசாக அளித்த கண்ணன், ராதையின் சித்திரம்..

"இதை வரைந்தது என் நாயகர்தானே..?"

கண் பார்த்த நொடியில் கண்டு கொண்ட அவள் திறனில் பிரமித்துப் போனாள் மைதிலி..

"எவ்வாறு கண்டு கொண்டீர்கள்..?" என்று வினவினாள்..

"அவர் தீட்டும் சித்திரத்தை நான் அறிய மாட்டேனா..?"

கங்காதேவியின் இயல்பான வார்த்தைகளில் உள்ளம் உடைந்தாள் மைதிலி.. எத்துனை தன்னம்பிக்கை..! எத்துனை உரிமை..!

இந்த உரிமையும், தன்னம்பிக்கையும் மைதிலிக்கு கிட்டவில்லையே..

"அருமையான சித்திரம்..! உனக்கென இதை அளித்தாரா..?"

கங்காதேவியின் கேள்வியில் மிரண்டு நோக்கினாள் மைதிலி..

"ஆம் மகாராணி.." அச்சத்துடன் கூறினாள்..

"சிறப்பான பரிசை உனக்களித்திருக்கிறார்.."

மெச்சுதலாகக் கூறி மைதிலியின் அச்சத்தை விரட்டினாள் கங்காதேவி.. நிம்மதிப் பெருமூச்சு விட்ட மைதிலிக்கு.. அப்பரிசை இயல்பாக கங்காதேவி எடுத்துக்

கொண்டதையும் தாங்க முடியவில்லை.. அதைக் குறித்த கங்காதேவியின் கோபத்திற்காக அவள் ஏங்கினாள்..

என் கணவனின் மனம் ஓர் நாளும் வேறு மங்கையை நாடாது என்ற அசைக்க முடியாத நம்பிக்கையினால் அல்லவா அவள் அப்பரிசை இயல்பானதாக ஏற்றுக் கொண்டிருக்கிறாள்..

குமார கம்பண்ணனின் மனதில் மைதிலிக்கென்று சிறுஇடம் உள்ளதா என்ற பொறாமை கங்காதேவியின் மனதில் ஏற்படவில்லையே.. அவ்வாறு ஏற்பட்டிருந்தால் அவள் அப்பரிசினைக் குறித்துக் கோபம் கொண்டிருப்பாளே..

குமார கம்பண்ணனின் மனம் கங்காதேவியிடம் நிலை கொண்டிருக்கிறது என்ற உண்மையில் மைதிலியின் மனம் ரணமானது..

"அழகான யாழ்..!"

குமார கம்பண்ணனின் அடுத்த பரிசை கையில் எடுத்தாள் கங்காதேவி..

"இதையும் அவர்தான் அளித்தார்.."

வேகத்துடன் சொன்னாள் மைதிலி.. இம்முறை யாவது கங்காதேவி அவள்மீது பொறாமை கொண்டுவிட மாட்டாளா என்று அவள் மனம் துடித்தது.. கங்காதேவியின் பொறாமையினால் ஏற்படும் கோபத்தீயில் எரிந்து போனால் கூட அவள் மகிழ்ச்சியுடன் உயிரை விட்டு விடுவாளே..

என் கணவன் ஓர்நாளும் என்னையின்றி உன்னை நினைக்க மாட்டான்.. அஞ்சாதே.. என்ற கங்காதேவியின்

காருண்யம்தானே மைதிலியை உயிரோடு வதம் செய்கிறது..

"எவர்..?"

"அவர்தான்.."

மைதிலி வேண்டுமென்றே இழுத்தாள்.. கங்காதேவி குறுகுறுத்த பார்வையோடு எவர் அது என்று அபிநயித்தாள்..

"காஞ்சியின் அரசர்.."

தங்களின் கணவர் என்று சொல்லாமல் காஞ்சித் தலைவனாக குமார கம்பண்ணனைச் சொல்லியதில் கங்காதேவி வரிசைப் பற்கள் தெரிய நகைத்தாள்..

"அவர் அளித்த பரிசா இது..? அழகான பரிசு.."

எளிதாக மைதிலியின் கூரிய கணைகளை புறம தள்ளி காதல் போர்க்களத்தில் மைதிலியை வென்று நிமிர்ந்து நின்றாள் கங்காதேவி.. உயிருடன் மைதிலியை வதம் செய்து தனது உறுதியான நிலைப்பாட்டை நிலை நாட்டினாள்..

அசைக்க முடியாமல் குமார கம்பண்ணனின் இதயச் சிம்மாசனத்தில் வீற்றிருந்த கங்காதேவியின் கர்வம் மிக்க காதலில் துகள் துகளாக நொறுங்கிப் போனாள் மைதிலி..

"நீ யாழ் மீட்டுவாயா..?"

"மீட்டுவேன் மகாராணி.."

"கானம்..?"

"இசைப்பேன்.."

"நீ யாழ் மீட்டி கானமிசைப்பதைக் கேட்க வேண்டுமென்ற ஆவல் எனக்கு உண்டாகிறது.. எங்கள் அரண்மனையின் இசை மண்டபத்தில் நீ யாழ் மீட்டி கானமிசைக்க வேண்டும்.."

"தங்களைப் போல நான் மேதை அல்ல மகாராணி.."

'பேதை..' தனக்குள் குமுறினாள் மைதிலி..

காதலனைக் கவரத் தெரியாத பேதை..! அவனைக் கைப்பிடிக்குள் நிறுத்திக் கொள்ளத் தெரியாத பேதை..!

"மேதைகள்தான் இசைக்க வேண்டும் என்று எவர் சொன்னது..?" கம்பீரத்துடன் கேட்டாள் கங்காதேவி..

"மகாராணி..!"

"குயிலென்ன மேதையா..? குழல் தரும் மூங்கில்கள் காற்றில் அசைந்து இசைக்கும் நாதத்தை நீ கேட்டிருக்கிறாயா..? அந்த மூங்கில் என்ன மேதையா..? கடலில் எழும்பும் அலைகள் எழுப்பும் இசையின் உன்னதத்தை நீ அறிவாயா..?"

"மகாராணி.."

"இன்றைய தினம் சென்று இரு தினங்களில் நீ அரண்மனைக்கு வர வேண்டும்.. இசை மண்டபத்தில் யாழ் மீட்டி கானமிசைக்க வேண்டும்.. இது எனது ஆணை.." கடுமையாக உத்தரவிட்டாள் கங்காதேவி..

"மகாராணி.." அச்சம் கொண்டாள் மைதிலி..

மருண்டு நோக்கிய மைதிலியை கலகலவென நகைத்தபடி அணைத்துக் கொண்டாள் கங்காதேவி..

“இவள் சின்னஞ்சிறு மழலை அண்ணி..” மலர்க்கொடியிடம் கூறினாள்..

“ஆம்..” துயரத்துடன் தலையசைத்தாள் மலர்க்கொடி..

“இரு தினங்களில் இவளை அழைத்துக் கொண்டு அரண்மனைக்கு வாருங்கள்.. இவளின் யாழ் கச்சேரியைக் கேட்டு விடலாம்..”

கங்காதேவி சென்று விட்டாள்.. புயலென வந்து சென்ற அவளின் ஆளுமையில் மனம் நொறுங்கியிருந்தாள் மைதிலி.. மறுபடியும் அவளைக் காண அரண்மனைக்குச் செல்ல வேண்டுமா என்று மனம் துடித்தாள்..

“இது அரசியின் ஆணை..!”

பார்த்திபன் ஆணையிட்டு விட்டான்.. தமையனின் சொல்லை மீறமுடியாமல் மைதிலி ரதத்தில் ஏறினாள்.. கிள்ளிவளவனும், முல்லைக் கொடியும் அரண்மனைக்குச் செல்வதில் ஆனந்தமாக இருந்தனர்.. மலர்க்கொடி மௌனமாக வந்தாள்.. ரதத்தை விட்டு இறங்கியதும் குழந்தைகள் முன்னால் ஓடினர்..

“மெதுவாகச் செல்லுங்கள்.. இது அரண்மனை..”

அவர்களைக் கடிந்து கொண்டபடி மலர்க்கொடி அவர்களின் பின்னால் சென்றுவிட... மைதிலி மனம் துடிதுடிக்க நின்று விட்டாள்.. அவளது கால்கள் நகர

மறுத்தன.. முதலில் அவள் வருகை தந்தபோது அவ்வரண்மனையில் குமார கம்பண்ணன் இருக்கிறான் என்ற நினைவுடன் வந்தாள்.. தற்போதோ.. கங்காதேவியின் கணவனான குமார கம்பண்ணன் அங்கே இருக்கிறான் என்ற உண்மை அவள் நெஞ்சை வாள் கொண்டு அறுத்தது.. அதன் வலிதாளாமல் அவள் விழி மூடி விம்மினாள்..

"மைதிலி.."

அவளது மனதை வருடிய அந்தக் குரலில் உள்ளம் பரபரக்க.. அவள் அவசரமாக இமை திறந்து எதிரே பார்த்தாள்..

காருண்யத்துடன் அவளைப் பார்த்தபடி குமார கம்பண்ணன் நின்றிருந்தான்..

"இந்தக் காருண்யம் என்னைக் கொல்கிறது.." வேகத்துடன் சீறினாள் மைதிலி..

"சின்னஞ்சிறு பெண் நீ.. உன் மனதை சமன் படுத்து.. உனது வேதனையில் நான் துயர் கொள்கிறேன்.." வருத்தத்துடன் சொன்னான் குமார கம்பண்ணன்..

"எவருக்கு வேண்டும் தங்களின் அறிவுரை.." இதழ்கள் துடிக்கக் குமுறினாள் மைதிலி..

"வேண்டாமென்றால் விட்டுவிடு.. இசை மண்டபத்தில் யாழ் மீட்டி கானம் இசைக்க வந்தாயா..?" பரிவுடன் சமாதானமாகப் பேசினான் குமாரகம்பண்ணன்..

“வேறு என்ன செய்வது..? அரசியின் ஆணையா யிற்றே.. அடி பணிந்துதானே தீர வேண்டும்..?”

மைதிலியின் கண்கள் கலங்கி விட்டன.. விசனத்துடன் அவனைப் பார்த்த குமார கம்பண்ணனை வெறித்துப் பார்த்தவளால் அவன் அவளுக்குக் கிட்ட மாட்டான் என்ற உண்மையைத் தாங்கிக் கொள்ள இயலவில்லை..

எதிரே நிற்கும் அவளுடைய காதலன்.. ஈடு இணையற்ற கங்கா தேவியின் கணவன் என்ற உண்மையில் துடித்தாள் மைதிலி..

“கங்காதேவி எவரையும் ஆணையிட்டுக் கட்டுப் படுத்துபவள் அல்ல..” அன்புடன் சொன்னான் குமார கம்பண்ணன்..

மனைவியைத் தாங்கிப் பிடிக்கும் அவனது சொற்களில் பொறாமை கொண்டாள் மைதிலி.. இந்தப் பிரியத்தை அவள்மீது காட்ட அவன் மறுத்து விட்டானே..

“ஆஹாஹா..! தொண்டை மண்டலத்தின் அரசருக்கு மனைவியைக் குறை கூறும் ஒற்றைச் சொல்லைக் கேட்டுக் கொள்ள இயலவில்லையே.. இந்த அரண்மனையில் பாதம் பதிக்க விருப்பப்படாத என்னை ஆணையிட்டு இங்கு வரவழைத்திருப்பது கட்டுப்படுத்தும் செய்கை யல்லாமல் வேறு என்ன..?” சீற்றத்துடன் கேட்டாள் மைதிலி..

அவள் உடல் நடுங்கியது.. கங்காதேவியின் ஆணையில் அவளுக்கு ஒன்றும் சினம் ஏற்பட்டிருக்க

தில்லை.. அவளது காதலனை கங்காதேவியின் கணவனாகக் காண முடியாத அவளது பேதைமனதால் தான் அரண்மனைக்கு வருவதை அவள் தவிர்க்க எண்ணினாள்.. மற்றபடி கங்காதேவியின் மீது அவளுக்கு எந்தவிதமான மனத்தாங்கலும் இல்லை..

ஆனால்.. கங்காதேவியைப் பற்றி உயர்வாக குமார கம்பண்ணன் பேசியதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. அவளிடமே அவன் மனைவியைப் பற்றி உயர்வாக அவன் பேசுவதா என்ற கோபத்தில் அவள் மனது கொந்தளித்தது..

அவளது மனதை அறிந்தவனைப் போல அவளைக் கூர்மையாகப் பார்த்தான் குமார கம்பண்ணன்.. மனதை வாசிக்கும் அந்தப் பார்வையில் மைதிலியின் தேகம் சிலிர்த்தது.. ஊடுறுவும் அந்தப் பார்வையைத் தாங்க இயலாமல் தலை கவிழ்ந்தாள் அவள்.. நடுங்கும் அவளுடைய தளிர் விரல்கள்.. அவனுடைய தீட்சண்யம் மிக்க பார்வையில் அதிகமாக நடுங்கின..

புயலில் சிக்கிய பூங்கொடியாக நடுங்குபவளைத் தன்னுடன் அணைத்து ஆறுதல் சொல்ல முடியாதவனாக உதட்டைக் கடித்துக் கொண்டான் குமார கம்பண்ணன்.. அவனுடைய அன்புக்காக ஏங்கும் அந்த பேதை மனதின் குமுறலை அவனால் இனம் காண முடிந்தது..

அவள் கேட்கும் அன்பை அவன் தந்துவிட இயலாதே.. அந்த அன்பிற்குரியவள் கங்காதேவி அல்லவா..

அந்த உண்மையை ஏற்றுக் கொள்ள முடியாமல் தவித்து நிற்கும் அந்த சிறு பெண்ணிடம் அவனுக்கு கனிவு மிகுந்தது..

"கலங்காதே.." மிருதுவாகக் கூறினான்..

பட்டின் மிருதுத் தன்மையுடன் பிசிரற்று வெளி வந்த அவன் குரலில் இவனால் எதுவும் நிகழாததைப் போல எப்படி இத்துனை இயல்பாக உரையாட முடிகிறது என்று வெகுண்டாள் மைதிலி..

"கலங்காமல் என்ன செய்ய வேண்டும் அரசே..?"

கண்ணீர் குரலில் அவள் கேட்ட கோபமான கேள்விக்கு..

"கானம் இசைக்க வேண்டும்.." என்று இனிய பெண் குரலொன்று பதில் சொன்னது..

குமார கம்புண்ணனின் ஆண்மை ததும்பும் கம்பீரமான குரலா.. பெண்மையுடன் கூடிய இனிய குரலாக மாறிவிட்டது என்று அதிர்ந்து போனாள் மைதிலி..

அவள் அவ்வாறுதான் நினைத்து வைப்பாள் என்று கணித்து வைத்திருந்த குமார கம்பண்ணன் கேலிப் புன்முறுவலுடன் மைதிலிக்குப் பின்னால் சுட்டிக் காட்டினான்.. குழப்பத்துடன் திரும்பிப் பார்த்தாள் மைதிலி.. அங்கே மோகனமாக புன்னகைத்தபடி கங்காதேவி வந்து கொண்டிருந்தாள்..

"என்ன ஆனது மைதிலி..? உனக்காக இசை மண்டபம் ஆயத்த நிலையில் உள்ளது.. இசை கேட்க

வந்திருப்போரும் இசையை செவி மடுக்க ஆயத்த நிலையில் உள்ளார்கள்.. அண்ணியும் குழந்தைகளும் வந்து விட்டார்கள்.. நீ வர தாமதம் ஏன்..?"

கங்காதேவியின் தொடர் கேள்வியில் மருண்டு நின்றாள் மைதிலி.. குமார கம்பண்ணனிடம் அவள் உரையாடிக் கொண்டிருந்ததை எப்படி அவள் சொல்வாள்..?

அச்சம் ததும்ப அவள் மிரண்டு நிற்க.. கங்காதேவி..

"நான் சொல்லவா..?" என்று பிரியத்துடன் அவளை அணைத்துக் கொண்டாள்..

"உனது இல்லத்தின் விருந்தினரிடம் உரையாடிக் கொண்டிருந்தாய்.. அப்படித்தானே..?"

இலகுவான அவள் நகைப்பில் குமார கம்பண்ணனும் இணைந்து கொள்ள.. இவளுக்கு மட்டும் எப்படி இது சாத்தியமாகிறது என்று அதற்கும் மலையளவு பொறாமையைக் கொண்டாள் மைதிலி..

இதுவே.. மைதிலி குமார கம்பணணின் மனைவியாக இருந்திருந்தால் அவன் மற்றொரு மங்கையிடம் உரையாடியதை இலகுவாக எடுத்துக் கொண்டிருப்பாளா..?

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'

14

நேற்றய கேள்வி இன்றில்லை..
இன்றைய கேள்வி நாளையில்லை..

"நீங்க நம்பினாலும் நம்பாவிட்டாலும் நான் ஒட்டகமில்லை.."

யாமினி அழுத்தம் திருத்தமாகச் சொன்னாள்.. ஏனோ தெரியவில்லை.. தாமோதரனின் உதாசீனப் பார்வை அவளை வெகுவாக பாதித்தது.. அவன் அவளை நம்ப வேண்டும் என்று அவளது மனம் அடித்துக் கொண்டது..

"ஒட்டகமில்லைன்னா.. நீங்க ஒட்டகச் சிவிங்கியா..?"

"நாலுகால் பிராணிகளோடேயே என்னை இணை கூட்டனுமா சார்..? இரண்டு கால் மனுச ஜீவனா நினைச்சே பார்க்க மாட்டிங்களா..?" ஆற்றாமையுடன் கேட்டாள் யாமினி..

"நான் எப்படி நினைக்கனும்னு டியூசன் எடுக்க வந்திருக்கீங்களா..? வெரிகுட்..! தி கிரேட் சித்தார்த் குருப் ஆஃப் கம்பெனிஸின் ஜி.எம்.முக்கு.. நேற்று வந்த செக்கரட்டரி டியூசன் எடுக்கிறாங்க.. வாழ்க வளமுடன்..! கீப் இட் அப்.."

"சார்.. ப்ளீஸ்.."

"எனக்கேம்மா ப்ளீஸ் போடறிங்க..? நீங்க யாரு.. எவ்வளவு உயரத்தில இருக்கீங்கன்னு எனக்குத் தெரியாம போச்சேம்மா.. தெரிஞ்சிருந்தா நீங்க இண்டர்வியூக்கு வந்த அன்னைக்கே உங்ககிட்ட டியூசன் படிக்க வந்திருப்பேன்.."

"உங்களுக்கு டியூசன் சொல்லிக் கொடுக்கிற அளவுக்கு நான் அறிவாளியில்ல சார்.."

"உங்க அறிவைப் பத்தி நீங்க சொல்லக் கூடாதும்மா.. நான் சொல்லனும்.. வாட் எ கிளவர் லேடி யூ ஆவர்..!"

"இந்தப் பாராட்டை என் வேலையைப் பாராட்டி நீங்க சொல்லியிருந்தா நான் சந்தோசப் பட்டிருப்பேன் சார்.."

"சொல்லனும்னு எனக்கும் ஆசைதான்.. எங்கே..? அதுக்கான சான்ஸைத்தான் நீங்க கொடுக்கவே மாட்டேங்கறீங்களே.. வேலையைத் தவிர மத்த அத்தனையையும் பார்க்கறிங்க.."

அப்படி எதைப் பார்த்தேன் என்று கேட்டு விட வேண்டுமென்று யாமினியின் இதயம் துடித்தது.. அடக்கிக் கொண்டாள்.. இதுபோன்ற குதர்க்கமான குத்தல் பேச்சை யாமினி கேட்டதே இல்லை.. அனுராதாவைத் தாண்டி எவரும் யாமினியை அணுக முடிந்ததில்லை.. மகளைப் பொத்தித் தன் சிறகுக்கடியில் பாதுகாத்து வ்ளர்த்து வருபவள் அனுராதா.. இடக்காக ஒரு வார்த்தையைக் கேட்டு விட்டால்.. அதை விடப் பத்துமடங்கு அதிகமாக திருப்பிக் கொடுத்துக் கட்டி விடுவாள்.. அந்தத்

தருணத்தில் அவள் மட்டும் அங்கிருந்து தாமோதரன் சொன்ன வார்த்தகளைக் கேட்டிருந்தால்.. பொங்கலோ பொங்கல் என்று பொங்கித் தீர்த்திருப்பாள்..

"அப்புடிங்களா..? என் மக வேலயத் தவிர வேற என்னத்தப் பாத்தான்னு நீங்க சொல்றீங்க..? உங்க வேல இதுதானா..? என்னமோ பெரிசா சீமையில இல்லாத ஜி.எம்முன்னு பீத்திக்கறீங்க.. இந்த லட்சணத்தில தான் உங்க ஸ்டாப்கிட்ட வேல வாங்குவீங்களா..? உங்களுக்குத்தான் காது வரைக்கும் வாய் கிழியும்ன்னு நினைச்சுக்காதீங்க.. எங்களுக்கு அதுக்கு மேலேயே கிழியும்.. வந்துட்டாரு வக்கணை பேச.. என் மகளைச் சொல்கிறீங்களே.. நீங்க மட்டும் பெரிய வள்ளலா..? ஜி.எம் வேலயத் தவிர மத்த அத்தன நொனனாட்டியத்தைத்தான் நீங்களும் பாத்துக்கிட்டிருக்கீங்க.. எங்கேயாச்சும் ஜி.எம் மாப்பட்ட வேலயில இருக்கிறவங்க இப்படிப் பேசக் கண்டிருக்கோமா..? இத எங்கே போய் சொல்கிறது..?" என்று ஆரம்பித்து.. தாமோதரன் அந்தக் கம்பெனியில் எத்தனை ஆணிகளைப் பிடுங்கியிருக்கிறான் என்பது வரைக்கும் பிடிபிடியென்று பிடித்து பாடம் சொல்லிக் கொடுத்திருப்பாள்..

அனுராதா அங்கில்லாவிட்டால் என்ன..? அனுராதாவின் மகாளாய் லட்சணமாய்.. அம்மா பொங்கும் பொங்கலைத் தானும் பொங்கிப் பார்த்தாலென்ன என்று யாமினிக்குத் தோன்றியது..

ஆனால்.. அதனால் வளரும் விரோதம் முன்னிலும் அதிகமாக தாமோதரனிடமிருந்து அவளைத் தள்ளி

வைத்து விடும் என்பதினால் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுமை காத்தாள்..

“எம்.டிக்கான அத்தனை மீட்டிங்கையும் அம்மாதான் பிக்ஸ் பண்றீங்க.. கம்பெனியோட ஜி.எம்முக்கு தெரியாத இன்பர்மேசனெல்லாம் மேடத்துக்குத்தான் தெரிஞ்சிருக்கு..” தாமோதரன் அடுக்க..

“இதெல்லாம் பர்சனல் செக்கரட்டரியோட வேலை தானே சார்..?” என்று பொறுமையாக கேட்டாள் யாமினி..

“வாட்..?” தாமோதரனின் பார்வையில் அனல் பறந்தது..

“என் வேலை எதுவோ.. அதைத்தானே சார் நான் பார்த்திருக்கேன்.. அன்னெசஸரியா எதையும் செய்யலையே.. அப்புறமும் எப்படிசார் நீங்க என்மேல பழி போடலாம்..?”

யாமினி நிதானமாக கேட்க வேண்டிய கேள்வியைக் கேட்டு விட்டாள்..



15

குழலூதும் கண்ணன் மனதை.. கோதையிவள் அறிவாளா..?

இமை மூடி யாழ் மீட்டும் போதும் அதே கேள்விதான் மைதிலியின் மனதை ஆட்டுவித்தது..

வயதில் இளைய பருவ மங்கையுடன் குமார கம்பண்ணன் தனிமையில் நின்று தாழ்ந்த குரலில்

உரையாடிக் கொண்டிருக்கிறான்.. அது குறித்த சந்தேகமோ.. சஞ்சலமோ சிறிதுமின்றி.. அதை இலகுவாக எடுத்துக் கொண்டு நகைக்கிறாள் அவன் மனைவி என்றால்.. அவள் மீதான அவனது ஆழ்ந்த காதலைக் குறித்து எந்த அளவுக்கு அவள் நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்..?

அசைக்க முடியாத அந்த ஆழ்ந்த காதலை குமார கம்பண்ணன் மைதிலிக்கு ஏன் அளிக்கவில்லை..?

எவ்வித மனச் சலனங்களுக்கும் ஆட்படாமல்.. துருதுறுத்த சுட்டிப் பெண்ணாக.. இல்லத்தின் மான் குட்டியாக துள்ளித் திரிந்தாளே..

அவளை சிறகொடிந்த பறவையாக தன் சிறு பார்வையில் குமார கம்பண்ணன் வீழ்த்தி விட்டானே..

அவனுக்கு அவள் என்ன கெடுதல் செய்தாள்..? அவளை உயிரோடு வதைக்கும் காதலை அவளுக்குள் ஏன் அவன் விதைத்தான்..?

"எனை என்ன செய்தாய்..
வேங்குழலே...?"

தனை மறந்து அவள் குமுறிய போது கங்காதேவியின் இதயம் கனத்தது.. தனைக் கரைத்து மைதிலி பாடிய பாடலில் தானும் கரைந்தாள் கங்காதேவி..!

"எனை என்ன செய்தாய்..
வேங்குழலே..?
எனக்கும் உனக்கும்
ஒரு பகையில்லையே..

எனை என்ன செய்தாய்..
வேய்ங்குழலே..?"

குமார கம்பண்ணனின் இதயத்தில் அம்பு பாய்ந்தது.. மனம் துடிக்க அவள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் குற்ற உணர்வில் அவன் தவித்தான்..

"நாளும் சுக நாதம் தந்து..
அனுதினம் இந்த
இள மனம் இளகிடவே..
எனை என்ன செய்தாய்..
வேய்ங்குழலே..?"

இசையில் நனைந்தோரின் விரல்கள் அவர்கள் அமர்ந்திருக்கும் ஆசனத்தில் தாளமிட்டதை பெருமை பொங்க பார்த்துக் கொண்டான் பார்த்திபன்..

'இவள் என் தங்கை..!'

அந்தப் பெருமிதத்துடன் மனைவியைப் பார்த்தவன் அவள் விழிகளில் தெரிந்த துக்கத்தில் திகைத்தான்..

'மலர்க்கொடி எதற்காக மருகுகிறாள்..?'

அங்கே இசையென்னும் நாதத்தில் கரைந்து அவனது தங்கை மருகிக் கொண்டிருக்கிறாள்.. அதனை உணர்ந்ததினால்தான் அவனுடைய அன்பு மனைவியும் மருகுகிறாள் என்பதை அறியாத பார்த்திபன் திகைத்தான்..

"எங்கும் இசை வேள்வி..
நடத்துகின்றேன்..
என்றும் எனைக் கண்டு
நல்இன்பம் படைத்து நின்றேன்.."

இமை திறந்த மைதிலியின் பார்வை அவள் மீது நிலைத்து நின்ற குமார கம்பண்ணனின் பார்வையுடன் கலந்து பிணைந்தது..

"எவ்வித நினைவுகளும்..
எனை வருடாமல் நானிருந்தேன்.."

துக்கத்துடன் அவள் பாடலில் கூறுவதன் பொருளை அறிந்திருந்தவன் மௌனமாகத் தன்னைத் தானே சாடிக் கொண்டான்..

"யாரோ..? அவன் யாரோ..?"

அவள் கேள்வியில் குமார கம்பண்ணன் விசனத்துடன் இமை மூடினான்..

"யாரோ..? அவன் யாரோ..?
என நானறியேன் அவன் ஒரு
இசை மழையாய்
என் மனதினைப் பிழிந்து விட்டான்..
எனை என்ன செய்தாய்..
வேங்குழலே..?"

கங்காதேவி இமைக்க மறந்தாள்.. இது போன்றதொரு கானத்தை அவள் கேட்டதுமில்லை.. இனிக் கேட்கப் போவதுமில்லை என அவளின் ஆழ்மனது கூறியது.. உயிர் உருகும் ஓசையாய் மைதிலியின் பாடல் வரிகள் வெளிப்பட்டதில் கங்காதேவியின் மனதை பாரம் அழுத்தியது.. அவளின் கனிவான பார்வையிலே மைதிலியின் இதயம் தவித்துத் துடித்தது..

"நதியினைப் போலே..
இங்கொரு மங்கையிருக்க..
துளைக்கும் வண்டாய்..
மனதினைத் துளைத்தாயே.."

பரிதவிப்புடன் கேட்ட அவள் பாடலுக்கு விடை சொல்ல முடியாத தளையில் சிக்குண்டான் குமார கம்பண்ணன்.. இது போன்ற ஆழ்ந்த காதலை அவன்மீது ஏன் மைதிலி வைத்தாள் என்று மனதுக்குள் துயர் கொண்டான்..

"தூங்கும் யாழாய்..
தனிமையில் இப்பேதையிருக்க..
மீட்டும் விரலாய்..
நாவினில் நடந்தாய் நீயே.."

எத்துனை அருமையான சொல்லாடல் என்று வியந்து போனாள் கங்காதேவி... புலமையின் உபாசகியான அவளுக்கு மைதிலியின் கானத்தில் விழுந்த சொல்லாடல் உவப்பைத் தந்தது..

"வண்ணம் மலர்ந்த..
வெள்ளி அலையுண்டு..
வருடிடுமோ காற்றெனை
உனைப் போல..?"

மைதிலியின் விழிகளில் இருந்து வழிந்த நீரை இசையில் கலந்த அவளின் ஈடுபாடென நினைத்த மக்கள் 'ஆஹா..'வென அதிசயித்து வியந்தார்கள்.. அந்தக் கண்ணீரின் காரணமான அவளது நாயகனோ.. அவளைத் தேற்றும் வகை தெரியாமல் திகைத்தான்..

மலரினும் மெல்லிய அவள் மனதை முள்ளெனக் கிழித்தவனை வருடிடும் காற்றென வர்ணனை செய்பவளின் காதலை ஏற்கமுடியாமல் மனம் வருந்தினான்..

"பச்சைக் கொடியுண்டு..
பசும்புல் வடிவுண்டு..
பனியின் துளியாக தழுவிடுமோ..
உனைப் போல..?"

அவன் பனியின் துளியா..? நெருப்பென அவள் மனதை எரித்தவனை பனியின் துளியாக அவள் மதிப்பிட்டதில் நைந்து போனது அவன் மனம்.. கங்கா தேவியோ.. அருமை யென அப்பாடல் வரிகளில் பிணைந்து ரசித்தாள்..

இவை எவற்றையும் அறியாத மைதிலி.. தனக்குள் மருகிக் கதறிக் கொண்டிருந்தாள்..

"இசைகள் நுழையாத..
செவிகள் பலவுண்டு..
உனது திறமை
அங்கு பலிக்குமோ..?"

அருள் இறங்கியதைப் போல சுற்றுப்புறத்தை மறந்து.. அவள் மனதை உலுக்கியவனைத் தனது பாடலினால் உலுக்கிக் கொண்டிருந்தாள் மைதிலி..

உன்னை ரசித்தேன்.. உன் சித்திரம் தீட்டும் திறமையை ரசித்தேன்.. உன் யாழின் மீட்டலை ரசித்தேன்.. உன் கானத்தை என்னை மறந்து ரசித்தேன்.. இவை

அத்தனையும் சேர்ந்த மொத்த பலனாக.. உன்மீது பிரியம் வைத்தேன்..

இதைத் தவிர்த்து நான் என்ன செய்தேன்..?

உனது சித்திரத்தின் அற்புதத்தை உணராத மண்டூகமாக நான் இருந்திருந்தால் இத்துன்பம் எனக்கு நேர்ந்திருக்குமா..? உனது யாழ் இசை நுழையாத செவிகளாக என் செவிகள் இருந்திருந்தால் உன் மீதான காதல் என் மனதுக்குள் நுழைந்திருக்குமா..? உனது பாடலில் மயங்காத ஞான சூன்யமாக நான் இருந்திருந்தால் உன்மீதான பிரியம் என் மனதில் ஏற்பட்டிருக்குமா..?

இவ்வாறு இல்லாமல் கலைகளின் காதலியாக நான் ஏன் இருந்து தொலைத்தேன்..?

அவளது கதறல்களில் குமார கம்பண்ணன் தொலைந்து கொண்டிருந்தான்.. மைதிலியின் கானம் தீயின் நாவாக அவனைச் சுற்றி வளைத்துச் சுட்டது..

"நீயும் விளையாட..
நூறு இடமுண்டு..
அனுதினம் எனை
வருத்துதல்.. நியாயமோ..?"

மைதிலியின் பாடல் கேட்ட கேள்விக்கு நியாய மில்லைதான் என்று பரிதாபப்பட்டாள் கங்காதேவி.. அவள் எதை நியாயமில்லை என்று சொல்கிறாளோ அது அவளுக்கான நியாயம் என்பதை அவள் அறிவாளா என்று தனக்குள் கேட்டுக் கொண்டான் குமார கம்பண்ணன்..

"எனை என்ன செய்தாய்..
வேங்குழலே..?
எனக்கும் உனக்கும் ஒரு
பகையில்லையே..
எனை என்ன செய்தாய்..
வேங்குழலே..? வேங்குழலே..!"

இழுத்த ஆலாபனையுடன் மைதிலி பாடலை முடித்த போது அங்கே எழும்பிய பலத்த கரவொலி அடங்க வெகு நேரமானது..

அனைவரின் பாராட்டு மழையிலும் நனைந்தபடி துன்பப் புன்முறுவலுடன் மனதில் உள்ள துயரத்தை மறைக்க முயன்றபடி தலையசைத்து பாராட்டுதல்களுக்கு நன்றி சொல்லிக் கொண்டிருந்த மைதிலியை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் குமார கம்பண்ணன்... இடையிடையே அவனது பார்வையைச் சந்தித்த மைதிலியின் மனதில் குளிர் பரவியது..

மேடையை விட்டு இறங்கியவளின் கரங்களில் தனது கழுத்தில் அணிந்திருந்த வைர மாலையைக் கழட்டிப் பரிசாக அளித்தாள் கங்காதேவி..

"உணர்ந்து பாடினாய்.. உருகிப் பாடினாய்.. இசையில் கலந்து, கரைந்து பாடினாய்.. அதனுள்ளே சென்று இசையோடு இசையாக மாறி லயித்துப் பாடினாய்.. உனது பாடலில் வித்தையை விட சமர்ப்பணமே அதிகமாக தெரிகின்றது.. இசையென்பது தெய்வீகமானது.. அதற்கு சமர்ப்பணம்தான் அதி முக்கியமானது.."

கங்காதேவியின் வார்த்தைகளில் அதரங்களைக் கடித்துத் தன் உணர்வுகளைக் கட்டுப் படுத்தினாள் மைதிலி..

துளியளவு கூட கர்வமில்லாமல்.. கம்பீரம் குறையாமல்.. தன்னை விட வயதில் இளைய பருவ மங்கையின் இசைத் திறனைப் பாராட்டுவது என்பது கங்காதேவிக்கே சாத்தியமானதாகும் என்றாள் மலர்க்கொடி.. அந்த உண்மையை உணர்ந்து மனம் நெகிழ்ந்தாலும் அதை வாய் திறந்து சொல்லாமல் மௌனமாக இருந்தாள் மைதிலி..

“பார்.. இவள் போல இப்புவியில் ஒருத்தியுண்டோ..? இவளுக்கா நீ துரோகம் நினைக்கிறாய்..?”

மலர்க்கொடியின் கேள்வியில் துடித்துப் போனாள் மைதிலி.. அவள் எவருக்கும் துரோகம் நினைக்க வில்லையே.. கங்கா தேவியின்மீது அவளுக்கு இருக்கும் பக்தியை யாரறிவார்..?

“நானறியேன்..”

இரக்கமின்றி சொன்னாள் மலர்க்கொடி.. அவ்வாறு இருந்திருந்தால் கங்காதேவியின் மணாளனை மனதிலிருந்து விலக்கியிருக்க மாட்டாளா மைதிலி என்ற வினாவையும் எழுப்பினாள்..

“இயலவில்லையே அண்ணி..” மைதிலி விம்மினாள்..

“இயல வேண்டும்..” கண்டிப்புடன் கூறினாள் மலர்க்கொடி..

“நான் என்ன வேண்டுமென்றேவா அவரை மனதில் ஏற்றேன்..?”

“தானாக வந்தவரை நீயாக வழியனுப்பு.. இதுவரை இதைப்பற்றிய செய்தி எதையும் உனது தமையனின் செவிகளில் நான் போடவில்லை.. அவர் மட்டும் உனது மனதை அறிந்தால் என்ன நிகழும் என்பதை நினைத்துப் பார்.. நமது குடும்பப் பாரம்பர்யத்திற்கு இழுக்கு ஏற்பட ஓர்தினமும் உன் தமையன் அனுமதிக்க மாட்டார்..”

இயன்ற அளவுக்கு மைதிலியை சாடி விட்டு.. இல்லம் திரும்புவதற்காக பிள்ளைகளைத் தேடிப் பிடிக்கப் போய் விட்டாள் மலர்க்கொடி..

நீருற்றின் அருகில் சோகமே வடிவாக நின்றிருந்த மைதிலி உள்ளுணர்வின் உந்துதலில் ஏறிட்டுப் பார்த்தாள்.. அவளது உள்ளுணர்வு பொய்க்கவில்லை.. அங்கே பரிவுடன் அவளைப் பார்த்தபடி குமார கம்பண்ணன் நின்றிருந்தான்..

அதுநேரம் வரை மலர்க்கொடி கூறிய அறிவுரைகளை காற்றோடு பறக்க விட்டு விட்டு.. அவனை ஏக்கத்துடன் பார்த்தாள் மைதிலி.. கிட்ட நிற்பவன் அவள் வாழ்வில் எட்டி எட்டிப் போகிறானே.. அவளுக்கு அவன் கிட்ட மாட்டானா என்ற தவிப்பு அவள் விழிகளில் கண்ணீராய் வழிந்தது..

“அழக்கூடாது..”

“ஏனாம்..? அதற்கும் தாங்கள் தடை சொல்வீர்களோ..?”

“நீ மழலையல்ல மைதிலி..”

“அதனால்தானே இத்துனை துன்பம்..? மழலை யாகவே இருந்திருக்கக் கூடாதா என்று மனம் இப்போது ஏங்குகிறது.. கடந்து வந்த மழலைப் பருவத்திற்கு திரும்பிப் போகும் மார்க்கம் தெரியாமல்தானே தவித்து நிற்கிறேன்..”

“புரிந்து கொள் மைதிலி.. நான் கங்காதேவியின் கணவன்..”

“எனக்கு காதலன்..”

“இயலாது பெண்ணே..! கங்காதேவியுடன் வாழ்கிறவனால் இன்னொரு பெண்ணை நினைத்துக் கூடப் பார்க்க இயலாது..”

“தாங்கள் என்னை நினைத்ததில்லையா..? இத்தனை தினங்களில் ஒரேயொரு நொடியாவது என் நினைவு தம் மனதை ஆக்ரமித்ததில்லையா..? என்மீது ஆணையிட்டுக் கேட்கிறேன்.. உண்மையைக் கூறுங்கள்..”

ஆவேசத்துடன் கேட்டாள் மைதிலி.. துரிதமாக பதில் சொல்லாமல் தாமதம் செய்த குமார கம்பண்ணன் பரிவுடன் கூறினான்..

“நினைத்திருக்கிறேன்..”

மைதிலியின் விழிகளில் ஒருகோடி சூரியன்கள் ஒன்று சேர்ந்து வந்தனர்.. விழிகள் பிராகசிக்க அவனை ஆனந்தத்துடன் பார்த்தவளை அவன் காருண்யமாகப் பார்த்து வைத்து அவள் மனதை வதைத்தான்..

“அல்ல மைதிலி.. நீ நினைப்பதைப் போல என் நினைவு இல்லை..”

“அப்படியென்றால்.. எமது இல்லத்தில் தாம் என்னுடன் விளையாடிய பொழுதுகள் பொய்யான பொழுதுகளா..?”

“இல்லை.. அவை மெய்யான பொழுதுகள்தான்.. குறும்புத்தனம் மிக்க சுட்டிப் பெண்ணிடம் சீண்டி விளையாடுவது அனைவருக்கும் பிடித்தமான ஒன்று தானே..?”

“எனைப் பார்த்த பார்வைகள்..? அதற்கென்ன பதில்..?”

“இன்றுதான் பூத்த புதுமலரின் அழகை நாம் ரசிப்பதில்லையா..? உனது யௌவனம் ததும்பும் வனப்பை ரசித்தேன்.. தவறான கண்ணோட்டத்தில் அல்ல..”

“தமது பாடல்..! அதில் உரைத்த மிதிலையின் மைதிலி..! இதற்கென்ன பதில் உரைப்பீர்கள்..?”

“இவ்வுலகில் சகோதர பாசம்.. காதல்.. இவையிரண்டிற்கும் நடுவில் எதுவும் இல்லையா..? உனைக் குறித்த எனது உணர்வு.. இவை இரண்டிற்கும் இடைப்பட்டது.. உனக்கான நல்வாழ்வையே நான் விரும்புகிறேன்.. புரிந்து கொள் என்னை..”

மைதிலியின் கண்ணீர் வற்றாத நதிபோல பெருக்கெடுத்தது.. குமார கம்பண்ணனின் வார்த்தைகளை அவளால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை.. அவள் மனதில்

காதலை விதைத்து விட்டு.. விருட்சமான பின்னர் அதை வேரோடு பிடுங்கி எறிய முற்படும் அவனது செயலில் அவள் மனம் நைந்தாள்..

குமார கம்பண்ணன் அவன் மனதைப் புரிய வைக்கும் முயற்சியில் இருந்தான்.. தொண்டை மண்டலத்தை வென்று அதன் அரசனாக கோலோச்சுபவன்.. அவளிடம் விளக்கம் கூறி மன்றாடியதில் அவளது மனபாரம் மிகுதியானது..

இத்துணை தன்மையான குணம் வாய்ந்தவனைக் காதலித்தும் கரம் பிடிக்க இயலவில்லையே என்று மைதிலி மனம் ஏங்கினாள்..

"கங்காதேவியே எனது காதலி..! எனது உயிரில்.. உணர்வில்... மனதில் நிறைந்திருப்பவள் அவளே.. மற்றொரு பெண்ணிற்கு என்வாழ்வில் இடமில்லை.."

குமார கம்பண்ணனின் பேச்சிற்கு எதிர் பேச்சைப் பேச மைதிலியால் முடியவில்லை.. என்னதான் கங்கா தேவியின்மீது அவளுக்கு கடலளவு பொறாமை இருந்தாலும் அவளை வெறுக்க மைதிலியால் முடியவில்லை.. விசித்திரமான வகையில் கங்கா தேவியை மைதிலி நேசித்தாள்.. உபாஷித்தாள்.. அவளது காலடி பட்ட மணலை தனது நெற்றியில் இட்டுக் கொள்ளும் அளவிற்கு கங்கா தேவியின் ஆளுமை மீது மரியாதை கொண்டிருந்தாள்..

"அவளைப் போன்ற ஓர் பெண்ணைப் பார்ப்பதரிது.. அவளை கண்ட தினம் முதல்.. இந்த தினம் வரை அவளை

நான் காதலிக்கிறேன் மைதிலி.. உன்னைப் போல அவள் மழலைத்தனம் மிக்கவளல்ல.. உலக அறிவு மிக்கவள்.. எனக்கான ஆலோசனைகளை கூற வல்லவள்.. சில தருணங்களில் அவளே என்னை வழிநடத்தியிருக்கிறாள்.. மற்ற அரச வம்சத்துப் பெண்களைப் போல ஆடை, ஆபரணம், மாளிகை, உல்லாசப் பயணங்கள் என்றில்லாமல் இவள் எனது சங்கல்பத்தில் பங்கேற்றவள்.. வாள் ஏந்தி சபதம் முடிக்கக் கிளம்பியுள்ள என்னை இணைபிரியாமல் பின் தொடர்ந்து வந்திருப்பவள்.. உனது நுண்ணிய மன உணர்வுகளை எண்ணிப் பார்க்கவும் எனக்குப் பொழுதில்லை பெண்ணே..! புரிந்து கொள் எனது நிலையை.. நான் இந்து மதத்தின் காவலனாகப் போர் தொடுக்க கிளம்பியுள்ளவன்.. மதுராபுரியின் மீனாட்சியம்மனின் ஆலயம் வழிபாடு செய்ய இயலாமல் அடைபட்டிருக்கிறது.. மதுரையை ஆளும் சுல்தான் மீனாட்சியம்மனின் கோவிலை அடைத்து வைத்துள்ளான்.. அதன் தாழ் திறந்து கோவிலில் ஆறுகால பூஜைகளும் அமோகமாக நடக்கச் செய்ய வேண்டும்.. திருச்சியின் திருவரங்கத்தில் ரங்கநாதனின் கோவிலில் வீற்றிருக்க முடியாமல் ரங்கநாதனின் திருவுருவச்சிலை திருப்பதியின் திருமலைக் காடுகளில் மறைந்து கோவில் கொண்டுள்ளதே.. அந்த அரங்கனின் சிலையைத் திருவரங்கத்தில் உள்ள ரங்கநாதரின் கோவிலில் பிரதிஷ்டை செய்ய வேண்டும்.. இவை இரண்டுமே என் வாழ்வின் குறிக்கோள்கள்.."

அதுவரை.. தனது மனக்குமுறல்களே பிரதானமாய்.. எங்கோ ஓர் திக்கில வெறித்தபடி குமார கம்பண்ணன் பேசிய மொழிகளை அசுவராஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருந்த மைதிலி அதிர்ந்து விழித்தாள்.. அவன் பேசிய பேச்சுக்களின் பொருளில் அவளுக்கு காதல் மறந்து போனது.. அவள் கண்முன் அடைபட்டிருக்கும் மதுரை மீனாட்சியம்மனின் கோவிலும்.. அரங்கனின் சிலையில்லாத திருவரங்கக் கோவிலும் வந்து நின்றது..

"கேட்டுக் கொள்.. மதுரை சுல்தானை முறியடிக்கும் முன்னர் அவனுக்கு கப்பம் கட்டும் தொண்டை மண்டலத்தின் சம்புவரையர்களைத் தோற்கடித்து தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றியாக வேண்டும்.. அதன் பொருட்டே தொண்டை மண்டலத்தை வென்று.. காஞ்சியின் காவலனாக ஆகியுள்ளேன்.. இங்கிருந்து நான் படை திரட்டியாக வேண்டும்.."

"எதற்காக..?"

"மதுரையின் சுல்தான் மீது போர் தொடுப்பதற்காக.."

"தங்களிடம்தான் படை உள்ளதே.."

"இது போதாது பெண்ணே.. லட்சக்கணக்கில் படைவீரர்கள் உள்ள மமதையில்தான் அந்த சுல்தான் ஆடுகிறான்.. என்னிடம் உள்ளதோ ஆயிரக்கணக்கான வீரர்களைக் கொண்ட படை.. தவிர, படையெடுத்துப் போகிறவனுக்கு தேவையான அளவு பொருளும் வேண்டும்.."

"எவ்விதம் இதைச் சாதிப்பீர்கள்..?"

"சாதித்துத்தான் ஆக வேண்டும்.. கேள் மைதிலி..! விஜய நகரத்தில் இருந்த குமார கம்பண்ணன் மதுரையை நோக்கி ஏன் படையெடுத்து வந்துள்ளான் என்பதிற்கான காரணத்தைக் கேள்.. அரங்கனின் சிலையை நான் கண்டறிந்த அனுபவத்தைக் கேள்.. நான் சூளுரைத்ததிற்கான நிகழ்வுகளைக் கேள்.." குமார கம்பண்ணன் சொல்ல ஆரம்பித்தான்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'

15

*என்றேனும் ஓர் நாளில்..
என் மனதை அறிவாயா..?*

தாமோதரன் கண்கள் இடுங்க அலட்டிக் கொள்ளாமல் கேள்வி கேட்டவளை முறைத்துப் பார்த்தான்.. அவனுக்குள் எதற்காக அத்தனை கோப அலைகள் பரவுகின்றன என்று அவனுக்கே தெரியவில்லை..

"என்ன..? என்கூட சண்டை போட வந்தீங்களா..?"

"நோ சார்.. நான் வந்தது வேறு ஒரு மேட்டருக்காக.. நீங்கதான் எதையெதையோ பேசி என்னையும் எதையெதையோ பதில் சொல்ல வைத்துட்டிங்க.."

"ஷட் அப்.. அண்ட்.. கெட்லாஸ்ட்.. ஆப்டர் ஆல் ஒரு செக்கரட்டரி.. நீங்க.. கம்பெனியோட ஜி.எம் முக்கே புத்தி சொல்ல வந்திட்டிங்களா..? ஓ மை காட்..! கம்பெனி எங்கே போய்க்கிட்டு இருக்கு..?"

"எங்கேயும் போகலை.. இருக்கிற இடத்திலதான் இருக்கு.. உங்களுக்கு புத்திசொல்ற அளவுக்கு நான் அறிவாளியில்லைன்னு ஏற்கனெவே சொல்லிட்டேன் சார்.."

"ஸோ வாட்..? வாயை மூடுன்னு சொல்றீங்களா..?"

எதைச் சொன்னாலும் கேட்க மாட்டேன் என்று அடம் பிடிப்பவனை என்ன செய்வது என்று மனம் சோர்ந்து போனாள் யாமினி..

முன்னால் போனால் கடிப்பான்.. பின்னால் போனால் உதைப்பான் என்று எட்ட நின்று பேசினாலும் அவன் பிடிவாதமாக நீ எங்கே நின்றாலும் உதைப்பேன் என்று வம்புக்கு வந்தால் அவள்தான் பாவம் என்ன செய்வாள்..?

"நான் எதுவும் சொல்லலை சார்.."

"பின்னே.. என்ன அலுவலுக்காக என் கேபினுக்குள்ள வந்து உட்கார்ந்து என் வேலையைக் கெடுத்துக்கிட்டு இருக்கீங்க..? நீங்களும் வேலை செய்ய மாட்டிங்க.. மத்தவங்களையும் வேலை செய்ய விடமாட்டிங்கன்னு சொன்னா பெரிய ஆராஜகமால்ல இருக்கு.. இதில இவங்க வேலையை மட்டும்தான் பாக்கிறாங்களாம்.. விளக்கம் சொல்ல வந்துட்டாங்க.."

"சார்.."

"வெளியே போங்க.."

தாமோதரன் வாசலை நோக்கிக் கை காட்டினான்.. அதனால் முகம் சிறுத்துப் போவாள்.. மனம் குன்ற அழுது விடுவாள் என்றெல்லாம் அவன் ஆவலுடன் எதிர்பார்க்க..

யாமினி சலனமில்லாத முகத்துடன் அசையா மரமாய் உட்கார்ந்து தாமோதரனின் அத்தனை எதிர்பார்ப்புகளையும் தவிடு பொடியாக்கினாள்.. தாமோதரனுக்கு ஏமாற்றமாக இருந்தது..

'அசைய மாட்டேங்கிறாளே..' பல்லைக் கடித்தான்..

அவளோ நான் ஏன் அசைய வேண்டும் என்ற ரீதியில் பல்லைக் கடித்தபடி சட்டமாக அமர்ந்திருந்தாள்..

"என்ன..? அழிச்சாட்டியம் பண்றிங்களா..?"

"நான் ஒரு சாட்டியமும் பண்ணலை சார்.."

"வெளியே போங்கன்னு சொன்னேன்.."

"கோபத்தில சொல்றிங்க சார்.."

"கோபத்திலதான் சொல்றேன்.. பின்னே.. உங்களைப் பாத்தா மகிழ்ச்சியா பொங்கும்..? ச்சை..! ஒரு தடவை சொன்னா உறைக்கனும்.. ஜி.எம் என்ன சொன்னாலும் ஒபே பண்ணக் கூடாதுங்கிற முடிவோட இருக்கீங்களா..?"

"உங்களோட எந்த ஆர்டரை சார் நான் ஒபே பண்ணாம இக்னோர் பண்ணினேன்..?"

"இப்ப இக்னோர் பண்ணிக்கிட்டு இருக்கீங்களே.."

"இது வேற சார்.."

"வேறன்னா..?"

"நான் சொல்ல வந்ததை சொல்லாமல் போகக் கூடாதுங்கிற திடம்.. இது ஜி.எம்மோட ஆர்டர இக்னோர் பண்ணினதா ஆகாது.."

"அப்படி நீங்களா ஒரு முடிவுக்கு வந்திராதீங்க.."

"நீங்க என்ன வேணும்னாலும் சொல்லிக்கங்க.. ஐ டோண்ட் கேர்.. நான் பேச வந்ததைப் பேசாம இங்கேயிருந்து போக மாட்டேன்.."

"என்ன திமிர்..!"

"இதைத் திமிர்ன்னு நினைச்சா நினைச்சுக்கங்க.."

"டோன்ட் பிளே வித் மீ.. நான் சித்தார்த்தனில்லை.. தாமு..! அண்டர்ஸ்டாண்ட்..?"

"அண்டர்ஸ்டாண்ட் சார்.."

எதற்கும் மசியாமல் அவள் பிடித்த பிடியிலேயே இருந்ததில் கொலை வெறியாகிப் போனான் தாமோதரன்.. கையிலிருக்கும் டேபிள் வெயிட்டால் அவள் மண்டையை உடைத்து விடலாமா என்று கூட யோசித்தான்.. பெண்களுக்கு எதிராக வன்முறையைப் பிரயோகிக்கக் கூடாது என்று மகாபாரதம் சீரியலில் பீஷ்மர் சொன்ன டயலாக் ஞாபகத்திற்கு வந்ததால் அந்த யோசனையைக் கைவிட்டான்..

யாமினியைப் பார்த்தால் டேபிள் வெயிட்டால் அடி வாங்கினால் கூட இடத்தைக் காலி பண்ண மாட்டாள் என்று தோன்றிது..



16

கோவிலைக் காக்க சூளுரைத்தவன் -அவள் மனக் கோவிலில் எப்படி குடியிருப்பான்..?

அது தெய்வத்தின் திருவிளையாடல்..!

இலங்கையில் போர் முடித்து வென்ற ராமன்.. ராவணனை வதம் செய்ததும்.. விபிஷணனுக்கு மன்னனாக மகுடம் சூட்டி.. இலங்கையின் அரியணையில் முறையான பட்டாபிஷேகத்தை நடத்தி அமர வைத்தார்.. அவர் அயோத்திக்குத் திரும்பிய பின்னர்.. அவரது பட்டாபிஷேகத்தைக் காண விபிஷணன் அயோத்திக்கு வந்தார்.. ராமரின் பட்டாபிஷேகம் நிறைவுற்று.. அவர் அயோத்தியின் மன்னனாக அரியணையில் அமர்ந்தவுடன்.. விபிஷணன் இலங்கைக்குத் திரும்ப வேண்டிய தினம் வந்தது.. அதுநாள் வரை.. ராமரின் உற்ற நண்பராக உடன் இருந்த பாசத்தில் ராமரைப் பிரிந்து இலங்கை செல்ல முடியாமல் மருகி நின்றார் விபிஷணன்.. ராமன் அவருக்கு அனுக்கிரகம் அளித்து ஓர் சிலையைத் தந்தார்..

அதுவே ஸ்ரீரங்கத்தில் கோவில் கொண்டிருக்கும் ஸ்ரீரங்கநாதனின் திருவுருவச் சிலையாகும்..

“எனதன்பு விபிசணா..! இச்சிலையை எடுத்துச் செல்.. இதன் வடிவாக உன்னுடன் நான் நிலைத் திருப்பேன்..” என்று திருவாக்கை அருளினார் ராமர்..

விபிஷணனும் ராமரின் பாதம் பணிந்து அவருடைய திருவுருவச் சிலையைப் பெற்றுக் கொண்டார்..

அத்தருணத்தில் தான் ராமபிரான் அவ்வார்த்தைகளை உதிர்த்தார்..

"ஒன்றை நினைவில் கொள் விபிஷணா..! இந்தச் சிலையை இலங்கைக்குச் செல்லும் வரையில் மண்மீது படிய வைத்து விடாதே.. அவ்விதம் படிய வைத்து விட்டால்.. எந்த இடத்தில் இந்தச்சிலை மண்மீது படிகின்றதோ.. அந்த இடத்தின் மண்ணில் நான் கோவில் கொண்டு விடுவேன்.. எனவே பத்திரமாக கைகளில் ஏந்தி இலங்கைக்கு எடுத்துச் செல்.."

"அவ்விதமே பெருமானே..!"

விபிஷணன் ராமர் கூறியதை மனதில் பதிய வைத்துக் கொண்டு விடை பெற்றார்.. ராமபிரான் அளித்த திருவுருவச் சிலையை கைகளில் ஏந்தி தரையில் படிய விடாமல் வெகு கவனமாக பயணித்தார்.. காவிரியாற்றின் கரையில் அவர் பயணித்த போது.. அவர் நீராட வேண்டியிருந்தது..

'என்ன செய்யலாம்..?'

யோசனையுடன் காவிரிக் கரையைப் பார்த்தார்.. அங்கே ஒர் சிறுவன் விளையாடிக் கொண்டிருந்தான்.. அவனை அணுகினார்..

"சிறுவனே..!" என்று அழைத்தார்..

சிறுவன் திரும்பிப் பார்த்தான்.. நெற்றியிலே திருநீரும்.. உதடுகளில் குறும்புப் புன்னகையுமாக இருந்த சிறுவனின் பார்வையின் தீட்சண்யத்தில் விபிஷணன்

அசைய முடியாமல் நின்று விட்டார்.. அவரது தேகத்திற்குள் ஓர் அதிர்வு உண்டானது..

'இவன் சிறுவனா..?'

மனதில் வினா எழுந்த போதும் அந்தத் தெய்வீகச் சிறுவனின் புன்முறுவலில் மயங்கிப் போனார்..

"என்ன ஐயா..? எதற்காக எமது விளையாட்டைத் தடைசெய்து எமை அழைத்தீர்..?" கணீர் என்ற குரலில் வினவினான் சிறுவன்..

அச்சிறுவனின் தோரணையில் அயர்ந்து போனார் விபிஷணன்..

"அப்பனே..!" என்று அச்சிறுவனை அழைத்தார்..

அவரது அழைப்பில் அந்தச் சிறுவன் கலகலவென நகைத்தான்..

"எமையா 'அப்பன்' என்று அழைத்தீர்கள்..?"

"ஆம் அப்பனே..!"

"நல்லது.. அவ்விதமும் சிலர் என்னை அழைப்பார்கள்... எமை அழைத்ததின் நோக்கம் என்னவோ..?"

"நான் நீராட வேண்டும்.."

இவ்வாறு கூறியவரை ஏற இறங்க பாதாதி கேசம் போல விசித்திரமாகப் பார்வையிட்டான் அந்தச் சிறுவன்..

"நீங்கள் நீராட நான் தடையேதும் கூறவில்லையே.. இதோ அகன்ற காவிரி நதி.. இரு கரைகளையும் தொட்டுப்

பாய்ந்து கொண்டிருக்கிறது.. இதில் நீராடுவதற்கு எனது அனுமதியைக் கோரி நிற்கின்றீர்களே.. விசித்திரம்தான்..”

“அல்ல அப்பனே..! இது வேறு..”

“எது வேறு..?”

சிறுவனின் பார்வை விபிஷணனின் கரங்களில் வந்தியிருந்த அரங்கனின் திருவுருவச் சிலையின் மீது படிந்தது..

“இதையா கூறுகிறீர்கள்..?” என்று கேட்டான் சிறுவன்..

“அல்ல.. அல்ல..” பதறிப் போன விபிஷணன் அரங்கனின் திருவுருவச் சிலையை மார்போடு அணைத்துக் கொண்டார்..

“எமது ரங்கநாதன் வேறு.. நான் வேறல்ல.. இவர் எனது ரங்கநாதர்.. எனக்கு மட்டும் உரியவர்..”

“ஓ..” அதரங்களைக் குவித்து ஒலியெழுப்பிய அச்சிறுவன்..

“இந்த அவனிக்கே உரியவரான ஆண்டவனை உமக்கு மட்டும் உரியவராக்க எண்ணம் கொண்டுள்ளீரோ..?” என்று கேட்டான்..

விபிஷணன் பதில் உரைக்க இயலாமல் தடுமாறி நின்றார்..

“இருக்கட்டும்.. இது உமது நிலைப்பாடு..! எனை எதற்காக அழைத்தீர்கள்..? அதைக் கூறுங்கள்..” சிறுவன் கேட்டான்..

“நான் நீராடி வரும் வரையில் அரங்கனின் திருவுருவச் சிலையை உன் கரத்தில் நீ ஏந்திக் காத்திருக்க வேண்டும்..” விபிஷணன் கேட்டுக் கொண்டார்..

“நல்ல நகைச்சுவை இது..” சிறுவன் சிரித்தான்..

“ஏன் ஐயா..! இதற்காகவா எனது விளையாட்டைத் தடை செய்தீர்கள்..? அரங்கனின் சிலையை காவேரிக் கரையோர மரத்தின் அடியில் நிழலில் வைத்து விட்டுத் தாம் நீராடச் செல்லலாமே..”

“அது கூடாது அப்பனே..! அரங்கனின் சிலையை நிலத்தின் மீது வைக்கக் கூடாது..”

“அவ்வாறா..? கரங்களில்தான் அரங்கனின் சிலையை ஏந்த வேண்டுமா..? நிலத்தில் வைக்கக் கூடாதா..?”

“வைக்கலாம்.. இந்தக் காவிரிக் கரையின் மண் மீது அல்ல.. இலங்கையின் மண் மீது அரங்கனின் சிலையை படிய விட வேண்டும்.. அரங்கன் அங்கேயே நிலை கொள்வான்.. அதுவரை இடைப்படும் பிரதேசங்களில் அரங்கனின் சிலையை மண்மீது படிய வைத்து விடக் கூடாது.. அரங்கன் இலங்கைக்கு உரியவர்..”

“எத்துனை பேராசை..!”

அதரங்களைக் குவித்த சிறுவன் கரங்களை நீட்டினான்..

“எம்மிடம் தாருங்கள்.. தாம் நீராடி வரும்வரை அரங்கன் என்னிடம் இருக்கட்டும்..”

விபிஷணன் நிம்மதியுடன் அரங்கனின் திருவுருவச் சிலையை அச்சிறுவனிடம் அளித்தார்.. இரு கரம் நீட்டிப் பெற்றுக் கொண்ட சிறுவனிடம்..

"கவனம்..! அரங்கனின் சிலையை நிலத்தின் மீது வைத்து விடக் கூடாது.." என்று எச்சரித்தார்..

"ஆகட்டும்.." என்றான் சிறுவன்..

விபிஷணர் காவேரி நதியில் இறங்கினார்.. தோள் தொட்ட நீரில் நின்ற வண்ணம் கரையைப் பார்த்தார்.. அந்தச் சிறுவன் அங்கேயே நின்றிருந்தான்.. நீரில் மூழ்கி எழுந்தார்.. அந்தச் சிறுவன் அவரையே பார்த்த வண்ணம் அரங்கனின் சிலையைக் காவேரிக் கரையில் வைத்து விட்டான்..

"வேண்டாம்.. வேண்டாம்.."

நதியிலிருந்த விபிஷணன் பதறியபடி கரைக்கு ஓடோடி வந்த போது சிறுவன் நம்பிக்கையை அளிக்கும் தும்பிக்கையுடன் விநாயகனாக காட்சி தந்தான்.

"பிள்ளையாரப்பனே..!" விபிஷணன் கதறினார்..

"இந்த உலகிற்கே சொந்தமான அரங்கனை உனது இலங்கைக்கு மட்டும் சொந்தமாக்க எடுத்துச் செல்வதைத் தடுக்கவே இவ்விதம் செய்தேன்.. கலக்கம் கொள்ளாதே விபிஷணா.. அரங்கனின் அருள் அவர் எங்கிருந்தாலும் உனக்குக் கிட்டும்.."

வரமளித்துவிட்டு மறைந்து விட்டார் விநாயகப் பெருமான்..!

"அய்யனே..! எனது அரங்கனே..! ஸ்ரீராமனே..!"

விபிஷணன் கதறியழுதார்.. காவேரிக் கரையின் மண்மீது நிலை கொண்டு விட்ட அரங்கனின் சிலையை அசைத்தார்.. கரங்களில் எடுக்க முயன்றார்.. இயல வில்லை.. அரங்கனின் சிலை காவேரிக் கரையிலேயே நிலை கொண்டு விட்டது..

"இறைவா..! பெருமாளே..! இது என்ன சோதனை..!"

கண்ணீர் விட்டு காவேரிக் கரையின் மீது விழுந்து அழுது புரண்ட விபிஷணனின் காதுகளில் அசரீரி ஒலித்தது..

"கலங்காதே இலங்கை வேந்தா..! காவேரிக் கரையில் நான் நிலை கொண்டு விட்டாலும்.. எனது பார்வை தென் திசையில் உள்ள உனது இலங்கையைத்தான் நோக்கியிருக்கும்.. எனது அருள் பார்வை என்றென்றும் உன்மீது படிந்திருக்கும்.. கண்ணீரை நிறுத்தி இலங்கைக்குத் திரும்பு விபிஷணா..! எமது ஆழ்வார்களில் ஒருவராக என்றென்றும் உன் புகழ் நிலைத்திருக்கும்.. எனது அன்புக்குரியவன் நீ..! எனது அருள் பார்வை உன் மீதும் உனது நாட்டின் மீதும் படிந்துள்ளது என்ற மன நிறைவுடன் இலங்கைக்குத் திரும்பு.."

விபிஷணன் கரம் கூப்பி அரங்கனின் கட்டளையை ஏற்றுக் கொண்டார்.. இலங்கைக்குச் சென்று விட்டார்..

அவ்விதமாக திருவிளையாடல் நடத்தி அரங்கனின் சிலையை காவேரிக் கரையில் நிலை நிறுத்திய

பிள்ளையார்.. திருச்சி மாநகரில் உச்சிப் பிள்ளையாராக காவிரியின் இக்கரையில் கோவில் கொண்டார்..

விநாயகப் பெருமானால் காவேரிக் கரையில் நிலை நிறுத்தப்பட்ட அரங்கன்.. அவ்விடத்தை திருவரங்கமாக்கி.. ரங்கநாதராக அங்கே கோவில் கொண்டார்..

இவ்வாறு காவேரி நதியின் இக்கரையில் உச்சிப் பிள்யைாரும்.. அக்கரையின் திருவரங்கத்தில் ரங்கநாதராக அரங்கனும் கோவில் கொண்டிருக்கும் மாநகரம்.. திருச்சி மாநகரமாகும்..

அந்தத் திருவரங்கத்தின் ரங்கநாதனான அரங்கனின் சிலையைத் தான் சுல்தான் குறிவைத்து தேடி அலைந்தான்.. திருச்சி மாநகரம் அவனுடைய ஆளுகையின் கீழ் இருந்தது.. அரங்கனின் சிலையைத் தேடின சுல்தானின் படை வீரர்களிடமிருந்து அரங்கனின் சிலையைக் காக்க அரங்கனின் பக்தர்கள் போராடினார்கள்.. சிலை எங்குள்ளது என்று தெரியாமல் சுல்தானின் படைவீரர்கள் யாதவாச்சாரியாரைத் துன்புறுத்திய போது அவர் வெகுண்டார்..

"அவன் அரங்கனடா.. உன்னிடம் அகப்பட மாட்டான்.."

"அரங்கனா..?"

சுல்தானின் படைவீரர்களின் ஆணவச் சிரிப்பில் யாதவாச்சாரியார் கொதித்தார்..

"ஆம் அரங்கன்தான்.." என்று மார்தட்டினார்..

"கல்லைக் கடவுள் என்கிறான்.. இந்த அறிவிலிமீது கற்களை வீசுங்கள்.." சுல்தானின் படைத் தலைவன் ஆணையிட்டான்..

தன்மீது வீசப்பட்டக் கற்களைப் பூக்களைப் போலப் பாவித்துப் புறம் தள்ளிய யாதவாச்சாரியார் உன்மத்தம் பிடித்தவரைப் போலப் பாடலானார்..

"கல்லை மட்டும் கண்டால்..
கடவுள் தெரியாது..
கடவுள் மட்டும் கண்டால்..
கல்லடி தெரியாது..
அரங்கன் குடி கொண்ட
திருவரங்கம் தனிலே..
அன்னியரின் பாதம் படியாது..
இருளைவிலக்கும்
அந்தக் கண்ணனின் குழலில்
இன்றைய துன்பங்கள் நிலைக்காது.."

அடிவயிறிலிருந்து குரல் எழும்ப.. ஆவேசத்துடன் பாடியவரின் உன்மத்த நிலையில் சுல்தானின் படைவீரர்கள் பின் வாங்கினார்கள்.. தேகம் நடுநடுங்க.. அண்டம் கிடுகிடுக்க.. அரங்கனின் பக்தரான யாதவாச்சாரியார் உச்சஸ்தாதியில் பாடலைத் தொடர்ந்தார்..

"இல்லை என்று சொன்னபின்பும்..
இன்றியமையாதது..
தொல்லை தந்த போதும்
எங்கள் நிலை மாறாது.."

சுற்றிக் குழுமியிருந்த அரங்கனின் பக்தர்கள் இடையே ஜ்வாலை போல யாதவாச்சாரியாரின் ஆவேசம் பரவியது.. அவர்கள் ஒருமித்த குரலில் யாதவாச் சாரியாருடன் இணைந்து கரங்களை உயர்த்திப்பாட ஆரம்பித்தார்கள்..

"சுல்தான் சொல்லுக்கு..
அஞ்சி என்றும்..
சூரியன் மேற்கில்
உதிக்காது..
தொல்லை தருபவர்கள்
முன்னால் எங்கள்
செல்ல வைணவம்
தோற்காது.."

சுல்தானின் படைவீரர்கள் தங்களுக்குள் முணுமுணுத்துக் கொண்டனர்.. மக்கள் கூட்டம் ஒன்று திரண்டு நிற்கும் போது.. அரங்கனின் சிலையை அணுகுவது உசிதமல்ல என்று சுல்தானின் படைவீரன் கூறினான்.. அதை மற்ற படைவீரர்கள் ஏற்றுக் கொண்டு.. அங்கிருந்து அகன்றார்கள்..

"ராஜலட்சுமி நாயகன்..
சீனிவாசன்தான்..
சீனிவாசனைச் சேவிக்கும்
விஷ்ணுதாசன் நான்..
நாட்டில் உண்டு ஆயிரம்
ரங்கராஜன் தான்..
ராஜனுக்கு ராஜன் இந்த
ரங்கநாதன் தான்.."

கரம் உயர்த்திப் பாடிய யாதவாச்சாரியாரின் பின்னே பக்தர்களின் கூட்டம் திரண்டது.. அரங்கனின் சிலையை அவர் உயிரைக் கொடுத்தேனும் காப்பார் என்று அவர்கள் நம்பினார்கள்.. திருவரங்கனின் மீதான பக்தி அவரது உயிரில் கலந்திருந்ததை கண்ணார அவர்கள் கண்டார்கள்..

"ரங்கநாதனைக் காணும் நெஞ்சம்..
அநீதி கண்டு நடுங்காது.."

அவர் முழக்கமிட்ட போது.. அரங்கனின் சிலையை அவரிடம் ஒப்படைக்கும் பக்தர்களின் முடிவு வலுவுற்றது..

"யாதவாச்சாரி..! திருவரங்கத்தின் ஸ்ரீரங்கநாதரான அரங்கனின் திருவுருவச் சிலையை எடுத்துக் கொண்டு இங்கிருந்து தப்பிச் சென்று விடு.."

யாதவாச்சாரியாருக்கு ஆணை பிறப்பிக்கப் பட்டது.. பக்தர்கள் ஒருமனதாக அரங்கனின் சிலையை அவரிடம் ஒப்படைத்தார்கள்..

"இச்சிலையுடன் திருப்பதியின் திருமலைக்குச் செல்.. அங்கே சுல்தானின் ஆட்சியில்லை.. திருமலையின் கோவிலில் அரங்கனின் சிலையை ஒப்படைத்து.. அனைத்து பூஜைகளையும்.. நியதிகளையும்.. தீபாதரனை களையும் குறைவின்றி நடத்தச் சொல்.. புறப்பட ஆபத்த மாகு.."

"அவ்வாறே ஆகட்டும்.. ஆயினும் ஐயா.. திருமலையின் கோவிலில் அரங்கனுக்கான பூஜைகள் குறைவறக் கிட்டுமா..?"

"கிட்டும்.. திருமலையின் ஏழுமலையான்தான் திருவரங்கத்தின் ரங்கநாதன்.. அரங்கனுக்கான அனைத்து பூஜைகளும் அங்கேதான் கிட்டும்.. நம்பிக்கையுடன் செல்.."

யாதவாச்சாரியாரும் சென்றார்.. திருவரங்கத்தை சூழ்ந்து நின்ற சுல்தானின் படைவீரர்களிடமிருந்து தப்பித் திருமலையை நோக்கி அரங்கனின் திருவுருவச் சிலையுடன் சென்று விட்டார்..

ஆனால்.. சுல்தானின் படைவீரர்களின் தாக்குதலால் உண்டான காயங்களில் அவரது மனநிலை பாதிப்படைந்து விட்டது.. மனநிலை பிரண்ட நிலையில் அரங்கனுக்கான பூஜைகள் திருமலையில் குறைவறக் கிட்டுமா என்ற அவரது அடி மனதின் அச்சம் மேலே எழுந்து வந்தது..

யாதவாச்சாரியார் திருமலையின் காடுகளில் புகுந்து விட்டார்.. ஆனால் கோவிலை அணுகி அரங்கனின் சிலையை ஒப்படைக்கவில்லை..

வனப்பகுதியில் ஓர் மரத்தடியில் குடிசை வேய்ந்து அரங்கனின் சிலையை அக்குடிசையில் வைத்தார்.. அரங்கனுக்கான தினப்படி பூஜைகளை நியதிப்படி செய்ய ஆரம்பித்தார்..

மனநிலை தவறிய நிலையில் காட்டில் அலைபவர்.. வனப்பகுதியின் அருவியில் நீராடி.. பழ மரங்களில் இருந்து கனிகளையும்.. செடிகயில் இருந்து மலர்களையும் பறித்துக் கொண்டு குடிசைக்குத் திரும்புவார்..

அரங்கனின் சிலைக்கு அபிஷேக ஆராதனைகளைச் செய்து.. கனிகளையும்.. மலர்களையும் படைப்பார்..

இவ்விதமாக அரங்கனும்... அவருமாக.. வனப் பகுதியில் மறைந்திருந்த போது.. அரங்கனின் சிலையைக் கொண்டு போன யாதவாச்சாரியார்... சிலையை திருப்பதியின் திருமலையில் ஒப்படைத்து விட்டுத் திரும்ப வில்லையே என்று அவரிடம் அரங்கனின் சிலையை ஒப்படைத்த பக்தர்கள் கவலை கொண்டனர்..

"இன்னும் ஏன் யாதவாச்சாரி திரும்பி வரவில்லை..?"

"திருப்பதியின் திருமலையிலிருந்து ஏதேனும் செய்தி வந்ததா..?"

"வந்தது.. யாதவாச்சாரி திருமலையின் கோவிலுக்கு வருகை தரவேயில்லை என்று அவர்கள் செய்தி அனுப்பியுள்ளனர்.."

"ரங்கநாதா..! இது என்ன சோதனை..! அரங்கனின் சிலை எங்கு போனது..?"

"ஒருவேளை.. திருமலைக்குச் செல்லும் வழியில் யாதவாச்சாரி சுல்தானின் படைவீரர்களிடம் அகப்பட்டிருப் பாரோ..? சுல்தானின் படைவீரர்கள் அரங்கனின் சிலையைக் கைப்பற்றி இருப்பார்களோ..?"

"கூறாதே.. நினைக்கவே நெஞ்சம் நடுநடுங்குகிறது.. யாதவாச்சாரி ஒர்நாளும் அரங்கனின் சிலையை பறி கொடுத்திருக்க மாட்டார்.. உயிரைக் கொடுத்தும் அவர் அரங்கரின் சிலையைக் காத்திருப்பார்.."

"அவ்வாறெனில் சிலையை திருமலையின் கோவிலில் ஒப்படைத்து விட்ட செய்தியுடன் ஏன் அவர் திரும்பி வரவில்லை..?"

விடையில்லாத இந்த வினாவிற்கு விடை தேடிய அந்தக் குழுவினர்.. அரங்கனின் சிலையைத் தேடி திருப்பதியின் திருமலைக்குப் பயணமானார்கள்..

அங்குதான்.. விஜயநகர சாம்ராஜ்யத்தின் இளவரசனான குமார கம்பண்ணன் அவர்களைச் சந்தித்தான்..

குமார கம்பண்ணனின் குலதெய்வம் திருப்பதியின் திருலையில் உள்ள ஏழுமலையான் ஆவார்..

திருப்பதி சென்ற குமார கம்பண்ணா.. திருமலையின் வனப் பகுதியில் ஓர் குடிசையிலிருந்து வந்த மந்திர ஒலியைக் கேட்டு அங்கே போனான்.. அக்குடிசையில் அவன் கண்ட காட்சி அவனை ஆச்சரியத்துடன் கூடிய ஆனந்தப் பரவசத்தில் ஆழ்த்தியது..

அங்கே யாதவாச்சாரியாரின் பூஜையை ஏற்று அருள் பாலித்துக் கொண்டிருந்த அரங்கனின் சிலையை குமார கம்பண்ணா கண்டான்..

"அரங்கனின் சிலை இக்குடிசையிலா..? ஆச்சரியமாக உள்ளதே.."

அவரின் குரலில் திரும்பிய யாதவாச்சாரியார் சினம் கொண்டு உறுமினார்..

"யார் நீ..? சுல்தானின் படைவீரனா..?"

"சுல்தானா..?"

திருமலையின் வனப்பகுதியில் அரங்கனின் சிலை குடிசையில் கோவில் கொண்டுள்ளது... அதற்கான பூஜைகளை நடத்திக் கொண்டிருப்பவர் மனநிலை தவறியவர் என்பதில் குமார கம்பண்ணா திகைப்படைந்தான்..

மனநிலை தவறிய நிலையிலும் அரங்கனுக்கான தினப்படி பூஜைகளைச் செய்து கொண்டிருந்த அந்த வயோதிகரைக் கண்டு அவன் மனம் உருகியது.. கண்கள் கலங்கின..

குடிசையை விட்டு வெளியேறி வந்தவன்.. சிந்தனையுடன் நடந்தான்.. அரங்கனின் சிலையை விட்டு நகர அவனால் இயலவில்லை.. என்ன செய்வது என்று அவன் தேங்கி நின்ற போது.. சலசலத்த குரல்களின் கலவையொலி அவன் காதுகளில் விழுந்தது..

"வனத்தின் அனைத்துப் பகுதிகளிலும் தேடி விட்டோம்.. யாதவாச்சாரியைக் காணோமே.."

"அரங்கனின் சிலை எங்கே..?"

இந்தக் குரல்களில் குமார கம்பண்ணனை.. கடந்து சென்ற குழுவினரை அவன் நிறுத்தினான்..

"நீங்களெல்லாம் யார்..? எங்கிருந்து வந்துள்ளீர்கள்..?"

"தாங்கள் யார் ஐயா..?"

"நான் விஜயநகரப் பேரரசின் இளவரசன் குமார கம்பண்ணன்.."

"இளவரசே..! எம்மைக் காப்பாற்றுங்கள்.."

திருவரங்கத்தின் குழுவினர் கரையுடைந்த வெள்ளமாக அவர்கள் பட்ட இன்னல்களைச் சொல்லிப் புலம்பினார்கள்..

"அரங்கன் குடி கொண்டிருந்த திருவரங்கத்தில் அவனது சிலையை சுல்தானிடமிருந்து காக்க வழியின்றி.. அரங்கனின் மீது ஆழ்ந்த பக்தி கொண்டிருந்த யாதவாச்சாரியாரிடம் அரங்கனின் சிலையைக் கொடுத்துத் திருமலையின் கோவிலில் ஒப்படைக்க ஆணையிட்டோம்.. அரங்கனின் சிலையுடன் வந்த யாதவாச்சாரியார் திருவரங்கத்திற்கு திரும்பவே இல்லை.. திருப்பதியின் கோவிலுக்கு அரங்கனின் சிலை வந்தடைய வில்லை என்ற செய்தியும் வந்துள்ளது.. நாங்கள் அரங்கனின் சிலையைத் தேடித் திருமலைக்கு வந்துள்ளோம்.. இளவரசே..!"

குழுவினரில் தலைமை தாங்கி வந்தவர் சொன்னதைக் கேட்ட குமார கம்பண்ணா..

"இங்குதான்.. சற்றுத் தொலைவில் உள்ள ஓர் குடிசையில் அரங்கனின் சிலைக்கு வழிபாடு நடப்பதைக் கண்டேன்.. அந்த பூஜையை நடத்திக் கொண்டிருந்தவர் மனநிலை பிறண்ட நிலையில் பைத்தியக்காரரைப் போல காட்சி தந்தாரே.." என்று கூறினான்..

"என்னது..?..!"

"அரங்கனின் சிலை இங்குள்ளதா..?"

"யாதவாச்சாரிக்கு பைத்தியம் பிடித்து விட்டதா..? பெருமாளே.."

"அதனால்தான் அவர் திருவரங்கத்திற்கு திரும்ப வில்லையா..?"

குழுவினர் தங்களுக்குள் பேசியபடி குமார கம்பண்ணாவின் பின்னால் ஓடினார்கள்.. குடிசைக்குள் இருந்த யாதவாச்சாரியார் அவர்களைக் கண்டதும்..

"வந்து விட்டீர்களா..? இதோ அரங்கனின் சிலை.. இவனுக்கான தினப்படி பூஜைகளை குறைவின்றி நிறைவேற்றி விட்டேன்.. இனி நீங்கள் தொடருங்கள்.." என்று கூறியபடி அரங்கனின் சிலையின் முன்னால் நெடுஞ்சாண்கிடையாக விழுந்தார்..

"யாதவாச்சாரி..!"

குழுவினர் அவரை எழுப்ப முயன்றபோது அவரின் உயிர் அவரது உடலை விட்டுப் பிரிந்திருந்தது..

உயிரைக் கொடுத்தும் அரங்கனின் சிலையைக் காப்பார் என்ற நம்பிக்கையைக் காப்பாற்றி விட்டு யாதவாச்சாரியர் மேலுலகம் சென்று விட்டார்..

குமார கம்பண்ணாவின் இதயம் அதிர்ந்தது... தீவிர பக்தரான யாதவாச்சாரியாரின் மறைவில் அவன் கலங்கினான்..

அரங்கனின் அடியாருக்கு செய்ய வேண்டிய மரியாதைகளைக் குறைவற அவருக்குச் செய்து அடக்கம் செய்துவிட்டு குமார கம்பண்ணனும்.. திருவரங்கத்தின் குழுவினரும் அரங்கனின் சிலையுடன் திருப்பதியின் கோவிலுக்குச் சென்றார்கள்..

அங்கே அரங்கனின் சிலையை தனி கர்ப்பக் கிரகத்தில் வைத்து வழிபட்டு விட்டு.. திருவரங்கத்தைச் சேர்ந்தவர்கள் திருவரங்கத்துக்கு திரும்ப.. குமார கம்பண்ணாவும் தனது நாட்டுக்குத் திரும்பினான்..

அவனால் திருமலையில் அவன் கண்ட நிகழ்வுகளை மறக்க முடியவில்லை.. அரங்கனின் சிலையை திருவரங்கத்தில் பிரதிஷ்டை செய்யாமல் அவன் மனம் அமைதி கொள்ளாது என்பது புரிந்துவிட.. அரங்கனின் சிலையை திருவரங்கத்தில் பிரதிஷ்டை செய்தே தீருவேன் என்று அவன் சபதம் செய்தான்..

மதுரையில் சுல்தானின் ஆட்சியில் அவதியுற்ற மக்கள் அடைக்கலம் தேடி அண்டை நாடுகளுக்கு குடி பெயர்ந்தார்கள்.. அவ்வாறு விஜயநகரத்தில் குடியேறிய மக்கள் மதுரா நகரில் மீனாட்சியம்மனின் ஆலயம் பூட்டி வைக்கப் பட்டிருப்பதைச் சொல்லிப் புலம்பியதில் புக்கராயர் தன் மகன் குமார கம்பண்ணனுக்கு சுல்தானை எதிர்த்துப் போர் புரியச் செல்லும்படி ஆணை பிறப்பித்தார்.. அதை ஏற்றுக் கொண்ட குமார கம்பண்ணன் மதுரையை மீட்டு.. மீனாட்சியம்மனின் கோவில் கதவுகளைத் திறந்து.. அம்மனையும் சொக்கநாதரையும் மக்கள் தரிசிக்க ஆவன செய்வேன் என்ற மறு சபதத்தையும் எடுத்தான்..

அதைக் கேட்ட மக்கள் ஆரவாரம் செய்தனர்..

குமார கம்பண்ணன் சொல்லச் சொல்ல இந்தச் செய்திகளைக் கேட்டுக் கொண்டிருந்த மைதிலி மெய் சிலிர்த்தாள்..

“கேள் மைதிலி.. மாலிக்காபூர் மதுரையைத் தாக்கிப் பெருஞ்செல்வத்துடன் சென்றான்.. அன்றிலிருந்தே தில்லியின் பார்வை மதுரையின் பக்கம் திரும்பி விட்டது.. தகுந்த தருணம் பார்த்து அரியணைக்கு அடித்துக் கொண்ட சுந்தரபாண்டியனையும், வீரபாண்டியனையும் விரட்டி விட்டு மதுரையை தில்லி சுல்தானத்தில் 23வது மாநிலமாக அறிவித்தார்கள்.. ஜலாவுதீன் ஹசன் ஷா மதுரையின் நிர்வாகியாக நியமிக்கப் பட்டார்.. முகம்மது பின் துக்களக்கின் ஆட்சிக் காலத்தில் மதுரை தனி நாடாகியது.. மதுரையில் சுல்தான்களின் ஆட்சி ஆரம்பமானது.. இப்போது உள்ள சிக்கந்தர் ஷா.. மதுரையின் எட்டாவது சுல்தான் ஆவான்.. இவர்களின் ஆட்சியில் கோவில்கள் இடிக்கப்பட்டன.. தெய்வச் சிலைகளை இவர்களிடமிருந்து காக்க இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள்.. தெய்வச் சிலைகளை மண்ணில் புதைத்து வைத்தார்கள்..”

“கடவுளே..!”

“நமைக் காக்கும் கடவுள்கள் குடியிருக்கும் கோவில்களைத்தான் இவர்கள் இழுத்து மூடியுள்ளனர்..”

“இதற்கு ஒரு விமோசனமே இல்லையா..?”

“அதைத் தேடித்தான் கிளம்பி வந்துள்ளேன்.. விஜயநகரத்தில் அடைக்கலம் புகுந்த மதுரை மக்கள் தாங்கள் பட்ட இன்னல்களைச் சொல்லி அழுத போது கங்காதேவி ரௌத்ரம் கொண்டாள்.. நீங்கள் வாளேந்திப் போர்க்களம் செல்கிறீர்களா.. இல்லை.. நான் செல்லட்டுமா என்று கேட்டாள்..”

"உண்மையாகவா..?"

வியப்புடன் கேட்டாள் மைதிலி.. ஒரு பெண் வாளேந்திப் போர்க்களம் புகுவேன் என்று சொன்னாளா..?

"ஆம் மைதிலி.. அவள் போர்த்திறன் கொண்டவள்.."

"எப்படி..?" மைதிலியின் வியப்பு மிகுதியானது..

"முறையான போர் முறைகளைக் கற்றுத் தேர்ந்திருக்கிறாள்.. அவள் தலைமையில் பெண்கள் ஆயுதப் பயிற்சி எடுத்து வருகிறார்கள்.. உனக்கு இது தெரியாதா..?"

"தெரியாது.. ஆயுதப் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற பெண்கள் போர்க்களம் புகுவார்களா..?"

"ஆம்.. லட்சக் கணக்கில் உள்ள சுல்தானின் படையை எதிர்க்க ஆண், பெண் வேறுபாடின்றி நாம் அணி திரண்டாக வேண்டும்.."

"என்ன சொன்னீர்கள்..?"

"நாம் அணி திரண்டாக வேண்டும் என்று சொன்னேன்.. ஏன்..? தவறுதலாக ஏதும் கூறி விட்டேனா..?"

"இல்லை சரியாகத்தான் கூறியுள்ளீர்கள்.."

மனம் நெகிழக் கூறினாள் மைதிலி.. நாம் என்று மைதிலியையும் அவன் இணைத்துக் கொண்ட பாங்கில் அவள் மனம் அமைதியடைந்தது..

இனி அவள் செல்ல வேண்டிய பாதை எதுவென்பதை அரங்கனும் அவனது தங்கையான

மீனாட்சியம்மனும் அவளுக்கு உரைத்து வழிகாட்டி விட்டதைப் போல அவள் உணர்ந்தாள்..

குமார கம்பண்ணன் இரு சபதங்களை எடுத்திருக்கிறான்..

முதல் சபதம்.. மதுரையை வென்று மீனாட்சியம்மனின் ஆலயக் கதவுகளின் தாழ் திறந்து ஆலய வழிபாட்டிற்கு வகை செய்வது..

அடுத்த சபதம்.. திருவரங்கத்தின் அரங்கனின் சிலையை திருப்பதியிலிருந்து கொண்டு வந்து... திருவரங்கத்தின் கோவிலில் பிரதிஷ்டை செய்வது..

இந்த இரண்டு சபதங்களையும் செய்தவனின் நிழலாக போர்க்களத்திலும் இணைபிரியாமல் அவனுடன் துணை நிற்கிறாள் கங்கா தேவியெனும் போது.. மைதிலி அவளுக்கான சிறு துரும்பையாவது கிள்ளிப் போட வேண்டாமா..?

"இப்போது சொல்.. உனது காதலை எண்ணிப் பார்க்கும் நிலையிலா நான் இருக்கிறேன்..? நான் கடமையாற்றும் சபதங்களை மேற்கொண்டவன் மைதிலி.. அவற்றை முடிப்பது மட்டுமே எனது பணி.."

"ஆகட்டும்.."

மனப்பூர்வமாக இதைச் சொன்னாள் மைதிலி.. குமார கம்பண்ணனின் விழிகள் விரிந்தன..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



16

நீ பேச நினைப்பதையெல்லாம்.. நான் ஏன் கேட்க வேண்டும்..?

'இவ ஒரு முடிவோடதான் வந்திருக்கா..'

தாமோதரனின் நெற்றி சுருங்கியது.. அந்த முடிவு என்னவாக இருக்கக் கூடுமென்றுதான் அவனுக்கு ஒரு மண்ணும் புரியவில்லை..

'கொடுமடா சாமி.. ஜி.எம் கூட பேச்சு வார்த்தை நடத்தியே தீருவேன்னு செக்கரட்டரி மல்லுக்கு நிற்கிறா.. எந்தக் கம்பெனியிலேயாவது இது போல நடந்து தொலைக்குமா..?'

இதற்காகவே சித்தார்த்தனை வீடு கட்டி அடிக்க வேண்டும் என்று அவனுக்குள் ஆத்திரம் மூண்டது..

'ஒரு வயலெட்டையே இந்தக் கம்பெனியில தாக்குப் பிடிக்க முடியல.. இதில இவ நூறு வயலெட்டுக்கு சிக்குவலா இருப்பா போல இருக்கே..'

அவளுக்கு மந்திரித்து விட வேண்டும் என்று மனதுக்குள் முடிவு கட்டினான் தாமோதரன்..

'இவளுக்கு வேப்பிலை அடிக்காம அடங்க மாட்டா..'

அதற்கான நந்நாளாக எந்நாளையும் அவன் குறிக்க வில்லை.. அவன் வேப்பிலை அடிக்க வேண்டும் என்று

முடிவு பண்ணி விட்டால் எல்லா நாள்களும் அவனுக்கு நல்ல நாள்கள்தான்..

'இருக்கு உனக்கு..' கருவிக் கொண்டான்..

அவன் மனதிற்குள் ஓடும் வன்மங்களைப் பற்றிய எந்தக் கவலையும் இல்லாதவளாக யாமினி இருந்ததில் அவனுடைய வன்மம் அதிகமானது..

'திமிர்..?'

"இல்லை சார்.."

அவன் மனதில் ஓடும் எண்ணங்களை இழுத்துப் பிடித்து நிறுத்திப் படித்து விட்டுச் சொல்கிறவளைப் போல யாமினி சொல்லி வைத்ததில் அவனுக்கு ஆச்சரியமெல்லாம் ஏற்படவில்லை..

'இவளே யட்சிணி..! தொண்டைக்குழியில இருக்கிற எண்ணத்தத் தோண்டி எடுக்கிறதுக்கு இவளுக்கு சொல்லியா தரனும்..?'

கால்மேல் கால் போட்டு தோரணையாய் அமர்ந்து..

"என்ன இல்லை சார்..?" என்று புருவங்களை உயர்த்தினான் தாமோதரன்..

"நீங்க நினைக்கிறதைப் போல இல்லை சார்.." அவளும் விடாப்பிடியாய் பதில் சொன்னாள்..

"நான் என்ன நினைச்சேன்னு உங்களுக்கு எப்படித் தெரியும்..?"

"தெரியும் சார்.."

"அதுதான் எப்படி..? வெத்தலையில மை தடவி ஜோசியம் பார்த்தீங்களா..?"

"இதுக்கெல்லாம் ஜோசியம் பாக்கணுமா சார்..? உங்க மனசில என்ன நினைப்பீங்கன்னு என்னால கண்டு பிடிக்க முடியாதா..?"

இயல்பாக தலை சரித்தவளை புருவங்களை நெரித்தபடி முறைத்து வைத்தான் தாமோதரன்..

"நீங்க வேலைக்கு வந்து எத்தனை நாளிருக்கும்..?" மட்டம் தட்டும் விதத்தில் கேட்டும் வைத்தான்..

"நாளில்லை சார்.. மாதங்கள்.." அதற்கும் பதில் சொன்னால் யாமினி..

"கிரேட் மிஸ்டேக்கக் கண்டு பிடிச்சிட்டிங்க.. இரண்டு மாதம் வேலை செஞ்சா அது மாதங்களா ஆகிருமா..? கெட்டிக்காரங்கதான்.. பிழைச்சுக்குவீங்க.."

"தேங்க் யூ சார்.."

"இந்தத் திமிரைக் கொஞ்சம் மூட்டை கட்டி கடலில் போடுங்க.. எரிச்சல் வருது.. நேத்து இந்நேரம் வேலைக்குச் சேர்ந்துட்டு.. என்னவோ காலம் காலமா என்கூடப் பழகினதப் போல என் மனச கண்டு பிடிக்க முடியாதான்னு கேட்கறிங்க..?"

சொல்லிக் கொண்டே வந்த தாமோதரன்.. 'காலம்.. காலமாக..' என்ற அவனது வார்த்தையில் தலை நிமிர்ந்து அவனையே இமைக்காமல் பார்த்த யாமினியின் பார்வையில் தடுமாறிப் போனான்..

இது.. இது.. காலம்.. காலமாக அவன் அறிந்த பார்வை போல இருக்கிறதே.. ஏன்..?

'இவ வில்லங்கம் பிடிச்சவ..'

அவசரமாகப் பார்வையைத் திருப்பித் தப்பித்தான் தாமோதரன்..

"காலம் காலமா பழகிட்டா மட்டும்.. பழகின வங்களோட மன உணர்வுகளை நாம புரிஞ்சுக்கிறோமா என்ன..?"

அதற்கும் சுதாரித்து தன்னிலைக்கு திரும்பி விட்ட யாமினி கேட்டாள்..

"என்ன சொல்கிறீங்க..?" தாமோதரனின் புருவங்கள் உயர்ந்தன..

"எம்.டி சாரோட காலம் காலமா நீங்க பழகி என்ன பிரயோசனம்..? அவர் மனச புரிஞ்சுக்காம இங்கே வந்து உட்கார்ந்துட்டிங்களே.."

யாமினியின் குற்றச்சாட்டில் தாமோதரனுக்கு கோபம் வந்துவிட்டது..



17

புண்பட்ட மனங்களுக்கு.. புகலிடமே ஆலயங்கள்தான்..

காஞ்சி மாநகரம் விழாக்கோலம் பூண்டிருந்தது.. வைகாசி விசாகத்திருவிழா படு விமரிசையாக நடந்து

கொண்டிருந்தது.. அதிகாலையில் பெருமாள் கோவிலில் இருந்து உற்சவரின் புறப்பாடு தொடங்கியதும்.. பக்தர்களின் கூட்டம் ஆரவாரத்துடன் நகரத் தொடங்கியது.. ஆழ்வார் பிரகார வழிபாட்டைக் கண் குளிரக் கண்டு கன்னத்தில் போட்டுக் கொண்ட மைதிலியின் மனதில் திருவரங்கத்தின் அரங்கனும் இதைப் போல உற்சவ மூர்த்தியாக உலா வரும் திருநாள் என்று வரும் என்ற ஏக்கம் எழுந்தது..

"இல்லத்திற்குத் திரும்பலாமா..?"

கோசலையின் வினாவிற்கு சம்மதமாக தலையசைத்த மைதிலி.. தோழியுடன் இணைந்து வீதியில் நடக்கத் துவங்கினாள்..

"மகாராணி கங்காதேவி உன்மீது ஆழ்ந்த அபிமானம் கொண்டுள்ளார்களாமே..? காஞ்சியே இதைப் பற்றித்தான் பேசிக் கொள்கிறது.." பொறாமையுடன் கேட்டாள் கோசலை..

'ஆனால் நான் மகாராணியின் கணவன் மீதல்லவா ஆழ்ந்த அபிமானம் கொண்டுள்ளேன்..' மைதிலியின் மனம் கசிந்தது..

"ம்ம்ம்.." என்று வெறுமனே முணுமுணுத்து வைத்தாள்..

"கொடுத்து வைத்தவளடி நீ.." கோசலை நொடித்தாள்..

'இல்லை.. கோசலை.. கொடுத்து வைத்தவள் நானல்ல..' மைதிலியின் மனம் அரற்றியது..

“உனக்கான மணமகனைத் தேடும்படி அரசருக்கு மகாராணியே ஆக்ஞை பிறப்பித்துள்ளாராமே..” கோசலை தொடர்ந்து சொன்னதில்..

“என்னது..?” என்று திடுக்கிட்டாள் மைதிலி..

“உனக்கு இது தெரியாதா..? போகுது போ.. இன்று உனைப் பெண் பார்க்க மாப்பிள்ளை இல்லத்திலிருந்து வருகை தரப் போகிறார்கள் என்ற விவரமாவது உனக்குத் தெரியுமா.. தெரியாதா..?”

“எவர் உனக்கு இத்தகவலைச் சொன்னது..?”

“உன் அண்ணிதான்.. வேறு எவர் சொல்லு வார்களாம்.. அறுசுவையுடன் கூடிய பலகாரங்கள் உன் இல்லத்தின் சமையல் கூடத்தில் தயாராகிக் கொண்டிருப்பதால் வரும் வாசனை வீதியையே ஈர்க்கிறதே.. இல்லத்தை ஆயத்த நிலையில் தயார் படுத்துவதற்காகத்தானே உனது அண்ணி அப்போதே கோவிலுக்கு வந்து தரிசனம் செய்து விட்டு வந்தார்.. அறியாயா நீ..?”

‘அறியேனே..’ பரிதவித்தாள் மைதிலி..

“மணமகனை நமது மன்னர் குமார கம்பண்ணனே தேர்ந்தெடுத்துள்ளாராம்.. அவரும் சிற்றரசர் பரம்பரையில் பிறந்து வளர்ந்த செல்வந்தராம்.. குதிரைகள் பூட்டிய பல ரதங்கள் அவருடைய இல்லத்தில் உண்டாம்.. கடை வீதியில் உள்ள அங்காடிகளில் பல அவருக்குச் சொந்தமானதாம்.. ஆற்றுப் பாசன வயல்களையும்..

தோப்புக்களையும் உடையவராம்.. அரசர் அருமையான மணமகனாகத்தான் உனக்குத் தேர்வு செய்திருக்கிறார்.."

கோசலை சொல்லச் சொல்ல மைதிலியின் முகம் கல்லை விடக் கடினமானதாக இறுகிப் போனது.. வீதியின் முனையில் திரும்பிம்போதே.. மைதிலியின் இல்ல வாசலில் குதிரைகள் பூட்டிய ரதங்கள் நின்று கொண்டிருப்பதை அவர்கள் கண்டு விட்டனர்..

"எத்துனை ரதங்கள்..!" கோசலை பிரமித்தாள்..

"அத்துனை ரதங்களும் வேலைப்பாடுகளுடன் கூடிய விலையுயர்ந்த ரதங்கள் மைதிலி..! நீ அதிர்ஷ்டக்காரி..!"

அந்த அதிர்ஷ்டக்காரி பதில் ஏதும் உரைக்காமல் இல்லத்தை நோக்கி நடந்தாள்.. வாசலிலேயே காத்திருந்த மலர்க்கொடி நாத்தனாரின் கரம் பற்றி.. மேன்மாடத்திற்கு இழுத்துக் கொண்டு போனாள்..

"பட்டாடைகளை உடுத்தி வைர ஆபரணங்களை அணிந்து கொள்.. கூந்தலைப் பின்னி.. மலர் சூட்டு.. துரிதமாக ஆயத்தமாகு.."

"எதற்காக அண்ணி..?"

"அதைத் தெரிந்து என்ன செய்யப் போகிறாய்..? ஆணையிட்டதை மட்டும் செய்.. போதும்.."

மலர்க்கொடி கடுமையான குரலில் அதட்டினாள்.. மனம் கொதிக்கக் கொதிக்க.. அண்ணியின் ஆணையின் படி ஆயத்தமானாள் மைதிலி.. சர்வாலங்கார பூஷிதையாய்

கண் முன்னால் நின்றவளின் பேரெழிலில் மலர்க்கொடியின் கண் நிறைந்தது..

"என் கண்ணே..! எத்துணை அழகாக உள்ளாய்.."

தான் வளர்த்த மகளின் கன்னம் தொட்டு திருஷ்டி கழித்தாள் அவள்..

அண்ணியின் தாய்ப்பாசத்தில் மைதிலியின் மனம் வலித்தது.. தந்தை, தாயாய் வளர்த்த தமையனுக்கும் அண்ணிக்கும் துன்பம் தர வேண்டியிருக்கிறதே என்று துயர் கொண்டாள் அந்த பேதை..

வீதியில் ஆரவார கரகோசம் ஒலித்தது.. ஓடிச் சென்று உப்பரிகையில் எட்டிப் பார்த்தாள் மலர்க்கொடி..

"மன்னரும் கங்காதேவியும் வந்து விட்டார்கள்.." பரபரத்தாள்..

'எதற்காக வந்திருக்கிறான்..? என்னை இன்னொருவன் மனையாட்டியாக மனதில் நினைத்துப் பார்வையிடுவதை.. பார்வையிடுவதற்காக வந்திருக்கிறானா..?' மைதிலியின் மனம் கசந்தது..

"உனக்காக அரசரும் கங்காதேவியும் எத்துணை பிரயத்தனங்களை மேற்கொள்கின்றனர் என்பதை எண்ணிப்பார்.. காஞ்சியே பிரமிக்கிறது.. கங்காதேவியின் அபிமானத்திற்கு நீ ஆளாகியுள்ளாய் என்பதில் பொறாமை கொள்கிறது.. மக்குப் பெண் போல கண்டதையும் எண்ணி மனதைப் போட்டு உழப்பிக் கொள்ளாமல் கண்ணெதிரே உள்ள வளமான வாழ்க்கையை வாழக் கற்றுக் கொள்.."

நாத்தனாருக்கு உபதேசம் செய்துவிட்டு.. மலர்க் கொடி வருகை தந்திருக்கும் அரசனையும், அரசியையும் வரவேற்க விரைந்தோடினாள்.. சற்றுப் பொழுதில்.. மேன் மாடத்திற்கு வந்த மைதிலியின் தோழியர் அவளுக்கு வாய்க்கவிருக்கும் மணமகனின் அழகைப் பற்றி வர்ணனைகளைச் செய்து வியந்தார்கள்..

"சிவந்த தோற்றம்.. செதுக்கி வைத்ததைப் போல நாசி.. எத்துனை எழில் தெரியுமா..?"

"ஆம் காஞ்சனை..! நானும் கண்டேன்.. கம்பீரமான தோற்றத்துடன் உள்ள கட்டழகராக உள்ளார்.."

"நன்றாகச் சொன்னாய்.. செல்வந்தராக இருப்பவர்கள் அழகுடனும் இருந்து விட்டால் வேறு என்ன வேண்டும் நமக்கு..?"

"நமக்கு என்று நம் அனைவரையும் இணை கூட்டுகிறாயே கோசலை.. வந்திருக்கும் மணமகன் மைதிலியை மட்டுமே பெண் பார்த்து மாலை சூட்டப் போகிறார்.. நம் அனைவரையும் பெண் பார்த்து மாலை சூடப் போவதில்லை.."

"இதை மனக்குறையுடன் கூறுவதைப் போல உள்ளதே..."

"அந்தக் குறை உனக்கு இல்லையோ..?"

தோழிகளின் அந்தரங்கப் பேச்சுக்களில் மைதிலியின் மனம் லயிக்கவில்லை.. சற்றுப் பொழுதில் மைதிலியை கூடத்திற்கு அழைத்து வரும்படி மலர்க்கொடி ஆணையிட்டதாக முல்லைக்கொடி ஓடி வந்தாள்..

"அதற்காகத்தானே காத்துக் கொண்டிருக்கிறோம்.." என்ற தோழிகள்... மைதிலியை அழைத்துச் சென்று மணமகனின் முன்னால் நிறுத்தும் சாக்கில் அவனது அழகை அருகாமையில் நின்று பார்வையிடலாமே என்ற அபிலாசையுடன் படிகளில் இறங்கினார்கள்..

கூடத்தில் நடுநாயகமாக அமர்ந்திருந்த குமார கம்பண்ணனின் பார்வை உயர்ந்தது.. அதே தருணத்தில் படிகளில் இறங்கிக் கொண்டிருந்த மைதிலியின் பார்வையும் உயர்ந்து குமார கம்பண்ணனின் பார்வையைச் சந்தித்தது.. அவளது அலங்காரத்தில் அவன் விழிகளில் தோன்றிய மின்னலில் மைதிலியின் மனம் அழுதது.. சின்னஞ்சிறு பெண்ணாக.. மங்கைப் பருவத்தில் அடியெடுத்து வைத்திருந்த துருதுருப்பான அந்த சுட்டிப் பெண்ணின் சுடர் விடும் பேரழகில் பிரமித்தான் குமார கம்பண்ணன்..

அதைக் கண்டு உணர்ந்தபடி படிகளில் இறங்கி வந்த மைதிலி.. குமார கம்பண்ணனின் அருகிலிருந்த மாப்பிள்ளையைப் பார்க்காமல் குமார கம்பண்ணனை மட்டுமே பார்த்து வைத்தாள்..

"அரசரின் அருகில் இருப்பவர்தான் உன்னை மணம் புரிய வருகை தந்திருக்கும் மாப்பிள்ளை.. நன்றாகப் பார்த்துக் கொள்.."

காஞ்சனை மைதிலியின் காதுகளில் கிசுகிசுத்தாள்.. மாப்பிள்ளையை மைதிலி பார்க்கவில்லை.. அவளுடைய

தோழிகள்தான் உற்று உற்றுப் பார்த்து விட்டு தங்களுக்குள் முணுமுணுத்து வயிறு எரிந்தார்கள்..

"நிலம் பார்த்த பார்வையை உயர்த்தவேயில்லை.. மிக அடக்கமான பெண்ணாக இருக்கிறாள்.."

மணமகனின் இல்லத்தைச் சேர்ந்த முதிய பெண்மணி ஒருவர் திருப்தியுடன் கூறினாள்.. பார்த்திபன் அதில் பெருமை கொண்டான்.. மலர்க்கொடி முகம் மாறாமல் இருக்கப் பிரயத்தனப் பட்டாள்.. அவளுக்குத்தானே தெரியும், அவளுடைய அடக்கம் மிகுந்த நாத்தனார் எதனால் விழிகளை உயர்த்தி மாப்பிள்ளையைப் பார்க்காமல் நிலம் நோக்கி நிலத்தினுள் மறைந்திருக்கும் புதையலைத் தேடிக் கொண்டிருக்கிறாள் என்பது..

"விழியுயர்த்தி மாப்பிள்ளையைப் பார்.."

நாத்தனாரின் காதருகே குனிந்து சிடுசிடுத்தாள்.. மைதிலி நகர்ந்தாள்..

'என்ன செய்யப் போகிறாள்..?' மலர்க்கொடி மனம் பதைத்தாள்..

அருகிலிருந்த குத்துவிளக்கின் சுடரில் தனது சேலை முந்தானையை படிய விட்ட மைதிலி.. அறியாப் பெண்ணைப் போல விழியுயர்த்திய அதே பொழுதில் அவளது சீலை பற்றியெரிந்தது..

"மைதிலி.."

தோழிகள் அலறினார்கள்.. பார்த்திபன் பதறி எழுந்து தங்கைக்கு அருகில் ஓடினான்.. அவனுக்கு முன்னால்

இரண்டே எட்டில் மைதிலியை அணுகிய குமார கம்பண்ணன்.. சற்றும் தயங்காமல் எரிந்து கொண்டிருந்த தீயின் ஜ்வாலையை தனது கையில் இறுக்கிப் பிடித்து அணைத்தான்.. அவன் கரங்களுக்குள் இருந்த மைதிலியின் சீலையின் முந்தானை கருகியிருந்தது.. மைதிலி மூர்ச்சையாகி தரையில் சரியப் போனாள்.. குமார கம்பண்ணனின் கரம் அவளைத் தாங்கிக் கொண்டது..

"பஞ்சணையில் கிடத்துங்கள்.."

"முகத்தில் நீர் தெளியுங்கள்.."

"சாளரங்களைத் திறந்து விடுங்கள்.. காற்று வரட்டும்.."

"விசிறியினால் விசிறி விடுங்கள்.."

பலகுரல்களின் கலவையொலி மைதிலியைச் சூழ்ந்தபோது அவள் ஆழ்மயக்கத்தின் உள்ளே பயணித்துக் கொண்டிருந்தாள்..

அவள் கண் விழித்துப் பார்த்தபோது.. கூடம் காலியாக இருந்தது..

"மாப்பிள்ளை வீட்டார் சென்று விட்டார்கள்.." வெறுப்புடன் சொன்னாள் மலர்க்கொடி..

அவளது கோபம் கொண்ட பார்வை மைதிலியைத் துளைத்தது.. அவள் அண்ணியின் பார்வையைத் தவிர்த்தாள்..

"மணப்பெண்ணின் பட்டுச்சீலையின் முந்தானையில் தீப்பிடிப்பது அபசகுனமாம்.. மாப்பிள்ளை வீட்டார் கூறி

விட்டார்கள்.. வேறு மணமகனைத் தேடும்படி சொல்லி விட்டுச் சென்று விட்டார்கள்.."

"செல்லட்டும்.." நிம்மதியுடன் சொன்னாள் மைதிலி..

"இப்படிப்பட்ட மணமகனின் இல்லத்தார் நமக்கு வேண்டாம்.."

"வேறு எப்படிப்பட்ட மணமகனும்.. இல்லத்தாரும் உனக்கு வேண்டும்..?"

கத்தியின் கூர்மையோடு வந்த மலர்க்கொடியின் கேள்வியில் மௌனமானாள் மைதிலி.. அன்று மாலையில் குமார கம்பண்ணன் அவளைக் காண வந்தான்.. விழி மூடிச் சோர்வாக படுத்திருந்த மைதிலியின் உள்ளுணர்வின் உணர்த்துதலில் அவள் கண் திறந்து பார்த்தாள்.. அவளையே பார்த்த வண்ணம் அருகாமையில் நின்றிருந்தான் குமார கம்பண்ணன்.. தீர்க்கமான மைதிலியின் பார்வையில் அவனது புருவங்கள் சுருங்கின..

"ஏன் இவ்வாறு செய்தீர்கள்..?"

என்னவோ மாபெரும் குற்றத்தை அவன் செய்து விட்டதைப் போல அவள் வினவியதில் அவன் அதரங்களை மடித்துக் கடித்தான்..

"என்ன செய்தேன்..?"

நிதானமாக அவனது வினாவில் மைதிலி உக்கிரமானாள்..

"எனக்காக மாப்பிள்ளை பார்த்தீர்களா..?"

அவளது கோபத்தின் காரணத்தைப் புரிந்து கொண்ட குமார கம்பண்ணா அமைதியாக அவளைப் பார்த்தான்.. அந்த அமைதியில் மைதிலியின் உக்கிரம் அதிகமானது..

"ஆம்.."

ஒற்றை வார்த்தையில் பதில் சொன்னான் குமார கம்பண்ணா..

"ஹ..! மதுரையை மீட்டு.. மீனாட்சியம்மனின் ஆலயத்தை திறந்து வைத்து.. திருவரங்கத்தில் அரங்கனின் சிலையை பிரதிஷ்டை செய்யும் சபதங்களை செய்துள்ள காஞ்சியின் அரசர்.. கடமையை மறந்து.. மாப்பிள்ளை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளாரே.. இதுவா அவரது பணி..?"

மைதிலியின் துணிவில் அவளையே இமைக்காமல் பார்த்து வைத்தான் குமார கம்பண்ணன்..

"இப்படிக் கேள்வி கேட்கும் துணிவை எவர் உனக்கு அளித்தது..?"

"நிச்சயமாக தாங்கள் அளிக்கவில்லை அரசே..!"

"உனைக் குறித்து மலர்க்கொடி கவலை கொண்டுள்ளாம்.. கங்காதேவியிடம் அக்கவலையை பகிர்ந்து கொண்டாளாம்.. உனக்காக மாப்பிள்ளை தேடும்படி கங்காதேவி என்னைக் கேட்டுக் கொண்டாள்.. அவளுக்காக நான் இப்பணியை மேற்கொண்டேன்.."

"ஓ..! தங்களின் மனைவி உத்தரவிட்டால் தாங்கள் எவரை வேண்டுமானாலும் விலை பேசி விற்று விடுவீர்கள்.. அப்படித்தானே..?"

"மைதிலி..!"

விழிகள் சிவக்க.. இடையிலிருந்த உடைவாளை உருவி மைதிலியின் கழுத்தருகே வீசியபடி உறுமினான் குமார கம்பண்ணன்.. ரௌத்ரமான அவனது தோற்றத்தில் மைதிலி தன்னையுமறியாமல் நடுநடுங்கிப் போனாள்.. அப்படியொரு ரௌத்ரத்தை அதுநாள்வரை அவனிடம் அவள் கண்டதில்லை..

அவளுடன் வாயாடும் வழிப்போக்கனாக.. சித்திரம் தீட்டும் ஓவியனாக.. யாழ் மீட்டும் இசைக் கலைஞனாக.. கானம் இசைக்கும் பாடகனாக.. ஆழ்ந்த பார்வையுடன் கூடிய ஆணழகனாக.. அவனைப் பல்வேறு தோற்றங்களில் கண்டு மயங்கியவளுக்கு.. அந்த ரௌத்ர தோற்றத்தைக் காண முடியவில்லை..

"எவரென்று நினைத்தாய்..? பாவம்.. சிறுபெண்..! அறியாத வயது.. மனதில் ஆசை கொண்டு விட்டாள்.. சொல்லித் திருத்தி விடலாம் என்று நினைத்தால் நீ வரம்பு மீறி பேச முனைகிறாயா..? வெட்டிச் சாய்த்து விடுவேன்.. நினைவிருக்கட்டும்.. நீ பேசிக் கொண்டிருப்பது விஜய நகரத்தின இளவரசனும்.. தொண்டை மண்டலத்தின் அரசனுமான குமார கம்பண்ணனிடம்.."

அவனுடைய கடுமையில் மைதிலியின் கண்கள் கலங்கிவிட்டன.. இமையோரம் வழிந்த கண்ணீருடன் அவளும் அச்சமின்றி அவனுக்குப் பதில் சொன்னாள்..

"நினைவிருக்கிறது அரசே..! தன்னை மனதார நேசிக்கும் பெண்ணிற்கு மணமகனைத் தேடிக் கொண்டு

வந்த தொண்டை மண்டலத்தின் அரசரிடம் பேசிக் கொண்டிருக்கிறேன் என்ற நினைவு எனக்கிருக்கிறது.."

"ஏன்..? மணமகனைக் கொண்டு வந்தாலென்ன..?"

"நல்லது.. இந்தக் கேள்விக்கு எனக்குப் பதில் தாருங்கள்.."

"என்ன கேள்வி.?"

"மகாராணி கேட்டுக் கொண்டதற்காக எனக்கு மாப்பிள்ளை பார்த்தீர்களே.. நான் கேட்டுக் கொண்டால் மகாராணிக்கு மாப்பிள்ளை பார்த்து விடுவீர்களா..?"

"ஏய்..!"

குமார கம்பண்ணனின் ரத்தமென சிவந்த விழிகளில் கொப்புளித்த சினத்தில் மைதிலி விம்மி அழ ஆரம்பித்தாள்.. அவள் மட்டும் அவனுடைய கோபத்தில் நடுக்கம் கொண்டு அழுகாமல் இருந்திருந்தால் குமார கம்பண்ணன் அவளைக் கொன்றிருப்பான்.. அவளுடைய கண்ணீரில் வாளேந்திய அவனது கை சற்றுத் தளர்ந்தது..

"கொன்று விடுங்கள் என்னை.. வாழவும் முடியாமல், சாகவும் வழி தெரியாமல் பிச்சியைப் போல சுற்றிக் கொண்டிருக்கும் எனக்குத் தங்களின் உடை வாளில் உயிர் விட்ட சந்தோசமாவது கிட்டட்டும்.."

"ஒரு பெண் பேசுகிற பேச்சையா நீ பேசினாய்..?"

"காதல் கொண்ட பெண்ணிற்காக மாப்பிள்ளை தேடிக் கொண்டு வரும் ஆண்மகனிடம் வேறு எப்படிப் பேசுவது..?"

"உன் காதலைத்தான் நான் ஏற்றுக் கொள்ள வில்லையே.."

"நீங்கள் ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணிப்பதால் மட்டும் என் காதல் காதலில்லையென்று ஆகி விடுமா..?"

"எந்நிலையைப் புரியாமல் பேசாதே.."

"புரிந்ததினால்தானே விலகி நிற்கிறேன்.. என் காதலை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று தங்களை நான் வற்புறுத்தவில்லையே.. சரித்திரத்தில் இடம் பெறப் போகும் சபதங்களை செய்துள்ளீர்கள்.. வரலாற்றை மாற்றி அமைக்கும் மகத்தான செயல்களை சாதிக்கப் போகிறீர்கள்.. அக்கடமைகளில் பிணைத்துள்ள உங்கள் முன்னே என் காதலை நான் வைப்பேனா..? விலகி நிற்பவளுக்கு மாப்பிள்ளை தேடிக் கொண்டு வந்து புண்படுத்துவது யார்..? தாங்கள்தானே..?"

"அதற்காக நீ எக்கேள்வியையும் கேட்டு விடுவாயா..?"

"வேறு வழியில்லை எனக்கு.. மகாராணி தங்களை மணந்திருக்கலாம்.. அதனால் தாங்கள் அவரின் கணவராக மாறியிருக்கலாம்.. நான் உங்களை என் மனதில் காதலனாக வரித்து விட்டேனே.. அதற்கான மரியாதையை தாங்கள் செய்யவில்லையே.. நான் தங்களின் மனைவியாக இல்லாமல் இருக்கலாம்.. ஆனால்.. தாங்கள்தான் என் கணவர்.. இதில் மாற்றமில்லை.."

"மைதிலி..."

குமார கம்பண்ணின் உடைவாள் மைதிலியின் கழுத்திலிருந்து விலகியது.. இடையில் உடைவாளைச் செறுகியவன் விதிர்த்து நின்றான்.. மைதிலியின் திடசித்தம் அவனை நிலை குலையச் செய்தது..

"வேண்டாம் அரசே..! மகாராணி கேட்டுக் கொண்டாலும்.. என் தமையனே கேட்டுக் கொண்டாலும்.. எனக்காக மாப்பிள்ளை பார்க்கும் பணியை தாங்கள் மேற் கொள்ள வேண்டாம்.. அது தகாது.."

குமார கம்பண்ணன் இமைமூடி நெடுமூச்செரிந்தான்.. மௌனமாக அறைவை விட்டு வெளியேறிவிட்டான்..

"என்ன சொல்லி மன்னரை திருப்பி அனுப்பி வைத்தாய்..?"

மலர்க்கொடியின் கோபத்திற்கு மைதிலி எந்த விதப் பதிலையும் சொல்லவில்லை.. மறுநாள் உடல்நிலை சற்றுத் தேறியிருப்பதாக பார்த்திபனிடம் சொல்லி விட்டு கங்காதேவியைப் பார்க்க அரண்மனைக்குச் சென்றாள்.. அவள் போனபோது கங்காதேவி பெண்களுக்கான போர்ப் பயிற்சியை பார்வையிட்டுக் கொண்டிருந்தாள்.. மைதிலியைக் கண்டதும் அவளுடைய உடல் நலனை விசாரித்தாள்..

"நலம்தான் மகாராணி..!"

மைதிலி பயிற்சியில் ஈடுபட்டிருந்த பெண்களைப் பார்த்தாள்.. அவளுக்கு வியப்பாக இருந்தது.. பெண்கள் ஆடலைக் கற்றுக் கொள்வதைப் பார்த்திருக்கிறாள்.. பாடலைக் கற்றுக் கொள்வதையும் பார்த்திருக்கிறாள்..

இன்னமும் நுண்ணிய பல கைவேலைகளை கற்றுக் கொள்வதையும் பார்த்திருக்கிறாள்.. இங்கானால் அனைத்தும் வித்தியாசமாக உள்ளதே.. பெண்கள் வாளேந்தி போர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்களே..

"என்ன பார்க்கிறாய்..?"

"இது புதிதாக உள்ளது மகாராணி.."

"எது..?"

"பெண்கள் வாளேந்தி போர் புரிவது.."

"வேறு வழியில்லை பெண்ணே..! சுல்தானை எதிர்ப்பதற்கான போதிய படைபலம் நம்மிடம் இல்லை.. போர் புரிய செல்பவனுக்கு பொருள் தேவை.. போரைச் சந்திப்பவன் தேவையான உணவுப் பொருள்களோடு கோட்டைக்குள் பத்திரமாக இருந்து கொண்டு வெளியில் வந்து போர் புரிவான்.. போர் தொடுப்பவன் தேவையான உணவுப் பொருள்களை சேகரித்துக் கொண்டு செல்ல வேண்டும்.. மேலும்.. ஆயுதங்கள் செய்யவும், குதிரைகள் வாங்கவும் பொருள் நமக்கு மிக அதிக அளவில் தேவைப் படுகிறது.. பொருள் தேடுவதற்கான தேடலில்தான் நம்மால் பங்கு கொள்ள இயலாது.. படைபலத்தைப் பெருக்குவதில பங்கு கொள்ளலாம் அல்லவா..? இது அறப் போர்..! பதம் கொண்ட அறம் காக்க பெண்களும் வாளேந்தி போர்க்களம் புகுந்தாக வேண்டும்.. சுல்தானின் படையை வெல்ல வேறுவழி நம்மிடம் இல்லை.."

கங்காதேவி பேசப்பேச.. தான் கடுகு போல் சிறுத்துப் போனதாக உணர்ந்தாள் மைதிலி..

இதோ.. அவளின் மனம் கவர்ந்த காதலனை மணவாளனாக பெற்றிருக்கும் பாக்கியசாலி அவளின் கண்ணெதிரே நிற்கிறாள்..

அந்த பாக்கியசாலி.. கண் நிறைந்த கணவனுடன் காதல் மொழிகளைப் பேசிக் கொண்டிருக்கவில்லை.. அவன் வென்று வாகை சூடியிருக்கும் காஞ்சிமாநகரில் அவனுடன் இணையாக நகர்வலம் வந்துகொண்டிருக்க வில்லை.. பூக்கள் பூத்த நந்தவனங்களில் கணவனுடன் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருக்கவில்லை..

மாறாக.. அவன் செய்த சபதங்களை நிறைவேற்ற அவளும் போரில் பங்கு கொள்ள ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறாள்.. அவளைப் போன்ற பெண்களுக்கு ஆயுதப் பயிற்சிகளை அளித்துக் கொண்டிருக்கிறாள்..

இவளல்லவோ குமார கம்பண்ணனின் பலம்..! இவளல்லவோ அவனிஷ் சரிபாதி..!

இவள் இடத்தில் மைதிலி இருந்திருந்தால் என்ன செய்திருப்பாள்..?

‘கணப்பொழுதும் அவனை விட்டு அகலாமல் காதல் மொழிகளைப் பேசிக் கொண்டிருப்பேன்..’

வெட்கிப் போனாள் மைதிலி..! கங்காதேவியைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு பிரமிப்பாக இருந்தது..

ராமர் பாலம் கட்டிய போது சிறு அனில் உதவி செய்யவில்லையா..? அதைப் போல கங்காதேவியின் முயற்சிக்கு மைதிலியும் துணை நின்றால் என்ன..?

இந்த எண்ணம் மனதில் தோன்றியதும் அதுவரை அவளை ஆக்ரமித்திருந்த மனச்சோர்வு அவளை விட்டு நீங்கி ஓடுவதை வியப்புடன் உணர்ந்தாள் மைதிலி..

மற்றவர்களுக்கு பாரமாக இல்லாமல்.. அவள் பிறந்ததிற்கும் ஓர் அர்த்தம் சேர்க்கும் வகையில் வாழ்ந்து முடிக்க ஓர் வாய்ப்பு அவளுக்குக் கிட்டியிருக்கிறதே..

எதற்காக வாழ வேண்டும்.. யாருக்காக வாழ வேண்டும்.. என்ற விரக்தி மனப்பான்மை மாறி.. சுல்தானுக்கு எதிரான போர் புரிய வாழ வேண்டும்.. மதுரையை மீட்க சபதம் எடுத்திருக்கும் குமார கம்பண்ணனுக்கு துணை நிற்க வேண்டும் என்ற மனஉறுதி உண்டானதில் மலையளவு பலம் வந்து விட்டதைப்போல புத்துணர்வு கொண்டாள் அவள்..

"இவர்கள் போர் பயிற்சி எடுக்க... நான் மட்டும் மாலை சூட்டி மணப்பெண்ணாக புகுந்த வீட்டிற்குப் புறப்பட்டுச் செல்ல வேண்டுமா..?" என்று கங்கா தேவியிடம் கேட்டாள்..

"நீ போரில் பங்குபெற ஆர்வம் கொண்டுள்ளாயா..?" கங்காதேவி ஆச்சரியப்பட்டாள்..

"ஆம்.. மகாராணி.."

"ஆனால் பார்த்திபன் அண்ணாவும் மலர்க்கொடி அண்ணியும் இதற்குத் தடை விதிப்பார்களே.. அவர்கள் உன்னை மணக் கோலத்தில் பார்க்க ஆசைப் படுகிறார்கள் பெண்ணே..!"

"ஆனால் எனது ஆசை வேறு விதமானதாக உள்ளதே.. எனது தமையன் காஞ்சிப் படையின் உபதளபதி அல்லவா..? ஓர் தளபதி போர்ப் பயிற்சியை விரும்பும் தங்கைக்கு தடை சொல்லலாமா..?"

"இதுவும் யோசிக்கக் கூடிய வாதம்தான்.."

"இன்னும் உள்ளது மகாராணி.. தமையன் இதையும் மீறி தடை சொன்னால்.. ஊருக்குத்தான் உபதேசம்..? உனக்கில்லையா என்று கேட்டு விட மாட்டார்களா..?"

"கேட்பார்கள்தான்.."

"மதுரா போரில் நானும் பங்கு பெற வேண்டும் மகாராணி.. அந்தப் போர் முடிந்து மதுரா நகரை நாம் மீட்டு மீனாட்சி அம்மனின் ஆலயத்தைத் திறந்து விட வேண்டும்.. திருவரங்கத்தில் அரங்கனின் சிலையை பிரதிஷ்டை செய்ய வேண்டும்.. அதன் பின்னரே நான் மணம் புரிந்து கொள்வேன்.. அதுவரை மணம் செய்து கொள்ள மாட்டேன் மகாராணி..!"

மைதிலி உணர்ச்சிப் பெருக்குடன் பேசினாள்.. கங்காதேவியின் விழிகள் மின்னின.. அவள் பரவசத்துடன் மைதிலியை அணைத்துக் கொண்டாள்.. அன்றே போர் பயிற்சியில் ஈடுபட்டு விட்ட மைதிலியின் மனதைத் திருப்ப பார்த்திபனும், மலர்க்கொடியும் பகீரத பிரயத்தனங்களை மேற்கொண்டு தோல்வியைத் தழுவினார்கள்.. அவர்களுக்கு கங்காதேவியின் ஆதரவும் கிட்டவில்லை என்பதில் அவர்கள் மைதிலியின் போக்கிலேயே அவளை விட்டு விட்டார்கள்..

குமார கம்பண்ணனின் செவிகளை விவரம் எட்டிய போது அவன் வேதனையுடன் கண்களை மூடி நெடுமூச்செரிந்தான்.. முதன் முதலாக மைதிலியை பார்த்த போது.. அழகாக பெண்மையின் நளினத்துடன் அவள் வீதியில் கோலமிட்டுக் கொண்டிருந்த காட்சி அவன் மனக் கண்ணில் தெரிந்தது..

அந்த வளைக் கரங்கள் வாளை ஏந்தப் போகிறதா..?

சலனமில்லாமல் அமைதியான நதியைப் போல ஓடிக் கொண்டிருந்த மைதிலியின் வாழ்வை அவன் திசை திருப்பி விட்டான் என்பதில் குமார கம்பண்ணனின் மனது பாரம் சுமந்தது..

ஆண்டுகள் நகர்ந்தன.. சபதங்களை நிறைவேற்றக் காஞ்சியைக் கைப்பற்றிய குமார கம்பண்ணனால்.. உடனடியாக மதுரா நகரை நோக்கி படையெடுக்க முடியவில்லை.. சுல்தானின் படை பலத்தை எதிர்க்கப் போதுமான படைபலம் குமார கம்பண்ணனிடம் இல்லை.. அவன் படை திரட்டிக் கொண்டிருந்தான்.. போருக்குத் தேவையான பொருளை சேர்த்துக் கொண்டிருந்தான்.. விஜயநகரத்தின் ஹரிஹர, புக்கர்களாலும் அவனுக்கு உதவ முடியவில்லை..

இச்சூழலில் ஓர்நாள் இரவில் அவனுக்கு கனவு வந்தது..! கனவில் மதுரை மீனாட்சி அம்மன் வந்தாள்..!

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



17

ஒரு கண்ணில் அடிபட்டால்... மறு கண்ணும் வலிக்காதோ..

மற்ற விசயங்களில் எப்படியோ.. சித்தார்த்தனின் விசயத்தில் தாமோதரன் அதிகமாக பொசசிவ்னெஸ்ஸோடு இருப்பான்.. என் நண்பன்தான் எனக்கு மட்டும்தான்னு பாட்டுப் பாடாத குறைதான்.. சொல்லி வைத்ததைப் போல சித்தார்த்தனும் தாமோதரனைத் தவிர மற்ற நண்பர்களிடம் அதிகமாக பழகியதில்லை.. அவனுக்கு உற்ற நண்பன், உயிர்நண்பன்.. எல்லாமே தாமோதரன் மட்டும்தான்..

அந்த ஒற்றை நண்பன்.. உயிர் நண்பனின் மனதைப் புரிந்து கொள்ளாமல் தாமோதரன் உட்கார்ந்திருக்கிறானா..?

"என்ன உளருகிறீங்க..?"

"உளறலை சார்.. உண்மையைத்தான் சொல்றேன்.."

"என்ன உண்மையைப் பெரிசா கண்டுட்டீங்க..?"

"கண்டதைத்தான் சொல்றேன்.. ஹெட் ஏக்குன்னு இதுவரைக்கும் நாலு கப் காபியோட நாலு டேப்லெட்ஸை உள்ளே தள்ளியிருக்கார்.. தலைவலி குறைஞ்ச பாடாயில்லை.."

"என்னது..?..!"

தாமோதரனின் முகம் மாறியதில் யாமினி திருப்தியாக உணர்ந்தாள்.. அவளுக்குள் அமைதி வந்தது.. அவளால் பிணங்கி நிற்கும் நண்பர்களைப் பேச வைத்து விட்டால் போதும் அவளுக்கு.. வேறு எதுவும் வேண்டாம்..

"ஆமாம் சார்.. வலி தலையில இல்லை.. அவர் மனசில இருக்கு.. டேப்லெட்ஸாலே எப்படி அந்த வலியை விரட்ட முடியும்..? நீங்க கோபமா சத்தம் போட்டுட்டு இந்தப் பக்கம் வந்துட்டிங்க.. அந்தப் பக்கம் அவர் தலையைப் பிடிச்சுக்கிட்டு உட்கார்ந்தவர்தான்.. இன்னும் தலை தூக்கல.."

"என்ன ஆளு இவன்..? அக்ரிமெண்ட் சைன் ஆனத இம்மீடியட்டா ஃபைல் பண்ணியாகனுமே.. அதுக்கான டிக்டேசனைக் கொடுத்தானா இல்லையா..?"

"எங்கே சார்..? கொடுக்கிறார்.. கொடுக்கிறார்.. கொடுக்கிறார்.. அப்போதிருந்து இப்போ வரைக்கும் கொடுத்துக்கிட்டே இருக்கார்.."

"மை காட்..! பக்கம்.. பக்கமா டிக்டேட் பண்ணித் தொலைக்கிறானா..?"

"நீங்க வேற.."

யாமினி இயல்பாகச் சொல்லிவிட்டு நாக்கை கடித்துக் கொண்டாள்..

'இப்பத்தான் மலையிறங்கி... குணசாலியா சொல்றதைக் காது கொடுத்துக் கேட்டுக்கிட்டு இருக்கான்..

இதில பேசத் தெரியாம நான் பேசி வைச்சிட்டேன்.. இவன் இதுதான் சாக்குன்னு.. ஆமாம்மா.. நீ கம்பெனிக்குள்ள காலடி வைக்கிறது வரைக்கும் நானும் சித்தார்த்தனும் ஒன்னு மண்ணா.. பிய்த்தாலும் பிய்க்க முடியாத பிரண்ட்ஷிப்போட ஒட்டிப் பிறந்த ரெட்டைப் பிறவிகள் மாதிரிதான் இருந்தோம்.. மகராசி நீ வந்து சேர்ந்த.. நான் வேற.. அவன் வேறன்னு ஆகிட்டோம்ன்னு பிலாக்கணம் பாட ஆரம்பிச்சிருவானே..'

நல்ல வேளையாக.. யாமினி பயந்ததைப் போல எதுவும் ஆகிவிடவில்லை.. தாமோதரன் மலையேற வில்லை.. மாறாக கவலையுடன் கேள்வி கேட்டான்..

"என்னம்மா செஞ்சு தொலைச்சான்..?"

"ஒரு வார்த்தை சொல்றாரு.. விட்டத்த விட்டத்தப் பாக்கிறாரு.."

"கிழிஞ்சது போங்க.."

"இன்னொரு வார்த்த சொல்றாரு.. ரூம் மூலையை உத்து உத்துப் பாக்கிறாரு.."

"விட்டத்திலயும்.. மூலையிலயும் என்ன இருக்கு..?"

"எனக்கும் தெரியலையே சார்.. ஒரு மணி நேரமா உக்காந்திருக்கேன்.. இதுவரைக்கும் எண்ணி ஆறே ஆறு வார்த்தைகளத்தான் டிக்டேட் பண்ணியிருக்காரு.."

"ஆறே வார்த்தைகளா..?"

"ஆமாம் சார்.. ஆமாம்.."

"இது தேறாத கேஸ்தான்.."

"அதனாலதான் உங்களைப் பார்க்க வந்தேன்.. நீங்க வந்தால்தான் அவரை சரி பண்ண முடியும்.. இப்படியே விட்டுட்டிங்கன்னா வீட்டுக்குக் கிளம்பறதுக்குள்ள ஃபீவரைக் கூட இழுத்து விட்டுக்குவார் போல இருக்கு.."

"ஃபீவரா..?"

"ஃபீவரேதான்.. அதிகமாக தலை வலிச்சா அது ஃபீவரிலதான போய் முடியும்..?"

தாமோதரன் எழுந்து விட்டான்.. சித்தார்த்தனின் மீதான அவனது அக்கறையில் உள்ளம் நெகிழ்ந்தாள் யாமினி.. அதுபோன்ற நட்பு அவள் வாழ்வில் இல்லை.. ஓர்நொடி அந்த நண்பர்களுக்கிடையே நிலவிய நட்பில் அவளுக்கு பொறாமை வந்தது..

"நீங்க உங்க சீட்டுக்குப் போய் வேலையைப் பாருங்க.. அப்பத்தான் வாங்கற சம்பளம் செரிக்கும்.."

மறக்காமல் யாமினியை நோக்கி ஓர் சொல்லம்பையும் விட்டு விட்டுத்தான் அவன் சித்தார்த்தனைத் தேடிப் போனான்..



18

மீனாட்சி ஆட்சி செய்யும்..
நான்மாடக் கூடல் அது..!

மிகத் தெளிவாக அந்தக் காட்சியினைக் கண்டான் குமார கம்பண்ணன்..

அவன் சயனித்திருந்த பஞ்சணையின் முன்னால்.. பச்சை வண்ணப் பட்டு உடுத்தி.. கையில் பச்சைக் கிளியை ஏந்தி மீனாட்சி அம்மன் காட்சி தந்தாள்..

"நானாட்சி செய்து வரும்..
நான்மாடக் கூடலிலே..
மீனாட்சி என்ற பெயர் எனக்கு.."

குமுத இதழ்களை அசைத்து பாடவும் செய்தாள்.. குமார கம்பண்ணன் அங்கமெல்லாம் பதற.. ஆவியெல்லாம் சிலிர்க்க.. விதிர்த்து எழுந்தான்.. நெடுஞ்சாண்கிடையாக தாயாரின் பாதங்களில் வீழ்ந்தான்..

"கொற்றவையே..! என்னைப் பெற்றவளே..! எனக்குக் காட்சி கொடுக்க வந்துள்ளாயா..? என்ன ஒரு பேறு பெற்றேன்.." என்று கரங்களைக் கூப்பிக் கதறினான்..

"கங்கை நீராட்சி செய்து வரும்
வடகாசி தனில்
விசாலாட்சி என்ற பெயர் எனக்கு.."

தெய்வீக கானம் தொடர்ந்தது.. பல்லவர்கள் கோலோச்சிய காஞ்சி மண்ணில் அன்றைய மன்னனாக

இருந்த குமார கம்பண்ணனின் கண் முன்னால் கங்கை நதி ஓடியது.. அதன் கரையினில் கோவில் கொண்டிருக்கும் காசி விசாலாட்சி அவன் முன் தோன்றினாள்..

"கோனாட்சி பல்லவர்தம்
குளிர்சோலை காஞ்சிதனில்
காமாட்சி என்ற பெயர் எனக்கு.."

அன்னையின் அருள் வடிவம் காமாட்சியம்மனாக மாறி அருள் பாலித்தது.. கூப்பிய கரங்களுடன் பக்தி பரவசத்துடன் விழி நீரைச் சொரிந்தான் காஞ்சியின் மன்னன்..

"கொடுங் கோலாட்சி
தனை எதிர்க்கும்
மாரியம்மன் என்ற பெயர்
கொண்டபடி காட்சி தந்தேன் உனக்கு.."

மஞ்சள் வண்ண ஆடையும் வேப்பிலை அலங்காரமுமாக மாரியம்மன் அங்கே நின்றாள்.. குமார கம்பண்ணன் தேகம் நடுங்க கரங்களை தலைக்கு மேல் உயர்த்தி வணங்கினான்..

அவன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அன்னையின் அருள் வடிவம் மீனாட்சியம்மனாக மாறி அவனை ஆனந்தத்தில் ஆழ்த்தியது.

"ஆறென்றும் நதியென்றும்
ஓடையென்றாலும்..
அது நீரோடும்
பாதைதன்னைக் குறிக்கும்.."

அன்னையின் அருள் முகத்தின் தேஜஸ் ஒளிர்விட்டு அந்த அறை முழுவதும் ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சி நிறைத்தது..

தகதகவென மின்னும் தங்கப் பதுமையாக மீனாட்சியம்மன் அவன் கண்களுக்கு காட்சி தந்து கானமிசைத்துக் கொண்டிருந்தாள்..

"நீற்கும் ஊர்மாறி..
பேர் மாறி.. கருமாரீ..
உருமாறி.. ஒன்றே
ஓம்சக்தியென உரைக்கும்.."

கனிவுடன் பார்த்துக் கொண்டிருந்த மீனாட்சியம்மனின் விழிகளில் துயரம் வந்ததில் குமார கம்பண்ணன் பதறிப் போனான்..

"அகிலமெல்லாம் காக்கும் அகிலாண்டேஸ்வரியே..! தமது விழிகளில் துயரம் வரலாமா..? என் மீது கருணை காட்டி துயரத்தை துரத்துங்கள் அம்மா.. இதைக் காண என் மனம் தாளவில்லையே.." என்று கரங்களைக் கூப்பிக் கெஞ்சினான்..

"துயரம் கொள்ளாமல் என்ன செய்வது மகனே..! நான் ஆட்சி செய்து வரும் நான்மாடக் கூடலில்.. எனது கோவிலின் கதவுகளை சுல்தான் அடைத்து வைத்திருக்கிறான்.. என்னை சேவிக்க முடியாமல் என் பக்தர்கள் துயரம் கொள்கின்றனர்.. அந்தத் துயர் கண்டு நான் துயர் கொள்ளாமல் என்ன செய்வேன்..?"

"அம்மா..! நான் மாடக் கூடலின் மீனாட்சியம்மனின் கோவில் கதவுகளைத் திறப்பதுதான் என் வாழ்வின் லச்சியம்.. கோவிலின் கதவுகளை தாழ் திறப்பேன் என்று சபதமிட்டிருக்கிறேன் தாயே..!"

"சபதமிட்டு என்ன பிரயோசனம் மகனே..! மதுரா நகர் நோக்கி படையெடுத்து வந்தவன்.. காஞ்சியைக் கைப்பற்றியதும் இங்கு தேங்கி நின்று விட்டாயே.. அங்கே எனது பக்தர்களை சுல்தான் கொடுமைப் படுத்துகிறான்.. எனது மக்கள் மதுரா நகரை விட்டு வெளியேறி அண்டை நாடுகளில் அடைக்கலம் புகுந்து விட்டார்கள்.."

"அறிவேன் அம்மா..! அனைத்தையும் மாற்றி அமைப்பேன்.."

"எப்போது மகனே..? காலம் கடந்து கொண்டிருக்கிறது.. திருவரங்கத்தில் கோவில் கொண்டிருந்த எனது அண்ணன் ரங்கநாதன் நாடோடி போல திருப்பதியின் வனப்பகுதியில் வாசம் செய்கிறான்.. அவன் கோவிலில் அவனது உருவச்சிலை இல்லை.. அதுநாடு கடந்து விட்டது.. அவன் சிலையைக் கொண்டு வந்து திருவரங்கக் கோவிலில் பிரதிஷ்டை செய்ய எவருமே நினைக்கவில்லையா..? என் கோவிலின் கதவுகளை மூடி.. என் அண்ணனை திருவரங்கத்தில் வாசம் செய்ய விடாமல் நாடோடி போல துரத்தி விட்ட அந்த சுல்தானைத் தட்டிக் கேட்கும் துணிவுள்ள மன்னன் இந்த அவனியிலே பிறக்கவில்லையா..? பல்லவ.. சேர.. சோழ.. பாண்டிய

மன்னர்களுக்குப் பின்னர்.. நமது தேசத்தின் மன்னர்களுக்கு வீரம் அற்றுப் போய் விட்டதா..?"

ஆவேசம் கொண்டாள் அன்னை மீனாட்சி..! அவள் முன்னால் கரம் கூப்பி மன்றாடித் தன்னிலை விளக்கம் சொன்னான் குமார கம்பண்ணன்..

"தாயே..! மதுரைமீது படையெடுக்க பல காலமாய் காத்திருக்கிறேன்.. படையும் சேரவில்லை.. பொருளும் சேரவில்லை.. நான் என்ன செய்வேன்.. மதுராபுரியில் உள்ள சுல்தானின் வசம் லட்சக்கணக்கான வீரர்களைக் கொண்ட படைபலம் உள்ளது.. மதுரையின் செல்வத்தில் அவன் திளைக்கிறான்.. என்னிடமோ ஆயிரக் கணக்கான வீரர்களே உள்ளனர்.. செல்வமும் அதிக அளவில் இல்லை.. குறைவாகவே உள்ளது.. இந்நிலையில் நான் எப்படி மதுரை மாநகரின் மீது படையெடுத்துச் செல்வேன்.."

மனம் கலங்கி மண்டியிட்ட குமார கம்பண்ணனின் மன்றாடலில் ஆவேசம் குறைந்தாள் அன்னை மீனாட்சி..! அருள் வடிவுடன் அவனைக் காருண்யப் பார்வை பார்த்தபடி கரத்தை நீட்டினாள்.. நீட்டிய அம்மனின் கரத்தில் நீண்ட உடைவாள் ஒன்று தகதகத்தது.. அதன் ஒளியில் கண்கள் கூச.. திணறிப் போனான் குமார கம்பண்ணன்..

"நான் இருக்கிறேன் கலங்காதே.. இதோ இந்த வாளைப் பெற்றுக் கொள்.. இது ராஜராஜ சோழனின் உடைவாள்..! அதன் பின் பாண்டிய மன்னர்களின் வசம் இது சென்றது.. இனி இது உன் வசம்.. இந்த வாளைக் கரத்தில் ஏந்தி போர்க்களம் செல் மகனே..! உன்னருகில்

நானிருப்பேன்.. உன் கொடியில் நான் வசிப்பேன்.. எனது அண்ணனான திருவரங்கத்தின் ரங்கநாதனை துணைக்கு அழை.. அவன் தலைமையில் படையெடுத்துச் செல்.. அரங்கன் தலைமை தாங்கும் படைக்கு வெற்றி நிச்சயம்.. மதுரா நகரின் மீது போர் தொடு மகனே..! வெற்றி உனதே.."

அவன் கைகளில் வாளைக் கொடுத்து ஆணையிட்டு விட்டு மீனாட்சியம்மன் மறைந்து விட்டாள்..

உடலெல்லாம் உலுக்கிப் போட்டதைப் போல தூக்கிவாரிப் போட.. திடுக்கிட்டுக் கண்விழித்த குமார கம்பண்ணனின் அருகிலிருந்த கங்காதேவி பதட்டத்துடன் கணவனை அணுகினாள்..

"என்ன ஆனது..? ஏன் கைகளை நீட்டியவாறு எழுந்து அமர்கின்றீர்கள்..? எதற்காக இத்துனை பரபரப்பு..?"

"கங்கா.. என் கைகளில் இருந்த உடைவாள் எங்கே..?"

வியர்த்துக் கொட்டி விதிர்த்த நிலையில் குமார கம்பண்ணன் பரபரத்தான்.. கங்காதேவி அவனருகில் அமர்ந்து ஆசுவாசப் படுத்தினாள்.. விசிறி கொண்டு விசிறி வியர்வையைக் குறைத்தாள்.. குளிர்ந்த நீரை அருந்தச் செய்தாள்.. அவள் உடுத்தியிருந்த பட்டாடையின் முந்தானை கொண்டு அவன் முகத்தினைத் துடைத்தாள்..

"பொறுமை... பொறுமை... உறங்கிக் கொண்டிருந்தவரின் கரங்களில் உடைவாள் எப்படி வரும்..?"

"அது அன்னை மீனாட்சி அருளைத் தாங்கிய உடைவாள் கங்கா.."

"அன்னை மீனாட்சியா..?"

"ஆம் கங்கா..! இதோ.. இவ்விடத்தில்தான் அன்னை மீனாட்சி தோன்றினாள்.. அவளது கோவிலின் தாழ்திறவ இத்தனை காலதாமதம் ஏன் என்று கேட்டுக் கோபம் கொண்டாள்.. அவளுடைய அண்ணனான ரங்கநாதனின் திருவுருவச் சிலை நாடோடிபோல திருப்பதியின் வனப்பகுதியில் வாசம் செய்வதா என்று கேள்வி கேட்டாள்.."

"அரசே..! இது என்ன அற்புதம்..!"

மெய்சிலிர்த்துப் போனாள் கங்காதேவி..! குமார கம்பண்ணனின் முகத்தில் நிலவிய உண்மையில் அவளது தேகமும் நடுங்கியது..

"அற்புதம்தான் கங்கா..! அரங்கனின் தலைமையில் படையெடுத்துச் செல்.. என் ஆசி உனக்குண்டு.. உனக்கு வெற்றி நிச்சயம் என்று கூறி பாண்டியர்களின் உடைவாளை எனக்களித்தாள்.."

"அப்படியா..?"

"ஆம் தேவி..! என் இரு கரங்களிலும் உடைவாளை வாங்கினேன்.. அந்த உடைவாளின் கனத்தை எனது கரங்கள் உணர்ந்தன கங்கா.."

"என்னே அன்னையின் கருணை..!"

பரவசம் கலந்த ஆனந்த அதிர்வுடன் அவர்கள் உரையாடிக் கொண்டிருந்த அந்த வேளையில்.. அரண்மனையின் காவலர்களில் ஒருவன் விரைந்து வந்து அந்தச் செய்தியைக் கூறினான்..

"அரசே..! பாண்டிய மன்னர் அனுப்பிய தூதுக் குழுவினர் தங்களைக் காண வந்துள்ளனர்.."

"பாண்டிய மன்னரின் தூதுக் குழுவினரா..?"

குமாரகம்பண்ணனும் கங்காதேவியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்..

"அரசவைக்கு அவர்களை வரச்சொல்... அவையோருக்கும் அவசர அழைப்பை அனுப்பு... அரசவை கூட்டும்.."

கம்பீரமான குரலில் ஆணையிட்டான் குமார கம்பண்ணன்..

அரசவை கூடியது.. குமார கம்பண்ணனின் அருகில் கங்கா தேவியும் இருந்தாள்.. அவையோரின் முகங்களில் எதற்காக இந்த அவசரக் கூட்டம் என்ற கேள்வி இருந்தது..

"அவையோரே..! பாண்டிய மன்னர் அனுப்பியதாக ஒரு தூதுக்குழு வருகை தந்துள்ளது.. அதற்காகவே இந்த அவையைக் கூட்டியுள்ளேன்.."

விளக்கம் சொன்னான் குமார கம்பண்ணன்.. அவையோர் ஆர்வத்துடன் தூதுக்குழுவிற்காக காத்திருந்தனர்.. மன்னரின் ஆணைப்படி பாண்டிய மன்னரின் தூதுக்

குழுவினர் அவையில் பிரவேசித்தார்கள்.. அவர்கள் கையில் நீண்ட உடைவாள் ஒன்று தகதகத்தது..

அவ்வாள்.. கொற்றவை கனவில் அளித்த வாளைப் போலவே இருந்ததில் அதிர்வு கொண்டான் குமார கம்பண்ணன்..!

"தேவி..!" அவன் குரல் அந்த அதிர்வைப் பிரதிபலித்தது..

"என்னவென்று கூறுங்கள்..?" பதட்டமானாள் கங்காதேவி..

"இந்த வாளினைத்தான் நான் கனவினில் கண்டேன்.. அன்னை மீனாட்சி இந்த உடைவாளைத்தான் எனக்களித்தாள்.."

"தாங்கள் உரைப்பதைக் கேட்பதற்கே மெய் சிலிர்க்கிறதே.. இதை உணர்வு பூர்வமாக உணர்ந்திருக்கும் தங்களுக்கு எப்படி இருந்திருக்கும்..?"

"பரவசம் கொண்டேன் கங்கா.. அன்னை மீனாட்சியம்மனே என் எதிரே வந்து உடைவாளை நீட்டி ஆசி வழங்கி.. அவளது அண்ணனான அரங்கனின் தலைமையில் படைநடத்தச் சொன்னதில் பிரமித்து நின்றேன்.."

"பெரும் பேறு பெற்றீர்கள் அரசே..!"

குமார கம்பண்ணன் வியப்பின் உச்சத்தில் இருந்தான்.. விவரம் அறியாத அவையோருக்கு விளக்கம் சொல்வதற்கு முன்னால் அவனுக்கு விளக்கம் வேண்டியிருந்தது..

"என்ன இது..?" தூதுக்குழுவினரிடம் வினவினான்..

"மன்னரே..! இது ராஜராஜ சோழனின் உடைவாள்.. அவருக்குப் பின்னர் இது எங்கள் பாண்டிய மன்னர்களின் வசம் வந்தது.. மதுரையைக் காக்க இயலாமல் மதுரா நகரை சுல்தானிடம் தாரை வார்த்து விட்டத் துக்கத்துடன் தென்பாண்டி மண்டலத்தில் மறைந்து வாழும் பாண்டிய மன்னர் வயோதிகராகி விட்டார்.. மூப்படைந்த இந்நிலையில் தமிழகத்தைக் காக்க அவரால் இயலாது என்று அவர் எண்ணுகிறார்... தங்களால் மட்டுமே தமிழகத்தை மீட்டுக் காக்க முடியுமென்று அவர் நம்புகிறார்.. அதனால் அவர் வசமிருந்த ராஜராஜ சோழனின் உடைவாளை தங்கள் வசம் அவர் ஒப்படைக்கிறார்.. இது இனி உங்கள் உடைமை..! இதை ஏந்தி தாங்கள் போர்க்களம் புக வேண்டுமென்பது எங்கள் பாண்டிய மன்னரின் விருப்பம்.."

பணிவுடன் சொல்ல வந்த செய்தியைச் சொன்னார்கள் தூதுக் குழுவினர்.. அவையே அமைதியானது..

"ஆகட்டும்.." என்று அந்த உடைவாளைப் பெற்றுக் கொண்டான் குமார கம்பண்ணன்..

தூதுக்குழுவினரைக் கம்பீரமாக நோக்கியவன் பாண்டிய மன்னருக்கான பதில் செய்தியை உரத்த குரலில் முழங்கினான்..

"பாண்டிய மன்னரிடம் சொல்லுங்கள்.. மதுரா நகரை இந்தக் குமார கம்பண்ணன் மீட்டே தீருவான்.. அடைபட்டு

இருக்கும் அன்னை மீனாட்சியின் ஆலயக் கதவுகளைத் திறப்பான்.. அரங்கனின் சிலையை திருவரங்கத்தில் பிரதிஷ்டை செய்வான்.. எவ்விதக் கவலையுமின்றி பாண்டிய மன்னரை அமைதியுடன் ஓய்வெடுக்கச் சொல்லுங்கள்.. மதுரா நகரம் இனி நமதானது.."

"ஆகட்டும் அரசே..! இச்செய்தியை பாண்டிய மன்னரிடம் சொல்லி விடுகிறோம்.."

"யாரங்கே.."

குமார கம்பண்ணனின் அழைப்பில் வந்த சேவகர்களிடம் தூதுக்குழுவினருக்கான பரிசில்களைக் கொண்டு வரச் சொன்னான்.. பட்டுத் துணிகள் கொண்டு மூடிய தட்டுக்களில் தங்கக் காசுகள் இருந்தன.. அவை தூதுக் குழுவினரிடம் அளிக்கப்பட்டன..

"பயணக் களைப்பு நீங்க.. உணவருந்தி இளைப்பாறி ஓய்வெடுத்த பின் கிளம்பிச் செல்லுங்கள்.. தங்களுக்கான அனைத்து வசதிகளையும் எனது ஆரண்மனையின் சேவகர்கள் செய்து கொடுப்பார்கள்.."

"மிக்க வந்தனம் அரசே..!"

தூதுக்குழுவினர் சென்று விட்டனர்.. கங்காதேவி வியப்புடன் அந்த உடைவாளைத் தொட்டு விழிகளில் ஒற்றிக் கொண்டாள்..

"கொற்றவை கனவில் எனக்களித்த வாள் இது.."

உணர்ச்சி பொங்க அவையில் உரையாற்றினான் குமார கம்பண்ணன்.. கேட்டுக் கொண்டிருந்த அவையில்

'ஆஹா..' 'அற்புதம்..' என்ற உணர்வு மயமான பரவச குரல்கள் ஒலித்தன.. நாடு முழுவதும் இச்செய்தி பரவியது..

கொற்றவை கனவில் வந்து அளித்த உடைவாள் நனவில் கைகளில் கிடைத்ததில் குமார கம்பணனுக்கு அபாரமான உத்வேகம் தோன்றி விட்டது..

“பொறுத்தது போதும்.. இனி பொங்கி எழுவோம்..”

முழக்கமிட்டான்.. அவனது இந்த யுத்த முழக்கம் காட்டுத்தீயென எட்டுத் திக்கும் பரவின..

“கேட்டாயா சேதியை..?”

“விறகொடிக்க வந்தவளிடம் விவரத்தைச் சொல்லாமல் கேட்டாயா சேதியை என்றால் என்னவென்று நான் அறிவேன்..?”

“நமது காஞ்சியின் மன்னரின் கனவில் வந்து மீனாட்சி அம்மன் உடைவாளை கொடுத்தாளாம்.. அவர் படைகளுக்கு அரங்கன் தலைமை தாங்குகிறானாம்..”

“அரங்கன் தலைமை தாங்குகிறானா..?”

“தண்ணீர்க் கரையிலே இருப்பவளிடம் அரங்கன் தலைமை தாங்கி வருவதைக் கூறுகிறாயா..? ஊர் முழுவதும் இச்செய்தி பரவியுள்ளதே.. விறகொடிக்கும் நீ அறியவில்லையென்றால் மற்றவர்களும் அதை அறிந்திருக்க மாட்டார்களா...?”

இவ்வாறு விறகொடிக்கும் வள்ளியம்மையிடமிருந்து ஆற்றங்கரையில் தண்ணீர் சுமந்து கொண்டிருந்த

தங்கத்திற்கு செய்தி தாவி.. அவள் வாயிலாக ஆற்றங்கரையில் இருந்த அனைத்துப் பெண்களின் செவிகளிலும் பாய்ந்து.. அவர்களின் திருவாய் வழியாக அவர்களின் இல்லத்தாரிடம் செய்தி சென்று.. அந்த இல்லத்தாரின் வழியாக நகர் முழுவதும் செய்தி பறந்து.. நாடு கடந்தது..

காட்டுத்தீயென பரவிய செய்தியில் மக்கள் வீறு கொண்டு எழுந்தார்கள்.. கங்காதேவியின் மேற்பார்வையில் ஆயத்தமான பெண்களின் படை வாளேந்தி போர்க்களம் நோக்கிச் செல்ல ஆயத்தமாகி அணி வகுத்துப் புறப்பட்டது..

சுல்தானின் படையில் இருந்ததோ பத்து லட்சம் வீரர்கள்.. மதுரா நகரை நோக்கிப் படையெடுத்துச் சென்ற குமார கம்பண்ணனின் படையில் இருந்ததோ இருபதாயிரம் படைவீரர்கள்..

இருந்தும் துணிவுடன் போர் தொடுத்து யுத்த முழக்கத்துடன் படையெடுத்தான் குமார கம்பண்ணன்..

“பொறுத்தது போதும்.. பொங்கி எழுங்கள்..”

“ஆம்.. பொறுத்தது போதும்.. பொங்கி எழுவோம்..”

ஜெய கோசத்துடன் திருப்பதி சென்றவர்கள் அங்கேயிருந்த அரங்கனின் சிலையை ரதத்தில் அமர்த்தி படைக்கு தலைமை தாங்கச் செய்தார்கள்..

“அச்சம் சிறிதுமின்றி.. என் அண்ணனான ரங்கநாதனை தலைமை தாங்கச் செய்.. அவன் துணை

வருவான்.. நான் அருள் வழங்குவேன்.. வெற்றி உனதே.." என்ற மீனாட்சி அம்மனின் அருள் வாக்கு குமார கம்பண்ணனின் காதுகளில் இடைவிடாமல் ஒலித்துக் கொண்டிருந்தது..

மதுரை மீனாட்சியும்.. திருவரங்கத்தின் ஸ்ரீரெங்க நாதனும் துணையிருந்து காவல் செய்வார்கள் என்ற நம்பிக்கையுடன் படையை நகர்த்தினான் குமார கம்பண்ணன்..

அரங்கன் படைக்குத் தலைமை தாங்கி சுல்தானின் மீது போர் தொடுக்கக் கிளம்பி வருகிறான் என்ற செய்தி பரவியதும் அற்புதம் நிகழ்ந்தது..

சிலைசென்ற இடமெங்கும் படை திரண்டது.. அரங்கனின் தலைமையில் அணி வகுத்து வந்த படையில் ஆங்காங்கே திரண்டு நின்ற வீரர்களின் கூட்டம் இணைந்தது..

"மதுரை மீனாட்சியம்மனின் கோவிலைத் திறப்போம்.. திருவரங்கத்தில் அரங்கனின் சிலையை பிரதிஷ்டை செய்வோம்.." என்று முழக்கத்துடன் மக்கள் படைகளில் குவிந்தார்கள்..

அரங்கன் தலைமை தாங்கிச் சென்ற படை கடந்த ஊர்களில் இருந்த வீரர்களின் கூட்டம் அரங்கனின் சிலையைக் கண்டதும் பரணில் பிடந்த வாள்களையும்.. வேல்களையும்.. தூசிதட்டி எடுத்துக் கோசம் எழுப்பியபடி அரங்கனின் படையில் சங்கமித்தது..

ஆண்டாண்டு காலமாக அடிபட்டும்.. மிதிபட்டும்.. கிடந்த மக்கள் அரங்கனைக் கண்டதும் எழுச்சியுடன் கரகோசம் எழுப்பி அரங்கனின் படையில் தங்களை இணைத்துக் கொண்டது ஆண்டவனின் செயல்..!

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



18

எதனாலும் பிரியாது.. இதயத்தில் தோன்றும் நேசம்..

“தலையை வலிச்சா வீட்டுக்குப் போய் தொலைக்க வேண்டியதுதானே..”

சித்தார்த்தனின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தபடி அதட்டினான் தாமோதரன்.. தாயிடம் சலுகை கொள்ளும் மழலையாக நண்பனின் கையைப் பற்றிக் கொண்ட சித்தார்த்தன்..

“ஃபீவர் இல்லடா..” என்றான்..

“எங்களுக்கும் அது தெரியுது.. நான் கேட்டதுக்கு பதிலச் சொல்லு..”

“வேலையிருந்துச்சுடா..”

“அப்படி என்னத்தடா தலைவலியக் கூடத் தாங்கிக் கிட்டு நீ கிழிக்கிற அளவுக்கு அதி முக்கியமான வேலயக் கிழிச்சுக்கிட்டு இருந்த..?”

"பிஸினெஸ் லன்ச்சுக்குப் போனேனில்ல.."

சித்தார்த்தன் விவரம் சொல்ல ஆரம்பித்தான்.. புறக்கணிக்கப் பட்ட பிஸினெஸ் லன்ச்சின் நினைவில் தன்னைத்தானே நொந்து கொண்டான்..

"கருமம் பிடிச்சவனுகடா.. வர்றேன்னு சொன்னது ஓர் நாளு.. வந்து நிக்கிறது ஓர் நாளு.. திடிர்ன்னு கால் வந்ததும் அரக்கப் பறக்க ஓடினதில உனக்கு இன்பர்ம் பண்ண மறந்திட்டேண்டா தாமு.."

"அதனால என்னடா.. லீவ் தட் மேட்டர்.."

அமைதியான குரலில் தாமோதரன் சொன்னான் என்பதற்காக அவன் அந்த விசயத்தை படு இலகுவாக எடுத்துக் கொண்ட புறம் தள்ளி மறந்து விட்டான் என்பதை சித்தார்த்தன் நம்பத் தயாராக இல்லை..

நிழலாக பின் தொடரும் நண்பனின் குணாதி சியத்தை சித்தார்த்தன் நன்கு அறிவானே..

தாமோதரனின் அமைதியான குரல் புயலை உள்ளடக்கியது.. அனுபவித்துப் பார்த்தவனுக்குத்தான் தெரியும்.. அந்த அமைதியின் ஆழம் எத்தகையது என்பது..

"என்கிட்டச் சொல்லனும்னு எந்த அவசியமும் இல்லைடா சித்தார்த்.. யாரு நானு..? ஆப்டர் ஆல் ஒரு ஜி.எம். நீ பர்சனல் செக்கரட்டரிகிட்டச் சொல்லிட்ட இல்ல.. அதுதான் இம்பார்டண்ட்.."

"தாமு.. என்னை நீ மன்னிக்கவே மாட்டியாடா..?"

தாள முடியாமல் சித்தார்த்தன் தலையைப் பிடித்ததில போனால் போகிறது.. பிழைத்துப் போகட்டும் என்று விட்டு விட்டான் தாமோதரன்..

சித்தார்த்தனுக்கு அது தெரியும்.. என்னதான் தாமோதரனின் தாவாங்கட்டையைப் பிடித்து தாஜா பண்ணினாலும் மலையேற வேண்டும் என்று அவன் முடிவு பண்ணிவிட்டால் இறங்கவே மாட்டான் என்பதை அவன் நண்பனான சித்தார்த்தன் அறியாமல் வேறு எவர் அறிவார்..?

அதற்குப் பதிலாக தலை நோவு என்று தலையைப் பிடித்தால் மலையேறி மகாதேவனான தாமுக்குட்டி மலையை விட்டு 'டகார்' என்று குதித்து விடுவான் என்பதால் சித்தார்த்தன் டாட்டா சொல்லி விட்டுப் போன தலைவலி மறுபடியும் வந்து டேரா போட்டு விட்டதாக நடித்துத் தப்பித்தான்..

"தொலையுது விடு.."

தாமோதரன் கம்யூட்டரைப் பார்த்தபடி சொன்னதும் இவன் எவரைத் தொலையச் சொல்கிறான் என்று திரும்பிப் பார்த்தான் சித்தார்த்தன்.. அங்கே ஆதுரப் பார்வையுடன் யாமினி நின்றிருந்தாள்..

'இவளைத் தொலையச் சொல்கிறானா..?'

தாமோதரனைக் கேட்டால் அவன் கொஞ்சம் கூடத் தயவு தாட்சண்யம் பார்க்காமல் 'ஆமாம்' என்று அடித்துச் சொல்லி விடுவான் என்று நினைத்துக் கொண்ட சித்தார்த்தனுக்குச் சிரிப்பு வந்தது..

“எதுக்குடா சிரிக்கிற..?” தாமோதரன் சந்தேகமாக அவனைப் பார்த்தான்..

“சும்மா..” சித்தார்த்தன் கண் சிமிட்டினான்..

“கேர்ள் பிரண்டுகிட்ட பண்ண வேண்டிய வேலையை எல்லாம் பாய் பிரண்டுகிட்டக் காட்டுங்கடா.. விளங்கிடும்..” தாமோதரன் அலுத்துக் கொண்டான்..

“எனக்கேதுடா கேர்ள் பிரண்ட்..?” என்றான் சித்தார்த்தன்..

“இல்லேங்கறியா..?” ஆழமான குரலில் தாமோதரன் கேட்ட அதே நொடியில் அறைக்குள் யாமினி நுழைந்து வைத்தாள்..

தாமோதரனின் பார்வை உயர்ந்து யாமினியைப் பார்த்துவிட்டு சித்தார்த்தனின் மீது அர்த்த புஷ்டியுடன் படிந்தது..

“இதைத்தான் யட்சிணி வேலைங்கிறது..”

தாமோதரன் சத்தமாக சொல்லி வைத்ததில் யாமினி கேள்வியுடன் சித்தார்த்தனைப் பார்த்தாள்.. என்னடா இது என்று பதறிப்போன சித்தார்த்தன் அவள் எதைத்தான் என்று கேள்வி கேட்கும் முன்னால் அவசரமாக விட்டுப் போன ஆபிஸ் மேட்டரை டிக்டேட் பண்ண ஆரம்பித்தான்..



19

ரங்கநாதனின் திருநாமம்.. உத்வேகம் கொண்டோரின் உயிர்நாதம்..

அவன் ரங்கநாதன்..! பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமன்..! விபிசணனுடன் இலங்கை செல்லக் கிளம்பி.. உச்சிப் பிள்ளையாரால் தடுத்து நிறுத்தப்பட்டு.. திருவரங்கத்தில் கோவில் கொண்டவன்..

அந்த அரங்கன் தலைமை தாங்கி வந்தால் அலைகடலென மக்கள் கூட்டம் அவன் பின்னால் திரண்டு செல்லாதா..?

அரங்கன் தலைமை தாங்கிச் சென்றபடை திருச்சியைத் தொட்டது.. அரங்கன் வருகிறான் என்றதும்.. அவனுக்காக காத்து நின்ற திருச்சி மாநகரத்தின் மக்களும்.. திருவரங்கத்து மக்களும் ஆனந்தக் கண்ணீர் விட்டு அழுதனர்.. அரங்கனைக் கண்குளிர சேவித்தனர்.. அவர்களைக் காவல் காத்து கோவில் கொண்டிருந்த அரங்கனின் திருவுருவச் சிலை.. திருப்பதியை விட்டுக் கிளம்பி திருவரங்கத்திற்கு வந்து நின்றதில் பக்தர்களின் கூட்டம் உணர்ச்சிப் பெருக்குடன் ஒன்று திரண்டது..

"அரங்கன் வந்து விட்டான்.."

"ஆம்.. படைக்கு தலைமை தாங்கி வந்திருக்கிறான்.."

"அவன் படையில் இணைவோம்.."

"அதைவிட வேறென்ன பணி இருக்கிறது..?"

"அரங்கனின் தலைமையில் போர் புரிவோம்.."

"சுல்தானை வெல்வேம்.."

"திருவரங்கத்தில் அரங்கனின் சிலையை பிரதிஷ்டை செய்வோம்.."

மக்கள் கூட்டம் கூவியது.. சுல்தானுக்கு அஞ்சி கடவுளின் திருவுருவச் சிலையை மறைத்து வைத்த பக்தர்களின் கூட்டம் வீறு கொண்டு எழுந்தது.. வாளையும்.. வேலையும் கைகளில் ஏந்தி போர்க்களம் புகுந்தது..

இந்தப் புதிய எழுச்சியில்.. திருச்சியிலிருந்து சுல்தானின் படை மிரண்டது.. அரங்கனின் தலைமை யிலிருந்த படை திருச்சியிலிருந்த சுல்தானின் படையைத் துவம்சம் செய்து முன்னேறியது..

மதுரையை முற்றுகையிட்டது குமார கம்பண்ணனின் படை... யுத்தம் கோரமானதாகவும் கடுமையானதாகவும் இருக்கும் என்பதை படையிலிருந்த அனைவரும் அறிந்திருந்தாலும்.. அதைக் குறித்த சஞ்சலம் எதுவுமின்றி போராட ஆயத்தமாக இருந்தனர்..

மதுரா நகருக்கு வெளியே குமார கம்பண்ணனின் படை முகாமிட்டிருந்தது.. அவனுடைய கூடாரத்தை விட்டு வெளியே வந்த கங்காதேவி தொலைவில் தெரிந்த மதுரா

நகரைப் பார்த்தாள்.. அங்கே துன்பப்படும் மக்களின் அழுகுரல் அவள் செவிகளில் விழுந்தது..

'இந்த யுத்தத்தில் வெற்றியோ.. தோல்வியோ.. எது கிட்டினாலும் மக்களைக் காக்கப் போர் புரிந்து அதை ஏற்பதில் சம்மதே..'

சிந்தனையுடன் நின்றிருந்தவளின் தோள்மீது குமார கம்பண்ணனின் கரம் படிந்தது.. நின்ற நிலையிலேயே மிக லேசாக திரும்பிப் பார்த்தாள் கங்காதேவி..

"என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய் கங்கா தேவி..?"

"போரைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக் கிறேன்.. சுல்தானின் படைவீரர்கள் பத்து லட்சத்திற்கும் மேற்பட்டவர்களாமே.."

"நம்மிடம் மதுரை மீனாட்சி அம்மனின் அருளும்.. அரங்கனின் தலைமையும் உள்ளதே.. அதை மறந்தாயா..?"

"மறப்பேனா..?"

"உனது எழுத்தாணி கொண்டு பொறித்து வைத்துக் கொள்.. இந்த சுல்தான் சிக்கந்தர் ஷாவுடன் மதுரையில் சுல்தான்களின் ஆட்சி முடிவுக்கு வரப் போகிறது.."

"நடக்குமல்லவா..?"

"அதை நடத்தத்தானே விஜய நகரத்தை விட்டுப் புறப்பட்டு வந்தோம்..?"

"மெய்தான் அரசே..! ஆண்டுக் கணக்கில் நம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டதும் இந்தப் போருக்காகத்தான்.. எனக்கொரு கோரிக்கை உண்டு.."

"சொல் தேவி.."

"இந்த மதுரா யுத்தத்தை ஆரம்பிக்கும் முன்பு.. அமண மலையில் இருக்கும் சுப்ரமணிய சுவாமியை வணங்கி விட்டுப் போரை ஆரம்பிக்கலாமா..? முருகன்.. தனது தாயின் கோவிலை திறக்கவும்.. தாய்மாமனின் திருவுருவச் சிலையை திருவரங்கத்து கோவிலில் பிரதிஷ்டை செய்யவும் அருள் புரிவான்.."

"இச்சூழலில் அமண மலைக்குச் செல்ல வேண்டும் என்று சொல்கிறாயா..?"

"என் மனதில் இந்த எண்ணம் தோன்றி விட்டது.."

"மதுரா நகரின் எல்லையில் இருக்கிறோம் என்பதை மறவாதே.."

"ஏன் அச்சம் கொள்ள வேண்டும்..? அரங்கனின் தலைமையில் நாம் இருக்கும் போது அச்சத்தை தவிர்த்து விட வேண்டும்.. நம்கையில் என்ன உள்ளது..? அனைத்தும் அன்னை மீனாட்சியின் அருளிலும்.. அரங்கனின் துணையிலும் அல்லவா உள்ளது..?"

குமார கம்பண்ணன் பேசவில்லை.. பேசித்தான் என்ன மாற்றம் நிகழ்ந்து விடப் போகிறது..? கங்காதேவி ஒன்றை முடிவு செய்து விட்டால் அதிலிருந்து மாறவே

மாட்டாள் என்றிருக்கும் போது பேசி ஒரு லாபமும் ஏற்படப் போவதில்லை..

ஓர் நெடுமூச்சுடன் கங்காதேவியைப் பார்த்தான் குமார கம்பண்ணா.. அவள் வீரத்துடன் காட்சி தந்தாள்.. அவனது பார்வையில் புன்னகைத்தாள்..

"இது தமது போர் மட்டுமல்ல.. என்னுடைய போரும் கூட.." என்றாள்..

அவள் குரலில் தொனித்த கம்பீரத்தில் ஈர்க்கப் பட்டான் குமார கம்பண்ணன்.. பெண்மையின் மென்மை கொண்டு காதலனை வசீகரிக்காமல் வீரம் கொண்டு வசீகரிக்கும் கங்காதேவியின் தீரத்தில் அவன் மனம் லயித்தது.. அவளது முகத்தைக் கரங்களில் தாங்கி விழிகளுக்குள் உற்றுப் பார்த்தான்.. அந்த வீர மங்கையின் விழிகளில் தெரிந்த காதலில் கட்டுண்டான்..

"அழைத்தீர்களா மகாராணி..?"

அருகாமையில் கேட்ட மைதிலியின் குரலில் கங்காதேவியின் முகத்தில் படிந்திருந்த குமார கம்பண்ணனின் கரம் தானாக விலகியது.. துளைக்கும் பார்வையுடன் அருகில் வந்த மைதிலியின் பார்வையைச் சந்திக்காமல் வேறு திக்கில் பார்த்த குமார கம்பண்ணன் சங்கடம் கொண்டான்..

அதுபோன்ற சங்கடங்களுக்கு ஆட்படாத கங்காதேவி வெகு இயல்பாக நகைத்தாள்..

"ஆம் மைதிலி.." என்றாள்..

"என்ன பணி புரிய வேண்டும் மகாராணி..?"

"என்னுடன் அமன மலைக்கு வர வேண்டும்.."

"அமன மலைக்கா..?"

"ஆம்.. அங்குள்ள சுப்பிரமணிய சுவாமியை போர் தொடங்குவதற்கு முன்னால் சேவித்து விட்டு வரவேண்டும் என்று விரும்புகிறேன்.."

"தங்களின் விருப்பம் போல ஆகட்டும் மகாராணி.."

"நீ இவ்விதம் உரைக்கிறாய்.. அரசரோ அனுமதி வழங்க ஆயிரம் ஆலோசனைகளைச் செய்கிறார்.."

"ஆலோசனைகள் செய்தாலும் தங்களின் முடிவைத் தானே அவரின் முடிவாக ஏற்கப் போகிறார்..? தங்களின் மனம் போல நடக்கும் மணாளர் அல்லவா நமது அரசர்.."

மைதிலியின் வெட்டும் பார்வையினை சந்தித்த குமார கம்பண்ணன் உதடுகளை மடித்துக் கடித்தான்.. அவர்களின் உணர்வுப் பேராட்டத்தை உணராத கங்கா தேவி..

"நான் புறப்பட ஆயத்தமாகி வருகிறேன் மைதிலி.. எனக்காக காத்திரு.." என்று சொல்லி விட்டுப் போய் விட்டாள்..

இப்போது நேரடியாக குமார கம்பண்ணனை முறைத்தாள் மைதிலி.. அவன் சங்கடத்துடன் நகரப் போனான்..

"இங்கே போர் புரியத்தானே வந்துள்ளீர்கள்..?" குத்தலாக கேட்டாள் மைதிலி..

"இல்லை.. படைவீரர்களை அழைத்துக் கொண்டு உல்லாசப் பயணம் வந்திருக்கிறேன்.." எரிச்சலாகச் சொன்னான் குமார கம்பண்ணன்..

"தங்களின் மயக்கத்தைப் பார்த்தால் அப்படித்தான் உள்ளது.."

"மயக்கமா..?"

"மயக்கம்தான்.. காதல் மயக்கம்.."

"பிதற்றாதே.."

"என் வார்த்தைகள் தங்களுக்குப் பிதற்றலாகத்தான் இருக்கும்.. இதுவே தங்களின் ஆருயிர் மனைவி பேசினால் அது தேனினும் இனிய காதல் மொழியாக இருக்கும்.."

"இப்போது எதற்காக இந்தப் பேச்சு..?"

"யுத்தத்திற்காக வருகை தந்து முகாமிட்டிருக்கும் போது தங்களின் மனைவியுடன் சரசம் புரிந்து கொண்டுள்ளீர்களே.. எப்படித்தான் தங்களால் சரசம் பேச முடிகின்றதோ.."

கோபத்துடன் பொரிந்த மைதிலியை கூர்ந்து நோக்கினான் குமார கம்பண்ணன்.. இடைவிடாத போர் பயிற்சியினால் அவளது தேகம் மெலிந்திருந்தது.. கூந்தலைப் பின்னலிட்டிருந்தவள் அதை வளைத்துக்

கொண்டையாக்கிக் கொள்ளப் பழகியிருந்தாள்.. திருச்சி யுத்தத்தின் போது அவள் காட்டிய வீரம் குமார கம்பண்ணனின் நினைவுக்கு வந்தது... அவனை நிழல் போல தொடர்ந்து வரும் அவளது காதலில் அவன் மனதில் இனிமை கலந்த துயரம் பரவியது..

காதலிப்பதை விட.. காதலிக்கப் படுவது பரமசுகம்..! அந்த சுகத்தை அனுபவித்தான் குமார கம்பண்ணன்..

"அது ஒன்றும் கடினமான காரியம் அல்ல மைதிலி.." விசமத்துடன் சொல்லவும் செய்தான்..

"எது..?"

"போர்க்களத்தில் சரசம் புரிவது.."

மைதிலி கோபத்துடன் எதையோ பேச வாய் திறந்தாள்.. கங்காதேவி வந்து விட்டதில் அமைதியானாள்..

"நாங்கள் கிளம்பலாம் அல்லவா..?" கங்காதேவி கம்பீரமாக கேட்டு வைத்தாள்..

அனுமதியைக் கூட உத்தரவிடுவதைப் போல கேட்டு வைக்க இவளால் மட்டும்தான் முடியும் என்ற நினைவில் இளநகை புரிந்தான் குமார கம்பண்ணன்.. அதில் முகத்தை தூக்கி வைத்துக் கொண்டாள் மைதிலி..

"இவளுக்கு என்ன ஆனது..?"

மைதிலியைக் கவனித்த கங்காதேவி குமார கம்பண்ணனிடம் கேள்வி கேட்டு வைத்தாள்..

"என்னைக் கேட்டால்..? எனக்கு எப்படித் தெரியும்..? யாமறியேன் பராபரமே.." கரங்களை விரித்தான் குமார கம்பண்ணன்..

"உங்களுக்குத் தெரியாமல் வேறு எவருக்குத் தெரியுமாம்..?"

கங்காதேவியின் கேள்வியில் மற்ற இருவருக்கும் தூக்கிவாரிப் போட்டது.. திடுக்கிடலுடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.. கங்காதேவியோ கம்பீரமாக நகைத்தாள்..

"இதற்குப் போய் இப்படி விழிக்க வேண்டுமா..? இங்கு எத்துனை பேர் உள்ளனர்..? நீங்களும் இவளும் மட்டும்தானே நின்றுள்ளீர்கள்..? நான் செல்லும்போது இவள் இயல்பாகத்தானே இருந்தாள்.. தற்போது மட்டும் முகம் வாடி நிற்கிறாளே.. காரணம் என்ன..?"

"அதற்கு நான்தான் பிணையா தேவி..?"

"நீங்கள்தான் பிணை..!"

"அருமையான மனைவி நீ.. கணவனுக்கு இப்படித்தான் நற்சாட்சிப் பத்திரத்தை அளிக்க வேண்டும்.. எந்த வகையில் நான் பிணை என்கிறாய்..? உனது தோழியை நான் என்ன பிரம்பெடுத்து அடித்தேனா..?"

"பிட்டுக்கு மண் சுமந்து ஈசன் பிரம்படி பட்ட மதுரா நகரின் எல்லையில் நிற்கிறீர்கள் அல்லவா..? பிரம்படிதான்

தங்களுக்கு நினைவுக்கு வரும்.. நீ வா மைதிலி..! நாம் செல்லலாம்.."

"சற்றுப் பொறுங்கள்.."

"ஏன்..? இவளுக்கு அளித்த பிரம்படிகளில் மீதம் உள்ளதா..? அவற்றை எனக்கு அளிக்கப் பத்திரப் படுத்தி வைத்துள்ளீர்களா..?"

போர்க்களத்தின் சூழலை வெகு இலகுவாக மாற்றிக் கொண்டிருந்த கங்காதேவியின் திறனில் வியந்து போனாள் மைதிலி.. குமார கம்பணனிடம் தென்படும் உயிர்ப்பு எங்கிருந்து வருகின்றது என்று அவளுக்கு அந்த நொடியில் புரிந்தது..

'கங்காதேவியைப் போன்ற மனைவியை அடைந்தவன் கடல் கடந்தும் யுத்தம் புரியச் செல்வானே..'

விழி விரிய நோக்கிய மைதிலியை நோக்கி இமை சிமிட்டி நகைத்தாள் கங்காதேவி..!

'போரைக் குறித்த அச்சம் துளிக்கூட இவளிடம் தென்படவில்லையே..' மைதிலியின் வியப்பு அதிகரித்தது..

"நான் பிரம்படி கொடுத்தால் நீ பெற்றுக் கொண்டு தான் வேறு பணியைப் பார்ப்பாய்.." என்று கூறிய குமார கம்பண்ணன்..

"உங்களுக்குத் துணையாக நம் படைத் தளபதிகள் வருவார்கள்.. அதற்காகவே தாமதிக்கச் சொன்னேன்.." என்றான்..

"நன்றி அரசே..!"

விளையாட்டாய் தலை தாழ்த்தி வணக்கம் சொன்ன கங்காதேவியின் காதைப் பிடித்துத் திருகிய குமார கம்பண்ணனுக்கு.. மைதிலியை முதன் முதலில் சந்தித்த தினம் நினைவுக்கு வந்து விட்டது..

அன்றும் இதுபோல்தானே மைதிலியின் காதைப் பிடித்துத் திருகினான்..?

மைதிலியைப் பார்த்த போது அவளும் அதே நினைவுடன் நிற்பது புரிந்தது.. அவளது இமைகள் நனைந்திருந்தன.. கங்காதேவியின் காதை விட்டு குமார கம்பண்ணனின் கரம் விலகியது..

"புறப்படுவோம்.."

கணவனிடம் தலையசைத்து விட்டு மைதிலியிடம் கூறினாள் கங்காதேவி.. மனம் கனக்க.. தனது மனதுக்கு இனியவனின் மனைவிக்குத் துணையாக கோவிலுக்குக் கிளம்பினாள் மைதிலி..

கங்காதேவி உற்சாகமாக அமண மலையில் ஏறினாள்.. உடன் வந்த தளபதிகளிடம் போரைக் குறித்து உரையாடினாள்.. மைதிலியிடம் அவளது மனதுக்குப் பிடித்த மணவாளன் எவனாவது உள்ளானா என்று விசாரித்தாள்..

"சொல் மைதிலி.. எப்படியும் இன்னும் சில தினங்களில் போர் முடிந்துவிடும்.. என்னவர் அவருடைய

இரு சபதங்களையும் நிறைவேற்றி விடுவார்.. மதுரை மீனாட்சியம்மனின் ஆலயக் கதவுகள் திறந்து விடும்.. அரங்கனும் திருவரங்கத்தில் கோவில் கொண்டு விடுவார்.. அதன் பின்னர் உனது திருமணம்தான்.. இதுநாள்வரை இந்தப் போர் முடியட்டும் என்று சொல்லி வந்தாய்.. போர் முடிந்ததும் நீ எந்தக் காரணமும் சொல்லித் தப்பிக்க இயலாது.. திருமணம் என்ற கோட்டையில் அடைபடாமல் சுதந்திரமாக உலா வர முடியாது.. ஆதலினால் உன் மனதைத் திறந்து சொல்லி விடு.." என்று கலகலத்து நகைத்தாள்..

"என் மனதை தங்களின் பெயரில் உள்ள எனது குலதெய்வத்திடம் சொல்லியுள்ளேன் மகாராணி.." துயரத்துடன் சொன்னாள் மைதிலி..

"ஆஹா..! அருமை..! உனது குலதெய்வம் கங்கையம்மனல்லவா..?"

"ஆம் மகாராணி..! அனை குந்தி கங்கையம்மன்தான் எனது குலதெய்வம்..! அவளறிவாள் என் மனதை.."

"அதனால் என்ன..? இந்த கங்கா அறியாததை உனது குலதெய்வமான கங்கையம்மன் அறியட்டுமே.. உனது நலன் மட்டுமே எனக்கு முக்கியம்.."

நிறைந்த மனதுடன் கூறியவளைக் குற்ற உணர்வுடன் பார்த்தாள் மைதிலி.. இப்படிப்பட்ட மனதுடையவளின் மணாளனின் மீது மையல் கொண்டிருக்கிறாயே என்று அவளது மனம் உறுத்தியது..

‘எனது நலனில் தமது நலனும் அடங்கியுள்ளது மகாராணி.. தாம் அதை அறிவீர்களா..?’

மைதிலி அமைதியற்ற மனதுடன் அங்கிருந்த பாறையில் உட்கார்ந்தாள்.. கங்காதேவி மலையுச்சியி லிருந்து மதுரா நகரைப் பார்த்தாள்..

“மதுரா விஜயம்..!”

உரத்த குரலில் கூறினாள்.. உடன் வந்த தளபதிகள் அதை ஆமோதித்து கரவொளி எழுப்பினார்கள்..

“இதுநாள்வரை ஆண்டுக்கணக்கில் எந்த நகருக்கு விஜயம் செய்ய வேண்டுமெனக் காத்திருந்தோமோ.. அந்த மதுரா நகரின் எல்லையில் வந்து நின்று விட்டோம்.. அதி விரைவில் ‘மதுரா விஜயம்’ நிகழும்..”

கம்பீரமாக அவள் பேசியதில் படைத்தளபதிகள் உத்வேகம் கொண்டனர்.. அனைவரும் அமண மலையின் சுப்பிரமணிய சுவாமியைத் தரிசனம் செய்து விட்டு மலையிறங்கினார்கள்..

மறுநாள் யுத்தம் ஆரம்பமானது..

மகா கோரமான யுத்தம்..! மாபெரும் யுத்தம்..!

சுல்தானின் படைபலத்தோடு இணை சேர்த்தால் குமார கம்பண்ணனின் படைபலம் மிகக் குறைவுதான் ஆனால்.. குமார கம்பண்ணனின் படையிலிருந்த வீரர்களின் மனோபலம் பெரிது.. அவர்கள் உரிமைக்காக

போராடினார்கள்.. அவர்களது தெய்வங்களின் திருவுருவச் சிலைகளை மறைத்து வைக்க மண்ணில் புதைக்காம லிருக்க போராடினார்கள்.. அவர்கள் வணங்கிக் கொண்டிருந்த கோவில்கள் அடைபடாமலிருக்கப் போராடினார்கள்.. கோவில்கள் தெய்வச் சிலைகள் இல்லாமல் இருக்கும் அவலம் நீங்கப் போராடினார்கள்..

குமார கம்பண்ணனின் படைவீரர்களின் நாடி நரம்பெங்கும்.. அவர்கள் பிறந்தது முதல் அறிந்த ஆன்மீகத்தின் ஆணி வேர் ஓடியது.. அவர்களது மூதாதையர்கள் காட்டிச் சென்ற பக்தி உணர்வு பொங்கி எழுந்தது.. பல நூற்றாண்டுகளாக கோவில் கொண்டிருந்த தெய்வங்களின் திருவுருவச் சிலைகளைக் காக்க வேண்டுமென்ற கடமையுணர்வு அவர்களை வியாபித்தது.. ஆறுகால பூஜை நடந்த கோவில்கள் ஆராதனையின்றி மூடிக்கிடக்கும் துயரம் தீர்க்க வேண்டும் என்ற உத்வேகம் அவர்களின் உயிர்களில் கலந்திருந்தது..

முடிவேயில்லாமல் நீண்டு கொண்டிருந்தது யுத்தம்.. பின்வாங்காமல் போராடிக் கொண்டிருந்தான் குமார கம்பண்ணன்.. ஆண்களுக்கு நிகராக பெண்களும் போர்க்களம் புகுந்தார்கள்.. சேதாரம் அதிகமான ஒருநாள் இரவில் உறக்கமின்றி தவித்துக் கொண்டிருந்தான் குமார கம்பண்ணன்..

"இரவில் உறங்கவில்லையெனில்... பகலில் போர்க்களம் புக முடியாது.." கங்காதேவி அறிவுறுத்தினாள்.

"நாளுக்கு நாள் சேதம் அதிகமாகிக் கொண்டிருக் கிறது தேவி.."

"ஆகத்தான் செய்யும்.. இது போர்.. சேதமின்றி வெற்றியை ஈட்டி விட முடியாது.. 'தொட்டையாசாரியார் சேவை..'யை நிகழ்த்திய அரங்கன் நம்முடன் இருக்கும் வரை நம்மை தோல்வி அணுகாது.."

கங்காதேவியின் ஆறுதல் உரையில் அமைதி கொள்ளவில்லையென்றாலும் சிறிதளவு ஆறுதலைக் கொண்டான் குமார கம்பண்ணன்..

மெய்தானே.. தொண்டை மண்டலத்தின் தலை நகரான காஞ்சியில் வரதராஜப் பெருமாள் வைகாசி விசாகத்தன்று அதிகாலை புறப்பட்டு ஆழ்வார் பிரகார வழிபாடு முடிந்தவுடன் கோபுர வாசலில் கற்பூர ஆரத்தியுடன்..

'தொட்டையாசாரியார் சேவை..'யை நிகழ்த்து கிறாரே..

அந்தப் பெருமாள் குமார கம்பண்ணனை கைவிட்டு விடுவாரா என்ன..?

ஏழாவது பரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



19

சொல்லி விட்டுச் சென்று விட்டாய்.. சொக்குவது என் மனமல்லவா..?

யாமினியின் கண் வீச்சில் தாக்கப்பட்டான்.. சித்தார்த்தன்.. அவள் விழிகளில் ஒளிரும் ஒளிர்வில் ஏன் அவன் சிறைபட்டு விடுகிறான் என்று அவனுக்குப் புரிந்து தொலைக்கவில்லை.. அவளைப் பார்த்து விட்டால் விழிகளை விலக்க முடியாமல் கலந்து விட அவளென்ன மாயம் செய்து வைத்திருக்கிறாள் என்று தன் மனதிற்குள் அவன் கேட்டுக் கொண்டான்.. தாமோதரனிடம் இதைக் கேட்டு விட முடியாது..

"அவள் மாயக்காரிதானேடா.." என்று ஆரம்பித்து விடுவான்..

'இவள் மாயக்காரியா..?'

அவள் பார்க்காத போது அவன் பார்த்து வைக்க.. மிகச்சரியாக அந்த நொடியில் அவள் விழியுயர்த்தி அவனைப் பார்த்து வைத்ததில் அவனுக்குள் திடுக்கிடல் வந்தது..

'இவள் மாயக்காரிதான்..'

நிச்சயமாக அவன் நம்பினான்.. தாமோதரனிடம் இதைச் சொன்னால் அவன் இனிப்பு சாப்பிட்டுக் கொண்டாடலாம் வா என்று குதித்து விடுவான் என்று நினைத்துக் கொண்டவனுக்கு சிரிப்பு வந்தது..

“இப்பத்தாண்டா நீ என்னோட பிரண்டு... ஒருவழியா நான் சொன்னதைப் புரிஞ்சுக்கிட்டே பார்த்தியா.. இவ மாயக்காரிங்கிற ஃபீலிங் உனக்கு வந்திருச்சுல்ல..”

இப்படித்தான் தாமு பேசி வைப்பான்.. அவன் அத்துடன் நிறுத்தி விட்டால் தேவலையே.. அப்படி அவன் நிறுத்தித் தொலைக்க மாட்டானே.. அடுத்ததாக..

“உனக்கே இவ மாயக்காரின்னு தோணிப் போயிருச்சில்ல.. இனியும் ஏண்டா இவ சீட்டைக் கிழிக்காம விட்டு வைச்சிருக்க..?” என்று தொணத்த ஆரம்பித்து விடுவான்..

அதனாலேயே எல்லா விவரங்களையும் தாமோதரனுடன் பகிர்ந்து கொள்ளும் சித்தார்த்தனால் யாமினியைப் பற்றிய உணர்வுகளைப் பற்றிய விவரங்களை தாமோதரனுடன் பகிர்ந்து கொள்ள முடியவில்லை..

அப்படி நண்பனிடமும் சொல்லாமல் மறைத்து யாமினியை அங்கேயே வேலைக்கு வைத்திருப்பதன் காரணம்தான் என்ன..?

தாமோதரன் திணுசு திணுசாக கேட்கும் இந்தக் கேள்விகளுக்கான விடை சித்தார்த்தனுக்குக் கிடைக்கவே யில்லை..

யாமினியைப் பார்த்ததும் அவன் உடலில் தோன்றும் அதிர்வு.. அவளை மீண்டும்.. மீண்டும்.. பார்க்கத் தூண்டும் மன உணர்வு.. அவளைப் பார்க்காவிட்டால் அவன் மனதில் தோன்றும் ஏக்கம்.. பார்த்து விட்டால் விழி விலக்க முடியாமல் கட்டுண்டு போகும் பந்தம்..

இவை அத்தனைக்குமான காரணம் எதுவாக இருக்கக்கூடும் என்று யோசித்து.. யோசித்து அலுத்து விட்டான் சித்தார்த்தன்..

'ஒரு வேளை.. இதுதான் காதலா..?'

அதுவும் தெளிவாகத் தெரிந்து தொலைக்கவில்லை.. கண்டதும் காதல் என்று சொல்லித் தொலைக்க முடியவில்லை.. யாமினியை முதன் முறையாக மகாபலி புரத்தில் கடற்கரையோரமாக ஐந்து ரதக் கோவிலில் சந்தித்த போது அவள் மீது அவனுக்குள் ஏற்பட்ட ஈர்ப்பிற்கு என்ன பெயரை வைப்பது என்று தெரியாமல் இன்னும் அவன் குழம்பிக் கொண்டிருக்கிறான் என்பதுதான் நிஜத்திலும் நிஜம்..

இதைத் தாமோதரனிடம் சொல்லி விட முடியாது.. ஏற்கனெவே யாமினியால் சித்தார்த்தன் குழம்பிப் போயிருப்பதாக அவன் தாம்தூமென்று குதித்துக்

கொண்டிருக்கிறான்.. அது முக்காலும் உண்மை என்பதால் சித்தார்த்தனும் அந்தக் குற்றச்சாட்டை வாய்மீது ஒற்றை விரலை வைத்து மௌனமாக ஏற்றுக் கொண்டிருக்கிறான்.. இந்த லட்சணத்தில் இதுபோன்ற ஆய்வுகளையும் சித்தார்த்தன் சொல்லி வைத்தானென்றால் வேறு வினையே வேண்டாம்..

"யாமினியை வேலையில இருந்து தூக்கற வரைக்கும் நம்ம கம்பெனி முன்னாலே உண்ணாவிரதப் போராட்டத்தில் உட்காரப் போறேண்டா.." என்று உட்கார்ந்தாலும் உட்கார்ந்து விடுவான்..

ஆதலினால் அதுபோன்ற பரிட்சார்த்த பேச்சு வார்த்தைகளை நடத்தி விடாமல் சர்வ ஜாக்கிரதையாக நண்பனிடம் எதையும் சொல்லாமல் நாள்களை கடத்தி வந்தான் சித்தார்த்தன்..

கூடுமானவரை மௌனமாகப் போய் விடுவதே சாலச் சிறந்தது என்ற கொள்கையை அவன் கடைபிடித்துத் தொலைத்ததினால்தான் அதிமுக்கியமான பிஸினெஸ் டின்னரைப் பற்றித் தாமோதரனிடம் சொல்ல மறந்து ஓடி விட்டான்..



20

மதுரா நகரில் தமிழ்சங்கம்.. மங்கல கீதங்கள் முழங்கும்..

தொண்டை மண்டலத்தின் சோளசிம்மபுரத்தில் வசித்து வந்த தொட்டையாசிரியர் என்ற பக்தர் வருடம் தவறாது கருட சேவைக்கு வருகை தருபவர் முதுமையினால் அவரது வருகை தடைபட்டது.. அவர் கடவுளிடம் வருந்திப் புலம்பியதில் அவரது அகக் கண்களுக்கு புலப்படும் வண்ணம் தொட்டயஸ்ரீ வரதராஜன் கோபுர வாசலில் இருந்து அருள் புரிந்தார்..

அந்த வைபவத்தை முன்னிட்டு இந்த ஆராதனை ஆண்டுதோறும் பக்தர்கள் பரவசமாகும் வண்ணம் நடந்தேறுகிறது..

பக்தர்களைக் காக்கும் அரங்கன் தலைமை தாங்கும் படை ஒருநாளும் தோல்வியைத் தழுவாது..

மறுநாள் புத்துணர்வுடன் போர்க்களம் புகுந்தான் குமார கம்பண்ணன்.. பகைவர்களை வெட்டி வீழ்த்தினான்.. போர் தொடர்ந்தது.. மறுபடியும் மனம் தளர்ந்தான் குமார கம்பண்ணன்..

அன்றைய இரவில் தொலைவில் தெரிந்த மதுரா நகரை வெறித்துக் கொண்டிருந்தான்.. நான்மாடக் கூடலின் நான்கு கோபுரங்களையும் பார்த்தவன் மனம் கலங்கிப்

புலம்பினான்.. அன்னை மீனாட்சியின் அருமைக் கணவரான சொக்கநாதரைக் கேள்வி கேட்டான்..

"இசைத்தமிழ் நீ செய்த..
அருஞ்சாதனை..! - நீ
இருக்கையிலே எனக்கேன்..
பெருஞ் சோதனை..?
இசைத்தமிழ் நீ செய்த அருஞ்சாதனை..!"

காயம் பட்டவர்களுக்கு கிசிச்சை நடந்து கொண்டிருந்தது.. இரவில் கை விளக்குகளோடு இங்கும் அங்கும் நடமாடி பச்சிலை வைத்தியம் செய்து கொண்டிருந்த வைத்தியர்களைப் பார்த்தவனின் மனம் கசிந்தது.. வலி கொண்டோரின் முனகல்ஒலி அவனது செவிப்பறையை கிழித்தது..

இதற்கு ஒரு முடிவே இல்லையா என்று மனம் ஏங்கினான் குமார கம்பணன்.. மதுரா நகரை அவனால் மீட்கவே முடியாதா..? மீனாட்சி அம்மனின் ஆலயத்தைத் திறக்கவே முடியாதா..? அரங்கனை திருவரங்கத்தில் அமர்த்தவே முடியாதா..?

ஏங்கித் தவித்தது அவன் உள்ளம்.. விடியலைத் தேடும் அந்த நள்ளிரவினிலே அவன் தொலைவில் தெரிந்த மீனாட்சி அம்மனின் கோவில் கோபுரத்தைப் பார்த்து மனம் குமுறினான்..

"வசை வருமே..
பாண்டி நாட்டினிலே -

குழலி மணவாளனே..!
உனது வீட்டினிலே..”

வானில் தவளும் நிலவு குமார கம்பணனின் குமுறலைக் கேட்பதைப் போல நகராமல் உறைந்து நின்றது.. அம்மாவாசையில் நிலவு வரும் என்று சொன்ன பக்தனைக் காக்க அன்னை அபிராமி தனது செவியில் அணிந்திருந்த தோட்டைக் கழட்டி வானில் விட்டெறிந்து வட்ட நிலவாக்கினாளே.. அது போல என்னையும் அனுகிரகிக்க ஏன் இறைவன் எழுந்து வரவில்லை என்று ஆவேசம் கொண்டான் குமார கம்பணன்..

“உனதருமைக் கோவிலைக்
காப்பதிலே..
வெற்றி குமார கம்பணனுக்கோ..?
இல்லை.. சுல்தானுக்கோ..?”

அவன் கேட்ட கேள்வி.. மூடிக்கிடந்த ஆலயத்தினுள் நுழைந்து சோமசுந்தரக் கடவுளின் செவிகளில் விழுந்தது..

தனது பக்தன் படும் துயரைத் தீர்க்க சொக்கநாதக் கடவுள் புறப்பட்டு வருவாரா.. மாட்டாரா.. என்று பரிதவித்தான் குமார கம்பணன்..

“சிவலிங்கம் சாட்சி சொன்ன..
கதையும் பொய்யோ..?
மாமன் திருச்சபை தனக்குரைத்த
முறையும் பொய்யோ..?”

கண்கள் சிவக்க.. கானம் இசைத்தான் அவன்.. அழைத்தும் வராத சிவபெருமானிடம் ஆத்திரமும் கொண்டான்..

"பிட்டுக்கு மண் சுமந்து..
பிரம்படி பட்ட உன்னை..
பிள்ளையிவன் அழைத்தும்..
வாராதிருப்பதென்ன..?"

உயிர் துடிக்க அவன் கேட்டுக் கொண்டிருந்த போது அருகில் 'கணகண' வென ஆலயமணி ஒலித்தது.. உடல் விதிர்க்க குமார கம்பணன் ஒலி வந்த திசையில் நோக்கினான்.. 'ஒளி' வெள்ளம் தெரிந்தது.. உடல் சிலிர்க்க இவன் பாடினான்..

"தாய்க்கொரு இடரென்றால்..
மகன் பொறுப்பானா..?
அன்னை ஆலயத்தின் கதவடைக்க
இவன் விடுவானா..?
வேருக்கு நீருற்றி
விளைவிக்கிற தலைவா..!
உன் ஆலயத்தின் தாழ்திறக்க
அனுக்கிரகம் எனக்கு செய்.."

உயிர் உருகப் பாடி நின்ற குமாரகம்பண்ணனின் செவிகளில் அசரீரி ஒலித்தது..

"கலங்காதே மகனே..! நாளைய தினத்தில் நற்செய்தி உனக்குக் கிட்டும்.. என் ஆலயக் கதவுகளின் தாழ் திறக்கும் நந்நாளும் உனக்குக் கிட்டும்.."

"ஈசனே..!"

கரங்களைக் கூப்பி மண்டியிட்டு அமர்ந்தான் குமாரகம்பண்ணன்.. ஆலய மணியொலியுடன் தோன்றிய ஒளிவெள்ளம் மறைந்து விட்டது.. அவனைத் தேடி வந்த கங்காதேவி..

"மன்னவரே.." என்று அவன் தோள் தொட்டு எழுப்பினாள்..

"கங்கா..!"

"என்ன நிகழ்ந்தது..? ஏன் இங்கு அமர்ந்திருக் கிறீர்கள்..?"

"ஈசனின் அனுகிரகமும் கிட்டி விட்டது கங்கா.. நாளைய தினம் நமது தினமென்று அசரீரி வாக்கு சொல்லி விட்டது.."

"ஆண்டவனே..!"

கங்காதேவி மெய் சிலிர்க்க கரம் குவித்தாள்..

"மதுரா விஜயத்தில் நிகழும் அனைத்து ஆன்மீக நிகழ்வுகளும் ஆச்சரியத்தை அளிக்கின்றன அரசே..! நம்முடன் துணை நிற்கும் தெய்வங்களின் அனுகிரகத்தின் முன்னே சுல்தானின் படைபலத்தால் நிற்க முடியுமா..?"

"முடியாது கங்கா.. அந்த நம்பிக்கை எனக்கும் வந்து விட்டது.. வெற்றி நமதே.."

மறுநாளின் போர் படு உக்கிரமாக இருந்தது.. சளைக்காமல் போராடினான் குமார கம்பண்ணன்.. அவனது

ஆன்மாவில் கலந்திருந்த ஆன்மீக பலம்.. முப்பதாயிரம் படைவீரர்களுடன் பத்துலட்சம் படை வீரர்களைக் கொண்ட சுல்தானை வெற்றி கொள்ளும் சக்தியைக் கொடுத்தது..

மகா கோரமான அந்த இறுதி யுத்தத்தில் சுல்தான் சிக்கந்தர் ஷா.. அவனது படையை அம்போ எனத் தவிக்க விட்டுவிட்டுத் தான் மட்டும் தப்பிச் சென்றுவிட்டான்..

படைவீரர்களைக் கைவிட்டு தலைமை தப்பிச் சென்று விட்டதில் சுல்தானின் படை வீழ்ச்சியடைந்து விட்டது..

பலநாட்களாக நடந்த தொடர் யுத்ததில் குமார கம்பண்ணன் வென்று விட்டான்..

"ஜெய் வியயீபவ..!"

குமார கம்பண்ணனின் படை கோசமிட்டது.. படைவீர்கள் கோலாகலத்துடன் ஒருவரையொருவர் கட்டித் தழுவி.. வெற்றிச் செய்தியை பகிர்ந்து கொண்டனர்..

"வென்று விட்டோம் கங்கா.."

குமாரகம்பண்ணன் உணர்ச்சிப் பெருக்குடன் மனைவியைத் தழுவிக் கொண்டான்.. கங்காதேவி ஆனந்தத்தில் இருந்தாள்..

"மதுரா விஜயம் நிகழ்ந்து விட்டது மன்னவனே..! தாங்களே இதைச் சாதித்தீர்கள்.. உறங்கிக் கிடக்கும்

எனது எழுத்தாணியை எடுக்கப் போகிறேன்.. இதுவரை நிகழ்ந்த அத்தனை நிகழ்வுகளையும் 'மதுரா விஜயம்..' என்னும் காவியமாக வடிக்கப் போகிறேன்.. அக்காவியம் காலங்கள் கடந்தும் நிலைத்து நிற்கும்.. இந்து சமயத்தைக் காக்க வாளேந்தி நீங்கள் களம் புகுந்த கதையை இந்த உலகிற்குச் சொல்லும்.. மூடிக்கிடந்த மீனாட்சி அம்மனின் ஆலயக் கதவுகளின் தாழ் திறந்த தங்களின் பராக்கிரமத்தை அறிவிக்கும்.. திருப்பதியில் வாசம் செய்த திருவரங்க நாதனின் திருவுருவச்சிலையை திருவரங்கத்தின் கோவிலில் மறுபடியும் தாம் பிரதிஷ்டை செய்தீர்கள் என்பதனை வையகம் உள்ளவரை 'மதுரா விஜயம்' உரைத்துக் கொண்டிருக்கும்.. தாம் செய்த இரு சபதங்களையும் நிறைவேற்ற.. தாம் பட்ட இன்னல்கள் எத்தனை என்பதனை எனது காவியம் விவரிக்கும்.. அன்னை மீனாட்சி தமக்கு உடைவாளை அளித்து ஆசி வழங்கியதையும்.. அரங்கன் தமது படைக்கு தலைமை தாங்கி போர் புரிய வந்ததையும்.. ஈசன் அசரீரியாக தமக்கு அனுக்கிரகம் செய்ததையும் எனது 'மதுரா விஜயம்..' விவரிக்கும்.. மாமன்னரே..! அதற்கான ஆசியை எமக்கு அளியுங்கள்.."

கங்காதேவி.. கங்கை நதியென ஆர்ப்பரித்தாள்..

"வாருங்கள்.. நமது படைத் தளபதிகளுக்குடன் நமது வெற்றிக் குதூகலத்தைப் பகிர்ந்து கொள்வோம்.."

தனக்கேயுரிய கம்பீரமான பாணியில் கூறினாள் கங்காதேவி.. படைக் களம் புகுந்து.. படைத்தளபதி களுடன் உரையாடி.. வீர உரை ஆற்றி அவர்களுக்கு உத்வேகத்தையூட்டி.. என.. படைத்தளபதிகளைச் சோர விடாமல் போராட வைத்ததில் கங்காதேவிக்கு பெரும் பங்குண்டல்லவா..?

அவர்கள் கூடாரத்தை விட்டு வெளியே வந்தார்கள்.. படைத்தளபதிகளிடம் சென்றார்கள்... சந்தோசப் பெருக்குடன் இருந்த அவர்கள் அனைவரும் உற்சாகத்துடன் வெற்றியைப் பற்றிய அவர்களின் மகிழ்வை பகிர்ந்து கொண்டார்கள்.. அப்போதுதான் அங்கே பார்த்திபன் இல்லாததைக் கவனித்தான் குமார கம்பண்ணன்..

"பார்த்திபன் எங்கே..?"

குமார கம்பண்ணனின் கேள்வியில் அங்கு நிலவிய குதூகலம் சடுதியில் மறைந்தது.. படைத்தளபதிகள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி தயங்கினார்கள்..

"சொல்லுங்கள்..." வற்புறுத்தினான் குமார கம்பண்ணன்..

"அவருடைய தங்கையைக் காணச் சென்றுள்ளார் அரசே..!"

உபதளபதிகளில் ஒருவன் கூறினான்..

"நாமும் செல்ல வேண்டும் அரசே..! இப்போரில் பெண்களும் மகத்தான பங்கை வகித்தார்கள்..

அவர்களுக்கான நன்றியைக் கூறி வெற்றியின் கொண்டாட்டத்தை அவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும்..” என்றாள் கங்காதேவி..

உபதளபதிகளின் முகங்களில் ஏதோ ஒன்று இருந்தது.. அது என்னவென்று புரியாத யோசனையுடன் பார்த்திபனைத் தேடிச் சென்றான் குமார கம்பண்ணன்.. கங்காதேவியும் அவனுடன் சென்றாள்.. மைதிலிக்கான கூடாரத்தில் அவர்கள் இல்லை..

“மைதிலி கூடாரத்திற்குத் திரும்பவே இல்லை மகாராணி..” பெண் உபதளபதிகளில் ஒருத்தி கூறினாள்..

“அப்படியென்றால்..?”

கங்காதேவியின் விழிகளில் நிரம்பிய சஞ்சலம் குமார கம்பண்ணனின் உடலில் பதட்டமாக பாய்ந்தது..

அவன் கங்காதேவியை மறந்து.. போர்க்களத்திற்குள் ஓடினான்... அவனது பதட்டத்தில் கங்காதேவியின் மனதில் கேள்வி எழுந்தது.. பின்னே அவளும் ஓடினாள்..

அந்தப் போர்க்களத்தில் கோர யுத்தத்தின் தாண்டவத் திற்கான அனைத்து அடையாளங்களும் நிரம்பியிருந்தன.. காயம் பட்டுக் கிடந்தவர்களின் அலறல்களும்.. வெட்டுப் பட்டுக் கிடந்த குதிரைகளின் கூக்குரல்களும் போர்க்களத்தை சுடுகாடாக மாற்றிக் கொண்டிருந்தன.. ஆங்காங்கே இறந்த உடல்களுக்கு மூட்டி விட்ட கிதைத்தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்க... குமார கம்பண்ணன் துக்கம் கொண்டான்..

'இதைப் போன்ற கலிங்கத்துப் போரின் கொடூரம் கண்டுதானே.. அசோக மன்னன்.. துறவறத்தை நாடினான்..!'

அவனது ஈரமனம் அமைதியைத் தொலைத்துத் தவித்தது.. மனித நேயமில்லாமல் மக்களைத் துன்புறுத்திய கொடுங்கோலனிடமிருந்து மதுரா நகரை விடுவிக்க குமார கம்பண்ணன் எத்தனை உயிர்களைப் பலி கொடுக்க வேண்டியிருந்திருக்கிறது..?

குவிந்து கிடந்த சடலங்களின் மத்தியில் அவனது விழிகள் துழாவின.. அங்கே மைதிலியின் சடலம் கிடந்து விடக் கூடாது என்று மனதுக்குள் அவன் பதைத்தான்.. சற்றுத் தொலைவில் மண்டியிட்டு அமர்ந்திருந்த பார்த்திபனைக் கண்டதும் அவனுக்குள் நம்பிக்கை உண்டானது..

'பார்த்திபன் அங்கிருக்கிறான்.. அவனிடம் மைதிலி என்ன ஆனாள் என்று கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்..'

துரிதமாக பார்த்திபனை அணுகியவன் துடித்துப் போய் நின்று விட்டான்..

அங்கே குருதிப் புனலில் குளித்தவளாக மரணத்தின் விளிம்பில் இறுதி நொடிகளை எண்ணியபடி மூச்சை இழுத்துப் பிடித்தவளாக பார்த்திபனின் மடியில் சரிந்திருந்தாள் மைதிலி..

"மைதிலி..!"

பதறிய குமார கம்பண்ணன் பக்கத்தில் பார்த்திபன் இருப்பதை மறந்தான்.. அவனைப் பின் தொடர்ந்து கங்காதேவி வந்திருக்கிறாள் என்பதை உணரவும் மறந்தான்..

பாய்ந்து பார்த்திபனின் மடியிலிருந்த மைதிலியை இழுத்து தன் மடியில் கிடத்திக் கொண்டான்..

மைதிலியின் விழிகள் மின்னின.. அவள் முகம் விகசித்தது.. அத்தகைய மின்னலுடன் தங்கையைக் கண்டிராத பார்த்திபன் திகைத்துப் போனான்.. அண்ணாந்து குமார கம்பண்ணனைப் பார்த்த மைதிலி ஆனந்தம் கொண்டாள்..

"இது போதும் வழிபோக்கரே..! எனது இறுதி நொடிகளில் தமது மடியில் தலை வைத்து நான் சயனித்திருக்கிறேன்.. இந்தப் பிறவியை எடுத்ததிற்கான பலனை அடைந்து விட்டேன்.. அமைதியில்லாமல் அலைந்த என் மனம் அமைதியடைந்து விட்டது.. தமக்கு என் வந்தனம்.."

உயிரை இழுத்துப் பிடித்துத் திக்கித் திணறி தெளிவாக வார்த்தைகளை அவள் உச்சரிக்க.. அதை செவி மடுத்த பார்த்திபனும் கங்காதேவியும் அதிர்ந்து போனார்கள்..

மைதிலியின் பார்வை பிரியத்துடன் குமார கம்பண்ணனின் முகத்தில் படர்ந்து பரவியதைக் கவனித்த கங்காதேவியின் இதயம் வலித்தது..

'எனை என்ன செய்தாய்..
வேங்குழலே..?'

என்ற மைதிலியின் உயிர் உருகிய கானம் அவள் காதுகளில் ஒலித்தது.. அவள் திக்பிரமை கொண்டாள்..

'இதுதானா..? இதனால்தான் இவள் திருமணத்தை தவிர்த்தாளா..? இவள் உயிரை உருக்கிய குழலின் நாதத்திற்குச் சொந்தமானவன் எனக்குச் சொந்தமானவன் என்பதினால்தான் இந்த சின்னஞ்சிறு பெண் மருகித் துடித்தாளா..?'

"மைதிலி.." மனம் கலங்க அழைத்தாள் கங்காதேவி..

"மகாராணி.." அந்நிலையிலும் மரியாதையைக் கைவிடாமல் அழைத்தாள் மைதிலி..

"ஏனம்மா என்னிடம் உன் மனதைக் கூறவில்லை..?"

"கூறுவதற்கான அவசியம் ஏதும் நேரவில்லை மகாராணி.. இந்த வழிப்போக்கர் விருந்தினராக சில தினங்கள் எமது இல்லத்தில் வாசம் செய்தார்.. அத்தினங்களில் இவர் மீதான காதலின் வாசனையை என் மனம் நுகர்ந்து விட்டது.. விருந்தினராக வாசம் செய்தவர் எனது சுவாசமாக மாறிப் போனார்.. என் மனதை நான் கூறிய போது என் காதலை ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டுப் பிரிந்து சென்று விட்டார்.. ஓர் தினம் பார்த்தால் இந்த

வழிப்போக்கர் தொண்டை மண்டலத்தை வென்ற இளவரசர் குமார கம்பண்ணனாக.. காஞ்சித் தலைவனாக என் கண்முன் தோன்றுகிறார்.. கங்காதேவி எனது காதலி..! நான் மாலையிட்டு மாங்கல்யம் பூட்டிய எனது மனையாட்டி.. இப் பிறவியில் அவளைத் தவிர வேறு ஒரு பெண்ணிடம் என் மனம் செல்லாது என்கிறார்.. நான் என்ன செய்வேன்..? வழிப்போக்கராக எண்ணிக் காதல் கொண்டு விட்ட என் மனம் அரசராக இவரை ஏற்று விலகி விட மறுத்து விட்டதே.."

"அடிப் பெண்ணே..! கனவிலும் எவருக்கும் தீங்கு நினைக்காத உனக்கா இத்தகைய மனத்துயர் விளைந்தது..?"

"தாம் கொடுத்து வைத்தவர் மகாராணி..! தம்மை உயிரினும் மேலாக நேசிக்கும் கணவர் தமக்கு வாய்த்திருக் கிறார்.."

"அறிவேன் பெண்ணே..! உனக்கு அது வாய்க்க வில்லையே.."

"அதற்கு தாம் பொறுப்பாக மாட்டீர்கள் மகாராணி..! எனது தலைவிதி அது.."

மைதிலி திணறினாள்.. அவளது சுவாசம் திணறுவதை உணர்ந்த குமார கம்பண்ணனின் முகத்தில் தெரிந்த பதட்டத்தில் மைதிலியின் மனம் நிறைவு கண்டது..

‘எனது இறப்பு இவனை இந்த அளவுக்கு வருத்துமானால் எத்தனை முறை வேண்டுமானாலும் நான் இறப்பேனே... இவனின் இந்த வருத்தம் என்மீதான இவனின் பிரியத்தை அறிவுறுத்துகிறதே.. அது தரும் சந்தோசத்தை விடவா.. இந்த உடலைச் சுமந்து இவ்வுலகில் ஓர் பாரமாக நான் வாழ்ந்து விடும் வாழ்க்கை எனக்கு சந்தோசத்தை அளித்து விடப் போகிறது..?’

உடலெங்கும் வெட்டுக் காயங்களுடன் குருதிப் புனலில் மரணத்தின் வாயிலில் இருக்கும் ஒருத்தியால் இவ்வளவு மலர்ச்சியுடன் புன்னகைக்க முடியுமா..?

மைதிலி புன்னகைத்தாள்.. அந்தப் புன்னகையில் குமார கம்பண்ணனின் மனம் பதறியது.. பார்த்திபன் கதறினான்.. கங்காதேவி கலங்கினாள்..

“எனக்கொரு வரம் வேண்டும் மகாராணி.. அதை அளிப்பீர்களா..?” ஈன்ஸ்வரத்தில் முணுமுணுத்தாள் மைதிலி..

“எதை வேண்டுமானாலும் கேள்.. மறுக்காமல் நான் அளிக்கிறேன்..” கங்காதேவி வாக்குக் கொடுத்தாள்..

“இப்பிறவியில் எனக்குக் கிட்டாத தங்களது கணவரின் காதல் அடுத்த பிறவியிலாவது எனக்குக் கிட்ட வேண்டும்.. எனைத் தவிர வேறொரு பெண்ணை இவர் கனவிலும் நினைக்கக் கூடாது.. இந்த வரத்தை எனக்கு அளிப்பீர்களா..? தாங்கள் தெய்வீகமான பெண்ணரசி..! தாம் வரம் அளித்தால் நிச்சயமாக அது நிறைவேறும்..”

"ஆகட்டும்.." கங்காதேவி வரம் கொடுத்தாள்..

"உனக்கு நான் வாக்களிக்கிறேன் மைதிலி..! ஏழுபிறவியிலும் எனக்கே இவர் கணவராக வரவேண்டும் என்ற பேராசை எனக்கிருந்தது.. இந்நொடியில் அதைத் துறக்கிறேன்.. அதற்கான வேண்டுதல்கள் என் மனதில் இருந்தன.. இனி அவற்றைத் தவிர்க்கிறேன்.. இப்பிறவியில் நான் சொந்தம் கொண்டாடும் உன் காதலனை அடுத்த பிறவியில் உனக்கே உனக்கென்று அளித்து விட்டு நான் விலகிச் செல்கிறேன்.. நீ கூறிய தெய்வாம்சம் என்னிடம் இருந்தால்.. அடுத்த பிறவியில் இவர் யாரோ.. நான் யாரோ.. உனக்கும் இவருக்கும் இடையில் நான் வரவே மாட்டேன்.."

கங்காதேவியின் வாக்குறுதியைக் கேட்டபடி விழி மூடிய மைதிலியின் முகத்தில் எல்லையற்ற அமைதி விரவியது.. அவளின் உடல் அசைவற்றுப் போனதில் நிரந்தரமான அமைதியைத் தேடி அவளின் உயிர் பறவை பறந்து விட்டதை உணர்ந்து கொண்ட குமார கம்பண்ணனின் விழிகளில் இருந்து வழிந்து இரு சொட்டுக் கண்ணீர் துளிகள் அவன் மடியில் கிடந்த மைதிலியின் முகத்தில் விழுந்து தெறித்துச் சிதறிப் பரந்து படர்ந்தன..

மைதிலி சென்று விட்டாள்.. இப்பிறவியில் காதலனைச் சேர முடியாத துயரத்துடன் அடுத்த பிறவியில்

அவனைக் காணலாம் என்ற நம்பிக்கையுடன் வான் வெளியில் கலந்து விட்டாள்..

ஓர் அரசிக்குரிய அத்தனை மரியாதைகளையும் சடங்குகளையும் செய்து அவள் உடலை தகனம் செய்தான் குமார கம்பண்ணன்.. வெற்றிச் செய்தியை அறிந்து.. தனது குழந்தைகளுடன் மதுரா நகருக்கு ரதத்தில் விரைந்து வந்த மலர்க்கொடியால் மைதிலியின் அஸ்தியைத்தான் காண முடிந்தது..

"என் வயிற்றில் சுமக்காமல்.. என் மடியில் சுமந்து நான் வளர்த்த என் மகளே..? சென்று விட்டாயா..? எத்துனை கடினமான மொழிகளில் நான் வசை பாடினாலும் இன்முகத்துடன் 'போங்கள் அண்ணி' என்று அவற்றைப் புறம் தள்ளுவாயே.. நீ இவ்வுலகில் இல்லையா..? 'அண்ணி' என்ற அழைப்பையும்.. 'அம்மா..' என்ற பொருளில் உச்சரித்து அழைப்பாயே.. உன் திருமுகத்தை இனி என்னால் காணவே முடியாதா..? நீ வளர்த்த கிள்ளி வளவனும்.. முல்லைக்கொடியும் அத்தையைக் காணப் போகிறோம் என்ற ஆவலுடன் ஓடி வந்துள்ளார்களே.. அவர்களிடம் உனது அஸ்தியைக் காட்டி இதுதான் உங்களின் அத்தை என்று எப்படியம்மா நான் சொல்லுவேன்..?"

மலர்க்கொடி கதறித் தீர்த்து விட்டாள்.. மைதிலியின் மீது அவள் கொண்டிருந்த பாசத்தில் சுற்றியிருந்தவர்கள்.. கண் கலங்கினார்கள்..

மதுரா நகரில் வெற்றிக் கரகோசத்துடன் நகரப் பிரவேசம் செய்தான் குமார கம்பண்ணன்.. அவனது மகாராணியாக மதுரா விஜயத்தை மேற்கொண்டாள் கங்காதேவி..

அரண்மனைப் பிரவேசம் முடிந்த அடுத்த நொடியிலேயே ஆலயப் பிரவேசத்தை நடத்திக் காட்டினான் குமார கம்பண்ணா..

அடைக்கப்பட்டிருந்த அன்னை மீனாட்சியம்மனின் ஆலயக் கதவுகளின் தாழ் திறக்கப்பட்டது.. குவிந்திருந்த பக்தர்களின் கூட்டம் தலைக்கு மேல் கரங்களை உயர்த்தி சேவித்தபடி..

"தாயே மீனாட்சி..! அப்பனே சொக்கநாதா..!" என்ற பக்திக் கூக்குரலுடன் ஆலயத்திற்குள் சென்றன..

மீனாட்சியம்மனின் கோவில் வெகு சீக்கிரத்திலேயே பழைய நிலைக்கு திரும்பி விட்டது.. ஆறுகால பூஜைகளும்.. திருவிழாக்களுமாக மதுரையின் அரசி கம்பீரமாக கோவிலில் குடி கொண்டாள்..

திருவரங்கத்தின் கோவிலை புதுப்பித்தான் குமார கம்பண்ணன்.. அவனது படைக்குத் தலைமை தாங்கி வெற்றியை ஈட்டித்தந்த அரங்கனின் சிலையை திருவரங்க கோவிலில் பிரதிஷ்டை செய்தான்.. திருப்பதியின் வனப் பகுதியில் வாசம் செய்யச் சென்ற திருவரங்க நாதனின் திருவுருவச்சிலை திருவரங்கக் கோவிலுக்குத் திரும்பி கோவில் கொண்டது..

எடுத்த இரு சபதங்களையும் வெற்றிகரமாக முடித்துக் காட்டிய குமார கம்பண்ணா மதுரையின் அரசனாக ஆட்சி செய்தான்..

அவனது மனைவியும் பட்டத்து ராணியுமான கங்காதேவி..

'மதுரா விஜயம்..'

என்ற மாபெரும் காவியத்தை எழுத ஆரம்பித்தாள்..

அவளது காவியத்தில் அவள் கண்ட நிகழ்வுகள் அனைத்தும் காட்சியாக பதிவாகின.. காலங்கள் கடந்தும் நிற்கப் போகிற அக்காவியம்.. மதுரா விஜயத்தின் கதையை இவ்வுலகிற்கு சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும் என்பது அவளது குறிக்கோளாக இருந்தது..

விடை கொடுங்கள்.. இத்துடன் சரித்திர நிகழ்வுகள் முடிகின்றன.. குமார கம்பண்ணனும் கங்காதேவியும் விடைபெறுகிறார்கள்.. காஞ்சியின் அடுத்த கதை ஆங்கிலேயர்களுடன் ஆரம்பமாகப் போகிறது..

<u>பின்னுரை :</u>

இந்தக் கதையில் வரும் கங்காதேவி எனப்படும் அரசி கற்பனைப் பாத்திரமல்ல.. விஜயநகரத்தின் இளவரசர் குமார கம்பண்ணனின் மனைவியின் பெயர் கங்கா தேவியென்று சரித்திரம் கூறுகிறது.. கங்காதேவி வீரத்துடன் காட்சியளித்தாள் என்றும்.. கலைகளில் சிறந்து விளங்கினாள் என்றும்.. குமார கம்பண்ணனின் சபதத்தில்

பங்கெடுத்து அவனுடன் இணைபிரியாமல் போர்க்களம் சென்றாள் என்றும்.. பெண்களுக்கு போர்ப் பயிற்சி அளித்து சுல்தானுக்கு எதிரான போரில் போரிட வைத்தாள் என்றும் வரலாறு கூறுகிறது..

அப்போரில் அவள் கண்ட நிகழ்வுகளையே அவள் 'மதுரா விஜயம்..'

என்னும் காவியமாக வடித்தாள்.. இந்தக் கதைக்கு அடிப்படையாக நான் 'மதுரா விஜயம்' என்ற காவியத்தையே எடுத்துக் கொண்டுள்ளேன்..

ஆண்களுக்கு நிகரான வீரத்தைக் கொண்டிருந்த கங்காதேவியைப் பற்றி நான் கூறும் வர்ணனைகள் அனைத்தும் மெய்யானவையே.. மிகைப் படுத்தி எதையும் எழுதிவிடவில்லை..

அவள் கங்கை..! வேகம் மிக்கவள்.. போர்க்குணம் மிக்கவள்.. ஆர்ப்பரிக்கும் வீரத்தின் சொந்தக்காரி..! இந்தக் கதையின் நாயகியாக மைதிலி இருந்தாலும்.. அவளையும் தாண்டி இக்கதையில் ஆளுமை செழுத்துபவள்.. அனைத்துக்கும் மேலாக..

'மதுரா விஜயம்..'

என்ற அற்புதக் காவியத்தை வடித்தவள்..

இந்துக்களான ஹரிஹரும், புக்கரும் சேர்ந்து உருவாக்கிய சாம்ராஜ்யம்தான் விஜயநகர சாம்ராஜ்யம்.. முதலில் அவர்கள் உருவாக்கிய அரசுக்கு அவர்களுடைய

ஆச்சார்யரான வித்யாரண்ய தீர்த்தரின் பெயரில் 'வித்யாரண்ய நகரம்..' என்றுதான் பெயட்டார்கள்.. துறவியான வித்யாரண்யர்தான் அதனை மாற்றி 'விஜய நகரம்..' என்று பெயரிட்டார்.. விஜய நகர சாம்ராஜ்யம் அமைந்ததில் வித்யாரண்ய தீர்த்தருக்கு முக்கிய பங்குண்டு..

அது ஒரு எழுச்சி மிகுந்த காலம்.. இந்து மதம் இடரில் இருந்தது.. இந்து மதம் அழியாமல் காக்க உருவான சாம்ராஜ்யம்தான் விஜயநகரப் பேரரசு என்று சரித்திரம் சொல்கிறது..

இக்கதையில் மத சம்பந்தமாக நான் எழுதியிருக்கும் அத்தனை நிகழ்வுகளும் உண்மையிலேயே நடந்த நிகழ்வுகள்தான்.. மதுரையில் சுல்தான்களின் ஆட்சி ஏற்பட்டவுடன் இந்து மதத்தினரின் கோவில்கள் இடிக்கப் பட்டன.. மக்கள் தெய்வச் சிலைகளைப் பாதுகாக்க மண்ணில் அவற்றை மறைத்து புதைத்து வைத்தார்கள்.. மதுரை மீனாட்சி அம்மனின் கோவில் 40 ஆண்டுகாலமாக இழுத்து மூடப்பட்டிருந்தது.. ஸ்ரீரங்கத்தில் இருந்த ரங்கநாதனின் சிலை திருப்பதியில் மறைத்து வைக்கப் பட்டிருந்தது.. திருவிழாக்கள் தடை செய்யப்பட்டன.. மதுராவின் மக்கள் அண்டை நாடுகளில் அகதிகளாக குடி பெயர்ந்தார்கள்..

விஜய நகரத்தில் குடியேறிய மக்கள் இக்கொடுமைகளை புக்கரிடம் சொல்லி அழுததின் பேரில்

அவர் தன் மகன் குமார கம்பண்ணனை சுல்தானின் மீது போர் தொடுத்து மதுரையை மீட்கப் பணித்தார் என்று வரலாறு சொல்கிறது..

திருப்பதியின் வனப்பகுதியில் யாதாவாச்சாரியார் என்ற பக்தரின் பராமரிப்பில் இருந்த திருவரங்க நாதனின் உருவச் சிலையை குமார கம்பண்ணா நேரில் கண்டார் என்றும்.. அவருடன் வந்த திருவரங்கத்தின பக்தர்களைக் கண்டதும் சிலையை பத்திரமாக ஒப்படைத்து விட்டு யாதாவாச்சாரியார் உயிர் விட்டார் என்றும்.. திருப்பதியின் கோவிலில் அரங்கனுக்கு தனி கர்ப்பக்கிரகம் அமைத்து அரங்கனின் சிலையை அங்கே வைத்து வணங்கி விட்டுத் திரும்பிய குமார கம்பண்ணா திருவரங்கத்தில் அரங்கனின் சிலையை பிரதிஷ்டை செய்வேன் என்று சபதம் செய்ததாகவும்.. சரித்திரம் விவரிக்கிறது..

காஞ்சியில் முகாமிட்டிருந்த குமார கம்பண்ணனின் கனவில் மதுரை மீனாட்சியம்மன் தோன்றி மதுரையைக் காக்க வலியுறுத்தி வாள் ஒன்றை அளித்ததாக நம்பப் படுகிறது.. அந்த வாள் பாண்டியர்களின் வம்சாவழி வாள் என்றும் அதைக் கொண்டுதான் குமார கம்பண்ணன் போர் புரிந்தார் என்றும் மதுரா விஜயம் கூறுகிறது..

நான் இந்து மதத்தைச் சேர்ந்தவளாக இருந்தாலும்.. மதச்சார்பின்மையை எனது கொள்கையாக வைத்திருப் பவள்.. நான் படித்த பள்ளி எனக்கு அதைத்தான்

போதித்திருக்கிறது.. காஞ்சியின் வரலாறை நான் சொல்லிக் கொண்டு வரும் போது.. இது போன்ற நிகழ்வுகளையும் நான் சொல்ல வேண்டியதாகி விட்டது.. ஆலயக் கதவுகள் மூடப் படுவதும்.. தெய்வச் சிலைகளை மறைத்து வைக்க நேர்வதும் எந்த மதத்தினருக்கும் நேரக் கூடாது.. இறை நம்பிக்கை உள்ள அனைவரும் எனது இந்தக் கூற்றினை புரிந்து கொள்வார்கள்..

அவரவர் மதம் அவரவர்க்கு.. மாற்று மதத்தை மதிப்போம்.. அவர்களுக்கு இடையூறு விளைவிக்காமல் அன்பு செழுத்துவோம் என்ற வேண்டுகோளோடு இந்த ஐந்தாம் ஸ்வரத்தை நான் முடிக்கிறேன்..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'



20

உனக்கும் எனக்குமான பந்தம்.. எவருக்கும் புரியாத சொந்தம்..

எதற்கும் இருக்கட்டுமென்று வெகு ஜாக்கிரதையாக யாமினியின் முகத்தைப் பார்க்காமல் விட்டத்தைப் பார்த்தபடி டிக்டேட் செய்தான் சித்தார்த்தன்..

யாமினி அவனுக்கும் மேலே இருந்தாள்.. அவன் விட்டத்தைப் பார்த்தால்.. இவள் தரையைப் பார்த்தபடி

அவன் சொன்னதை லேப்டாப்பில் பதிவு செய்து கொண்டிருந்தாள்..

யாமினியின் பக்கதிலிருந்த சேரில் உட்கார்ந்து அவர்கள் இருவரையும் நோட்டம் விட்டுக் கொண்டிருந்தான் தாமோதரன்.. அவர்கள் எதிரும் புதிருமாக பார்த்து வைத்ததில் அவனுக்கு சந்தேகம் வந்தது..

'இதுக ரெண்டும் எப்பவுமே இப்படித்தான் வேலை செய்யுதுகளா.. இல்ல.. நானிருக்கேன்னு பிலிம் காட்டுதுகளா..?'

அவனால் எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை.. யாமினியின் முகத்தில் என்ன உணர்வுகள் பிரதிபலிக் கின்றன என்று அறிய விரும்பியவனாய் அவள் மனதைப் படிப்பதைப் போல உற்றுப் பார்த்தான்... அவள் சரேலென்று விழியுயர்த்தி பார்த்து வைத்ததில் தாமோதரன் மிரண்டு போய் விட்டான்..

ஆழமான அவளது பார்வை ஒரு ஆக்டோபஸைப் போல அவனை வளைத்து விழுங்குவதைப் போலத் தோன்றியதில்..

'அடக் கடவுளே..!' என்று தலையை சிலுப்பி முகத்தைத் திருப்பிக் கொண்டான்..

'எனக்கே இப்படித் தோணி வைச்சா இந்தப் பயலோட கதி என்ன..?'

சித்தார்த்தனை நினைத்துக் கவலை கொண்டான் தாமோதரன்.. சித்தார்த்தனைப் பார்த்தான்.. அவன் விட்டத்தில் இருந்த பார்வையை அகற்றுவேனா என்று அடம் பிடித்தான்..

'இவனுக்கு இந்தக் கொடுமை தேவைதானா..?' தாமோதரனுக்கு கோபம் வந்தது..

'தி கிரேட் சித்தார்த் குரூப் ஆஃப் கம்பெனிஸின் எம்.டி. எப்படிப்பட்ட மிடுக்கோடு இருக்கனும்..? இவனும் அப்படி இருந்து தொலைக்கிறவன்தானே..? இதுவே இந்த யாமினியைத் தவிர வேற ஒருத்தரா இருக்கட்டும்.. சித்தார்த்தன் பார்க்கிற பார்வையே வேற மாதிரியில்ல இருக்கும்..? இவன் முன்னாலே நின்று பேசக்கூட அத்தனை ஸ்டாபும் பயப்படுவாங்க.. இவன் என்னடான்னா இந்த யாமினி முகத்தைப் பார்க்கப் பயப்படறான்..' கருமாயப் பட்டான் தாமோதரன்..

பயப்படுவது சித்தார்த்தன் மட்டும்தானா என்று அவன் மனம் கிண்டல் செய்ததில் யாமினியை வெட்டவா இல்லை குத்தவா என்று முறைத்துப் பார்த்தான்.. அவள் அதையும் பார்த்து விட்டு 'என்ன..?' எனும் பாவனையில் புருவங்களை உயர்த்தினாள்..

'வேலையைப் பாரு..' தாமோதரன் சைகை செய்தான்..

'அதை நீ சொல்லித்தான் நான் பார்க்கனுமா..?' யாமினியின் விழிகள் கேள்வி கேட்டன..

தாமோதரனுக்கு அவளை நான்கு அப்பு அப்பினால் என்ன என்று வெறியாக வந்தது.. பெண்களை அடிப்பது முறையல்ல என்று அவன் கருதியதாலும்.. அப்படி அவன் அப்பினால் யாமினி ஒன்றும் மறு கன்னத்தைக் காட்டிக் கொண்டு நிற்க மாட்டாள் என்பதினாலும்.. கிளம்பிய கொலை வெறியை கட்டுப் படுத்திக் கொண்டான்..

"தட்ஸ் ஆல்.." சித்தார்த்தன் ஒரு வழியாய் டிக்டேட் பண்ணி முடித்து விட்டான்..

"ஒரு ஆணியைப் பிடுங்கிற சோலிக்கு.. மலையைப் பெயர்க்கிற உன்னை என்ன பண்றதுன்னே எனக்குத் தெரியலைடா.." தாமோதரன் பாய்ந்தான்..

"வாட் சார்..?" லேப்டாப்பை மூடியபடி யாமினி பவ்யமாக வினவினாள்..

"உங்களைச் சொல்லலைம்மா.. நீங்க இடத்தைக் காலி பண்ணுங்க.." அவள் முகத்தைப் பார்க்காமல் எரிந்து விழுந்தான் தாமோதரன்..

அவனை விரோதமாகப் பார்த்தபடி இடத்தைக் காலி செய்தாள் யாமினி..

"பாவம்.. அவ என்னடா பண்ணினா..?" சித்தார்த்தன் யாமினிக்காக பரிந்து கொண்டு வந்தான்..

"என்னன்னு உனக்குத் தெரியாதா..?"

"தெரியாமத்தானே கேக்கிறேன்.."

"வேண்டாம் சித்தார்த்.. நான் ஏற்கனெவே கொலை வெறியில இருக்கேன்.. நீ வேற அதை அதிகப் படுத்தாதே.."

"இதைச் சொல்லு.." அலுத்துக் கொண்டான் சித்தார்த்தன்..

"எதைச் சொல்லச் சொல்ற..?"

"அவளைக் கண்டாலே உனக்குக் கொலைவெறிதான் வருது.."

"காணாட்டியும் வந்து தொலைக்குதுடா.. ஏன்னு தான் தெரியலை.."

"மொத்தத்தில அவ பேரைக் கேட்டாலே டென்சன் ஆகித் தொலைக்கிற.."

"இல்லேன்னு சொல்ல மாட்டேன்.."

"அதுக்குத்தான் கேட்கிறேன்.. அவ உன்னை என்ன பண்ணினா..? யு ஸீ தாமு..! நீதான் அவளைக் குறை சொல்லிக்கிட்டே இருக்க.. அவ ஒரு வார்த்தை கூட உன்னைப் பற்றிக் குறைவா பேசறதில்லை.. உயர்வாத்தான் பேசறா.."

"யார்கிட்டப் பேசினா..? உன் கிட்டேயா..?"

தாமோதரனின் சந்தேகமான கேள்வியில் அவனை இமைக்காமல் பார்த்து வைத்தான் சித்தார்த்தன்..

'எனக்கு என்ன ஆச்சு..?'

தாமோதரனுக்கு தன்மீதே கோபம் வந்தது..

இப்படிப்பட்ட அநாகரிகமான கேள்விகளைக் கேட்பது யார்..? அவன் தானா..?

தாமோதரனின் முகத்தில் பரவிய குற்ற உணர்வில்.. சித்தார்த்தனின் பார்வையைத் தழைத்துக் கொண்டான்..

"ஐ ஆம் ஸாரிடா.." தாமோதரன் தலையைப் பிடித்துக் கொண்டான்..

"இட்ஸ் ஆல் ரைட்டுன்னு சொல்ல மாட்டேன்.." இறுக்கமான குரலில் சொன்னான் சித்தார்த்தன்...

"சித்..."

"சந்தேகப் படறதுக்கும் ஓர் அளவு இருக்கனும்.. உனக்குப் பயந்து நான் அவ முகத்தைப் பார்த்துக்கூடப் பேசறதில்ல.."

"எனக்குப் பயந்துன்னு சொல்லாதே.."

அழுத்தம் திருத்தமாகச் சொன்னான் தாமோதரன்.. சித்தார்த்தனின் விழிகளில் கேள்வி வந்தது..

"என்ன பார்க்கிற..?"

"புரியலை.."

"உனக்கா புரியாது..? நீ உன்னைக் கண்டே பயப்படற சித்.. அதுதான் உண்மை.. அவ முகத்தைப் பார்த்தா விளங்காத சொந்தம் ஒண்ணு எனக்கேத் தோணித் தொலைக்குது.. எனக்கே இப்படின்னா உன்னைப் பத்திச் சொல்லவே வேண்டாம்.."

"தாமு.."

"நீ அந்த உணர்வுகளுக்குப் பயந்துதான் அவ முகத்தைப் பார்க்கிறதில்ல.. அதை விட்டுட்டு எனக்குப்

பயந்துன்னு சொல்லாதே.. எனக்குப் பயந்திருந்தா நீ அவளை வேலைக்கு அப்பாயிண்ட் பண்ணியிருக்க மாட்ட.."

"அந்தக் குற்றத்திற்காக நீ தினமும் என்கூட மல்லுக்கு நிற்பியா தாமு..? ஏண்டா அவளை இந்த அளவுக்கு வெறுக்கிற...?"

வெறுக்கிறானா..? இல்லையென்றுதான் தோன்றியது தாமோதரனுக்கு.. அவனுக்கு யாமினியின் மீது உள்ள விரோதத்தின் அடிப்படை வெறுப்பல்ல..

"இது வெறுப்பில்லை சித்தார்த்.."

"பின்னே..? வேறென்ன..? பயமா..?"

"பயமா..? யாமினிகிட்டயா..?"

தாமோதரன் சித்தார்த்தனிடம் கேட்பதைப் போலத் தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.. சித்தார்த்தனின் கேள்விக்கு இல்லவே இல்லை என்று ஏன் அவனால் மறுக்க முடியவில்லை..?

"அவ பெரிய இவ.. அவகிட்ட நான் பயப்படறேன்.. போடா பேசாம.."

"அப்ப இல்லேங்கறியா..?"

ஆழ்ந்த குரலில் கேட்டான் சித்தார்த்தன்... அந்தக் குரலில் பார்வையை உயர்த்திய தாமோதரன் சித்தார்த்தனின் பார்வையைச் சந்தித்தான்.. நண்பர்களின் விழிகளில் தோன்றிய உணர்வலைகள் ஒன்று பட்டதாக

இருந்தன.. அதன் ஆழத்தைக் கண்டு அவர்களுக்குள் தோன்றிய சிலிர்ப்பில் பார்வையை விலக்கிக் கொண்டார்கள்..

"இந்தத் துயரத்துக்குத்தான் அவளை வேலைக்குச் சேர்க்க வேணாம்ன்னு சொன்னேன்.."

"விடு தாமு.. இந்தப் பேச்சுக்கு முடிவிருக்காது.."

"எதற்குமே முடிவிருக்காது.."

தாமோதரனின் பார்வை தொலை தூரத் தொடுவானைத் தேடுவதைப் போலச் சுவரில் ஆழப்பதிந்திருந்தது.. அவன் குரலில் தொனித்த கவலையில் சித்தார்த்தன் மௌனமாகிப் போனான்.. அந்த அறையின் சுவர்களைத் தாண்டி எங்கோ ஒரு தொடு புள்ளியைத் தேடும் தாமோதரனின் மோன நிலையில் அவனுக்கும் ஐக்கியமாக வேண்டும் போல இருந்தது..

"சில சொந்தங்களுக்கும்... பந்தங்களுக்கும் முடிவிருக்காது சித்..! அது காலங்கள் கடந்தும் நம்மைத் தேடி வரும்.."

"சித்தரைப் போலப் பேசற.."

"சித்தார்த்தனின் நண்பனா நின்னு பேசறேன்.. இந்த யாமினி மற்ற பெண்களைப் போல இருந்திருந்தா நான் இந்த அளவுக்கு அப்செட் ஆகியிருக்க மாட்டேன்.. ஷி இஸ் டோட்டலி டிபரண்ட்.. அதனாலதான் அப்செட் ஆகிறேன்.. ப்ளீஸ்.. அண்டர்ஸ்டாண்ட் மீ.."

தழைந்து ஒலித்த தாமோதரனின் குரலில் உருகிப் போன சித்தார்த்தன்.. சட்டென அவன் கையைப் பிடித்துக் கொண்டான்..

சித்தார்த்தனின் விரலோடு விரல் பிணைந்த தாமோதரனின் கை.. நண்பனைக் காக்க முயல்வதைப் போல இறுகிப் பற்றிக் கொண்டதில் சித்தார்த்தன் தனக்குத் தானே கேள்வி கேட்டுக் கொண்டான்..

'காலங்கள் கடந்தும் தேடி வருவது காதல் மட்டும் தானா..?' இல்லையென்பதை தாமோதரனின் இறுகிய கரம் சொல்லியது..

ஏழாவது ஸ்வரத்தின் 'நிழல் ஆட்ட யுத்தம்'

ஆறாம் ஸ்வரத்தில் தொடர்ந்து வரும்..